சித்த மருத்துவம்

சித்த மருத்துவம்

1. சுரம்

சுரம் என்னும் சொல், 'சுர்' 'அம்' எனப் பிரிக்கப்பட்டு 'சுர்' என்பது ஒலிக்குறிப்பளவாய் வெம்மையையும், 'அம்' என்பது பகுதிப் பொருள் விகுதியாய் உடையது எனப் பொருள்தரும். ஆகவே வெம்மை உடைய நோய் என்னும் பொருளைச் சுரம் என்ற சொல் உணர்த்தும்.

தேரன், 'குடலிதனில் சீதமலாது சுரமும் வராது' என்றதனால் சுரநோய் வருவதற்கு முதலாவதாக இரைப்பையில் சிதம் (ஆமம்) பெருகி அதன் சிதற்பச் செயலால் வெப்பு (சுர்) விகுதியாய் உண்டாகி நோயுற் றுற்கும் நோய் தீர்ப்பாற்கும் அதனை அறியும்படிச் செய்தலால் 'சுரம்' எனப் பெயர் பெற்றதென்று வேறோர் வகையால் தெளிதலாம்.

இங்குத் தன்னிலை திரிந்த சீதமே வெப்பத்தோற்றத்துக்கு முதலாய் நின்றதென்றுஇயம்பி இருக்க, அந்நோய்க்குப் பெயரிடுங்கால், தன்னிலை திரிந்த சீதத்தை (அடரத்தை) முதன்மைப் படுத்தாது வெப்பத்தை முதன்மைப்படுத்தியது எதற்கோ எனின், வெப்பத்தினால் தன்னிலை திரிந்த சீதத்தின் நிலையை உணர இயலும் என்பது பற்றியேயாம்.

சுரம் என்னும் சொல்லுக்கு இத்தகைய பதப்பிரிவும் பொருட் படுத்தலும் வழக்கிலுண்டோ என்னும் ஐயம் எழச்கூடும். இதன் உண்மையை நிலங்களின் பாகுபாடுகளைக் கூறும் அகப்பொருள் இலக்கண நூலில் சூட்டடைச் சிறப்பியல்பாக உடைய பாலை நிலத்தை 'சுரம்' என்று குறிப்பிடுதலினால் கண்டு அறிக. ஆகவே, நிலங்களில் வெப்பத்தைத் தன் சிறப்பியல்பாய் உடையது சுர நிலம் என்றமைந்தாற்போல, நோய்களிலே வெம்மையைச் சிறப்பியல்பாயுடைய இந்நோய்க்கு 'சுரம்' என்ற பெயர் பெற்றதாகும். இதனை:

சுரநிலம் போலச் சுடுநோய் சுரமென்
றுரைப்பர் செரிகளத் தண்டா மலைம்
நரம்பின் வழியே தன்னி ருடம்பில்
பெருகும் வெப்பம் பிழைசெய் நோயே

என்ற பாவாலறிக

<u>வேறு பெயர்கள்</u>:

வெம்மை வெப்பு வெறுக்குங் காய்ச்சல்
தம்மாக் காங்கை சூடு தழலனல்
சும்மைப் பிறப்பில் இறப்பில் தொடர்நோய்
பம்மல்நோய் காந்தல் பலபெயர் சுரமே
(கையேடு)

(பொருள்) வெம்மை, வெப்பு, காய்ச்சல், காங்கை, சூடு, தழல், அனல், பிறப்பிலும் இறப்பிலும் தொடரும் நோய், பம்மல்நோய், காந்தல் எனப் பல பெயர்களுண்டு.

<u>இயல்பு</u>: உடலின் இயற்கைச் சூடு தன் அளவுக்கு விஞ்சி எழுந்தும், தீ/ கண்ணெரிதல், தலைவலித்தல், செயலில் ஊக்கம் குறைதல், வாய் குமட்டல், வாந்தியாதல், உடல் கடுத்தல், குளிர்தல், நடுக்கல் ஆகிய பல குறிகுணங்களில் சிலவேனும் பலவேனும் தோற்றுவிக்கும்.

<u>தோன்றும் வழி</u>:

பண்டுள மலத்தினாலும் பழகிய சிதத்தாலும்
உண்டியின் பொல்லாங்காலும் ஒண்டொடி போகத்தாலும்
கண்டுயி லாமையாலும் கடுகிய வோட்டத் தாலும்
மிண்டிய சுவையினாலும் வெப்புவந் தணுகுங் காணே.

ஈங்கெழு கோபத்தாலும் இளவெயில் காய்வதாலும்
தாங்கொணாச் சுமைக ளாலும் சுருகூறல் பருக லாலும்
ஓங்கிய பசியினாலும் உண்டிமே லுண்டி யாலும்
தேங்கிய மலக்கட் டாலும் தீயவெப் பணுகு மன்றே

கடுவெயில் மழைகளாலும் கதறிய குரலி னாலும்
விடமது படுதலாலும் வெருவிய வேகத்தாலும்
முடிமிசை யெண்ணெய் தேய்த்த மூழ்கிய போகத்தாலும்
தடியடி படுகை யாலும் சாந்திரும் வெதுப்புத் தானே

பழவினை யாலும் மெத்தப் பசித்திருந் தன்மையாலும்
குளிர்மைநீர்க் குளித்தினாலும் குவலய பேதத்தாலும்
ஒளிய உண்டி யாலும் இதயத்தில் எண்ணத் தாலும்
உளமது உளைத லாலும் உறுகூர மெய்தீந் தானே

(பொருள்) நெடுநாள் அளவு பழைய மலம் (எரு) வெளியாகாமல் தடைபடுதலாலும், நாட்பட்ட ஐயவிகற்பத்தாலும் (ஆமக்கட்டாலும்) உண்டியில் ஏற்படும் கெடுதிகளாலும், மிஞ்சிய கலவியாலும், உற்ற காலத்தி

உறங்காமல் கண்விழித்திருத்தலாலும் மிக்க விரைந்து ஓடுதலாலும், அறுசுவைப் பொருட்களில் ஏதேனும் ஒன்றோ பலவோ மிகுந்த சுவைப் பொருட்களை அளவு கடந்து உண்ணலாலும், மிகுந்த சினம் கொள்ளலாலும் இளவெயில் (காலை சூரிய வெப்பத்தில்) காய்வதாலும், சுமக்க இயலாத சுமைகளைத் தூக்கிச் சுமப்பதாலும், மிகுந்த பசியுடன் (உண்ணாமல்) இருத்தலாலும், உணவு உண்ட உடனே (செரிக்க சமயம் தராமல்) மீண்டும் உண்ணலாலும், மலக்கட்டு ஏற்பட்டு மலம் குடலில் தங்கியதாலும், மிக்க வெயிலில் இருத்தல் அல்லது அலைதலாலும், மழையில் மிகுதியாக நனைவதாலும், உரத்த குரலில் ஓயாது பேசுதலாலும், நச்சு தாக்குவதாலும் உடலில் எழும் பதினான்கு வேகங்களை அடக்குவதாலும், எண்ணெய் தேய்த்து நீராடிய அன்று பெண்போகம் கொள்வதாலும் தடி (முதலிய) ஆயுதங்களால் தாக்குண்டதாலும், தான் செய்த பழவினையின் காரணங்களாலும், பசியை அடக்கிக் கொண்டிருந்துவிட்டு (நெடுநேரம் சென்று பசிமறந்த நிலையில்) உணவு கொள்வதாலும், அதிகக் குளிர்ச்சியான நீரை உட்கொள்ளலாலும், வசிக்கும் நிலம் மாறுபடுதலாலும், நீரை உண்டு சமைத்த நாளான காரணத்தால்) நொந்தும், ஊசியும், இளகியும் போன குற்றமற்ற ஊணினை உண்ணலாலும், மனத்தில் எண்ணங்கள் மாறுபடுதலாலும், மன வேதனை மிகுதியாலும் சுரம் தோன்றக்கூடும்.

'பன்றுளமலத்திலும்' என்று முதற்பாட்டிலும் 'தேங்கிய மலக்கட்டாலும்' என்று இரண்டாம் பாட்டிலும் சுரம் தோன்றக் காரணமாகும் என்று இருமுறை கூறியுள்ளது கூறியது கூறல் என்ற குற்றத்து இடமில்லை. ஏனெனில், ஒருவனுக்கு மலபந்தம் இன்றி தினமும் குறிப்பிட்ட நேரத்தில் மலம் கழியுமாயினும் ஓரளவு மலம் குடலில் தங்கியே வரும். இக்காரணம் பற்றியே நோயணுகா விதியை நாடும் ஒருவன் ஆண்டுக்கு மும்முறையாகிலும் பேதியாக்கத்தக்க மருந்தை உட்கொண்டு குடலைச் சுத்தம் செய்துகொள்ளல் வேண்டும். இதனை
'அடர்நாளும் மதிக்கொருகால் பேதியுறை தகர்வாம் என்ற சித்தர் கொள்கை வலியுறுத்தும். அவ்வாறு முறையாக பேதி மருந்து உண்ணுதலுக்கு

பன்
பன்ருமலம் குடலில் செறிந்த வெப்புநோயை உண்டாக்கலாம்.

அடுத்ததாக 'தேங்கிய மலக்கட்டால்' என்பது ஒருவன் உண்டி வேறுபாட்டாலோ காலத்தில் நட்பவெப்ப வேறுபாட்டாலோ. 4 (மழை, பனி முதலியவை) இடத்தின் மாறுபாட்டாலோ, தத்தம் அலுவல்களைக் கவனிக்கும் அவசர நிலையின் காரணத்தாலோ மலம் கழித்ததற்கான உணர்ச்சியை வலியத் தடைசெய்து மலத்தைக் குடலில் தேங்கவைத்துக் கொள்வதால் சுரம் உண்டாக்கக்கூடும் என்பதை விளக்கவந்த சொற்றொடராம் என்றறிக.

முற்குறிகள்:

சுரத்தின் முற்குறி சொல்லக் கேண்டோ
விருப்பமெய்ப் பொருளிலும் மேவுத லின்மை
உடல்பா ரித்தலும் நிறம்மா றுதலும்
உடல்மே லெவையும் உறிஞம் கூசல்
தின்னும் உணவுகள் செரியாமை வெறுப்பு
மன்றுகொட் டாவி மயக்கம் பிதற்றல்
நாச்சுவை இன்மை நடுக்கம் குளிர்தல்
ஊக்கமின்மை தொடை கெண்டை நோதல்
ஆக்கை குத்தல் அருவிளர் வெறுப்புகள்
கண்ணீர் முட்டல் கடுத்தடல் முறுக்கல்
தண்ணீர் நாவிற் சுரவா திருத்தல்
மனக்கிளா ரின்மை மயிர்ச்சிலிர்ப் பாதல்
களபலக் குறைவு கண்டிட விழைப்பு
புளிப்புப் புறைப்பில் புசநல் விச்சை
இளைப்பிற் பேச்சி னிட்ட மின்மை
மனைவியர் மக்கள் மாட்டுப் பகைமை
தலைகிறா சிறப்பு தடியர் வின்மை
இசைபல் லியவொலி யெரிவளி நீரில்
வெந்தன் னிமனில் விருப்பு வெறுப்பு
காணுமாம் வழிவழி யுயர்நற்
குரவர் மருத்துவர் தமக்குரைத் தனரே

(கையேடு)

(பொருள்) உண்ணும் எப்பொருளிலும் விருப்பமின்மை, உடல்களைத்தல், உடல் நிறம் மாறுபடல், உடலின்மேல் எது பட்டாலும் உடல் கூசுதல், உண்ட உணவு செரியாமை, அருவெறுப்பு, கொட்டாவி, மயக்கம், பிதற்றல் முதலியன உண்டாதல், நாச்சுவை அறியாமை, உடல் நடுங்கல், குளிர்தல், இரவில் தூக்கமின்மை, தொடைச் சதையும் கெண்டைச் சதையும் நோதல், உடல்முழுதும் குத்தல்(குடைதல்) அண்டையில் இருப்பவர்கள்மேல் வெறுப்பு, கண்களில் நீர் முட்டி முட்டி வெளிப்படல், உடலில் கருப்பு, உடலில் குறுக்கியதுபோன்ற நோவு, வாய்நீர் ஊறதிருத்தல் ஊக்கமின்மை, மயிர் கூச்சம் ஏற்படல், உடலின் பலம் மிகவும் குறைதல், இளைப்பு ஏற்படல் புளிப்பு, உப்பு, உறைப்பு ஆகிய சுவையுள்ள உணவுப் பொருள்களில் வெகுவாக நல்ல இச்சை உண்டாதல், இனித்தப் பொருள்களிலும் உரையாடலிலும் விருப்பமின்மை, மனைவி, மக்களிடம் பகைமை ஏற்படல், தலைச்சுற்றல், உடலில் வியர்வை இன்மை, பாட்டொலியிலும் வாத்திய இசையிலும் காற்று வெந்நீரிலும், தண்ணீரிலும், நிழலிலும் ஒருசமயம் விருப்பும் மற்ற வெறுப்பும் ஏற்படல் ஆகிய குறிகுணங்களில் சிலவேனும், பலவேனும், சுரம் உடலில் தோன்றும் முன் காணப்படும்.

நோய் எண்:

சுரமொரு லட்ச பேதம் தொகுத்திட வெவரிக ளாலும்
கருதிட முடியா தென்று கண்டதைச் சுருக்கச் செய்து
முருகிய வாத பித்த கபமிவை மூன்றித் றோன்றி
விரியுமச் சுரத்தை யாளும் வியப்புடன் உரைத்த தாலும்

அருமைச் சுரந்தான் வாத பித்தையத் தொந்திப் பாலும்
மெலிய வெட்டெட் டாகி விரிந்திரு மெய்பர் னவோர்
வாகட மமைத்தச் சாத்யா சாத்திய மாகு ணங்கள்
பாகென மருந்து தானும் பகர்ந்தனர் பரிந்து காணே.

தானமாம் வாதந் தன்னில் இருபது தமக்சேர் பித்தத்
து னதில் அறநாள் காகு முறைமையி லிருப தாகும்
பாலவர் கண்ணும் முன்னோர் பரிந்துரை வாதந்தன்னில்
ஈனமா மெட்டு வெப்பு மசாத்திய மெல்லாமே

என்றிரு பித்தந் தன்னில் இயற்றிரு பத்து நாலில்
வென்றியாம் பத்துவெப்பு மெலிய இசற்ப ஐத்தில்
ஒன்றமொன் பதுவுந் தானே அசாத்திய மூன்மை யென்று
மன்றலங் குழலிக் கீசன் வகுத்துரை செய்த வாறே.

(பொருள்) சுரத்தின் பிரிவு பலவாம். ஆயினும் எல்லாச் சுரங்களும் வளிமுதலான முக்குற்றங்களில் அடங்கி, தனிக்குற்ற அளவாகவும், கலப்புக் குற்றங்களின் அளவாகவும் அறுபத்தி நாலாக விரியும். அவைகளை வாதத்தில் இருபது பித்தத்தில் இருபத்து நாலு, ஐயத்தில் இருபது ஆக மொத்தம் அறுபத்து நாலு என்று பிரிப்பர். இவைகளுள் வாதத்தில் எட்டும், பித்தத்தில் பத்தும், கபத்தில் ஒன்பதும் எளிதில் தீராதனவாம்.

இவ்வாறுகத் தொகை கட்டிய அறுபத்து நாலு சுரங்களும் தன்வழியாகப் பிறப்பவை ஐம்பத்திரண்டு என்றும், பிறவழியாகப் பிறப்பவை பன்னிரண்டு என்றும் கூறுவாரும் உளர். அதன் விவரம் கீழ்வருமாறு.

<u>தன்வழிச் சுரங்கள்</u>:

தன்வழிச் சுரங்கள் தம்மைச் சாற்றில் மன்னிய-வாத-சுரம்பித்தசுரம்
மன்னிய வாத சுரம்பித் தசுரம்
பன்னிய கபசுரம் வாதபித்த சுரம்
பின்னிய வாத கபசுரம் பிறமே

பித்தவாத சுரம்பித்த கபசுரம்
தத்து கபவாத சுரங்கறி பித்தனர்
கத்து வாத பித்த கபசுரம்
தொத்த மந்த சுரம்நனிர் சுரமே

வெச்சுர மேனிச் சுரமு ஏச்சுரம்
விச்சு முட்சுரம் மிக்க வெளிச்சுரம்
வச்சு விட்டு வருச்சுரம் வோடாச்சுரம்
தச்சு சாரச் சுரம்செங் கறைச்சுரம்

கொள்செ பூன்சுரம் கொழுப்புச் சுரங்கொல்
என்புச் சுரமுரு ஊச்சுரம் விந்தனல்
தன்பத் தோற்சுரம் முறைச்சுரம் மயக்கனல்
பின்னு பிதற்றல் சுரநோம் புழுச்சுரம்

மச்சட் சுரங்கா லைச்சுரம் பகல்சுரம்
தக்குமா லைச்சுரம் தொடரி ராச்சுரம்
விச்சதி காலைச் சுரந்தீ வரட்சுரம்
மிச்சில் வெளிற் சுரமேப் பச்சுரம்

கொடுவாந் திச்சுரங் கொட்டா விச்சுரம்
விடவிக் கற்சுரம் மிகுவியர் வைச்சுரம்
இடர்செய் ஞா ங்காச் சுரமிரு மற்சுரம்
படரும் பழச்சுரம் பகர்கட டிச்சுரம்

பழுத்தச் சீழ்கொள்ளும் பற்கொப் புளச்சுரம்
விழும் நடுக்கற் சுரம்விக் கச்சுரம்
கழிச்சற் சுரமெனக் கண்ணப் படுவன
பழிச்சு மைம்பத் திரண்டா கும்மரோ
என்றமையால்

1. வாதசுரம் 2. பித்தசுரம் 3. கபசுரம், 4. வாதபித்த சுரம், 5. வாதகபசுரம், 6. பித்தவாதசுரம், 7. பித்தகபசுரம், 8. கப வாதசுரம், 9. கபபித்தசுரம் 10. கலப்புச்சுரம் (சன்னிபாதசுரம்) 11. மந்தசுரம், 12. நளிர்ச்சுரம், 13, வெச்சுரம், 14. மேனிச்சுரம் 15. உள்சுரம், 16. வெளிச்சுரம், 17. விட்டுவரும்சுரம் 18. விடாச் சுரம் 19. சாரச்சுரம் (இரசதாதுசுரம்), 20. செங்கறைச்சுரம் (குருதிச்சுரம்), 21. ஊன்சுரம், 22. கொழுப்புச்சுரம், 23. என்புச்சுரம். 28. முளைச்சுரம், 25. விந்துசுரம், 26. தக்பச்சுரம், 27. மறைச் சுரம், 28. மயக்கச்சுரம், 29. பிதற்றல் சுரம், 30. புழுச்சுரம், 31, மச்சள்சுரம், 32. காலைச்சுரம், 33. பகற்சுரம், 34. மாலைச்சுரம் 35. இராச்சுரம், 36. அதிகாலைச்சுரம், 37. தீவரட்சிச்சுரம், 38. அனற்சுரம், 39. எப்பச்சுரம், 40. வாந்திச்சுரம், 41. கொட்டாவிச் சுரம், 42. (விட)விக்கற்சுரம், 43. வியர்வைச்சுரம், 44. ஞா ங்காச்சுரம் 45. இருமல்சுரம், 46. பழச்சுரம், 47. கட்டிச்சுரம், 48. சீழ்ச்சுரம், 49. பல்கொப்புளச்சுரம், 50. நடுக்கல்சுரம், 51. விக்கச்சுரம், 52. கழிச்சல்சுரம் என்பவை ஐம்பத்திரண்டு தன்வழிச் சுரங்களின் பெயர்களாம்.

பிறவழிச் சுரங்கள்

பிறவழிச் சுரங்கள் பிதர்மோ தச்சுரம்
இருநா வேற சுரமே வற்சுரம்
மருப்பூ தச்சுரம் மருந்து வேகச்சுரம்
திருகு விடச் சுரம் விஷச்சுரம் பயச்சுரம்

துன்பம் விளைக்குந் துக்கச் சுரம்பென்
இன்பம் விழைக்கா மச்சுரம் பாவம்
மன்னும் தெய்வச் சிலச்சுரம் யாமோ
ரின்சுரம் பன்னிரொன் டெனப்படுமன்றே
எனறமையால்

1. மோகச்சுரம் (அடி முதலியவைகளால் பிறக்கும் சுரம்)
2. நாவேறச்சுரம் (சாபசுரம்) 3. ஏவல்சுரம், 4.பூதச்சுரம்
5. மருந்துவேகச்சுரம், 6.நச்சுச் சுரம், 7.கோபச்சுரம்,
8.பயச்சுரம், 9.துக்கச்சுரம், 10.காமச்சுரம், 11.தெய்வசிலச்சுரம்
12 காமோர்ச்சுரம் (கந்தர்வசுரம்) என்பவை பன்னிரண்டு பிறவழிச் சுரங்களின் பெயர்களாம்.

மேலும், வளி முதலான குற்றங்கள் தத்தம் மாத்திரையில் மிகுதல் குறைதல்களால் உண்டான வேறபாடுகளாலும், கால வேறபாடுகளினால் உண்டாகும் தட்பவெப்பங்களின் பலனாலும் நச்சுச் சுரங்களையும் பிறப்பிக்கும். அவை பலவாயினும், முக்கியமானவைகளை ஈண்டு எடுத்துரைப்போம்.

1. உணவு சாரத்தின்வழியே எழுந்த உள்சுரமாகக் காய்கின்ற விடாச்சுரம்
2. குருதி வழியில் எழுந்த விடாச்சுரம் இருபுறம்பாக வீசும்
3. ஊனைப்பற்றியெழும் சுரம் நிலமுறையாகக்காயும்
4. கொழுப்பைப் பற்றியெழும் சுரம் மூன்று முறையாக வரும்
5. என்பிலும் மூளையிலும் உண்டாகும் சுரம் நான்காம் முறையாக வரும்

அகக் காரணங்களாலும் (முக்குற்றங்களும், எழு உடற்கட்டுகளும் இயல்புக்கு மாறுபட்ட நிலை), புறக்காரணங்களாலும் (அடிபடுதல் முதலியன) எழும் சுரங்கள் யாவற்றையும் அறபத்து நான்காகப் பிரித்தும், அவைகளில் முக்குற்றக் கலப்பால் (திரிபால்) விளையும் சன்னியைப் பதின்மூன்றாக வகுத்தும் கூறி இருக்கின்றனர்.

ஆயினும்,

உற்றதோர் உடலிக்கறி உறப்புடன் இரவி நின்ற
முன்னுமே நோய்க ளெல்லாம் முதிரவே தோன்றும்போது
பற்றுமே வாத பித்த சிலேற்பனந் தன்னி லொன்றைப்
பற்றியே தோன்றுமென்று பகர்ந்தனர் முனிவர் தாமே

(அகத்தியர் குருநாடி)

(பொருள்)
நோய்கள் பிறப்பதற்கான வழிகள் பலவாம் இருப்பினும் அவை தோன்றும் போது வளி முதலான முக்குற்றங்களில் ஒடுங்குமாதலின், இக்குற்றங்களின் அளவாம் எழும் சுரங்களையும் அவைகளின் குறிகுணங்களையும் அவைகளின் பத்திய பரிகாரங்களை மட்டுமே கூறவாரும் உளர்.

சிலர் சுரத்தின் எண் மொத்தம் ஏழு என்பர். எவ்வாறெனில் தனித்தனி குற்றத்தால் எழுவனவாகிய வாத, பித்த, கப சுரங்கள் என மூன்றும் வாதபித்தசுரம், பித்தகபசுரம், கபவாதசுரம் என இக்குற்ற அளவினால் எழுவனவாகிய மூன்றும், முக்குற்றங்களின் கலப்பால் எழுவதாகிய முக்குற்றசுரம்(சன்னிச்சுரம்) ஒன்றும் ஆக மொத்தம் எழுவகைச் சுரங்களாம்.

பூதமுனிவரும் சுரங்கள் எழுவகையென்றே கூறவரேனும் அவருடைய பாகுபாடு வேறுவகையாக உள்ளதைக் கீழ்க்காணும் பாடலால் அறியலாம்.

நேர்ந்ததோர் சுரமேழு விதமு மாகும்
  நிலையான நாமத்தில் நேர்மை கேளாம்
வளர்ந்ததோர் வாதசுரம் பித்தசுரம் சிலேட்டும்
  வாகான பூதசுரமசீர்ண சுரமாம்
ஆர்ந்தவபி காதசுரம் தொந்த சுரத்தோடு
  ஆர்க்கமா மேழுவித மறிந்த கொள்ளு
தீர்ந்ததோர் சுரபேத வன்மை யெல்லாம்
  செயலறிந்த குணத்தோடு செப்புறேனே.

(பூதி 1 வைத். சிந் சுர-நிதா பாடல்-2)

(பொருள்) உடலில் தோன்றும் சுரங்கள் எழுவிதமாகும். அவைகளின் பெயர்கள் -1 வாதசுரம், 2.பித்தசுரம், 3,சிலேத்துமசுரம் 4.பூதசுரம், 5.அசீரணசுரம், 6.அபிகாதசுரம், 7.தொந்தசுரம் என்பர்.

மற்றும் சில நூலோர், சுரநோயை அறுபத்துநான்கு வகையாக வகுத்து, அவைகளுக்குப் பெயர்களை அமைத்து அவைகளின் குறிகுணங்களையும் மருத்துவ வகைகளையும் கூறுவர். ஆயினும், ஈண்டு யாவரும் கூறியவை களைக் கொண்டு திரட்டி வரைந்துள்ளோம்.

தன்வழிச் சுரங்கள்

வளிச்சுரம் (வாதசுரம்)

அங்கங் கறுக்குமிசை யாவனமா மேனியுளை
அங்கங் கறுக்குமிசை யாதனவா - பங்கம்
பரமாகப் பன்னுமுடல் பாவகநா நோயின்
பரமாகப் பன்னுமிரு பல்

(தேரையமக வெண்பா)

(பொருள்) உடலெல்லாம் கறுத்திரும் முகம் நீர்கொள்ளும் உடலில் அங்காங்கு (எல்லா உறுப்புகளிலும்) அறுப்பதும் குத்துவதும் போன்ற கடுப்பு காணும். உணவை விரும்பி உண்ண இயலாது. தலை, நீர் நிறைந்ததுபோலக் கனத்திருத்தல். உடல் முழுமையும் நெருப்பனல் போலக் காய்தல் என்ற குறிகுணங்களைக் காட்டும். இதனுடன் நோய்க் கட்டங்கள் மிகவாகும். இது மன்னவன் எனக் கூறப்பட்ட வாதத்தின் இயல்பு.

ஆகங் கறுக்குநோ யாகந் தடிக்கும் அறுத் - தீயென்ன--
அறுத் தீயென்ன மெய்யேகங் கொதிக்கும்
அருமெய் வெயர்த்திமிர் மீமந்தம் வாய்மூச்சு
அருமே மிகவாத மேனி...

(தேரன்-மகாகரிசல்)

(பொருள்) உடல் முழுதும் கறுத்து, நொந்து தடித்து ஆறுத தீயைப்போல் கொதிக்கும் (சுரம் விட்டபின்)உடல் வியர்த்து திமிர் உண்டாகும். வயிற்றல் மிக்க மந்தம் உண்டாகி வயிறு உப்பி வாயால் மூச்சு விடப்பண்ணும். இது வாதத்தின்மேல் எழுந்த சுரத்தின் குறிகுணங் களாம்.

வாத சுரத்தின் குணங்கேளாம்
மயிர்கூச் செறியோ குடல்குளிரும்
போத நடுக்குங் கைகால்கள்
பொருத்து தோறு முளைவாகும்
பேதமுகமும் மினுமினுக்கும்

புறந்தா ளதைத்த வெளுத்திருக்குமே
ஐதை மிகுந்த மலமீவாளும்
உடனேநீரும் சிறுத்திருமே

(பொருள்) மயிர் சிலிர்த்தல், உடல் குளிரில் குளிரல், கைகால்கள் மிகவும் நடுங்கும், கீல்கள் தோறும் வலித்தல், முகத்தில் மினுமினுப்பு தோன்றல் புறங்கால்கள் வீங்கி வெளுத்திடல், உடலில் குளிர்ச்சி அதிகமாதல் மலம் (எரு) வரண்டு சுருங்கல், சிறுநீர் அளவில் குறைதல் ஆகியவை வாத (வளி) சுரத்தின் குறிகுணங்களாம்.

காலெலா முளைவு காட்டும் கண்ணுமே நீலங்காட்டும்
மேலெலாம் வெளிறிக் காட்டும் விடமென லேகங் காட்டும்
நூலெலாந் தெரிந்த காட்டும் நொடிபட விடிக்கும் நெஞ்சு
தோலெலாம் சுருங்க வாங்கும் சுரமுறு வாதத் தன்மை

(பொருள்) வாதசுரத்தில் நால் மு முமையும் வலித்தக் கண் நீலநிறமடைந்த உடல் முற்றும் (சாம்பல் பூத்ததுபோல) வெளுத்த, நோய் நஞ்சைப் போல விரைந்த பரவும். நெஞ்சில் மிக இடிக்கும். தோல் சுருங்கி உடல் மெலியும்.

குளிர்ந்த நடுங்கும் குலைப்பெய்திக் கொண்டே தாகம் மிகமிஞ்சி
நளிர்ந்த பல்லும் கடுத்துளைந்த நாவிக்கு நியுர் கொட்டாவி
தளர்ந்தே உடலும் மலிக்குறங்கும் தலையும் விலாவும் மிகக்குடைந்த
வளர்ந்த வாயு மேற்கொள்ளும் வாத சுரத்தின் குணமாமே

(பொருள்) இந்நோய் (வாதசுரம்) தொடங்கும்போதே குளிர் தோன்றி அதன் விளைவாக நடுக்கமும், குலைப்பும் (மிதமிஞ்சிய அங்க அசைவுகள்) படிப்படியா மிகுந்த கொண்டேபோகும். அளவுகடந்த நீர்வேட்கை உண்டாகும். குளிரும்போதெல்லாம் பல்லில் கடுப்புடன் கூடிய நோவுண்டாகு நாசித் தொளைக்குள் எரிச்சலுண்டாம். கொட்டாவி மிகுந்த உண்டாகும். உடல் தளர்வடையும். கண் தொடை, தலை, விலாப்புறம் ஆகியவைக்குள் குடைச்சல் உண்டாகும் (வயிற்றில்) வாயு செறியும்

வாத சுரத்தின் குணமின்னேர் வகுத்த வண்ண முரைத்திடுவாம்
சீத மதிக மாம்வந்து சிந்தை கலங்கி நெஞ்சுளைந்தே
ஏத முறவா ளாலரிவ தெளவே சந்தங் குலைகுலைந்து
பேத மலமும் வரண்டுதாம் பெருகப் பொருமல் தோன்றிடுமே

(பொருள்) வாதசுரத்தில் குடலில் சிதம் மிகுதியாய்த் தோன்றும் மனக்கலக்கம், நெஞ்சுவலி, எலும்பு மூட்டுகளில் வாளால் அறுப்பது போல நோதல், குடல் (குலை) நடுக்கம், மலம், வாளல், வாயுப் பெருக்கால் (வயிற்றில்) பொருமல் உண்டாகும்.

தோன்று முடலந் தனைநறுக்கித் தவைத்தாற் போல நடுக்கமுற்றிவ்
வான்ற உணவு வேண்டாநச் சதுபோத் சத்தி யருவருப்புத்
தேற்ற விரவும் பகலுந்தான் இல்லை யுறக்க மும்நோவாம்
நான்ற கைகால் கடுத்தமற்றி நலச்சேர் சந்து முளைந்திடுமே

(பொருள்) உடலை நறுக்கித் தவைத்தது போலிருத்தல், நடுக்கல், சோறு வேண்டாமை, உணவைக் கண்டால் விடத்தைக் கண்டதுபோல மிகவெறுத்தல், வாந்தியெடுத்தல், இரவிலும் பகலிலும் தூக்கமின்மை, கை கால்களில் கடுப்புடன் கூடிய வலியுண்டாதல், மூட்டுகளில் மிக்க வலி முதலிய குறிகுணங்கள் காணும்.

உளையுஞ் சிலிர்த்துப் பாம்புவிட மொத்தே தாகங் கொண்டெய்தும்
களையுந் தெளியா தசதியுண்டாங் கண்டா விந்தக் குணந்தன்னை

(பொருள்) இந்நோயில் மயிர்க் கூச்செறிந்து பாம்புவிடம் கொண்டவனுக்குள்ள தாகத்தைப் போன்ற தாகமுண்டாகும். களைப்பும் தோன்றி தெளியாத அசதியும் ஏற்படும்.

செப்புகிறேன் வாதசுரத் தின்குண மெல்லாம்
    திருமுகமு முதடுமே கருத்துக் காணல்
தப்புகிறேன் சரீரமெலாந் தடித்து நோதல்
    தாகந்தான் மிகக்காணல் மெய்ந்நடுக்கல்
திப்புகிறேன் உடம்புதிமிர் எடுக்க லக்ஷணம்
    தேகம்பா ரித்திருத்தல் மல்பே தங்கள்
குப்புகிறேன் குளிர்ந்தமயிர்க் குச்செறிதல் இந்தக்
    குணமெல்லாம் வாதசுரக் குறமாமே

(யூகிவைத் சிந்-சுரந்தா பா.3)

(பொருள்) முகமும் உதடும் கருப்பாயித் தோன்றல் உடல் முழுமையும் அடிப்பும் வலியும் தோன்றும், மிகுந்த நீர்வேட்கை, உடல் நடுக்கல், திமிர், வெப்பம், உடல் பாரிப்பு, குளிருடன் மயிர்க் கூச்செறிதல், மலம் (எரு) கடினப்பட்டு நிறம் மாறபாடல் ஆகிய குறிகுணங்கள் வாத சுரத்தினதாம்.

நடுக்கலும் பிதற்றலும் தளிர்மெய் கூறலும்
இடுப்பொடு சந்துகள் நெற்றி நோதலும்
அடுத்தடுத் திருமலும் அயர்ந்து சோம்பலும்
அடுத்திடு வாதமாச் சுரத்தின் வன்மையே.

(பொருள்) உடல் நடுக்கல், வாய் பிதற்றல் குளிர், மயிர்க்கூச்செறிதல் இடுப்பு, பூட்டுகள், நெற்றி இவை நோதல், அடுத்தடுத்து (வாயோயாமல்) இருமல், அயர்ச்சி, சோம்பல் இவை வளிவெப்பின் குறிகளாம்.

முகமு முதளுங் கறுத்துடலம்
    முழுது நொந்து நடுக்கலுடன்
மிகவுந் திமிர்த்துப் பாரித்து
    மேனி குளிர்ந்து கூச்செறிந்து
பகரு முடியின் முனைபிளந்து
    பண்டி மலமும் பந்தித்தல்
தகவாம் வாத சுரக்குறியின்
    தன்மை யென்ன மொழிகுவையே

(பொருள்) முகம், உதடு, அவை கறுத்தல் உடல் பூராவும் நொந்து நடுக்கல், திமிர்த்தல், பாரிப்பு, உடல்குளிரல், மயிர்கூச்செறிதல், மயிர் முனை வெடித்தல், மலம் பந்தித்தல் இவை வாத சுரத்தின் குறிகுணங்களாம்.

கண்ணிரண்டு நீர்சொரியும் காணுந் தலைநோவும்
பன்வறிறு தாவிரைதல் பற்றிடும்வேற் - கண்ணாய்
முடக்க லதிசோம்பல் கொட்டாவி விக்கல்
அடக்கரிய வாதகுண மாம்

(பொருள்) கண்களில் நீர் சொரிதல், தலைவலி, வயிற்றிரைச்சல் கைகால் முடக்கல், மிகுந்த சோம்பல், கொட்டாவி, விக்கல் ஆகியவைகள் அடக்குவதற்கரிய (தீர்ப்பதற்குரிய) வளிசுரத்தின் குறிகுணங்களாம்.

மெத்குறித்த

மேற்குறித்த பாக்களில் கூறிப்போந்த குறிகுணங்களை ஒருங்கு திரட்டிக் கூறில், வளி (வாத)சுரத்தில் சோறுவேண்டாமை, உணவை நச்செண அருவருத்தல், மந்தம், வாந்தி, இரவிலும் பகலிலும் துயிலாமை, உடல் முழுமையும் - சிறப்பாக முகம், உதடு, நா, கண் - கருநிறமடைதல், சாம்பல் படிந்தாற்போல் உடல் வெளுத்து வளரல், முகத்தில் நீர் கொள்ளல், தலைநோய், உடலின் மூட்டுகள் (சந்திகள்) குத்தலும், குடைச்சலும் உண்டாதல், உடலில் தடிப்பு காணல், மயிர்க் கூச்செறிதல், குளிரல், ஆறாத தீயைப்போல உடல் முழுமையும் கொதித்தல், வாயால் உச்சுவிடல், மிகுந்த சிலம், மூக்கில் எரிச்சல், கண், தொடை, இடுப்பு இவை குடைச்சலுடன் நோதல், புறந்தாள் வீக்கல், வாய் ஓயாது இருமல், உடல் இளைத்தல் பற்கள் கிறுகிறுத்து உளைதல், வயிற்றில் காற்று செறிந்து பொருமல் கொட்டாவி உண்டாதல், சுரம் விடும்முன் வியர்த்தல், திமிர், மிகுந்த மந்தம், சோம்பல், உடல் அறுக்க-அடிக்கிற- பாரமாய்க் காணல், ஆகிய குறிகளைக் காட்டும் என்று அறியக் கிடக்கிறது மற்றும் மலம் (எரு) தீய்ந்து, வரண்டு சுருங்குதலும், பந்தித்திடலும், நீர் சுருங்கி வெள்ளாட்டு நீர்போல் நிறம் கொண்டு இறங்குதலும், இந்நோயில் காணும். வாய் பிதற்றலும் உடல் பலமாக நடுக்கலும் காணப்படுதலும் உண்டு என அறிக. அன்றியும்

தேரன் மருத்துப்பாரத நாடகத்தில் கூறியாங்கு

"வேத வியாசப் பொருப்பின்றுட சௌபாக்கிய
விக்கின ராசன் வரைந்த படியே
வாத வெப்புக் கிரைந்தே நாளதற்கு ளெந்த
வினைகளும் விடுமிக்கும் முதல்நோய்க் குள்ளாகி"

(பொருள்) வளி வெப்பு நோயின் கால அளவாகிய பத்துதினத்திற்குள் எந்த வினைகளும் அதிகமாகும் என்பதால், மேற்கூறிய குறிகளல்லாமல் பல்வேறு நோய்களும் இச்சுரத்தில் தொடரக் கூடும் என அறிக.

வளியழற்சுரம் (வாத பித்த சுரம்)

வாத பித்த சுரமானால் வருந்துங் குணத்தை மானேகேள்
நாத மிடிந்தே யிரைச்சலுமாம் நாவுங் கண்ணும் மஞ்சளிக்கும்
ஊதை மிகுந்தே விடாச்சுரமாம் ஒக்கா ளித்தக் கன்றுங்கும்
விதம் மிகுந்தே பிரமையாய்ச் செய்யுங் குணத்தைத் தேர்ந்தறியே

(பொருள்) இடியோசைபோல் (மிக்க ஒலியுடன்) வயிறு இரையும், நாவும், கண்ணும் மஞ்சளித்தும் குளிர் மிகுந்தும் விடாச் சுரகம் உண்டாகும் அன்றியும் சீதம் மிகுங் கால்மலக் கலக்கம் உண்டாகும்.

சோம்பொடு திமிரு முண்டாம்ச் சுவாசமுந் திகைப்பு முண்டாம்க்
கோம்பொடு சத்தி கெட்டுக் குளிர்ந்தமெய்ச் சிலிர்ப்பு முண்டாம்ச்
காம்புறு தோளினாலே காம்வன பிதற்ற முண்டாம்
மேம்பட வந்த வெப்பு வாதமேற் பித்த மாமே.

(பொருள்) மேற்படி சுரத்தில் சோம்பல், திமிர், பெருமூச்சு, திகைப்பு வாந்தி, குளிர், உடல் சிலிர்ப்பு, வாய்ப்பிதற்றல் விடாக்காய்ச்சல் இவைகள் உண்டாகும்.

தணிந்தே யொன்றும் வாதபித்த சுரத்தின் குணங்கள் உடம்புளையும்
பணிந்தே கூதல் விடுவதுவும் பற்று வதுமா யிருக்கும்பின்
திணிந்தே வயிறு மிகக்கழியும் சீதம் வற்று முடல் வேர்க்கும்
தணிந்த விடாமல் மிக்குவதப்பும் தத்தந் கன்னம் சிலிர்த்திடுமே

(பொருள்) உடல் நொந்து குளிரோடுசுரம் வருவதும் போவதுமாக இருக்கும். பின்பு, இவைகள் தணிந்து வயிறு மிக்கக் கழிச்சலை உண்டாக்கி அத்துடன் சீதமும் கூடிக்கழிவதுண்டு. மேலும் உடல் இளைத்து (வற்றிடல்) வியர்க்கும். விடாச்சுரம் காய்தலும், பல்லும் கன்னமும் சிலிர்த்தலும் ஆகிய குறிகள் வலியுறல் சுரத்தினதாம்.

சிலபோ திணர்ச்சி தெட்டிருக்க சிறுகா லேவாய் தித்திக்கும்
பலகா லம்வாய் கசந்திருக்கும் படருள் குழலை யுளதாகும்
தலமீ திதற்குப் பரிகாரம் தானே குடிநீர் தளைப்புகலில்

பொருள்) சில வேளையில் இப்பிணியாளனுக்கு உணர்ச்சி (சுரவாகடம்) இராது. சில வேளை வாய் சிறிது இனிப்பாகக் காணும் பெரும்பாலும் வாய் கைப்பாகவே இருக்கும். விடா அழலை உண்டாக்கும்.

ஆகுமே வாதபித்த சுரத்தின் செய்தி
அறிந்திடவே யங்கமெலா அசைதல் நோதல்
நாகுமே மலபேத மாயி ருத்தல்
மலம் வெளுத்தல் வாய்கைத்தல் வடிவங்குன்றல்
தேகுமே யறிவோடு திணவு மாதல்
தியங்கிருதல் மயங்கிருதல் சிலேத்ம மாமே
(யூகி வைத் சிந் சுர நிதானம்மி.6)

(பொருள்) வாதபித்த சுரத்தில் குறிகுணங்களைச் செப்பப் புகின் உடல் முழுமையும் சற்று அசைந்தால்கூட மிக்க நோதல், தாகமெடுத்தல், அடிக்கடி தூக்கமுண்டாதல், நயமாக பிரலாபித்தல், மலம் (எரு) இயல்புக்கு மாறு- பட்டுக் கழிதல் (பெரும்பாலும்) மலம் வெளுத்து இளகி இழிதல், வாய் கைப்புச் சுவையுடன் இருத்தல், உடல் மெலிதல், அறிவு தேய்ந்து காணப்படல், /¢ ௭ உடலில் திவைவு உண்டாதல், மனக்கலக்கம், திகைப்பு, மயக்கம் உண்டாதல் ஆகிய இக்குறிகளைப் பெற்றிருக்கும்.

மேலே கூறிய பாக்களின் பொருள்களை ஒருங்கு திரட்டிப் பார்க்குங் கால் வளியழல் (வாதபித்த) சுரத்தில் நாவும், கண்ணும், மஞ்சளித்தல், சோம்பல், ஓக்காளம், வாந்தி, வால் கைத்தல், உடல் சிலிர்ப்பு, குளிர் விடாக்காய்ச்சல், வாய் பிதற்றல், உடல் வியர்த்தாலும் சுரம் விடாதடித்தல் பல்லும் கண்ணும் சிவர்த்துக் கொள்ளல், உடலில் திவைவு மிகுத்துக் காணல், மனக்கலக்கம், அறிவு மங்கல், பிரமை ஏற்படல், வயிற்றில் வாயு செறிந்து மிக்க சத்தமாக இரைதல், மலம் வெளுத்து இழிதலும், பலவாறாக இழிதலும் சீதம் விழுதலும் ஆகிய குறிகுணங்களை உடைத்தாய் இருக்கும்.

<u>வளி ஐயச்சுரம் (வாதகபசுரம்)</u>

ஐதையு மங்கமும் பொங்கி வாந்தியுடன் மூச்சு முண்டாம்
பாதமுங் கரமும் வீங்கி யிருமலோ டிளைப்பும் பற்றி
நாத மடைத்துக் காய்ந்து நடுக்கலச் சுரமு மாறா
வாதைசெய் வாதசேற்ப சுரமென வகுக்க லாமே

(பொருள்) உடலில் குளிர், உடல் பாரிப்பு, வாந்தி, பெருமூச்சு, பாதங்களும் கைகளும் வீங்கல், இருமல், பலவீனம், தொண்டைக்கம்மல், தொண்டைவரளல், விடாச்சுரம், நடுக்கல், என்ற குறிகுணங்களுடன் உடலை வருத்துவதான சுரம் வாத சேட்ப சுரம் என்றழைக்கப்படும்.

தொண்டையு முடம்பும் நொந்தே துலங்கிய முகமும் வெளுத்து
கண்டதப் பிசமும் விக்கல், கருமயிர்க் கூச்ச மெய்தும்
விண்டுவா யுலர்த்துச் சோர்வாம் வெண்டெல் நலிந்தி ருக்கும்
மண்டுகால் கையுஞ் சந்து வாதமும் சேரென றோதே.

(பொருள்) மேற்குறித்த சுரத்தில் தொண்டையும், உடலும் நோதல், முகம் வெளுத்தல், இரைப்பு, சிக்கல், மிக்க மயிர்க் கூச்செறிதல், வாம் உலர்தல், சோர்வடைதல், ஊன் நலிதல், வெருண்ட பார்வை, கைகால் பூட்டுகளில் மிகவும் நோதல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

பேரா திருமுகம் நாவரகும் பெருகுச் சதிதி நீ உறக்க முண்டாம்
சீரா ருடலம் உட்குளிரும் சிறுநீர் மலமும் வெளிறாகும்
நரால் மூக்கில் வாய்தன்னில் நீருண்டாநாட் செல்லும் விரைவில்
தீரா வெதப்பு கண்வெளிரும் தீயும் வெளிலம் வேண்டிருமே

(பொருள்) முகமும் நாவும் வாளும், அதிகமான வாந்தி, அதிக தூக்கம், உடலில் உள்ளொடு மிகுந்த குளிர் இவை உண்டாகும். சிறுநீரும் மலம் (எரு) வெளுத்தக்காணும்; மூக்கிலும் வாயிலும் மிகுதியாக நீர் ஊறும். கண்வெளிரும், சுரம் காயும், இச்சுரம் தீர நெடுநாள் செல்லும்.

வேண்டும் பலகாற் கொட்டாவி மெய்யி லுரோமஞ் சிலிர்த்த மிகத்
துண்டு மயக்கம் தெளிவுண்டாம் தொடையுங் கால்கை சந்தகளும்
ஈண்டுங் குடைச்சல் மிகவுண்டாம் இதுவே வாத சேற்பசுரம்
மீண்டு மிரண்டு பட்டினிதான் விட்டுச் செய்யும் வகைகேளே.

(பொருள்) அடிக்கடி கொட்டாவி விடல், உடலிலுள்ள மயிர் சிலிர்த்தல், மிக்க மயக்கமும், தக்க தூண்டுதலினால் மயக்கம் தெளிதலும் தொடை, கால், கை, பூட்டுகளில் மிக்க குடைச்சலுடன் நோவுண்டாதலும், வாத சேட்ப சுரத்தின் குறிகுணங்களாம்.

திண்ணமாம் வாதசிலேட் டுமசு ரந்தான்
　　சடமெல்லாம் நொந்திருதல் சுவாசங் காணல்
எண்ணமா மிருமலுநா வெளுத்திருதல்
　　இசைந்தமயிர்க் கூச்செறிதல் பிடரி நோதல்
கண்ணமாந் தாபமே மிகவுண்டாதல்
　　தயங்கியே சஞ்சரித்தல் வாய்பி தற்றல்
விண்ணமா மிரளலொடு வியர்வை காணல்
　　மிக்கவமு திடலிதன்றன் விவர மாமே

(பூசிவைத் சிந்-சுரநிதா பா.7)

(பொருள்) வளியைசுரத்தில் உடம்பெல்லாம் நோதல், இரைப்புண்டாதல், இருமல் உண்டாதல், நாவெளுத்தல், மயிர்க் கூச்செறிதல், பிடிகழுத்து நோதல் நீர்வேட்கைமிகுதல், கலக்கம், வாய் பிதற்றல், மிரளல், மிகவும் அழுதல் உடல் வியர்த்தல் என்ற குறிகுணங்கள் காணும்.

மேலே கூறியநூ பாக்களின் உள்ள குறிகளைத் தொகுத்துக் கூறின், வளி ஐய (வாதகபசுரத்தில்) சுரத்தில் சுரம் விடாமல் காய்தல், வாந்தி, தொண்டையும் உடம்பும் நோதல், முகம் வெளுத்தல், கைகால், தொடை பிடரி, சந்துக்கள் உளைதல், இருமல், இளைப்பு, இரைப்பு, காதடைப்பு விக்கல், மயிர் கூச்செறிதல், வாய் உலர்தல், சோர்வு, வெருண்ட பார்வை, முகமும் நாவும் உலர்தல், அதிக தூக்கம், மூக்கில் நீர் மாய்தல், வாய் நீர் ஊறல், கண் வெளிறல், அனலிலும், வெயிலிலும் பாசிதல், காய விரும்பல், மலமும் நீரும் வெளுத்தல், மயக்கம், தாபம், தயக்கம், வாய் பிதற்றல், மிக அழுதல், மிரளல், வியர்வை, பாதமும் கையும் சில பூட்டுகளும் வீங்குதல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

<u>அழற்சுரம் (பித்த சுரம்)</u>

பாடல்மெய் மாநாகம் பாறுமிக ராகவுடல்
பாடலமெய் மாநாகம் பாறுமே - பாடலங்கம்
பித்தசுர மாகவரும் பேராக் கினிமயமாம்
பித்தசுர மாகவரும் பேய்

(பொருள்) அரக்கர்கள் தமது வல்லமையாகிய மாயாவித்தை (தேரன் யமகவெண்பா களினால் யாவருடைய அத்தையும் எவ்வாறு வஞ்சகமாகத் தன்புறத்தவார்களோ அவ்வாறே இவ்வழற்சுரமும் நோயுள்ளவரை வருத்துவதாகும். இது ஊழி வடவா முகாக்கினியைப்போலக் காய்ந்து பித்த சுரமென்ற பெயர்கொண்டு, பேய் பிடித்தவர்களைப் போல ஆட்டி வருவதுடன், குதிரையைப் போலப் பெருச்செறிதலும், முள்ளம் பன்றியைப்போல மயிர் கூச்செறிதலும் மானைப் போல மிரண்டு மிரண்டு பார்த்தலும், குரங்கைப் போல மனநிலை மாறுதலும் பருந்தின் கண்களைப்போல குழலலும், பகைவர்களைப்போல நாளுக்குநாள் பெருகி வளர்ந்து, செம்மை நிறத்தையுடைய பொருளை உடல் உடல் சிவத்தலும், உயிர் உடலைவிட்டு நீங்குவதுபோல பலப்பலவான விதத்தில் மனம் கலங்குதலும் கண்ணும் மூக்கும் பாதிரிப் பூப்போன்ற நிறத்தை அடைதலும், உடல் நடுங்குவது மான குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

ஆகு மந்திரி பாடல முடலம்
அங்க சப்புவாம் அரக்கைநேர் கண்ணாம்
அனை மேதின் மாதி ரந்தலை
அட நடுக்குள் சலிலத் தேவாம்
அறு மிகுந்து சுரப்பா கும்மே
ஆயா சம்மிளைப் பரோசக மிகுமேல்

(தேரன் மகாகரிசல்)

(பொருள்) உடல் சிவந்து வாய் கைத்தத் தலைசுற்றி என்திசை களும் ஆடி நடுங்குதல் போன்ற தோற்றம் உன்டாதல், வாயில் நீர் சுரந்து வடிதல், உடல் வன்மை குறைந்து இளைப்பும் களைப்பும் தோன்றல் நாச்சுவை குறைதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

பித்த சுரத்தின் குணங்களோம் பிதற்றிப் பேசும் வாய் வெகுவும்
ஒத்த நயனம் சிவந்திருக்கும் உடலே வயிறு கமிந்தவரும்
மெத்த தன்னீர் தாகிக்கும் வெதம்பி நாவும் தடுமாறும்
புத்தி யடங்கும் முகங்களுக்கும் புளிய மிடறும் ,புண்ணாமே.

(பொருள்) பித்த சுரத்தில் வாய் பிதற்றிப் பேசல், அிசுதல், கண்கள் சிவத்தல், வயிறு கழிதல், மிகுந்த நீர்வேட்கை, சுரம் மிகுதியாகக் காய்தல் நாத்தருமாறல் அல்லது குமறல், புத்தி தடுமாற்றம் அல்லது மந்தம் ,முகம் கறுத்தல், தொண்டை புண்ணாதல் முதலிய குறிகள் காணும்.

கொடிதா யுள்ளங் கொதிப்பெய்திக் கொண்டே தாகம் மிகமிண்டிக்
கடிதாம் மெய்யுந் தழல்வடிவாய்க் கையுங் காலும் மற்றவையும்
வடிவாய் மஞ்ச நிறமாகும் வாயுங் கைக்கும் மனந்திகைக்கும்
பிடியார் இடையா விடையாரே பித்த சுரத்தின் குணமாமே

(பொருள்) உள்ளம் மிகவும் கொதித்தல், மிக்க நீர் வேட்கை, உடல் நெருப்புப்போல காய்ந்து எரிதல், கைகால்கள் மஞ்சள் நிறத்தைப் பெறுதல், வாய் கைத்தல், மனங்கலங்கல் ஆகியவை பித்தசுரத்தின் குறிகுணங்களாம்.

தாகமும் விக்கலுந் தாவு நித்திரை
வாகுடன் வயிற்றழல் வாந்தி செய்தல்
மீகுடன் வாயுலர்ந் திறங்கு நீர்செவந்
தாகுடன் பயித்திய சுரமென் றோதரோ

(குழந்தைவேல் முதலியார் -கையேடு)

(பொருள்) தாகமும், விக்கலும், உறக்கம் மிகுதியாதல், வயிறு உப்புதல், வாந்தி செய்தல், வாய் உலர்தல் (வறளல்)ஓ சிறுநீர் சிவந்து இறங்குதல், ஆகியவைகளைக் கண்டவுடன் பித்தசுரத்தின் குறிகள் இவைகளைக் கூறுவாயே.

செய்யும் பித்த சுரந்தன்னில் திகழும் குணங்கேள் நாவுலரும்
பெய்யும் சிறுநீர் சிவந்திருக்கும் பிதற்றல் சத்தி யோக்காளம்
மெய்யும் வெதும்பும் வாய்கசக்கும் மிடறு வாய்ப்புண் உடம்பமுற்றும்
நைமிக் கழியும் மலமுடனே நயனந் தானும் மஞ்சளித்தே

மஞ்சார் முமலாய் முகங்கருக்கும் வாங்குந் தண்ணீர் குளிர்ந்து சிலிர்த்
தெஞ்சா வன்னம் வேண்டாதிங் கிதுதான் பித்த சுரமென்ப

(சுரவாகடம்)

(பொருள்) அமற் சுரத்தில் நாவரளல், சிறுநீர் சிவந்திழிதல், வாய் பிதற்றல், வாந்தி, ஒக்காளம், வாய் கைத்தல், உடலில் வெப்பு மிகுந்த காணல், தொண்டையிலும் வாயிலும் புண்ணுண்டாதல், மிகுதியாக்கழிதல், மலமும் (எரு) கண்களும் மஞ்சள் நிறங் கொள்ளல், முகம் கருநிறமடைதல், நீர்வேட்கை மிகுதல், உடல் குளிர்ந்து சிலித்தல், உணவு வேண்டாமை முதலிய குறிகள் காணும்.

கூறான பித்தசுரத் தின்கு ணத்தைக்
    கூறிடவே நித்திரைதான் மெத்த காணல்
தேநான மலமூத்ரஞ் சிவந்தி ருத்தல்
    சிதறியே வயிறுகழிந் திருதல் சத்தி
வாறான் வாய்பிதற்றல் வாய்தான் கைத்தல்
    மகத்தான மூர்ச்சையொடு தாகங் காணல்
தாறான எழுந்திருந்தம் ஓடல் விக்கல்
    தவித்திருதல் சந்தாபப் படுதல் காணே

(பூசி சைத்.சிந்.சுரந்தா - பா.4)

(பொருள்) பித்த சுரத்தில் மிகுதியான உறக்கம், மலம் (எரு) சிறுநீர் சிவந்திருத்தல், அடிக்கடி எழிதல் (பேதியாதல்), அடிக்கடி வாந்தியாதல், வாய்பிதற்றல், வாய்கைப்பு, மிகுந்த மயக்கம், மிகுதியான நீர் வேட்கை உண்டாதல், தன் உணர்வின்றி படுக்கையைவிட்டு எழுந்து ஓடல், விக்கல் காணல், (சுரத்தின் மிகுதியால்) தவித்திருதல், வெப்பத்தால் வாட்டமுறல் என்னும் குறிகுணங்கள் காணும்.

பித்தசுரத்தின் (அழற்சுரத்தின்) குறிகுணங்களைத் தொகுத்துக் கூறின், இச்சுரத்தில், வாய்பிதற்றல், படுக்கையில் தங்காமை, எழுந்து ஓடல், மனக்கலக்கம், மயக்கம், மிகுந்த நித்திரை, உடல், கண், நீர், மலம் இவை சிவத்தல் அல்லது மஞ்சளித்தல், வாய் நீர் மிகுதியாக வடிதல், இனைப்பு சுவை இன்மை, வாய் கைத்தல், ஒக்காளம், வாந்தி, நீர் வேட்கை, நாத்தடுமாறல், வயிறு மிகக்கழிதல், இடைவிடாமல் சுரம் காய்தல், அதனால் தவிப்பும் வாட்டமும் ஏற்படல், மலம் தடுமாறல், புத்தி பேதலித்தல், வாயிலும் தொண்டையிலும் புண்ணுண்டாதல், மிரண்ட பார்வை, கண் குழலல் முதலிய குறிகுணங்கள் காணும்.

<u>அழல்வளிச்சுரம் _ (பித்தவாதசுரம்)</u>

அந்தப் பித்த மதுவிரண்டும்
வாத மொன்றாகி சுரமாயின்
உந்தக் காயும் பொருமலுமாம்
உடம்பு மிகவும் மஞ்சளிக்கும்
கொத்தாகி குறையும் வாந்திசெய்யும்
நோகுங் கண்ணும் வெளுத்திருக்கும்
மந்தம் பற்றும் ஊதைமிகும்
வருத்தங் குணங்கள் அறிவீரே

(பொருள்) பித்தம் (அழல்) இரண்டு பங்கும் வாதம் (வளி) ஒரு பங்கும் கூடியதால் உண்டாகும் சுரத்தில் சுரம் மிகக ஓங்கிக் காயும், வயிற்றில் பொருமல் உண்டாகும். உடம்பு மஞ்சள் நிறமடையும். அறைகுறையாகச் செரித்தும் செரியாமலும் வாந்தியாகும். கண்களில் நோக்காட்டுடன் வெளிறித் தோன்றும். மிக்க மந்தமுண்டாகும், உடல் குளிரும். இக்குறிகுணங்கள் பித்தவாத சுரத்தின் குறிகுணங்களாம்

பித்தவாத சுரந்தன்னைப் பேசக்கேளாய் பிடரிவலி
றொத்த சிரமும் வரண்டுவிடும் ஒளிதான் குறையும் நேத்திரங்கள்
சித்தம் மயக்குந் தேகமெலாந் தினவு போல மசமசத்து
மெத்த வெதும்பித் தாகமுமாம் வெம்மி வலலை விரும்பிடுமே

விரும்பா இளவு நெஞ்செரிக்கும் விட்டுக் காயும் வேர்வையுண்டாம்
பெரும்போ தரைக்கண் ஞா கீகமுமாம் பிரண்டே யுழற்றும் பற்கடிக்கும்

(சுரவாகடம்)

(பொருள்) அழல் வளிச் சுரத்தில் மிகுசுரம், மிகுந்த நீர்வேட்கை, பிடரி, வயிறு, தலை ஆகியவை வரளல், கண்ணொளி குறையும், புத்தி பேதலிக்கும் அல்லது மயக்கம் ஏற்படும். உடலிலெல்லாம் அதி தீவிரமாக திளவு காணும், வெய்யிலல் காம்வதையும் அனல் காம்வதையும் விரும்பும். ஊணில் விருப்பமின்மை, நெஞ்செரிவு, சுரம் சிறிது போதவிட்டு மறுபடிகாயும். சுரம் விட்டுள்ளபோது வியர்வை காணும். அரைக்கண் தூக்கம் உண்டாம். படுக்கையில்புரளல், தூக்கத்தில் பற்கடித்தல் முதலிய குறிகுணங்கள் காணும்.

<u>அழலையசுரம் - (பித்தகபசுரம்)</u>

பித்தசேற் பனசு ரத்தைப் பேசவன் மனந்த ளர்ந்து
புத்திமா ருட்டம் பன்னும் புகைந்திடு மிருமு மெல்மேல்
சத்திடை விடாமற் காயும் சலமல மஞ்ச ளிக்கும்
நித்திரை தானும் வாரா அழலையும் நெருக்க மாமே

(பொருள்) பித்த கப சுரத்தில் மனத்தளர்வு, அறிவு மாறாட்டம். புகைந்து புகைந்து இருமல் தொடர்ச்சியாகத் தோன்றும், சற்றும் இடைவிடாமல் சுரம் காயும், சிறுநீரும் மலமும் (எரு) மஞ்சளிக்கும், உறக்கம் வராது. சுரத்தின் நாளளவு மிக்கச் சிலவே.

புறங்கை கால் முகமும் விங்கும் பெருமூச்சோ டிளைப்பு விக்கல்
அறைத்திடு மாகம் போல நெஞ்சொடு விலாவி டிக்கும்
பிறந்திடு சுரமென் மேலும் பிதற்றிடுந் தண்ணீர் வாங்கும்
சித்தலிக் குணங்கள் பித்த சேற்பத்தின் சுரம தென்னே

(பொருள்) புறங்கை, புறங்கால், முகம் ஆகியவை வீங்கிக் காணும், பெருமூச்சு, இளைப்பு, விக்கல் ஆகியவை உண்டாகும். உடலை அறைந்தது போல் வலியும், நெஞ்சிலும் விலாப்புறங்களிலும் இடிப்பதுபோன்ற நோக்காடும் காணும். மேலும் மேலும் (நாளுக்குநாள்) சுரம் மிகுதியாகிக் கொண்டே போகும். வாய் பிதற்றல், நீர்வேட்கை மிகுதியாகி அதிகமான நீரைப்பருகும். ஆகிய இக்குணங்கள் பித்தகபசுரத்தின் குறிகுணங்களாம்.

சேர்ந்திடும் பித்த சேற்ப சுரத்தினிற் குணங்கள் செப்பில்
சார்ந்திடுஞ் சுரமுந் தொண்டை கட்டியே யிருமலுண்டாம்
மாய்ந்திடு மிளைப்பு நாவும் வழுவழுப் புடனீவ ரட்சி
பாய்ந்திடு வேர்வை மேன்மேற் பகர்ந்திடு குணங்க டேரே.

(பொருள்) பித்தகப சுரத்தில் குறிகுணங்களைக் கூறப்புகில் - மிகுந்த சுரத்-சுரத்துடன் தொண்டை கட்டிக்கொண்டு இருமல் உண்டாதல், மிக்க இளைப்பு, நாவழுவழுத்தலுடன் வரளல், அடிக்கடி வியர்த்தல் என்பவை

மேற்படி சுரத்தின் குறிகுணங்கள் என அறிவாயாக.

இருமலந் தாகமும் மிசைந்த தூக்கமும்
பொருமலும் வேர்வையும் வாய்பி தற்றலும்
மருமையு மயிர்சிலிர்த்த லங்கம் நோதலும்
பெருமையுள் சுரமிது பித்த சேத்தமம்

(பொருள்) இருமல், நீர்வேட்கை, மிகுந்த உறக்கம் (கையேடு) வயிறு பொருமல், வியர்த்தல், வாய் பிதற்றல், மயிர் சிலிர்த்தல், உடல் நோதல் என்னுங் குறிகுணங்களோடு சுரம் காய்ந்தால் அது பித்தகபசுரமென்று கொள்க

விவரமாம் பித்தசிலேட் டுமசு ரந்தான்
வியர்வையே மிகவருதல் வாய்பி தற்றல்
திவரமாய் நித்திரையும் மிகவே மிஞ்சல்
நெடித்தமயிர் கூச்செறிதல் இரும லாதல்
தவரமா மார்நோதல் தாபங் காணல்
தலைவலியும் பிடரிவலி தகைத்தக் காணல்
நவரமா நாக்கதுவும் வழுவ முத்தல்
நாக்கொடு மூக்குநல மழிதல் கானே.

(யூகி,வைத்திந்.சுரந்தா- பா.8)

(பொருள்) மிக்க வியர்த்தல், வாய் பிதற்றல், அதிக உறக்கம், மயிர் கூச்செறிதல், இருமல் உண்டாதல், மார்பு நோதல், நீர்வேட்கையும் உடலெரியுங்காணல், தலைபிடரி வலிமிகக் காணல், நா வழுவழுத்தல், நாவும் மூக்கும் தன்னிலை மாறுபடல் என்னும் குறிகுணம் காணில் பித்தகபசுரமென்று அறிதலாம்.

சொல்லும் பித்த சிலேற்பனமாகி சுரத்தின் குணங்கேள் உடம்புளையும்
மெல்ல மூச்சுன் டாயிருக்க மெய்யும் வெதும்பு மிருமலுண்டாம்
வல்ல நாவும் வரண்டிருக்கும் மயங்கு முடம்பு வற்றுமாம்
அல்ல பெறவே பிதற்றம்வேர் வாகு முடல மடர்ந்தடர்த்தே
அடர்ந்த கழுத்தின் து மிகழுத்தின் அடியுமென்றும் வேர்த்திடுமே
தொடர்ந்த நயன மெலியுமிளிச் சொல்லும் பரிகா ரங்கேளாம்

(சுரவாகடம்)

(பொருள்) பித்தகப சுரத்தில் உடலெல்லாம் நோகும், சிற்றிரைப்பு காணும், உடல் வெக்காட்டால் எரிதல், இருமல் உண்டாதல், நாவரட்சி, மயக்கம், உடல் வாடி இளைத்தல், பரிதாபகரமாகப் பிதற்றம், உடலில் அடுத்தடுத்து வியர்வை காணும், சிறப்பாக தலையிலும், கழுத்தின் அடியிலும் வியர்வை மிகுத்துக் காணும், கண்ணெரிவு காணும்.

ஐயச்சுரம் (கப சுரம், இசத்தும சுரம்)

அச்சவே தத்தண்டா மானகமா னுங்கா
யச்சவே தத்தண்டா மாம்வடவை-யச்சவே
தத்தை யிருந்தைத் தனிலாக்குந் தப்பாது
தத்தை யிருத்தைநா தன்

(தேரன் யமகவெண்பா)

(பொருள்) அச்சத்தையும் மனவேற்றுமையையும் முகத்தில் உண்டாக்கும் மத்தள ஒலியையும் வானம் குமுறும் ஒலியை (இடியோசை)யும் போன்ற ஒலிகள் எப்போதும் செவியில் ஒலித்துக்கொண்டே இருக்கும். பின்பு, உடலின் மயிர்க்கால்கள்தோறும் பிசுபிசுத்த வியர்வையைத் தோன்றச் செய்து நீர்ப்பசையை உண்டுபண்ணி வடவா முகாக்கினியைப் போன்ற சுரத்தை உண்டாக்கிய ஒரு நாழிகைக்குள் உடலை வெண்ணிறம் அடையச் செய்யும் - அறிய இக்குறிகுணங்களை ஐயச்சுரம் பெறும் என்க.

ஆமிர நயனம்மெய் யானையி னிறமே
ஆஅ இருமல முளைவு மசதியும்
ஆஅ தானி வாயு எறல்வே தானநோம்
ஆயாச மேரிசு வாசமி தாகம்
ஆறாத சரச்சனி மாறாத சன்னி
அனிவாய்ப் பாளை மானியோம் வேயோன்
ஆர்க்குந் தப்பிசின் னார்க்கு வப்பிசின்
ஆர்கனித் தரங்கை யார்கனித் தரங்கை
அனதிக் காளையா மமச்சை மேவிடில்
அளைப் பரவச மாக்குத விற்றி
ஆற்றுத் தமிழ்மறை யாற்றுந் தமிழ் மறை

(தேரன்மகாகரிசல்)

(பொருள்) ஆயிரங்கண்கள் உடைய இந்திரன் ஊர்தியாகிய வெள்ளையானையின் (ஐராவதம்) நிறம்போல உடல் வெளுத்து, வலி, இருமல், தளர்ச்சி, கோழைக்கல், இளைப்பு, மேல் மூச்சு, ச்சுத் திணறல், உடல் வன்மை குறைதல், அதட்டிச் பேசுதல், செருக்கு, வாய்குழறல், உடல் வீங்குதல், அடிக்கடி களைத்துப் போதல், நீர்வேட்கை, இடைவிடாக் காய்ச்சல் என்றும் குறிகுணங்களைக் காட்டி மூர்குற்றங்களைத் தூண்டி (சன்னிபாதத்தை) முக்குற்றச்சுரத்தை வருவிக்கும். அப்போது மண்டையில் மிகுந்த சூடு, வாய் பிதற்றல், தன்னிலை அறியாமை, கொல்லும் பிணியைப்போல் பிசுபிசுத்த வியர்வை காது, இரைதல், காது கேளாமை, முதலிய முக்குற்றப் பிணியின் குறிகுணங்கள் தொடரும்.

<u>அசாத்தியக் குறி</u>

வெய்யசுரந் தனிஇருமல் தாப்பு விக்கல்
மெய்குளிர்த உடல் வியர்வை யூரம் வெதும்பல்
செய்யமுகங் கரம்பாதம் வெளுத்துக் காட்டல்
தியக்கமுறல் மூச்சிரைத்தல் பிரலா பங்கள்
ஐயடைத்துக் குறுகுறுத்தல் அதிசா ரங்கள்
அனலெழும்பல் அனகுண மவைகள் கண்டால்
ஐயசுர மசாத்தியமா மென்றே யிந்த
வாயாலிநன் மறைபதி வியம்பினாரே

(பொருள்) இருமல், விடாவிக்கல், உடல் குளிர்தல் உடனே வியர்த்தல், உடலில் வெப்பத்துடன் எரிச்சல் காணல், கைகளும் பாதங்களும் வெளுத்துக் காணல், மயக்கம், மூச்சிரைத்தல், வாய் பிதற்றல், தொண்டையில் கபம் (கோழை) கட்டிக் கொண்டு கடைவதுபோன்று சத்தித்தல், மிகுந்த பேதி. உடலில் வெப்பம் மேன்மேலும் அதிகரித்தல் இவைகளையுடைய ஐயசுரம் மருத்துவர் கைக்கு வசப்படாது. இதனால் கபசுரத்தின் அசாத்திய குறிகுணங்கள் கூறப்பட்டன என்றனர்.

அறையுஞ் சேத்ம சுரமதுதான் அடைவே யுடம்பு கொந்தழற்றும்
நிறைய இரும விளைப்புண்டாம் நெஞ்சு வினவி மனந்தவனும்
திரைசே ரன்னங் கொள்ளாது திருட்டி யிருட்டித் திரும்பின்னை
உறையு முடலில் மலசவந்தாள் உரைக்கில் வெளுக்கும் விரைகுழலே

விரைவாம் தயில்வ திரிதாகும் விழுதச் சாத மிகக்காயும்
புரைவா யுடம்பு குளிர்ந்திருக்கும் பீளை வழியு மிருகண்ணும்
திரைசேர் நச்ச மமுதாக்கும் சிவனைத் துதியா தவிர் சமயத்
திரைபோல் வயிறு முடல்கழியும் உடல் வெப்பாகு ஊழலையுண்டே

(பொருள்) கபசுரத்தில் உடல் மிக வலித்த வெப்பங் கொள்ளும் அதிகமாக இருமலுண்டாம். களைப்பு மிகுதியாகக் காணும். நெஞ்சு நெஞ்சுந்த மனம் வாட்டமுறும். ஊண் கொள்ள இயலாத கண்ணிருட்டிக் கொண்டு வரும். மலமும் நீரும் வெண்ணிறங் கொள்ளும். உறக்கம் காண்பது அரிதாகி விடும். சுரம் வெகு வேகமாய் காயும் உடல் மேலே தொட்டுப் பார்த்தால் குளிர்ச்சியாகக் காணும். இரு கண்களிலின்றும் பீளை சுரப்புண்டு ஒழுகும். வயிறு அடிக்கடி இளரச்சவிட்டுக் கொண்டு கழியும். சுரத்துடன் உடலில் எரிச்சலும் காணும்.

முகமது வெளுக்கும் நாக்கு முன்னுனிள வுருசி யின்மை
தகமுடன் இருமல் விக்கல் தந்துமார் தொண்டை நோகும்
அகவுடல் திளவு வாம்நீர் அடித்தொடை சோர்வ தாகும்
செகமுதல் சுரந்தான் காணில் சேத்தமம் என்ன லாமே.

(பொருள்) முகமும் நாவும் வெளுக்கும், உண்ணும் உணவில் சுவை இன்மை, நீர்வேட்கையுடன் இருமலையும் விக்கலையும் தோற்றி மார்பிலும் தொண்டையிலும் மிக்க நோயை உண்டாக்கும். உடல் முழுதும் திளவுகாணல், வாம்நீர் மிக்க நோயை உண்டாக்கும். உடல் முழுமையும் திளவுகாணல், வாம் நீர் மிக்க சுரந்து வழியும். அடித்தொடைப் பாகம் சோர்வடையும். இக்குறிகுணங்கள் யாவும் சுரத்துடன் காணப்பட்டால் கபசுரம் எனக் கணிக்கலாம்.

சந்தாப மானசி லேத்ம சுரத்தைச்
சாற்றிடவே நாக்குமலம் வெளுத்தக் காணல்
மந்தாப மார்நோத விரும விளைப்பு
வருதல்வாம் தவர்மதமே உருசி யில்லை
தந்தாப முச்சுவிட்டுப் போகா மற்றாள்
முயங்கியே விக்கலொடு தாகங் காணல்
சிந்தாப மிடறநொந்நு மேன்மூச் சாதல்
திளவெடுத்தல் தியங்கிடுதல் சிலேட்ம மாமே.

(பூலி .வைத்.சிந் சிர.நிதா பா.5)

(பொருள்) ஐய சுரத்தில் நாவும் முகமும் வெளுத்திடும். தாபம் பொருந்திய மார்பு நோதல். இருமலும் இளைப்பும் ஏற்படல், வாய் துவத்தல், நாமதரித்திருத்தல், சுவைக்கா இயலாமை, பெருமூச்சுவிடல், மிக்க கஷ்டத்தோடு விக்கல் காணல். நீர் வேட்கை உண்டாதல், தொண்டை நோதல், மயக்கம் கொள்ளல் அல்லது செயலிழத்தல், மேல் மூச்சு காணல், உடலில் திமவு காணல் என்னும் குறிகுணங்கள் காணும்.

பல நூலோர்களும் கூறிய குறிகுணங்களைத் தொகுத்துக் கூறுமிடத்து (கபசுரத்தில்) ஐயசுரத்தில் சுரம் தொடங்கும் முன்னரே காதுகளில் இரைச்சல், மத்தள ஒலியைப் போன்றும், இடிஇடிப்பதுபோன்றும் காதில் ஒருவித ஓசைகேட்டுக் கொண்டே இருக்கும். தலையில் ஏதோ ஊர்வதுபோல இருத்தலுமான முற்குறிகளைக் காட்டி சுரம் தொடங்கும். அச்சுரம் பெரிய நெருப்பிலெழும் சூட்டைப்போலக் காணும். சுரத்தின் பெருக்குக்கு ஏற்ப உடல் வெளுத்தல், அடிக்கடி களைத்துப் போதல், உடல் வீங்குதல், வாய் குழறல், நீர் வேட்கை, விக்கல், தயக்கம், பிசுபிசுத்த வியர்வை, மார்பிலும் தொண்டையிலும் கோழை கட்டிக்கொண்டு குறுகுறு என்னும் ஒருவகை ஒலி எழுதல் அடிக்கடி கழிதல், கண்கள் இருட்டிக் கொண்டு வருதல், கண்களில் பீளை சார்தல், என்னும் குறிகுணங்களைக் காட்டி, ஈக்குற்றங்களின் கலப்பாகிய (சன்னி) குறிகுணங்களாகிய ஆடல்பாடல், அலைதல், புரளல், வாய் பிதற்றல் முதலியவைகளையும் உண்டாக்கிக் கொல்வதுமுண்டு.

<u>ஐய வளிச்சுரம் (கபவாதசுரம்)</u>

ஓதுகப வாதசுரச் செய்கை கூறிடுவன்
மோதுதிலை நடுக்கி மோகித் துடல் விறைத்துப்
பேதித் திருமல்கர பாதிமே குளிர்ந்தால்
மேதித் தருகுணங்கள் போறி யறிந்துகொள்ளே.

(பொருள்) கபவாத சுரத்தில் தலையின்மேல் மோதியதுபோன்ற வலியுடன் நடுக்கல், மயக்கம், உடலின் தசைகள், விறைத்திருதல் அடுத்தடுத்து இருமுதல், கைகால்கள் குளிர்தல் என்னும் குறிகுணங்கள் காணுமே.

புல்லுபசி கொள்ளாது மெய்வேர் வாகும்
பொருந்தகுளிர் அற்பமதாம் வெதும்பிக் காயும்
நல்லதொரு கண்புறளும் மார்பு நெற்றி
  நடுவின்லே தடிப்பாகும் மலமும் சிக்கும்
சொல்லியதேம் வுடல்மூச்சுக் கோழை பொங்கும்
  சுவையிலிப்புப் புளிதேடும் சோர்வு முண்டாம்
சோர்வாக முடம்புமிக இளைத்துக் கொள்ளும்
  சுரங்கண்ட நாளதிலே கபமே றாமல்

(சுரவாகடம்)

(பொருள்) கபவாத சுரத்தில் பசி காணாது, உடல் வியர்க்கும் குளிர் மிகுதியாகக் காணாது. சுரம் மிக்க வேகமாய்க் காயும். கண்கள் ஓயாது புரளும், மார்பிலும் நெற்றியிலும் நடுவே தடிப்புண்டாகும். மலபந்த முண்டாகும், உடலிளைப்புண்டாகும். மூச்சும் கோழையும் அதிகரிக்கும். உடல் சோராதிருக்கும்.

பெருகிய சேத்து மத்தில் பிறங்கிய வாதம் வந்தால்
கருதிய சன்னி வாத சுரமென்று கழற லாகும்
திரியவே கையுர் காலும் நெஞ்சோடு சேர நோகும்
மருவிய நெஞ்சு வலிதாளும் வகைபடச் சிதையு மன்றே

கனகசபாபதி முதலியார் கையேடு)

(பொருள்) கபப்பெருக்கோடு கூடிய வாதத்தால் வரும் சுரத்தை (பெரும்பாலும் சன்னிபாதசுரம்)முக்குற்றசுரம் என்றும் கூறலாம். இந்நோயில் கை கால் மார்பு முதலிய இடங்களில் வலியுண்டாகும். வயிறு நொந்து பேதியாகும்.

ஐயவளி சுரத்திற் காணும் குறிகுணங்களைத் தொகுத்துக் கூறின், இந்நோயில், தலையில் மோதுவது போன்ற வலியுடன் தலை நடுக்கல், உடல் விறைத்துக் கொள்ளல், அடுத்தடுத்து இருமல் வருதல், கைகால் குளிர்தல், சுவையின்மை, பசியின்மை, உடல் இளைத்தல், மார்பு நெற்றி ஆகியவைகளின் நடுவில் தடிப்பு காணல், பெருமூச்சு காணல், கோழை அதிகரித்தல், உவர்ப்பு அல்லது புளிப்புச் சுவையில் விருப்புண்டாதல், உடல் சோர்தல், கண்கழலல் அல்லது புரளல் என்னும் குறிகுணங்கள் தோன்றும்.

ஐயவழல்சுரம் _ (கபபித்தசுரம்)

செப்பாகு முலை மடவீர் சேத்மபித்த சுரச்செயல்கேள்
வெப்பாகும் வியர்வையுமாய் வெந்தூறநா வதுவெறுக்கும்
தப்பாது அடைந்திருக்கும் தொண்டைகட்டி நாக்கசக்கும்
அப்பாருள் சடைமுடியா ளைநந்திடுமா யுன்மறையே

(பொருள்) கபபித்தசுரத்தில், சுரம் மிகுதியாகக் காய்தல், அதுவிட்டவுடன் மிகுதியாக வியர்த்தல், நாவில் சுவையின்மையால் ஊன் வெறுப்பு உன்டாதல் தொண்டை கட்டிக் கொன்டிருத்தல் குரல் எழும்பாது அடைத்துக் கொள்ளல், நாகைத்தல் என்னும் குறிகளைப் பெற்றிருக்கும்.

சுரமுறு சேற்ப பித்தம் தோன்றிடு ஞாத்தைக் கேளாய்
அரமது போல நாவும் அடியினில் வழுவ முக்கும்
சிரமது வெகாதிக்கும் சில்விடுந் தேக மெங்கும்
கரமுடன் விலாவும் நெஞ்சம் கனன்று சூடாகுங்காணே.

காணுவாய் தோய்வி முப்புக் கபச்சத்து தோட மாகும்
தோஷவே கோழை யுன்டாந் தொந்தித்தே மலம் வெளுக்கும்
பானியை மிகவி ரும்பும் பசியுறு மசனஞ் செல்லா
ஞானியே நெடுகக் காயும் உதிரமுஞ் சுரப்புன்டாமே

(சுரவாகடம்)

(பொருள்) ஐயவழற்சுரத்தில், நாக்கு அரத்தைப் போலச் சுரசுரப்பாக இருக்கும். நாவின் அடிப்பாகம் வழுவழுத்துக் காணும். தலைமிக்க நோவாகும். உடலெல்லாம் சில்லிட்டிருக்கும். கைகளும், விலாப்புறமும், நெஞ்சும் மிக்க வெப்பங்கொன்டு கொதிக்கும். உடலில் மூச்சுத் தகர்ந்து தொய்வுகாணும், இரைப்பு, கோழை மிகும். கோழை மிகுதியும் வாந்தியில் வெளியாகும். நீர் குடிக்க மிக்க விரும்பும். பசி காணும், ஆனால் அன்னம் செல்லாது. சுர நிலைத்து நெடுநேரம் காயும். சுரத்தின் கொடுமையால் குருதி பெருக்கமடைந்து மூக்கு, வாய், எருவாய் (அசனவாய்) முதலியவைகளின் வழியாய் வெளிப்பட்டுக் கசியும்.

மூக்குநீர் வெள்ளோக் காள முருகிருச் சுவாச முன்டாம்
தேக்கிடு மாரி யுன்டாந் தித்திப்பாய் நாவே யுவரும்
பார்க்குங்கான் பச்சடையும் வருத்தும் படுக்கை பொருந்தாது
சேடமாக இவையெல்லாம் சேத்ம பித்த சுரஞனமே.

ஓடிப் பலகா லெழுந்திருக்கும் உரத்தப் பேசும் மோகிக்கும்
வாடிக் கிடக்கும் மிகவலிறி வலிக்குங் கைகால் விட்டுவரும்
வாடுங் கண்கள் பஞ்சடையும் வருத்தம் படுக்கை பொருந்தாது
சேடமாக இவையெல்லாம் சேத்ம பித்த சுரகுணமே

(பொருள்) சிலேத்தும பித்த சுரத்தின் குறிகுணங்களாவன - மூக்கில் நீர் பாய்ந்து ஒழுகுதல், வெள்ளோக்காளம் மிகவுண்டாதல், பெருமூச்செறிதல், சோம்பல் மிகுதல், நாவில் இனிப்பும், நாவுலர்தலும் காணல், கண் சிவத்தல் நெஞ்செரிதல், கொடிய வரட்டிருமலும் காணும். மற்றும், படுக்கையை விட்டெழுந்து அடிக்கடி ஓடல், உரத்தப் பேசல், பெண்கள் பால்மோகம் தோன்றல், உடல் வாடியும் மலம் தளர்ந்தும் கிடத்தல், கைகால் வலித்தல், கண்கள் வாடிப் பஞ்சடைதல், படுக்கை பொருந்தா திருத்தல் எனபவை போன்ற முக்குற்ற குறிகுணங்களும் தோன்றக்கூடும்.

கூறிய தொந்த மாகும் சுரந்தினைக் கூறக் கேளாய்
மறுகிடும் பிதற்றும் பேசும் வாந்திக்கும் பிரமை யுண்டாம்
இறுகியே வாயும் நாக்கும் இதமுறத் தாக மாகும்
பெருமலி காயம் போலப் பின்னிடு மொன்றோ டொன்றே
பின்னிடும் வாத பித்தம் பிரிந்திடாச் சேற்ப வாதம்
மன்னிய பித்த சேற்பம் மாறியிங் கிதொந் திக்கில்
அன்னதாலே தொந்த சுரமென வறிந்திட் டார்கள்
கன்னியே யிதன்கு ணத்தைக் கண்டுநீ தேர்ந்தி டாயே
தேர்ந்திடாய் சுரமுண் டாகுந் தீயென வுதறிக் காயும்

(பொருள்) தொந்த சுரங்களில் வாய் பிதற்றல் வாந்தியாதல் பிரமை உண்டாதல், நாவரண்டு போதல், மிகுந்த நீர்வேட்கை முதலிய குறிகுணங்களைக் காட்டி உடலின் கண்ணமைந்த முக்குற்றங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டதைப் போல் கூடித் தோற்றுவிக்கும் நோயாம். மேலும் இதில் காயும் சுரம் மிக வெப்பமாகக் காய்ந்து வியர்வையை உண்டாக்கும். குளிர், நடுக்கல் ஆகிய குறிகளையும் காட்டும்.

வாதம் பித்தத்துடனும், கபம் வாதத்துடனும். பித்தம் கபத்துடனும் பின்னிக் கொண்டு சுரத்தை உண்டுபண்ணும் சுரங்களை நம் முன்னோர் தொந்த சுரமென அறிந்து அறிவித்தார்கள். இவ்வகை தொந்திப்பு, பித்தம் வாதத்துடனும், வாதம் கபத்துடனும், கபம் பித்தத்துடனும் மாறி தொந்திப்பு ஏற்பட்டும் இவ்வகைச் சுரங்களைத் தோற்றுவிக்கக் கூடும். ஆகவே நோயைப் பரிசிலிக்கும்போது எந்த குற்றம் முதலில் தன்னிலை திரிந்து அடுத்த குற்றத்துடன்

தொந்தித்தது என்று நன்கு ஆராய்ந்து பார்த்துத் தீர்மானித்தல் வேண்டும். இவைகளின் குறி குணங்கள் ஏற்கெனவே தனித்தனியாக முன்னமே கூறப்பட்டுள்ளன பி பார்த்து அறிக.

இவ்வகை தொந்த சுரங்களை இரு குற்றக்கலப்பயில் உண்டானி சிலர் முக்குற்றச்சுரமென கூறுவர். அது சரியல்ல. தொந்த சுரங்கள் சரியான முறையில் மருத்துவம் செய்யப்படாவிடில் மூன்றாவதாக உள்ள குற்றத்தையும் (தோடம்) நிலை மாறச் செய்து முக்குற்ற சுரமாகி விடல் மிக்க எளிதில் என்பது நம் முன்னோர்களின் துணிபு.

<u>முக்குற்றச்சுரம் (மும்பிணிச் சுரம், சன்னிபாதசுரம்)</u>

நம் உடலில் நன்னிலையைப் பேணும் முக்குற்றங்களும் தம் இயல்பு மாறுபட்டு சுரத்தை விளைவிக்குமாயின், அல்லது ஒரு குற்றத்தாரியால் அல்லது இரு குற்றக்கலப்பயில் தோன்றிய சுரங்களில் மருத்துவப் பிசகாலும், பத்தியக்குறைவுகளாலும் மூன்றாவது குற்றமும் ஏற்கெனவே திரிபுற்ற குற்றங்களுடன் கலந்து சுரத்தை உண்டாக்கும்.

முற்குறி: முக்குற்றக் கலப்பயில் உண்டாகும் சுரம் பிறப்பதற்கு முன்பே குளிர்தல், நடுக்கல் உடல் முழுமையும் வியர்த்தல், மார்பு துடித்தல் என்னும் குறிகளைக் காட்டி, பின்பு சுரம் காணும்.

ததும்பரிலின்ற சன்னியா தச்சுரத்தில்
    தன்குணந்தான் கழுத்து எநற்றி மார்ப யர்க்கும்
வெதும்பலொடு தந்திரமாச் சித்தப் பிரமை
    மிக்கா சரீரமெல்லாம் எரிதல் நோதல்
அதும்பலொடு கண்சிந்து பச்சை பாய்தல்
    அதிகமாம் வாய் பிதற்றல் மூர்ச்சை காணல்
வதும்பலொடு மார்வலித்தல் தியக்க மாதல்
    மயிர்செறித்தல் இருமல் விக்கல் சுவாசந் தானே.
(யூகி-வைத்-சிந்-சுர-யி-22)

(பொருள்) சன்னிபாதசுரம் கண்டவர்க்கு நெற்றி கழுத்து, மார்பகம ஆகிய இடங்களில் அயர்வு காணும். உடல் முழுமையும் வெக்காடாக இருக்கும் அறிவு மயங்கல் மனம் அயர்தல் உடலெல்லாம் எரிதல், உடல் முழுமையும் நோதல் உடல் பூராவும் அதிர்ந்து காணல், கண்கள் முதலில் சிவந்து காட்டிப்பின் பச்சை நிறமாதல் உணர்விழத்தல், மார்பு நோதல் இ மயிர்

கூச்சொரிதல், மிகுதியான இருமல், விக்கல், பெருமூச்சு ஆகியவை உண்டாகி உடனேஅது மிகுதிப்பட்டு வாய் பிதற்றல், படுக்கையில் இருக்க வொட்டாமை, அரட்டல் புரட்டல், அறிவும் மயங்கல் ஆ ல்யிடல் சிரித்தல், தனியை அவிழ்த்து எறிதல், கண் சிவத்தல் கண் நெருப்பு போல் எரிதல் என்னும் குறிகளைக் காட்டும்.

இவ்வகைச் சுரம் விட்டபி் பகலில் ஏ ங்கல் இரவில் கண் விழித்ததல், அடிக்கடி உடல் வியர்த்தல், தலைச் சுற்றல், தலையில் ஏதோ ஊர்ந்து செல்வது போன்ற உணர்ச்சியுண்டாதல், கண்ணிமை தடித்தல், காதிரை தல் தொண்டைக்குள் முள் செருகியது போன்ற உணர்வு காணல், நாதுவண்டது போலக் காணல் அல்லது சிவந்திருத்தல், உமிழ் நீர் சுரந்து கைத்தல் அல்லது சிவந்து வழிதல் உடல் முழுமையும் நோதல் கைகால்களில் வலியும் பூட்டுகளில் வலியுடன் அசைக்க இயலாமையாக இருக்கல், உட ் சத்தற்றுப் போனாற்போல சோர்ந்திடல், மிகுதியான சோம்பல் என்னும் குறிகள் காணும்.

சில சமயங்களில் சுரம் வருவதும் கொஞ்சம் விருவதுமாகக் காட்டி ஐயப்பெருக்கை உண்டாக்கி, மிகுந்த சுரந்ததோடு மார்புநோதல் தொண்டையில் கோழை கட்டல், முகமும் உதடுகளும் கறுத்தல், தொண்டையில் குறுகுறு என்னும் ஒலியல்லது கடைவது போன்ற ஒலி காணல், மூக்குத் தண்டு நீண்டு சில்லிடல், காது கேளாமை கைகால் சில்லிடல் என்னும் குறிகளை காட்டிக் கொல்வதுமுண்டு.

இவ்வாறு முக்குற்றக் கலப்பயில் எழுந்த நோயை (சன்னி நோயை) சில நா லோர்திரிந்த முக்குற்றங்களுள் எக்குற்றம் முன்னின்று மற்ற குற்றங்களைத் தன்க்குத் துணையாகக் கொண்டதோ அக்குற்றத்தை முன்னிட்டு அதற்குப் பெயர் சூட்டி மூன்று வகையென வகுத்தனர். ஈதன்றி திரிந்த குற்றங்களின் வன்மையால் காணும் சிறப்பான குறி குணங்களைக் கொண்டோ அல்லது நோய் உண்டான இடங்களைக் கொண்டோ ஒவ்வோர் சன்னிக்கும் பெயரினை அமைத்துப் பதின்மூன்று சன்னிகள் என்று பூகி முனிவர் வகுத்துள்ளார். சன்னிக்ள் பத்தெனக் கூறியுள்ளார் தேரனார். அவைகளை தனித்து முக்குற்ற நோய் (சன்னி) என்னும் தலைப்பில் கீழ்க் கூறப்படும்.

தொந்த சுரங்களிலிருந்து சன்னிபாத சுரங்களைப் பிரித்தறிதற்பொருட்டு சன்னியின் பொதுவிளக்கம் கூறப்பட்டது.

மந்தசுரம் (அசீரணசுரம்)

நித்திரையா மசீரணசுர நேர்மை கேளீர்
நேர்மையாய்ச் சுரத்தோடே இளைப்பு காணும்
மத்திரையாம் விக்கலொடு வயிறு மந்த
மாயிருத்தல் மார்பினொடு குறங்கு நோதல்
பித்திரையாம் புளித்தேப்பம் விடுதல் வாந்தி
பேர்பெரிய தாகமொடு மூச்சுக் காணல்
அத்திரையாம் வயிறுநொந்து பொருமிக் கொள்ளல்
சீதளமாம் உடம்பெங்குந் திமிரு மாமே.
(யூகி.வைத்.சிந்.சுர.நிதா-பா.10)

(பொருள்) மந்தசுரம் அல்லது அசீரணசுரம் அல்லது செரியாமையால் ஏற்பட்ட சுரத்தில் - சுரம் காய்தல், உடல்களைப் படைதல், அலைஅலையாய் எழும் விக்கல், வயிறு மந்தம் (பசியில்லாதிருப்பது) மார்பும் தொடையும் நோதல், புளியேப்பம் விடுதல், வாந்தியாதல் அடக்க இயலாத மிகுந்த நீர்வேட்கை, மேல்மூச்சு காணல், வயிறு சிறுக இரைந்து நொந்து ஊதிக் கொள்ளல், உடலெல்லாம் குளிர்ந்தும் திமிராகவும் இருத்தல் என்னும் குறிகுணங்களை காணலாம்.

நளிர்சுரம் (குளிர்ச்சுரம்)

இச்சுரம் தோன்றுவதற்கு முன்பே, மயிர் சிலிர்ப்பு, கண் குழிதல், கொட்டாவியும் வாந்தியும் உண்டாகக் கூடும். பின்னர் குளிரும் நடுக்கலுமாய்ச் சுரம் காயும். அதனுடன் தலைவலி, கண்ணீர் பெருக்கு, வயிற்றுள் ஒருவித வேதனை, சிலவேளை கழிச்சலுண்டாதல், பித்தம் பித்தமாக வாந்தியாதல், சுரம் கடுமையாகக் காய்தல், மயக்கம், வாய் பிதற்றல் என்னும் குறிகுணங்களை காட்டி சுரம் விட்டுவிடும். ஒருநாள் விட்டு மறுநாள் மீண்டும் முன்கூறியவாறே சுரம் வரும்.

இந்நளிர்சுரத்திலேயே, மூன்று நாளுக்கு ஒருமுறை வருவதும் நான்கு நாளைக்கு ஒருமுறை வருவதும் மற்றும் ஒன்பது நாளைக்கு ஒருமுறையாக வரும் சுரமும் உண்டு.

வெட்சுரம்: இந்நோயில், தாங்க முடியாத தலைநோய், கண்சிவந்து எரிதல், வாய் நீர் ஊறல், மயிர் சிலிர்த்தல் என்னும் குறிகளைக் காட்டி மிக்க கடுமையாகச் சுரம் காயும். சுரம் விட்டபின் உடல் வியர்த்து, உடல் வன்மை மிகக் குறைந்து மூக்குத் துளைகளில் அக்கிக் கொப்புளம் போன்ற கொப்புளங்கள் தோன்றும். ர் அவை நாளடைவில் உடைந்து பரவி புண்ணாகும்.

மேகச்சுரம்: இதில் உடல் முழுமையாக சிவந்து சுரமுண்டாகும். அதனுடன் வாந்தி, வயிறு கழிதல், உடலெரிவு, தினவு, தோல் தடித்தல் தலைச் சுற்றல், மயக்கம் என்னும் குறிகுணங்கள் காணும்.

உட்சுரம்: இச்சுரம் உடல் வன்மை குறைந்த பேர்களுக்கு வெளிக்குத் தெரியாமல் உடலின் உள்ளேயே தங்கித் சுரம் இருப்பதுபோன்று காணப்பட்டு சோகம், மனத்தளர்ச்சி, கைகால் ஓய்ச்சல், உணவில் விருப்பமில்லாமை வாய் குமட்டல், உடல் வெளுத்துத் தலைநோதல், எப்போதும் சுரம் காய்வதுபோல் இருத்தல், வெள்ளோக்காளம், உடல் நாளுக்குநாள் மெலிதல் என்னும் குறிகுணங்களைப் பிறப்பிக்கும்.

வெளிச்சுரம்: இதில் வாய் கைத்தல், வாய் குமட்டல், உண்ட உணவு செரியாமை, நீர் வேட்கை என்னும் குறிகள் உண்டாகும். ஈதன்றி எப்பொழுது பார்த்தாலும் உடல் சுடுவதுபோல் இருப்பினும், சுர நோயில் படுக்கையில் கிடத்துவதன்றி தன் தொழிலைச் செய்ய இடந்தரும்.

விட்டுவரும் சுரம்: ஈமூச்சீ- இப்பிணியில் உடல் கறுத்துக் கொண்டே வருவதுடன் உடலில் குருதியும் குறைந்து தினமும் சுரம் காயும். இச்சுரம் நாள்தோறும் காலையில் சிலமணிநேரம் காய்ந்து பின்பு விட்டு, சிறிதுநேரம் கழித்து மீண்டும் காயும். இது நாளொன்றுக்கு ஒருமுறைக்குமேல் சுரம் காய்ந்து உடலை மெலியச் செய்யும். அன்றியும் இச்சுரம் கண்டவர்களின் கை, கால்கள் சூம்பி வயிறு மட்டும் சுரந்துவிடும்.

விடாச்சுரம்: சுரம் தோன்றுவதற்குமுன் காட்டும் குறிகளாகிய கண் சிவத்தல், நாவுலரல், நீர் வேட்கை. கையால் நோதல், என்னும் குறிகளைக் காட்டிச் சுரம் பிறக்கும். அச்சுரம் சிறிது சிறிதாக மிகுந்து சுரம் இறங்காமலே

..36

சில நாட்களில்வரை காய்ந்தபின் இறங்கும். இதற்குள் பல தீய்பம்களையும் விளைப்பதுண்டு. சுரத்தின் வன்மைக்கேற்ப உடல் வன்மை கெடுவதுண்டு.

சாரச்சுரம் (இரசதாது கதசுரம்)

இரசதாது (சாரம் என்னும் உடற்கட்டு) கேடடைதற், உடலின் நீர் வற்றி உடம்பெல்லாம் எரிதல், உடல் நோதல், நீர்வேட்கை, தூக்கமின்மை, உடல் வன்மை குறைதல், நாச்சுவையறியாமை, வாந்தி, பெருமூச்செறிதல் அடிக்கடி விக்கலுண்டாதல், தலைவலி, இளைப்பு, உடல் வியர்த்தல் என்னும் குறிகளோடு ஐயம் (கபதோடம்) மிகுந்த நாடியும் தளர்ந்து காணுமெனக் கூறுவர்.

இது தொடக்க காலத்தில் உட்சுரமாக விடாமல் காய்ந்த பின் வெளிப் படும் என்பாரும் உண்டு.

செங்கறைச் சுரம் (இரத்ததாது கதசுரம்)

போக்கான ரத்ததாது கதசுரக் குணத்தைப்
　　பூகலிறிடவே பிரமையாய்ச் சுரந்தான் காணும்
தாக்கான வியர்வையொடு தாக முண்டாம்தீ
　　தன்னுடம்பெல் லாநோதன் மூர்ச்சை
வாக்கான உடம்பதவுங் கானிற வுண்டாம்
　　வழுவழுத்து நாக்கெல்லாம் மஞ்சள் போலாம்
நக்கான நெஞ்சுதனில் கோழை யுண்டாம்
　　நித்திரையாம் மலபந்த மாக்குந் தானே

(யூகி,வைத்.சிந்.சுர - பா.20)

(பொருள்) செங்கறைச் சுரம் என்னும் இரத்த தாது கதசுரத்தில் மனக்கலக்கம் விடாச்சுரம், விடா வியர்வை, மிகுந்த நீர் வேட்கை, உடல் நோதல், மூச்சை காணல் (மயக்கம் ஏற்படல்) உடல் கன்றியதுபோல காணல், நாக்கு வழுவழுத்தும் மஞ்சளித்தும் காணல், நெஞ்சில் கோழை உண்டாதல், மிகுதியாகத் தூக்கம் ஏற்படல், மலபந்தம் தோன்றல் என்னும் குறிகுணங்கள் தோன்றுமென்பர்.

வேறு நூலோர் கருத்து: செங்கறைச் சுரத்தில் சுரம் மிகுதியாகக் காய்தல், சுரம் காயும்போது உடலெங்கும் சிவந்த விம்பிகைபோலக் காணல், மிகுந்த நீர் வேட்கையும் பிசுபிசுத்த வியர்வையும் உண்டாதல்,

..37

உடல் பூராவும் நோதல், தோல் கன்றிப் போதல், நாவறுத்தல், நாக்குமச்சளித்தல், எலும்பின் சந்துகள் எளிதில் நீட்டவும் மடக்கவும் முடியா திருத்தல் என்னும் குறிகுணங்களைக் காட்டி, ஐயம் (கபதோடம்) மிகுந்து தலைநோதல், மூக்கில் நீர் பாய்தல், மனக்கலக்கம், வாய் பிதற்றல் கைகால் அசிவிடல், தலை கிறுகிறுத்தல், ஆடல்பாடல் ஆகிய முக்குற்றக் கலப்பின் குறிகுணங்களைத் தொடரச் செய்யும். அதன்றியும் அடிக்கடி மலங் கழிதலும் உண்டு.

ஊன்_சுரம்_(மாம்சதாது_கத_சுரம்)

மலபந்த மாங்கிச கத சுரகு ணத்தை
வழுத்திடவே அதிகசுர மாக்க காணல்
அலபந்த சுவாசமொடு வியர்வு தோன்றல்
அக்கியயே தேகமெலாம் நொந்து காணல்
வலபந்த வுதடுலர்த லாலா பித்தல்
உடல்பு புள ஆதமாதல் மயிர்க் கூச்சாதல்
அலபந்த மனதுவியா குல மாதல்
அருவியெனக் கண்ணின் நீர் ததம்புந் தானே

(பொருள்) ஊன் சுரம் என்னும் மாங்சி சகத சுரத்தில் மிகுதியான சுரம் காய்வதுடன், இரைப்பு, வியர்த்தல், உடலில் பிடிப்புகளுடன் நோக்காடு காணல், உதடு உலர்தல், பிரலாபித்தல் (மிக்க சத்தத்துடன் தன்பக் குறியுடன் வாய் பிதற்றல்) உடலில் மயிர்க்கால்கள் குத்திட்டுக் கொண்டு மயிர்க் கூச்செறிதல், மனத்துயரொடு கலக்கம் கண்ணீர் மிகுந்து சொரிதல் என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

அன்றியும், உடல் வரட்சி, படுக்கையில் நிலையில்லாமல்- நிலையாமல் கைகால்களைத் தூக்கிப் போட்டுக் கொள்ளல், தோல் மினுமினுத்தல், உடல் ஊதல், கொட்டாவியும் விக்கலும் உண்டாதல், வன்மை குறைதல் என்னும் மெனக்- குறிகளோடு ஐயம் (கபதோடம்)கூடி நோயின் வன்மையைப் பெருக்குமெனக் கூறுவாருமுளர்.

கொழுப்புச் சுரம் (மேதோதாது கதசுரம்)

கொழுப்புச்சுரம் தொடங்கும்முன்பே, உணவில் விருப்பமின்மை அப்படி உண்ணினும் உணவு எளிதில் செரியாமை என்னும் முற்குறிகளைக் காட்டி, சுரத்தோடு தலையில் ஊசியால் குத்துவதுபோல நோதல், தலை புரளல் அல்லது தலை நடுக்கல் என்னும் குறிகளைக் காட்டும்.

எலும்புச் சுரம் (அஸ்திதாதுகத சுரம்)

நேர்மையாம் எலும்புபற் றிய ரத்தில்
    நிலவரங்கேள் மிக்கதா கந்தான் காணல்
நேர்மையாம் மேலெல்லாங் குளிர்ச்சி காணல்
    மிகக்கபடச் சுரந்தானும் மேலி ருத்தல்
தீர்மையாம்த் தேகம்வெளுத் திளைத்தி ருத்தல்
    தேகமெலாம் பஞ்சுபோற் ச் ரணித்தல்
ஆர்மையா வயிறு தனிலே நோதல்
    அதிசுதி விரமான மலம்போக் காமே

(பூஅ.வைத்.சிந்.சுர.பா.19)

(பொருள்) எலும்பைப் பற்றி வரும் சுரத்தில். மிகுந்த நீர் வேட்கை காணல், உடலின்மேல் தொகுதிக்குக் குளிர்ச்சியாய் இருப்பதுபோல் காணப் படினும் மிகுந்த சுரம் காணல், நோய் நெடுநாட்களுக்குத் தொடருமாதலா உடல் வெளுத்து இளைத்து பச்சைசால் பஞ்சுபோல் (க்ஷீணித்து) கேடடைந்து இருத்தல், செரியாமை, அடிவயிறு நோதல், அளவு கடந்து கழிதல் என்னும் குறிகுணங்கள் காணப்படும்.

இவையன்றி, நரம்புகளும் கீல்களும் நோதல், உடலுறுப்புகள் யாவும் சுருங்கி உடல் நிறம் மாறுபடல், கண் மஞ்சளித்தல், தலையை அசைக்க இயலாமை, தலையைச் சிறிது அசைக்கினும் உடல் முழுவதும் பொது நோதல் என்னும் குறிகுணங்களும் இந்நோயில் தொடரும் என்றும் கூறுவர்.

<u>மூளைச்சுரம்:</u> இந்நோயில் உடல் மந்தமடைந்து ஐயத்தைப் பெருக்கி உண்ட உணவு செரியாமை, புளியேப்பம், கொட்டாவி, விக்கல், கைப்புடன் வாந்தி, சில வேளைகளில் மிகுதியாக வயிறு கழிதல், வயிற்றுப்பிசம் என்னும் குறிகுணங்களைக் காட்டும். மேலும் மிகுந்த சுரம் காய்ந்து, மனக்கலக்கம் தலை நடுக்கல் , உடல் வெளுத்து இளைத்தல், உடல் வன்மை கெட்டு நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வருதல், மூச்சு வாங்கவும் விடவும் முடியாமல் தடுமாறல், தொண்டை முழங்கால் மற்றுமுள்ள பூட்டுகள் நோதல் உடலின் நிறம் வேறுபடல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

<u>விந்துச்சுரம்:</u> உயிர் நிலைகள் என்று கூறும் உச்சி, புருவம், உதடு, கழுத்து, மார்பு, மார்புக்குழி, உந்தி, முழங்கால், கணுக்கால் இடுப்பு, கால்பெருவிரல், சுண்டுவிரல், தோல், விதை என்னும் இப்பதிநான்கு இடங்களில் வலியுண்டாகித் தலைநோதல், தலை நடுங்கல், பல்வலி, சுரம், சுவையின்மை, பசியின்மை, உண்ட உணவு செரியாமை, விக்கலுண் டாதல் என்னும் குறிகுணங்களைக் காட்டி வாந்தி, அடிக்கடி கழிதல், வாய் எப்போதும் இனிப்பாகவே இருப்பதுபோலத் தோன்றல் ஆகிய இக்குறிகளையும் காட்டும். பின்பு, வாய் ஓயாது இருமச் செய்து, பெருமூச்செறிதல், தூக்கமின்மை, உடல் வெளிறி வீங்கல், நீர் குருதிவன்மை குறைதல். மனக்கலக்கம், மயக்கம், கைகால் சில்விடல் என்னும் கொடிய குறிகளையும் உண்டாக்கும். அன் குறி சுருங்கும். நோய் மேலும் முதிர்ச்சியடைந்தால் முக்குற்றக் கலப்பு ஏற்பட்டு அதன் காரணத்தால் தன்னை மறந்து பேசல் பிரலாபித்தல், வாய் பிதற்றல் முதலிய குணங்களும் ஏற்படும்.

<u>தோல்சுரம்:</u>

தவித்திடாச் சுரநூலின் தன்மை தன்னைச்
சாற்றிடவே சடத்திலிற்கும் தோலைப் பற்றித்
தவித்திட்ட சுரமோடு மென்பைப் பற்றிச்
சூட்சமாய்க் காய்ந்ததுரம் அரத்தந் தன்னை
மவித்திடா தெரித்தசுரம் மாம்சிசந் தன்னை
மருவிநின்ற சுரநாலின் வன்மை தன்னைக்
குவித்திடாக் குணங்களெலாம் குறித்துச் சொல்லக்
குறந்தோலைப்பற்றியதோர் குணத்தைக் கேளே

குணமாகச் சற்றுடலைச் காய்வ தாகும்
குடிலமாம் நாடிமந்த மாயி ரித்தல்
தணமாகச் சற்றேதான் தலையே நோதல்

தண்ணீர்தான் வேண்டியே தாகந் காணல்
பிணமாக வுடம்பெல்லாம் வெளுத்துக் காணல்
பிரமையாம் வாம்பேசல் வாம்நீ நிரல்
நிணமாக வுடம்பெரிதல் வசந்தி மயக்கந் காணல்
நேர்தோலைப் பற்றுசுர நேர்மை யாமே

(பூஜி.வைத்.சிந்.சுர - பா.17 & 18)

(பொருள்) உடலில் உள்ள தோலைப் பற்றி எழும் சுரம் எலும்பைப் பற்றி மிக்க நறுக்கமாகக் காயும் சுரம், இரத்தத்தை அவித்ததான் சுரம், மாமிசத்தைப் பற்றிய சுரம் ஆகிய நான்கு சுரங்களைப் பற்றி கூறுகிறேன். முதலில் தோலைப்பற்றிய சுரத்தை கூறுகிறேன். கேட்டுக்கொள்வாயாக

(குறிப்பு:- இரத்த தாது கதசுரம், என்பு தாது கதசுரம், மாமிச தாது கதசுரம் ஆகியவைகளைப் பற்றி இதற்குமுன் கூறி இருப்பதைக் கண்டுகொள்க

தோலைப்பற்றிய சுரத்தில், பெருஞ்சுரம் காய்வதுடன் நாடி மெலிந்தும், குடிலமாயும் நடக்கும். சற்று நேரத்துக்கு ஒருதரம் தலைவலி காணும். நீர் வேட்கை மிகும். பிணத்தைப்போல் உடல் வெளுத்துக் காணும். நீர்-வேட்கைமிகும்.---பிண மனக்கலக்கத்துடன் வாய் பிதற்றல், வாய் நீர் ஊறல், உடலில் எரிவு காணல், மயக்கம் உண்டாதல் ஆகிய குறிகுணங்கள் ஏற்படும்.. இதனைத் தீவிரச் சுரம் என்பர் சிலர்.

துன்பச் சுரம்: திடீரென உண்டாகும் துன்பத்தால் மனமும் உடலும் அதிர்ந்து, உடலில் கொதிப்பேறி, மயக்கம், மூர்ச்சை மனக்கலக்கம், அறிவு தெளிவின்மை முதலியவைகள் உண்டாகிக் கண் சிவந்து மிகுந்த சுரமுண்டாகும். அத்துடன் வாந்தியாதல், கைகால் நடுக்கல், கண்டவாறு பேசல், ஆடல் பாடல் என்னும் முக்குற்றசுரக் குறிகுணங்கள் தோன்றவும் கூடும்.

முறைச்சுரம்:

முனிவ ருரைத்த முறைச்சுரத்தின் முறையைக் கேளாய் நடுக்கமுறும்
பனிபோல் விறைக்குந் தறுக்கமுறும் பரிதா பிக்குங் கண்ணெரியும்
குனுகும் வேர்க்கும் குலைப்பெய்தும் கொடிதாயச் சிரசில் குத்துண்டாம்
அனல்போற் காயு முடம்பெரியும் அதுவோர் நாள்விட்டடுத்திடுமே

அடுக்கும் மூச்சுத் தொய்வுண்டாம் அசனஞ் செல்லா திருமலுண்டாம்
நடுக்கும் கூதல் குளிராகு நாரி சந்து வெடுவெடென்னத்
தடிக்கு மொருநா ளிடைவிட்டுத் துயரா மிருநாள் விட்டுவரும்
தொடுக்கும் மாதம் வருடமெனச் சொன்னார் சுரத்தின் வகையிதுவே

..42

முறையே குளிருங் குலைப்பெய்தும் முழுதந் தாகஞ் சந்துகளிநேரம்
நிறைமோ மயிர்க்கூச் சாங்குடையும் நெஞ்சு நோகுங் கொட்டவிரும்

(பொருள்) முறைச்சுரங்களில் உடலில் நடுக்கமும், கைகால் முதலிய உறுப்புகள் பனியில் கிடந்த குளிர்ச்சியால் விறைந்ததபோன்று விறைத்துக் கொள்ளும், மனத்தில் அச்சக் குறி எழுந்திடும், துன்பக் குறியோடு வாம்பிதற்றம், கண்களில் எரிச்சல் காணும், குளிரின் காரணத்தால் உடல் வெட வெடக்கும். (சுரம் விட்டவுடன்) உடல் முழுவதும் மிகுதியாக வேர்க்கும். தலையில் மிகுந்த குத்தலுண்டாகும், சுரம் அலைப் போலக்காயும். உடலில் எரிச்சலுண்டாகும். சுரம் ஒருநாள் விட்டு அடுத்தநாள் வரும்.

மேலும், மூச்சு அடுத்தடுத்து எழல் (விரைவுபடல்) பெருமூச்சாதல் உடலின் முறுக்குத் தளர்ந்து தொய்ந்து காணல், உணவு செல்லாமை, இருமல், உடல் நடுங்கல், கூசுதல், குளிர் காணல், தசை தசைநார்கள் உடலின் பூட்டுகள் ஆகிய இடங்களில் வெடவெட எனத் துடிப்பு காணல், என்னும் குறிகுணங்களுடன் ஒருநாள் இடைவிட்டு சுரம் வருதலும், இருநாள் இடைவிட்டு வருதலும் இவ்வாறே மாதத்துக்கு ஒருமுறை வருதலும் வருடத்துக்கு ஒருமுறை வருதலும் முறைச்சுரவகையில் உண்டென்பர்.

மேலும், குளிரும், துடிப்புடன் உடலைத் தூக்கித் தூக்கிப் போடுதலும், பெருந்தாகமும், சந்துகள் தோறும் நோக்காடும், மயிர்க் கூர்செறிதலும், மிகுந்த கொட்டாவியும் மார்பு நோக்காடும் இப்பிணியில் காணக்கூடும்.

இம்முறைச் சுரங்கள் ஒருநாள்விட்டு ஒருநாள், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறுநாள் விட்டு வருதலும், வாரச்சுரம், சுரம்;-மாச-பட்சச்சுரம், மாதச்சுரம், அயனச்சுரம் (ஆறுதிங்களுக்கு ஒருமுறை) ஆண்டுச் சுரம் (சம்வத்சர சுரம்) எனப் பலவாகவும் சிறநூல்கள் விவரித்துள்ளன.

..43

மயக்கச்சுரம்:- இச்சுரம், தலைசுற்றல், வாந்தியாதல், மயக்கம் என்னும் குறிகுணங்களுடன் அறிவைக்கெடுத்து, வலிப்பு நோய்போல வலித்துக் காய்ச்சலைத் தரும். சுரம் காயும் அளவும் அறிவு தெளிவு ஏற்படாது போட்டது போட்டவாறு கிடக்கச் செய்யும்.

பிதற்றல்_சுரம்: இந்நோயில் சுரம் வரும்முன்பே மயிர் சிலிர்த்து கண் சிவந்து கைகால் பூட்டுகள் நொந்து பின்னர் சுரம் காயத்தொடங்கும். இச்சுரம் மிகுதியாகக் காய்ந்து நோயாளன் அறிவை அழித்து கண்டது கண்டவாறுகப் பிதற்றல், படுக்கையில் தங்காமல் எழுந்து அங்குமிங்கும் ஓடல் என்னும் குறிகளைக் காட்டும்.

பூழுச்சுரம்: இது பெரும்பான்மையும் சிறுபிள்ளைகளுக்கு வயிற்றில் பூச்சிகள் சேருவதால் தோன்றும் நோயாம். இந்நோயில் சுரம் காண்பதற்கு முன் பசிமந்தம் அல்லது மிகுந்த பசி, ஊண்கொள்வதற்கு ஏற்ற உடல் வளர்ச்சி இன்மை, மலபந்தம், அல்லது பலவிதமாக வயிறுபோக்கு, அடிவயிற்றில் அடிக்கடி வலி தோன்றல் தூங்கும்போது பல் கடித்தல் என்னும் பல குறிகளைக் காட்டும். இந்நோயில் சுரம் உண்டானால் மூச்சு இரைப்பு, வலிப்பு நோய் போல கை கால்கள் இழுப்பும் வலிப்பும் ஏற்பட்டு உணர்ச்சி இழுத்தல், கண் சொருகல், பெருமூச்சுண்டாதல் என்னும் குறிகுணங்கள் தோன்றும்.

மஞ்சள்_சுரம்: இச்சுரம் விடாச்சுரமாகக் காய்ந்து உடல் முழுமையும் மஞ்சள் நிறம் பெறும். வாய் ஓயாது வாந்தியாகும். வாந்தியில் பித்தநீர் மிகுதியும் கலந்து மஞ்சளித்து இருக்கும். இந்நோயாளனுக்கு குருதிவன்மை குறைந்து உடலில் வீக்கம் காணும்.

பழஞ்சுரம்:

வேறாகி யொருநாடான் மாறிக் காணல்
விளங்கிரண்டு நாள்மாறிச் சுரமுண்டாதல்
நாறாகி மூன்றுநா டாறு மாறல்
நாலுமைந்து நாள்மாறல் அர்த்த ராத்திரி
பாறாகி வருதல்பதி னைந்துநாள் மாறல்
பகல்பந்த வொருமாதம் மாறிக்காணல்
வாறாகி வாதபித்த சேத்மங் கூடி
மருவிநின்ற சுரந்தானும் அதீத மாமே

(பொருள்) பழச்சுரமென்பது ஒநாள் விட்டொருநாளும் இரண்டு நாள்விட்டு மற்றையநாளும் இவ்வாறே மூன்று, நாலு ஐந்து நாட்கள் விட்டு மாறிமாறி வரும் சுரம் என அறியக்கிடக்கின்றது. இவ்வகை சுரம் பதினைந்தாம் நாள் மாறல் மாதந்தோறும் மாறுதல் என்றும் வழக்கமுடையதாகக் காணவும் கூடும். சில சுரங்கள் ஒருநாளைக்கு ஒருமுறையாக பொழுது மாறிமாறி சுரம் வருவதும் உண்டு. எவ்வாறெனில் விடியல், நண்பகல் மாலை, இரவு, நள்ளிரவு பின்னிரா என ஆறு சிறுபொழுதுகளில் மாறிக் காணல் என்க. இவ்வகை மாறல் சுரங்களில் வளியழல் ஐயம் என்னும் முக்குற்றங்களும் கலந்து முப்பிணிக் குறிகுணங்களைக் கொடுத்து சுரத்தின் தன்மையை கட்டுக்கடங்காதவாறு அதிகமாக்கி விடுதலும் உண்டு. இச்சுரத்தை, இதன் தன்மையைக் கண்டு மாறல் சுரமென்றும் கூறுவர்.

<u>தாகச்சுரம்</u>:

உடம்பிற் றோன்றுந் தாகசுரத் தன்டாங் குணத்தை உரைத்திடக்கேள்
திடச்சே ரனலைப் போற்காயும் திட்டுந் தாகம் மாறாது
கடித்தே கைகால் வயிறெரிக்கும் கடிக்கும் பல்லை உடம்பழற்றும்
கிடந்தே புரளும் எழுந்திருக்கும் சிளரும் நாக்கு பிறண்டிடுமே
வாளும் நாக்கங் கரம்போலாம் வடவை போல வேயெரிக்கும்
புரளும் பிதற்றுந் தன்வாயால் போத வூதம் மூச்செறியும்
திரளுந் தளமா தேயுமற்றும் செம்பும் வாகை பலவிதற்குத்
தரளம் போலக் குளிர்கழுநீர் தளிர்பூ வைப்பொட் டணைக்கட்டே

(சுரவாகடம்)

(பொருள்)

தாகச்சுரத்தில் பெருந்தீயேபோல் மிகுந்த அனலுடன் சுரம் காயும். இடைவிடாது நீர்வேட்கை உண்டாகும். கை, கால், வயிறு இவைகளில் மிகுதியான எரிச்சல் காணும். பற்களைக் கடிக்கும். வாய்பிதற்றும், படுக்கையில் கிடந்து புரளும் மற்றும் எழுந்திருந்து திரிதலும் உண்டு. நாவின் இயல்பான தன்மை மாறுபடும். நாவரண்டு அரம்போலச் சுரசுரத்திருக்கும். உடம்பெரிவு வடவாமுகாக்கினிபோலத் தணியாத தன்மையாய் இருக்கும். உடல் ஊதுதலும், பெருமூச்செறிதலும் காணும். (தாகம் என்ற மொழிக்கு

எரிச்சல் என்ற பொருளும் உண்டென்பதை மருத்துவர் மறத்தலாகாது)

<u>பித்தகழிச்சல் சுரம் (அதிசாரச்சுரம், பித்த அதிசாரச்சுரம்)</u>

கொதித்தெழுஞ் சுரத்தின் முன்னே கொண்டிடும் பொசிப்பு ருசே
சதித்திட மந்தமாகித் தாகநா வரட்சி யுண்டாம்
அதித்திடுங் கரமும் பாதம் வெச்சென்று குளிர்ந்த ருக்கும்
கதித்ததி சார பித்த சுரமதன் குணங்க டாளே.

(பொருள்) சுரநோய் உண்டாவதற்கு முன்பே ஊணில் விருப்பமின்மை, வயிறு மந்தமாதல், நாவரளல், கையும் காலும் அல்லிடல் என்னும் குறிகளைப்பெறும்.

சுரத்திடை யுதரம் விம்மி இரைச்சலந் தள்ளிக் காட்டி
பெருத்திடுங் கழிச்சல் மேல்மேல் ஆசமும் பிரமை யாகும்
பொருத்திடு மளசளவ வெல்லாம் புண்ணெனர் குத்தி நோவாம்
உரைத்தவிக் குணங்கள் பித்த விரத்தாதி சாரமாமே

(பொருள்) காயும் சுரத்தின் கொடுமையால் வயிறு பொருமி இரைந்து பொங்கி யெழுந்து, பெருங்கழிச்சலாய் அடிக்கடி கழிதல், மலக்கலக்கம், உடலின் அசையும் மூட்டுகள் யாவும் புண்போல குத்தல் ✓ வலி காணல் என்னும் குறிகுணங்களைக் காட்டும். கழிச்சலில் இரத்தம் பெரும்பாலும் கழியும்.

வாந்தி- <u>வாந்தி சுரம்</u>:

விரைவாக் சத்தி சுரமதகேள் வேர்க்கும் வயிறு தான்கழியும்
புரைபோல் வயிறு பொருமியெழும் புண்ணா யுடம்பு மிகநோகும்
இரையும் வாந்தி தான்செய்யும் அடைக்குங் காது நாவரளும்
கரைவா யசனங் கொள்ளாது கடுத்தே யகடுங் கழிந்திடுமே.

(பொருள்) வாந்தி சுரத்தில் உடல் வியர்த்துக் கழிச்சல் உண்டாகும். வயிறு பொருமி மேல்நோக்கி உப்பல், உடம்பு புண்போல மிகுதியாக நோகும். வயிறு இரைச்சலிடும். வாந்தி மிகவும் உண்டாகும். காதுகள் அடைத்துக் கொள்ளும் (காது கேளாது). நாவரட்சி உண்டாகும். உணவு செல்லாது. வயிறு மிகவும் கடுத்து கழிந்திடும்.

<u>காலைச்சுரம், பகல்சுரம், மாலைச்சுரம், இராச்சுரம், அதிகாலைச்சுரம் நடுக்கல்சுரம்</u>:- இவ்வாறு இச்சுரங்களில் குறிகுணங்கள் சற்றேறக்குறைய மற்ற சுரத்தினைப்போலவே தோடத்தில் அளவாக காணப்படும். ஆயினும், சுரம் வருகிற வேளையை ஒட்டி, மேற்கூறிய முதல் ஐந்து சுரங்களுக்கும்

..46

பெயர் கொடுத்துள்ளனர் என அறியக் கிடக்கின்றது. ஈற்றில் கூறிய நடுக்கல் சுரம் சிறப்பாக நடுக்கல் என்னும் குணத்தைப் பெற்றிருக்கும் காரணம் பற்றி அப்பெயர் பெற்றதுபோலும். மற்றும் நடுக்கல் சுரம் ஒருநாளில் எல்லா நேரங்களிலும் வரக்கூடும் என்பது அநுபவம்.

எப்பச்சுரம், தொட்டாவிச் சுரம், விக்கல்சுரம்:

ஆகிய இவைகள் வளிக்குற்றத்தின் அளவாக தோன்றுமாதலின் இவை வளிச்சுரத்தில் அடங்கும்.

வியர்வைச்சுரம், ஊட்டுக ஊந்தாச்சுரம், அழற்சுரம்: இவைகள் பித்த தோடத்தால் எழுமாதலின் இவை பித்த (அழற்சுரம்) சுரத்தில் அடங்கும்

இருமல் சுரம், கட்டிசுரம், பல்கொப்புளச்சுரம், சீழ்ச்சுரம், கலவிச்சுரம் ~~சுசுஜுஜுகூசுசு~~ செயற்கைச் சுரம்:

இவைகள் ஐயத்தால் வருவனவகையால் ஐயசுரத்தில் அடங்கும்.

அழற்சுரம்: இது தோலைப்பற்றிய சுரம். இது தீவிர சுரம் எனப்படும். ஆதலின் ஈண்டு மேல்கூறப்பட்ட பத்தொன்பது குறிகுணங்களின் குறிகுணங்களைத் தனித்தனியாகக் கூறாமல் விடப்பட்டது.

இவைகளன்றி-
(1) ஊறுவாம் நீர்ச்சுரம் (2) ஆகிக சுரம் (3) ஆகிக சுரக் சீதசுரம் (4) ஆம சுரம் என நான்கு வகை சுரங்கள் சித்தர் நூல்களில் காணப்படுகின்றன. அவைகள் வருமாறு.

ஊறுவாம் நீர்ச்சுரம்:

ஊறு வாம்நீர்ச் சுரமதனை உரைப்பேன் கேளாம் சிரம்வேர்க்கும்
வீறு முதிரம் மிகப்பெருகும் விக்கும் சத்தி வாயூறும்
கூறு மலந்தான் உதைத்தவிழும் கொடிபோல் மெய்யும் துவண்டுவிடும்
காறும் வாய்தான் புளித்துமிகக் கசந்து வெதுப்புங்காரிகையே
தார்போ லிருகண் கருகிவிடும் கையுங் காதுஞ் சில்லென்றே
வேர்வா யிருக்கும் நீர்தாகம் மீறக் குடித்தால் மெ மேலெடுக்கும்

பொருள்: இச்சுரத்தில் வாயில் எப்போதும் நீர் ஊறிக்கொண்டே இருக்கும் குருதி வாயில் கொப்புளித்துக் கொண்டு வரும். தலை முழுதும் வியர்க்கும், விக்க

விக்கலும் வாந்தியும் உண்டாகும். மலம் மிக்க ரைவாகக் கழியும், பூங்கொடிபோல உடல் துவண்டுவிடும். வாய் புளிப்பாகவோ கைப்பாகவோ இருந்து தன்புறுத்தும். உடல் மிகவும் சுரவேகத்தால் எவதும்பும். இருகண்களும் கருப்பாய்க் காணும். உடலில் சில்லென்று வியர்க்கும். கைகால்கள் சில்லென்று காணப்படும். நீர் வேட்கை மிகுதியாகும். தண்ணீர் குடித்தால் அது வாந்தியாகும்.

ஆதிதசுரம்:

அசையா மாஅிகத்தின் சுரத்தைக் கேளீர்
அதிகளுளி ருண்டாதல் தேகம் வாடல்
தேசையாய்த் தேகம்புள அித்தி ருத்தல்
சீறியே இருமலடம் பொரிவு காணல்
தாசையாய்ச் சந்தாபந் தலைகண்ணோவு
தருவிலா உடம்பெல்லாம் முதுகு நோவும்
ஆசையாம் பத்தியத்தில் மனதுண்டாதல்
அதிகுறித் திரைவருதல் மயக்கந் தாமே.

மயக்கமாய் மார்புமுக மெல்லாம் வாடி
வடிவுவெளுத் திடுதல்கண் பசுமை யாதல்
தியக்கமாய்க் கண்ணுவிறில் இரத்த மின்மை
சிதறியே வயிறுகழிந் திடுதல் சத்தி
கயக்கமாய் உள்ளங்கால் உள்ளங் கையும்
கன்னியே யெரிந்திடுதல் தாகங் காணல்
இயக்கமாய்த் தேகமெங்கும் அழற்றல் காணல்
இசைந்தயடி பேசலெண்ணம் வேலி மாமே

(ஸ்ரீ.வைத்தி.சிந்-சுர-பா.12 & 13)

(பொருள்) ஆதியசுரத்தில், குளிர் மிகுதியாகக் காணும்; உடல் இளைத்தல், உடலில் மயிர்க் கூச்செறிதல், பெருத்த ஒலியோடு வரட்டிருமல் உண்டாதல், உடலெரிவு உண்டாதல், மிக்க தாபம் உண்டாதல், தலை, கண், விலா, முதுகு, மற்றும் உடல் முழுமையும் நோதல், அபத்திய உணவு, செயல் முதலியவைகளில் அதிக விருப்பம் காணல், அளவுக்கதிகமான உறக்கம் காணல், மயக்கம், முகமும், மார்பும் மிக வாடிப்போதல், உடல் வெளுத்திடல்,

..48

கண் பச்சைநிறமடைதல், கண்களிலும், நகக்கண்களிலும் இரத்தமின்றி வெளுத்தல் வயிறு மிக்க இரைச்சலுடன் விரைவில் கழிதல், வாந்தியாதல், உள்ளங்கால் உள்ளங்கை எரிதல், நீர் வேட்கை உண்டாதல், உடலில் எல்லாம் எரிச்சல் உண்டாதல், வாயிக்கு வந்தவாறெல்லாம் பேசுதல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

<u>அதிசுசீதசுரம்</u>

அதிசுத்தில் சீதசுரத் தான்மை கேளீ
　　தாகமெலா மிகக்கடுப்புற் றனல்போ லாகித்
தேகத்திற் சிரமிடறு கண்களொடு புருவம்
　　சிறுவலியாம் வலித்தமல பேத மாகி
நாவிதத்தில் நாக்குதடு வழுவழுத்து
　　நல்லுறக் கிரையில்லா தடல்தி மிர்த்து
மேலிகத்தில் சுரங்குளிருந் தாக மூர்ச்சை
　　மிகத்தாப மயக்கமொடு திமக்க மாமே

(பூலி.வைத்.சிந். சுர-பா.15)

(பொருள்) அதிக சீதசுரத்தில், உடல் முழுமையும் நோதல், தேகம் பூராவும் அனல்போல வெப்பமுறுதல், தலை, தொண்டை (கழுத்து) கண்கள், புருவங்கள் ஆகிய இடங்களில் சிறிது வலி காணல், மலம் பேதலித்தல் நாவும் உதடும் வழுவழுத்தல், நல்ல தூக்கமில்லையாதல், உடலில் மிக்க திமிர் ஏற்படல் என்னும் குறிகுணங்களுடன் சுரமும் குளிரும் மிகுதியாகக் கண்டு சுரத்தின் மிகுதிக்கு ஏற்ப நீர்வேட்கை உடலெரிவு, மூர்ச்சை, மயக்கம், பிரமை (அறிவு மயங்கல்) என்ற குறிகுணங்கள் காணப்படும்.

<u>ஆமசுரம்</u>

திமக்கமா மாமசுரத் தான்மை கேளீர்
　　சிறுவலியாம் வலித்தமா சனங்க டுத்த
மயக்கமாம் இரத்தமொடு சீதம் பேதி
　　மருவுதன் னீர்தாகம் சுரமு முண்டாம்
கயக்கமாய் உடம்பூதி வெளிறிக் காணும்
　　கால்கையும் அயர்ந்திருக்கும் கைக்கும் வாய்தானே
தயக்கமாம்க் கால்கையுஞ் சயித்திய மாகுஞ்
　　சளியோடு இருமலுவாய்த் தலிக்குந் தானே

(பூலி.வைத்.சிந்.சுர-பா.16)

(பொருள்) ஆமசுரம் கண்டவர்க்கு ஆசனவாய் சிறிது வலித்தும் கடுப்புமிருந்து இரத்தத்தொடு சீதம் கலந்து கழியும். மயக்கம், நீர் வேட்கையுடன் மிகுதியாக சுரம் காயும். உடல் வெளிறியும் ஊதியும் காணப்படும். வாய் கைப்பு ஏற்படும். கைகால்கள் அயர்ந்தும் தொடுவதற்கு சில்லிட்டும் காணும். பிரமை சிறிது காணப்படும். இவைகளுடன் சளியும் இருமலும் உண்டாகி மேற்படி உபாதையால் அல்லலுண்டாம்.

பிறவழிச்சுரங்கள்

மோதசுரம் (அபிகாதசுரம்)

துமிரான அதிகநடை குதிரை யானை
சுமையெடுத்த லதிகமாய் வேலை செய்தல்
திமிரான தாகமோ டிளைப்பு கைகால்
தளர்ந்திட்டுப் பனிதனிலே சஞ்ச ரித்தல்
அமிரான வபிகாத சுரந்தா னுண்டாம்
அதன்குணங்கள் தாகமுடன் உடம்பெல் லாம்நோம்
வெமிரான வியர்வையோ டேப்பம் பிரமை
மிகக்குளிர்ந்த போசனத்தி லாசை யாமே

(யூகி.வைத்.சிந்.சுர-பா.11)

(பொருள்) உடல்வன்மை மிக்கிருக்கிறதென்று செருக்கி அதிகமாக நடத்தல் யானையேற்றம் குதிரையேற்றம், மிக்க கடினமான வேலை முதலியவைகளில் உடல் வருந்த ஈடுபடுதலாலும், சுமக்க முடியாத மிக்க பளுவான பொருள்களை சுமத்தலாலும், மிக்க நீர்வேட்கை இளைப்பு (களைப்பு) கைகால் ஓய்ந்து தளர்ந்துள்ள நிலையில் பனியிலே அடித்தல் அல்லது நடமாடுதலில் ஈடுபட்டால் சுரம் காணும். இதனை அபிகாத சுரம் என்பர்.

உடலில் அடிபடுதல், வெட்டு, குத்து, தீச்சுடல், வெப்பத் தாக்குதல் முதலானவை உடலுக்கு ஊறு உண்டாகும் காரணங்களாலும் சுரம் காணும். இவ்வகைச் சுரங்களையும் (அபிகாதசுரம்) மோதசுரம் (மோத-தாக்கு எற்று அடி என்பது பொருள்) என்பர் நூலோர்.

இவ்வகை மோதசுரமுண்டானவர்க்கு, மிகுதியானநீர்வேட்கை, உடலெரிவு, உடம்பெல்லாம் நோதல், மிகுதியான வியர்வை, எப்பம், பிரமை (மனக்கலக்கம்) குளிர்ந்த உணவில் மிகுந்த இச்சை என்னும் குறிகுணங்கள் காணு

..50

<u>பூதசுரம்</u>

அழிதலாம் பூதசுரத் தான்மை கேளீர்
        ஆதியந்த குமரகண்டம் போல்வ லிக்கும்
கழிதலாம் கண்ணுருட்டி யேவி ழிக்கும்
        கறுத்தலுடல் கருதியே பிரலா பிக்கும்
விழிதலாம் போசனங்கள் மிகவி ரும்பும்
        வேண்டிலதெல் லாமிகவு மாசை யாக்கும்
பழிதலாம் பாடலோ டாட லாதல்
        பாரமயிர்க் கூச்செறிதல் நித்திரை யாமே

(பூசு.வைத்.சிந்.சுர-பா-9)

ஆதியாம் பூத வெப்பின் குணத்திலை அறையக் கேளாம்
வாதியாம்ச் சிறிப் பேசும் வார்த்தையுஞ் சத்த முண்டாம்
வாதையாம்ச் சிரமி டிக்கும் உரையின்றி மயக்க மாகும்
சாதியாம் மெய்களைக்கும் சரீரமுந் தவிப்புண் டாமே

தவித்திருந் தாகம் மெத்தத் தழலென வெரிந்து காயும்
அவத்துட லலறும் வேர்க்கும் அடிக்கடி விட்டுக் காயும்
சிவத்திருங் கண்கள் மூக்குச் சீறிடும் மூச்சுத் தோன்றும்
பவத்திலுக் கீடரே பண்ணும் பாம்பல சேட்டை யாமே

சேட்டையாம் வயிறு போகும். சிறியே ஏனம் பேசும்
கோட்டிகள் மிகவேசெய்யும் குணமிது கண்டபோதே
நீட்டுதேங் கிளநீர் தன்னை நெருப்பினால் வற்றக் காய்ச்சி
யாட்டுப்பற் படகஞ் சுக்கு அரைத்துடன் குடித்தி டாயே

(சுரவாகடம்)

(பொருள்) பூதசுரத்தில் குமரகண்டவலி என்னும் ஒருவகை வலிப்புப் பிணியில் தோன்றும் வலிப்புபோலத் தோன்றுதலும், மிக்க கழிச்சல் உண்டாதலும் கண்களை (பயங்கரமாக) உருட்டி விழித்துப் பார்த்தலும், உடல் கறுத்த நிறம் அடைதலும், நினைத்து நினைத்து வாய் பிதற்றலும், மிகுதியாக உணவை உண்ண விரும்புதலும், எப்பொருளும் வேண்டுமென ஆசைகொள்ளலும் மயிர் கூச்செறிதலும், மிகவும் உறக்கங்கொள்ளுதலும் முக்கிய குறிகுணங்களாம்.

அன்றியும், இச்சுரத்தினன் மிகுந்த உரத்த ஒலியொடு சிறிப் பேசுதலும், தலையிடிப்பு, பேச இயலாமல் அடிக்கடி மயக்கமடைதல் உடல் களைத்தலும் இதனால் தவிப்பும் உண்டாகும். நீர்வேட்கையால் அல்லல் உறுதல், உடலெரிவோடு சுரம் காய்தலும், மிக்க வருத்தத்துடன் அலறலும்,

..51

உடல் முழுமையும் வியர்த்தலும், சுரம் விட்டுவிட்டுக் காய்தலும், கண் சிவத்தல் மூக்கு சிலேத்தும குறியைக் காட்டல், பெருமூச்சு தோன்றல் மற்றும் இப்பிறவிக்கு இடர் செய்யும் (தன்புறத்தம்) பற்பல சேட்டைகள் (கேடு அல்லது நலி) தோன்றும்.

மேலும், வயிறுபோதல், சிற்றத்துடன் அறப்போதனை செய்வதுபோல பேசுதல், பலவிதமாக கூச்சலிடல் - காரணமின்றி நகைத்தல், அழுதல் அலறுதல், வைதல் அல்லது பழித்தல் முதலியன - இவைபோன்றதும் மற்றும் குமரகண்டவலி போன்ற வலிப்பு முதலிய (முதல் பத்தியில் கூறப்பட்ட) குறிகுணங்களையும் காட்டும்.

இப்பிணியில் முக்குற்றங்களும் கூடி சன்னியைக் கிளப்பி உடல் முழுமையும் வியர்த்து கில்விட்டு கொல்லவும் கூடுமென சில நூலோர் கூறுவர். இதற்கு இளநீரை வற்றக் காய்ச்சி அதில் பற்பாடகத்தையும் சுக்கையும் அரைத்துக் கலக்கிக் கொடுக்க இப்பிணி தணியும் என்றும் கூறுவர்.

<u>மருந்து வேகச்சுரம்</u>: நச்சுத் தன்மைகளை உடையதான இரசம், கந்தகம், தாளகம், நாபி, சேங்கொட்டை முதலியவைகளைக் கொண்டு செய்த மருந்துகளை, நோயாளியின் உடற்கூறு, உடல் வன்மை, நோயின் வன்மை முதலிய இயல்புகளுக்கு ஏற்றவாறு கொடாததினால் உண்டாகும் சுரம் மிகுதியாகக் காயும். இதனால், குருதி கேடடைந்து, வாய் வெந்து புண்ணாதலும், உடல் முழுமையும் வீங்கியும் சுரம் காயும். இத்துடன் இருமல் தும்மல், கழிதல் வாந்தியாதல், உடல் வெளுத்தல் எல்லாம் குறிகளும் காணும்.

<u>நச்சுச் சுரம் (விடச்சுரம்)</u> இச்சுரம் நச்சுத் தன்மையுடைய சிறுபூச்சி அல்லது புழுக்களின் கடியால் வருவதாகும். இந்நேரயில் கடிபட்ட இடத்தில் வீக்கம் நமைச்சல், எரிச்சல் என்னும் குறிகுணங்களைக் காட்டி, உடல் முழுவதிலேனும், முகத்தில் மட்டுமேனும் நீர் கோத்து உப்புதல், சுரம் காய்தல், அத்துடன் விக்கல், ஏப்பம், செரியாமை, பச்சை நிறத்தோடு வாந்தியாதல், மயக்கம் மூர்ச்சை என்னும் குறிகளைக் காட்டும். மற்றும்,

அவச்சேர் விடமாச் சுரந்தன்னின் அடைவைக் கேளங் கங்காயும்
நவச்சேர் கால்தான் மிகக்காயா நாக்கு வரளு முலர்தலுண்டாம்
உவந்த பேரைக் கட்டிமிக ஐயே பிழையே என்னச் சொல்லும்
நிவந்த சந்தம் மொழிக்கும் நெடிதாய்க் காயு மமர்ந்திடுமே

அமரும் விட்டு விட்டுழலும் அதிக மாக வேயூதும்
தமரு மவிகள் முறமயக்கும் தாளே தெளியு மிதுதலக்கு
சமரும் பொருந்தும்.

(பொருள்) கையிலும் காலிலும் சுரத்தைப்போல சூடுண்டாகி நாவரண்டு உலரும். கண்டவர்களையெல்லாம் (தம் இஷ்டக்காரர்களையெல்லாம்) கட்டியணைத்துக்கொண்டு 'நான் செத்துப் போய்விடுவேன்', என்று அழுதல், மிகுதியாக வீங்கும், மயக்கத்தை உண்டாக்குதல், மயக்கம் தெளிந்து தெளிந்து வரும்.

(சினச்சுரம்: தீக்குற்றம் (பித்ததோடம்) தன்னளவில் மிகுந்து குருதியை வெம்மைப்படுத்தியுள்ளபோது, அடக்க முடியாத சினம் எழுந்து கண்டது கண்டவாறு பேசல், சினம் அடங்காது தலை இடித்து, கண்ணிருண்டு மயக்கமுண்டாகி உணர்விழந்து (சுரணையற்று) கீழே விழச் செய்யும். இதனால் மிக்க சுரமுண்டாகும்.

பயச்சுரம் (அச்சச்சுரம்): பயச்சுரத்தில் எக்காரணமும் இன்றி திடீரென்று அச்சமுண்டாகித் திடுக்கிட்டு உடல் நடுங்கி வியர்த்துத் தலை கனத்துச் சுரமெழும். அதனோடு வயிறு எரிதல், கண் சிவத்தல், தலை சுற்றல், மயக்கம், மயிர் சிலிர்த்தல், பெருமூச்சுவிடல், சத்தற்றுச் செத்ததைபோலக் காணல், மார்பு துடித்தல், வயிற்றில் ஒன்றும் இல்லாததுபோன்ற தோற்றம், பற்கடித்தல் என்னும் குறிகுணங்கள் காணும்.

வருத்தசுரம்: மனவருத்தம் உண்டானதில் அளவாக சுரம் உண்டாய் அதில் மனம் வேற்றுமையடைந்து மனம் கலங்கி, தன் நிலையறியாது வாய் பிதற்றல், ஆடல் பாடல், நகைத்தல், அழுதல் என்னும் குறிகள் தோன்றும்.

இச்சைச்சுரம் (காமசுரம்): இச்சை மிகுதியாலெழுந்த இச்சுரம், அறிவினை மயக்கி, தன் பண்புகளை இழக்கச் செய்யும். இதில் உடலெரிவு, கண்ணெரிவு மயக்கம், நாவரளல், நீர்வேட்கை, உடலெரிவு;-கு- மார்பு துடித்தல், என்னும் குறிகளைக் காட்டி மிகுதியாக சுரம் காயும்.

தெய்வசினச்சுரம்: இது கடவுளுக்குப் படைப்பதற்கென்று செய்து வைத்த பொருளைத் திருடி தன் உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளல், கடவுளைப் பழித்தல், கடவுளின் சிற்பச் சிறப்புடங்கள் சின்னங்கள், படிமங்கள் ஆகியவைகளை

..53

அழித்தல் முதலான காரணங்களால் இச்சுரம் காணுமெம்பர். இச்சுரமானது மேற்கூறிய செயல்களை செய்தபின், தன் குற்றத்தை உணர்ந்து வருத்தத்தின் அளவிற்குத் தக்கவாறு சுரம் வரும். அச்சுரத்தின் அளவாக தலை நோதல், மயக்கம், வாந்தி, தலைசுற்றல், பிரமை முதலியன உண்டாகும்.

யாமோர்சுரம் (ஞாந்தர்வசுரம்)

சர்வாங்கமும் கருக்கல், பலவீனம், அற்பகுலை, கண்களில் மஞ்சள் நிறத்துடன் நீர் வடிதல், பரியாசம் பண்ணல், பாடல், தலைவலி, சடத்துவம், சர்வ சந்தித்தானங்களும் அசைக்கூடாமை, எழுந்தால் சுற்றுதல், அலசியம், மதிப்பிரமை, கோபம், பசியில்லாமை, பெருமூச்சு, வைத்தியம்; சைத்தியம், அடிக்கடி மூர்ச்சை ஏற்படல்; சர்வாங்க வீக்கம், கனவில் விந்து இழப்பு, ஏப்பம், விக்கல், அடிக்கடி நீர் இறங்கல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

—சிவரட்சாமிருதம்

குற்றம் முதலிய வேறுபாடுகள்:

அறுசுவை உண்டியின் வேற்றுமைகளாலும், தகாத செயல்களாலும், வளிமுதலான முக்குற்றங்களுள் ஒன்று தனித்தேனும், இரண்டு குற்றங்கள் கூடியேனும், மூன்று குற்றங்களும் ஒருங்கிணைந்தேனும் நிற்குமாதலின், அவ்வாறு வேற்றுமையடைந்த குற்றங்கள் இரைப்பையைப்பற்றி (ஆமாசயம்) அதன் உட்புறத்தில் மெல்லியதாகவும் கடின மெலிபோலும் பழந்தவினி சிதத்தின் அடையை (ஐய அடை என்னும் ஆமம் எனும் ஈரலில் வழங்கப் பெறுவது) மிகுந்தெழுந்த குற்றங்களின் வன்மைக்குத் தக்கவாறு ஊக்கி, உப்பச்செய்யும். அவ்வாறு ஊக்கி உப்பிய அந்த சீத அடை உண்ட உணவை செரியாதபடி செய்யும். அவ்வாறு சரிவரச் செரியாத உணவுக் குழம்பை மேற்கூறிய கேடடைந்த குற்றங்கள் தாக்கிப் பரவச் செய்யும். அது உணவுக் கழம்பு புகுந்து பரவும் நஞ்சிய குழாயினூட் சென்று அதன் வாய்ப்புறத்தை அடைத்துக் கொள்ளும் மற்றும் நஞ்சியதாகப் பரவிப் பாய்ந்து தோலின் மயிர்க்கால்களின் தொளைகளையும் அடைத்துக் கொள்ளும். இவ்வண்ணமே சிறுகுடல் தொடக்கத்தில் புகுந்து (பக்குவாசயம்) அங்குள்ள செரிப்பழல் என்னும் ஜாடாரக்கினியை வீசிறி

விசிறி மேலெழும்பி உடல் முற்றும் அவ்வெப்பத்தை பரவச் செய்யும்.

இவ்வாறு கதித்த எழுந்த அனலே 'சுரம்' என்று கூறப்படும்.

இதனைக் கீழ்க்குறித்துள்ள அகத்தியர் குணவாகடப் பாக்களாலும் தேரன் யச பாக்களாலும் அறிக.

கேளப்பா சுரம் பிறக்கும் வகையைத் தானே
கெடியான அறுசுவையின் பேதத் தாலும்
தாளப்பா தகாததன் நடத்தை யாலும்
தருவான வாதபித்த சிலேத்ம மென்றும்
மூளப்பா முத்தோட மொன்றாய்க் கூடி
முடிவாக இரண்டிரண்டாய்த் தொந்தித் தேதான்
சூளப்பா தனித்தனியே ஆக்ர மித்துச்
சுகமான அமாசயம் மற்றந் தானே

பற்றியங்கு மிருதுகெட்டி ரூப மாக
படிந்திருக்கும் ஆமமென்னும் சிலேத்ம அடையைத்
தத்திதங்கள் வன்மைக்குத் தகவே எக்கித்
மருந்தபடி அவ்வடையை உப்பச் செய்து
சத்திரு மன்னத்தைச் செரிப்ப் யாமல் சுவாசம்
சதுரான சிரனத்தில் நரம்பில் துவாரம்
சத்திவரும் ரோமத்தின் துவாரந் தன்னைச்
சுகமாக மறைத்தபின்பு சொல்லக் கேளே

சொல்லுகிறேன் பக்வாசியத் தானம் சேர்ந்துச்
சுகமாக வளர்ந்தவரும் சடராக் கினியை
மெல்லவே விசிறியே எழுப்பி விட்டு
மெதுவாக அதனுடனே தானும் சேர்ந்து
வல்லவே சரீரத்தில் பரவிப் பின்பு
வலமாக உடல்முழுதுங் கொதிப்பைத் தந்து
அன்னுடன் தேகத்தைக் கொடுமை செய்யும்
அழலான சுரமதனின் தன்மை தானே

அகத்தியர் குணவாகடம் (கையேடு) என ஒருபாடலும்,

சுரம்பிறக்கும் வகையதனைச் சொல்வேன் முன்னாள்
சொன்னவழி யறுசுவையும் மாற லாலும்
பெருந்தகா நடவடிக்கை யாலுங் குற்றம்
பிரியாமத் கூடியுமன் றிரண்டி ரண்டாய்
மருவியே தனித்தனியாச் சூழ்ந்து முன்னர்
மாசுபடா திருந்தவா மத்தைப் பற்றி
ஒருவுதனி வாமவதன் மென்னாம கெட்டி
உருவச்சீ தத்திவடை யதனைச் சேர்ந்தே

தங்களுடை வன்மைதனைக் காட்டி அதனின்
தன்வழிசெட் டுப்பும்வழி தன்னைச் செய்து
தங்குமுறை வாதிகளைச் சமித்தல் செய்யா
நோயடர்ந்து அழிநரம்பின் வழியும் மயிரின்
தங்குவழி தமைமறுத்துப் பக்வா சயத்தைச்
சார்ந்தவன லுடற்றியை விசிறித் தூண்டி
அங்கதிற்றா முங்கூடி யுடல முற்றும்
அழலாக்கி யல்லல்பல விளைக்குந் தானே
என மற்றொரு பாடமும் உண்டு.

மேற்கூறிய இரு நூலாசிரியர்களும் சிலேத்தும அடை என்னும் சொல்லை, 'ஆமம்' என்னும் வடமொழி சொல்லுக்கு இணையாக்கிக் கூறியது வடமொழி நூலைத் தழுவியதாகச் சிலர் கொள்வர்.

தேரர் தம் சேகரப்பா என்னும் நூலில்,
' குடலிதனில்
சீதமலாது சுரமும் வராது திரமாமே' என்றும்,
'அசீரமின்றிச் சுரமும் வராது' ...
என்றும்,
'என்று தூரியோ தன்று மிளையவனு மங்கர் கோனும்
என்று மடமே புரியும் எண்ணமுள சகுனியும்
மந்தரா லோசனை என்னும் மந்த வசீகரண முண்டாய்
தந்திரப் புளிப்பு மீறித் தானை வெப்ப மனதினாலே
எனத் தேரன் மருத்துப் பாரதத்தில் (தீ மாடுபிடி சண்டைக்குமுன்) கூறியதாலும்)
கூறியதாலும்

உணவு, செயல் வேறுபாட்டால் சுரம் வரும்முன் இரைப்பையில் ஈரம் தட்டிச் சூல் கொண்டு, உண்ட உணவைச் சமைக்காத புளித்த உண்டான உணவுச்சாறு, சமை நாளங்கள் வழியே (
பாய்ந்து மயிர்க்கால் நுழை துளைகளையும் அடைத்துச் சிறுகுடலைச் சார்ந்து உடல் தீயைப் பெருக்கிப் பரவச் செய்து வளி முதலான குற்றங்களின் மாறுதலின் வன்மைக்குத் தக்கவாறு சுரத்தை வெளியாக்குமென உரைத்தல் சித்தர்நூல் வழியாமெனக் கொள்ளவும்.

சுரநோயில், உடலின் உணவுப் பையில் குடலிலும், தம் இயல்பான தொழில் கெடுவதால் உடலின் சாரம், குருதி, தசை, நிணம் முதலான உடற்கட்டுகளும், கழிவுப் பொருட்களாகிய நீர், எரு (மலம்) ஆகியவையும் இயல்புக்கு மாறுபட்டும் கேடடைந்தும் காணப்படும்.

இவ்வாறெழும் முக்குற்ற வேறுபாடுகளும், எழு உடற்கட்டுகளின் வேறுபாடுகளும், கழிவுப் பொருட்களின் வேறுபாடுகளும், பிறவழிச்சுரங்களில் அதாவது மோதச்சுரம், நாவேறுசுரம், ஏவல்சுரம், பூதசுரம், மருந்து வேகச்சுரம், நச்சுச்சுரம், சினச்சுரம், பயச்சுரம், தூக்கசுரம், காமச்சுரம், தெய்வ சினச்சுரம், யாமோர்சுரம் (கந்தர்வ சுரம்) ஆகிய பன்னிரண்டு சுரங்களில், தன்வழிச்சுரங்களைப்போல தீனிப்பையிலும் குடலிலும் வேற்றுமை உண்டாகமலே சுரமெழுந்து பின் குற்றங்களையும் உடற்கட்டுகளையும் கழிவுப் பொருள்களையும் தாக்கி அகட்டையும் பற்றும்.

<u>நாடி</u>:

பாங்கான வாதத்திற் சேத்ம நாடி பரிசித்தால் ....
. . . . .
. . . .
ஒங்கா னுவிசுரமுடனே . . . . .
(சதகநாடி)

வளிநாடியும் ஐயநாடியும் ஒன்று மற்றொன்றைச் சேர்ந்தாற்போல் நடக்கின் சுரநோயெனச் தெளிக.

உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு . . . . இத்திசுரம்
. . . .
. . . .
. . . .

அழல் (பித்த) நாடி வன்மையொடு நடப்பதுபோல் ஓடினால் சுரநோய் உள்ளது எனவும், அஃது என்புச்சுரம் எனவும் அறிக.

பண்பான பித்தத்தில் சேத்மங்கூடிப் பரிசித்த லத்திசுரம்
. . . .
. . . .
. . . .

அழல்நாடியும் ஐயநாடியும் ஒன்றுசேர்ந்து நடக்கில் என்புச்சுரத்தைக் குறிக்கும்.

சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில்
. . . . . .
. . . . . .
முறைக்காய்வு . . . .

அழல்நாடியும் வளிநாடியும் சேர்ந்து நடக்கக் காணில் முறைக்காய்ச்சல் நோய் என அறியக் கிடக்கும்.

வாதந்தான் தனித்து நின்று வந்திடும் பந்து போலத்
தீதற எழும்பி நின்றால் அக்கியே மந்தம் பற்றும்
ஏதவாற் சுரங்கள் கண்ட திடைவிடா றற்கு-மல்வாற்
றாதவுங் குறைந்து நின்று தன்னையும் மறக்கச் செய்யும்

(பொருள்) வளிநாடி திரண்டுருண்டு பந்தபோல உருண்டோடுவதுபோலக் காணில் குடலில் மந்தம் பற்றிச் அக்னியதால் சுரம் உண்டாகும். அச்சுரம் இடைவிடாது காயும். அன்றியும் உடற்கட்டுகளின் வன்மை குறைந்து அறிவையும் மயக்கும் என்க.

உற்றிடு வாதநாடி ஒருவிரலளிளே நின்று
பற்றியே சிலம்பி நின்று பையவே நடக்கு மாயின்
மத்திய சுரமே யாகும் மாலைச் சுரமது தானாயின்
அத்தியே பற்றி போடி அடங்கிடா தெழும்பி நிற்கும்

(பொருள்) வளிநாடி சிலம்பி நின்று மெதுவாக நடக்கில் தோன்றும் சுரம் பெருங்காம்ச்சலாமித் தோன்றாமல் மாலையில் வரும் சுரங்களில் ஒன்றாகிய என்புச்சுரம் என அறிக.

வளர்ந்திடும் பித்த, நாடி வலமிடம் பிசகா வண்ணம்
பிளந்தது தலித்துப் பச்சைப் புழுநழு கல்போ லோடில்
உளந்தனில் வரட்சிதங்கி உடம்புலர்ந் தத்தி தன்னில்
விளைந்திடும் சுரங்கள் வந்து . . . .

(பொருள்) அழல்நாடி இடம்வலம் பிசகாமல் நேராகப் பச்சைப்புழு தலையாலூ ரிந்து பின்பாகத்தைச் சற்று முன் நிறுத்தி உடலை மேலக்காக வளைத்து ஊர்ந்து செல்வதுபோல நடக்கில் உடலில் வரட்சியுண்டாம் உடம்புலந்த தால் உண்டான என்புச்சுரம் எனக் கொள்க.

ஆனதோர் வாத நாடி அடர்ந்துற வலவாம் நிற்கில்
ஊனமா முடிவில் நோய்கள் உலாவியே நிற்கு மாகில்
தானமாம் பித்தநாடி தான்வல வாக நிற்கில்
கானமாங் குழலி னாளே காம்ச்சலங் கடின மாமே.

(பொருள்) வளிநாடி தன் இயல்பான வன்மைக்கு மிகுந்த நிற்குமாயின் ஊனத்தை விளைக்கும் தீர்விலா நோய்களை வரவழைக்கும். அதேவேளையில் பித்தநாடி வன்மைபெற்று நடக்குமாயின் சுரம் மிகக் கடினமானதாக இருக்கும்.

சுரநோயில் பிறக்கும் துணை நோய்கள்

சுரமதே சுவதாகும் சுரமதே சீதமாகும்
சுரமதே தோடமாகும் சுரமதே சோகையாகும்
சுரமதே மேகமாகும் சுரமதே கபமுமாகும்
சுரமதே சாரமாகும் சுரமதே தாகமாமே

சுரமதே வரட்சியாகும் சுரமதே இரத்தமாகும்
சுரமதே சீழுமாகும் சுரமதே மஜ்ஜையாகும்
சுரமதே கணையதாகும் சுரமதே இருமலாகும்

சுரமதே சயமதாகும் சுரமதே பொருமலாமே
சுரமதே சூலையாகும் சுரமதே சொறியதாகும்
சுரமதே விரணமாகும் சுரமதே பித்தமாகும்
சுரமதே வாதமாகும் சுரமதே வாயுவாகும்
சுரமதே ஈளையாகும் சுரமதே இழுப்புமாகும்

(அகத்தியர் சுரநூல்-300)

உரை_

சுரமதே_கலைவமாகும்: சுரம் தோன்றித் தங்குமிடங்கள், பலவகையாக அழற் (பித்தம்) குற்றம் மிகுந்து செந்நீர் முறிந்து குறைந்த நிற நிலையில் சுரம் உண்டாய் கொழுமை கெட்டு நீர்கடுப்பு, எரிபுருக்கி முதலிய வெப்பு நோய்கள் தொடர்ந்து தோன்றும்.

சுரமதே_சீதமாகும் சுரநோய் உள்ள காலத்தில் பித்தகப தோட மிகுதியால் அல்லது கபதோட மிகுதியால் வெப்பம் குறைந்து வளி ஐயச்சேர்க்கையால் குரல் கம்மல், சீதளம் உண்டாகி வாதம் முதலிய பிணிகள் தோன்றக்கூடும்.

'சுரமதே_தோடமாகும்' சுரம் உள்ளபொழுதும், சுரம் தணிந்த உடனேயும் ஆகாத (அபத்திய) உணவுகள், தகாத செயல்கள் ஆகியவைகளால் குற்றம் எழும். சுரம் நீங்கியபின் பத்து நாட்கள் வரையில் குளிர்ந்த நீரைப் பருகுதலும், புளிப்பு, உப்பு, கைப்பு, துவர்ப்பு உள்ள பொருள்களைப் புசிப்பதாலும், சந்தனம், புனுகு போன்ற நறுமணப்பூச்சுகளை உபயோகிப்பதால் மிக்க காற்று, பனி, நிலவொளி உள்ள இடங்களில் இராக்காலங்களில் படுத்துறங்குதலாலும் ஊர்தியேற்றம், சினம், அழுகை பெண்போகம் ஆகியவைகளில் மிகுதியாய் ஈடுபடுதலாலும், சுரத்தால் மெலிந்த உடலில் எழு உடற்கட்டுகளும் இயல்புக்கு மாறுபட்ட முக்குற்றங்களும் மறுபடியும் கேடடைந்து மீண்டும் சுரம் வரும் என அறிக. இதனையே தோடசுரம் என்பர் இதில் முக்குற்றங்களும் கலந்திருக்குமாயின் அதனைச் சன்னிதோடம் என்பர்.

'சுரமதே_இதர_சோகையாகும்' வளிசுரம், மாறல்சுரம், குளிர்ச்சுரம், தாதுகத சுரம் (உடற்கட்டுக் கேட்டுச்சுரம்) ஆகியவை நீடித்து நிற்குமாயின் அழல்மீறி, குருதி நீர்த்துவிடும். அதனால் களமாலை, சோகை, பாண்டு, கல்லீரல், மலர்ச்சி, மண்ணீரல் மலர்ச்சி என்ற நோய்கள் தோன்றக்கூடும்.

'<u>சுரமுதே_மேகமாகும்</u>' பித்தசுரம், வெச்சுரம், உட்சுரம், என்புச்சுரம் வேனில் சுரம், விடாச்சுரம், அம்மைச்சுரம் ஆகியவை சுரங்கள் வெப்பத்தையே முதன்மையாகக் கொண்டு அதற்குரிய பண்புகளை வெளிப்படுத்தலால் முடிவில் அடிவயிற்றிலும், குறிநாளத்திலும் அவ்வெம்மையின் கொடுமையால் புண்கள் உண்டாகலாம். அப்போது நீர் கடுப்புடன் வெளிப்பட்டு புண்பட்ட நாளத்தின் வழியே வெள்ளை விழ்தல் அல்லது நீரிழிவு முதலிய நோய்கள் வரலாம்.

('<u>சுரமுதே_கபமுதாகும்</u>' ஐயசுரம், ஐயவளிசுரம், இருமல் சுரம், வரள்சுரம், உள்சுரம் முதலிய சுரங்களால் குருதி குறையைப் பெற்று நரையீரல் வெப்பமடைந்து அதன் தன்மையும் செயலும் கெட்டு கோழையைத் தங்கச் செய்யும். அதனால் ஐய (கப) நோய்களைப் பிறப்பித்து உடலை வற்றச் செய்யும். அவை பின்குணமடையினும் உண்ணும் உணவு செரியாது. மூலத்தில் வாயு தங்கி இடைவிடாக் கழிச்சல் நோயை உண்டாக்கும்.

'<u>சுரமுதே_தாகமாகும்</u>' அழற்சுரம், அழல்வளச்சுரம், விடாச்சுரம் ஆகியவைகளிலும் மற்றும் சாரச்சுரம் (இரசதாதுகதசுரம்) கறைச்சுரம் (இரத்த தாதுகத சுரம்) முதலிய உடற்கட்டுகளைப் பற்றி வரும் சுரங்கள் நீடித்திருந்து நீங்கினும், உற்கட்டுகள் இளைத்து (மெலிந்து) நா, கழுத்து தாடை, நரம்புகள் ஆகியவைகளில் வெப்பமுண்டாம் வேவதால் நீர்வேட்கை அதிகப்படும்.

'<u>சுரமுதே_வரட்சியாகும்</u>' வெச்சுரம், உட்சுரம், வரள்சுரம் மருந்து வேகச்சுரம், விட (நச்சு)சுரம், கரச்சுரம் முதலிய சுரங்கள் கண்டு நீங்கியபின், சுரவேகத்தைத் தணிக்கும் மருந்துகள் தக்க சமயத்திலும் அளவிலும் கொடாமையின் அங்கு வெப்பம் எழு உடற்கட்டுகளிலும் பரவி, அவைகளை வாட்டி உலர்த்திவிடுமாதலால், குருதி வறளும். அதனால் சோகையும், என்புசத்து குறைவதால் என்புருக்கி நோயும் உண்டாகும். அழலை (பித்தக்குற்றம்) முன்னிட்டு வரும் அழற்சுரமும், அழலையசுரமும் எவ்வழியிலேனும் குருதியை வெளிப்படுத்தும். இத்தகைய நோய்க்குக் குருதியழல் (இரத்த பித்தம்) எனப்படும். இக்குருதியழநோய் காசம், இளைப்பு ஆகிய நோய்களை எளிதில் உண்டாக்கும்.

..60

'<u>சுரமுதே_சீழுமாகும்</u>' மந்தசுரத்தில் உணவு செரியாமல் ஊண்சாரம் (அன்னரசம்) கெட்டு உடற்சாரம் (ரசதாது) முதலிய உடற்கட்டுகள் கெடுதியடைவதால் சீழ்க்கட்டி, கொப்புளங்கள் முதலிய நோய்களைத் தோன்றச் செய்து அவற்றினின்று சீழை வடியச் செய்யும்.

'<u>சுரமுதே_மஜ்ஜையாகும்</u>' வரளிசுரம், காமச்சுரம், இருமல்சுரம் ஆகிய சுரங்களில் எலும்பிலும் அதனுள் உள்ள மூளையிலும் வெப்பின் மிகுதியால் கொதிப்பு மிகும். அதன் காரணமாய் மூளை கரையும்.

'<u>சுரமுதே_கணையதாகும்</u>' குழந்தைகளுக்குத் தோன்றுகின்ற என்புச்சுரம், அழற்சுரம், மாந்தசுரம் முதலியவைகள் நாட்பட நிலைத்த சுரம் தணிந்தபின் கணை என்னும் பிணியைப் பிறப்பிக்கும். (இந்நோய் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கே வருவது வழக்கு)

'<u>சுரமுதே_இருமலாகும்</u>' ஐயச்சுரம், ஐயவளிச்சுரம், என்புச்சுரம், உள்சுரம் ஆகிய சுரங்கள் நீங்குந் தறுவாயில் ஐய உறுப்புகளில் வெப்பமுண்டாகில் இருமல்நோய் உண்டாகும்.

<u>சுரமுதே_ச(க்ஷ)யமதாகும்:</u> ஐயச்சுரம், ஐயவளிச்சரம், என்புச்சுரம், உள்சுரம், வரளிசுரம், விப்புருதி (கட்டி) சுரம்) இவைகளில் ஏதேனும் ஒன்று உண்டாகி சுரம் தணிந்தும் அதன் வேகம் தணியாமல் உடலைப் பற்றி நிற்குமாயின் குருதியைக் கெடுத்து உடலை இளைக்கச் செய்து இளைப்பு நோயாகிய ச(க்ஷ)யத்தை வரவழைக்கும்.

'<u>சுரமுதே_சூலையாகும்</u>' வளியைப் பெருக்கால் எழுந்த சுரங்களில் குருதி கெட்டு சந்திகளில் (பூட்டுகள்) நீர்தங்கிக் கலங்குவதால் முட்டிகளில் சூலத்தால் குத்துவதுபோன்ற (சூலை) நோய்களை வருவிக்கும்.

'<u>சுரமுதே_சொறியதாகும்</u>'

நாள்தோறும் வரும் சுரம், ஒவ்வொருநாள் விட்டு விட்டு வரும் சுரம், மாறல் சுரம் இவைகள் வளி அல்லது வளியும் அல்லது அழலையும் இவற்றுள் எவ்வகை சுரமேனும் மிகுதியாய் வருவதால் உணவைச் செரியாவண்ணம் செய்து குருதியைக் கெடுத்துச் சொறியை உண்டாக்கும்.

'<u>சுரமுதே_விரணமாகும்</u>' மேற்கூறியவாறு நாட்பட்டுள்ள சுரங்களில், அச்சுரத்தின் கொடுமையால் உடற்கட்டுகளின் (சப்ததாதுக்களின்) வன்மை குறைந்து அச்சுரம் தீரும் காலத்தில் அசைவற்றுப் படுத்த படுக்கையில் இருக்க நேர்தலால் இடுப்பு முதுகு, தொடை முதலிய இடங்களில் புண்களுண்டாகு

'<u>சுரமுதே_பித்தமாகும்</u>' பித்த மிகுதியால் ஏற்படும் அழற்சுரம், அழல்வளிச் சுரம், வெறிசுரம், முதலிய சுரங்கள் நீடித்த காலம்வரை தீராதிருந்து பின் சுரம் நீங்கிய பின்னும் நோயின் வன்மையால் அறிவு கலங்கி 'பித்தன்' எனக் கூறுமாறு வைத்திய நோயைப் பிறப்பிக்கும்.

'<u>சுரமுதே_வாதமாகும்</u>', '<u>சுரமுதே_வாயுவாகும்</u>': ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் என்னும் இச்சுரங்களில் ஐயத்தை (கபநோடத்தை) விலக்கக் கூடிய மருந்துகளின் வேகம் மிகுதிப்பட்டால் அது ஐயத்தைத் தணித்து வளியைப் பெருகச் செய்யும். அக்காலத்தில் மலமும் நீரும் கட்டுப்பட்டு வளிநோய்களை விளைவிக்கும். குடலில் வாயுவை அதிகப்படுத்தும்.

'<u>சுரமுதே_ஈளையாகும்</u>' ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் ஆகியவைகளில் ஐயத்தின் பெருக்கால் வளிக்குற்றம் குறைந்து, வளியின் செயலாகிய மலங்களை வெளித் தள்ளும் செயல் குன்றுவதால், நுரையீரலில்/ மலமாகிய சளியை வெளி வெளித்தள்ள இயலாது. ஆகவே ஈளைதங்கி ஈளை நோயைப் பிறப்பிக்கும்.
<u>சுரமுதே_இழுப்புமாகும்</u> மேற்கூறிய சுரங்களில் வளிகுறையும். அவ்வளியின் குறைவால் மலம் கெட்டு கபமும் கூடி இழுப்புநோய் தோன்றும்.

<u>சுர_மருத்துவம்</u>

பொதுவாக சுரம் வருவதற்குச் சமைக்களத்தண்டாம் ஆம பக்குவாசயங்களிலுண்டாகும்) கோளாறுகளே முதன்மையாம் நிற்குமெனக் கூறியதால், இந்நோய்க்குரிய மருத்துவத்தில், முதன்மையாம் நின்ற கோளாறுகளைப் போக்கித் தன்னிலைத் திரிந்த முக்குற்றங்களையும், தத்தம் வழி மீண்டு இயல்பாய் நிகழச் செய்ய (1) பட்டினிபோடல் (2) கழிக்கச் செய்ய (பேதி) (3) வாந்தியெடுக்கச் செய்ய (வமனஉறை) தக்கமுறைகளைப் பற்றி நோயைத் தீர்ப்பது பொதுவிதியாகும். இம்முறை-களால் சுரம் நீங்காதவிடத்து சுரங்களின் தோடம், வகை, இயல்பு

ஆகியவைகளுக்கு ஏற்ப சிறப்பு மருந்துகளான குடிநீர், சூ ர் (சூர்ணம்) மாத்திரை, மெழுகு, பற்ப செந்தூரங்கள் முதலியவைகளைக் கொடுத்தும், சுரநோயில் அப்போதைக்கப்போது தோன்றும் துணைநோய்களுக்கு மூக்குப்பொடி, மூக்குத்திரி, கண் மருந்து, முதலியவைகளை உபயோகித்தும் வியர்வை பெருகுமாறு செய்தும், தீர்த்தல் (குணப்படுத்தல்) வேண்டும்.

(பொதுவிதி)

(1) பட்டினி

நோய்களுக்கு ஏற்பப் பட்டினி இடும் நாள் அளவைகள் விதிக்கப்பட்டுள்ளன.

வாத சுரத்துக் கோதுநா ளேழும்
பித்த சுரத்துக் குற்றநா ளாறும்
சேத்தும சுரத்துக் கேற்றதொன் பதுநாள்
தொந்த சுரத்துக் கைந்திரண் டேநாள்
பட்டினி வைக்கப் பனியுஞ் சுரங்கள்
அவையில் விடாதெனி லௌடதங் கொடுத்துக்
கஞ்சியுங் கொடுத்துக் கடுஞ்சுரம் விடுமே

(பொருள்) வாத (வளி)சுரத்துக்கு ஏழுநாட்களும், பித்த (அழல்) சுரத்துக்கு ஆறுநாட்களும், கப (ஐய) சுரத்துக்கு ஒன்பது நாட்களும் தொந்த சுரங்களுக்கு பத்து நாட்களும் பட்டினியிட சுரம் தணியும். அதிலும் தணியாவிடில் மருந்தும் கஞ்சியும் முறைப்படி கொடுத்துவர கடுமையான எந்த சுரமும் விட்டுவிடும்.

தன்று மதாந்தர மென்று மிலங்கனம்
உரைத்திடும் வாத சுரத்துக்கு மூன்றுநாள்
பட்டினி யிருக்க விட்டிடுங் காய்ச்சல்
எத்தனை யாகிலும் பித்த சுரத்துக்குத்
கஷாயம் போசனம் இலகுவா யளிக்க
சேத்தும சுரத்துக் காதியே கஞ்சி
கொடுத்து மருந்து மிடத்தெளி வாகும்

மேற்கூறிய பாடலில் - கடும் பட்டினியாய் இருக்கவிடாமல் வளிச்சுரத்தில் மூன்று நாட்களுக்கு உணவு கொடாது வைத்தலும், அழற் சுரத்தில் குடிநீரும் சிறு உணவும், ஐயசுரத்தில் கஞ்சியும் மருந்தும் கொடுத்துவர சுரந் தணியும் என்னும் கொள்கை கூறப்பட்டுள்ளது.

மூன்றுநாள் பட்டினி வைக்கும்முறை

மட்டி லாச்சுரம் வந்தவன் றைக்கும்
பட்டினி யிருந்து பகரிரண் டாநாள்
காலமே பல்லை யேவலே விளக்கி
நாக்கு வழித்துத் தாக்குவெந் நீரால்
கொப்பு ளித்தபின் குளிர்முகங் கழுவி
மெய்யுடன் றலைக்கு வேட்டியைச் சுற்றி
இடக்கைக் கீழாகப் படுக்கவுஞ் செய்து
வாஞ்சையாம் மூன்றய வாசஞ் செய்தபின்
காய்ந்த வெந்நீரைக் கருதியே பருகித்
தேற்றாங் கொட்டையைப் போற்றியொன் றருந்திடின்
எந்தச் சுரதோ டங்கனும் போமென்
நிந்தத் தரணியி லிசைத்தனர் முன்னோர்.

(பொருள்) சுரம் தோன்றிய அன்றே பட்டினி வைத்து, இரண்டாம் நாள் காலையில் பல் துலக்கி, நாவழித்து, வாயை வெந்நீரால் கொப்புளித்துப் பின் முகத்தைக் குளிரக் கழுவி உடலையும் தலையையும் சோமனால் சுற்றி, இடக்கை கீழாகப் படுக்குமாறு செய்க. இவ்வாறாகவே மூன்று நாட்களும் கழித்த பின்னர், நான்காம் நாள் காலை காய்ந்தாறிய வெந்நீரைப் பருகச் செய்து, ஒரு தேற்றாங் கொட்டையை மென்று சுவைத்துத் தின்னும்படிச் செய்ய சுரம் நீங்கும்.

இவ்வாறாக பட்டினியின் நாளளவைச் சமைக்களத்திலுண்டான கோளாறுகளை அகற்றவும் கோளாறடைந்த திரிதோடங்களை தத்தம் வழி மீண்டும் இயல்பாய் நடக்கச் செய்தற்கும் ஏழுநாட்கள் முதல் பத்து நாட்கள்வரை பட்டினி வைக்க விதித்திருக்க அம்முறையைத் தேரையர் பின்வருமாறு குறை கூறியுள்ளார்.

'லங்கண மெனபது போட்டு
பொல்லா நாயை யில்லா மாட்டுப்
பங்கவைத்தியர் கூட்டிடு
நகைப்பாரே மருத்துவர் கேட்டு' எனபது தேரையர் கூற்று. அவ்வாறு கூறியதன் கருத்து யாதோ எனின்

தென்னாட்டு மக்களின் உணவு - எடுத்துக்காட்டாக தமிழ் நாட்டோரின் உணவு - எளிதில் செரிக்கக்கூடியதும், அறிவைப் பெருக்கி உயிருடன் உடல் நிலைத்தற்கான வன்மைமிக்க-பருமனும்,-மி வன்மையை மட்டும் செ

மட்டும் கொடுக்கக் கூடியதமாக இருந்தலின், இம்மக்கள் மிக்க பருமனும், மிக்க உயரமும், மிக்க வன்மையும் இல்லாதிருக்கும் நிலையில் வெர்களுக்கும் ஏழுமுதல் பத்து நாட்கள் வரையில் இடப்பட்ட பட்டினி தகுதியுடையதன்று என்பது தேரையரின் கருத்து போலும். ஆகவே கண்ணை மூடிக்கொண்டு நூல்வழி பட்டினி மருத்தவம் செய்யின் கெடுதி விளைக்குமேயன்றி நன்மை பயவாதெனக் கொள்ளல் வேண்டும்.

ஆயினும், சுரமற்ற காலத்தும் சுரமுற்ற காலத்தும் சுரத்திலிருந்து தற்போதுதான் தீர்வு பெற்றுள்ள (பலவீன) காலத்தும் உணவின் திட்டம் எப்பொழுதும் உண்பதுபோன்றே உண்ணலாம் என்பது தேரனால் கருத்தன்று. சுரநோயில் சுரத்தின் வன்மைக்குத் தக்கவாறு உணவை அளவிடல் வேண்டும். இதனைக்கொண்டே தேரன் இவ்வாறு குறைகூறிய பாடலுக்கு நேர்மையாகப் பொருள் கண்டவர்கள் 'வித்யாசம்பந்தம்' வைத்தியம் அதைக்கற்றவன் 'வைத்தியன்' என்றும், மருந்தின் பணி பண்பு(இனம்) முதலியவற்றைக் கற்று அதனை வழங்கி அதன் நுட்பங்களைக் கண்டறிந்த பெரியோரிடம் பழகி வந்தவர் 'மருத்தவர்' எனப்பெயர்பெற்றனர் எனவும் பொருள் படுத்தி, இவ்விருவருள் 'வைத்தியர்' நூல் கற்ற அளவோடு இருந்தமையால் நூலில் கூறியபடி லங்கணம் விதிப்பர் என்றும், 'மருத்தவரோ' அவ்வாறன்றி நோயாளன் வாழுமிடம் காலம், அவன் உடல் நிலை, வன்மை முதலியவற்றை நன்கு ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு உணவளிப்பர் எனவும் கூறி அதைக் சிந்தகாமணும் தன் காப்பியப்பாவால் உறுதிப்படுத்துகின்றனர்.

லங்கணம் பரமா வித்தமென வுலகச்
சொன்முறைக் கியல்புறச் சூத்திரம் உரைத்த
வாயினும் மருந்தி வளவிலா மருத்தர்
நோயட லடங்கிட நட்பமா யளவறிந்
தீயற்றிட மிச்சிறு மெச்சிறும் பிணிகள்
செயித்திடும் நோயினர் தேகமா மரணை

(தே. காப்பியம்)

(பொருள்) உலகிலுள்ளவர்கள் 'லங்கணம்' பரம ஔடதம் - 'பட்டினி பெருமருந்து' என்று சொல்வது வழக்கமாய் இருத்தலின் அதனை முறைக்காக நாவில் கூறவேண்டி இருப்பினும், நோயாளியின் நிலைமைக்கு ஏற்றவாறு எளிதில் செரிக்கக் கூடிய சிறு உணவுகளைக் கொடுத்து நோயை நீக்குதல் மருத்துவர்களின் கடமையாகும். உணவை முற்றும் தவிர்த்து பட்டினி கிடப்பினும், உணவை அளவுக்கு அதிகமாய் உண்டாலும் நோய்களைப் பெருக்கி உடலுக்குக் கேட்டை விளைக்கும்.

ஆமே யேழு நாளளவும்
அசனந் தொடாத பட்டினி யாய்த்
தோமே கஞ்சி தண்ணீரும்
சொன்ன படியே தானதவும்
சொன்ன- ஆமே யேழுநாள் கழிந்தால்
அழன்றே வந்த சுரமதவும்
போமே யேழு நாள்கழித்தால்
பொருந்த மசனம் கொடுப்பதுவே

(பொருள்) வலிசுரத்துக்கு பெருத்த உணவு கொடாமல் கஞ்சிபோன்ற நீர்த்த உணவு ஏழுநாள்வரை கொடுத்துவரல் வேண்டும். அவ்வாறு சோறு இன்றிக் கஞ்சி தரும் பட்டினியைக் கையாளில் ஏழுநாள் சென்றதும் சுர சுரம் தீர்ந்துவிடும். சுரம் தணிந்தபின் உடலின் தன்மைக்குத் பொருத்தமான உணவைச் சிறுகச் சிறுகப் பெருக்கிக் கொண்டே வரல் வேண்டும் என்பது முறையாகும்.

'உற்ற சுரத்துக்கும் உறுதியாம் வாழ்வுக்கும்
அற்றே வருமட்டும் அன்னத்தைக் காட்டாதே
(-திருமூலர் திருமந்திரம்)

சுரம் நீங்கும் மட்டும் சோறு காட்டக்கூடாது என்பதைத் திருமூலரும் மேற்படி திருமந்திரப் பாட்டால் தெளிவிக்கிறார்.

மேலும், சிறு உணவு பெருமருந்து என்னும் மருத்துவப் பழமொழியாலும், சுரம் தீரும் வரைக்கும் சோறு முதலிய பெரு உணவைத் தராமல் கஞ்சி கொடுத்து வருதலே நலமெனத் தெரிகிறது.

மிகு உணவால் உடல் பருத்தநிலையில் மந்தம் உண்டாதலால், அதன் அளவாகத் தன் நிலையில் திரிந்த குற்றங்களைத் தன்நிலைப்படுத்தி, பசித்தீயைத்தூண்டி, உடலில் தோன்றும் களத்தைக் குறைத்து, சுரத்தைத் தணிக்க, உடலின் தன்மைக்குத் தக்கவாறு பட்டினியைக் கையாளுதல் தீர் நன்மை பயக்கும். அளவுகடந்த பட்டினியிடின், பிணியாளனின் உடல் வன்மை குன்றும். உடல் வரட்சி சோம்பல், வாய் குமட்டல், களைப்பு, மயக்கம், தாகம், தாகம், வாந்தி, இருமல், கடிவலூச்சு, விக்கல், மிகுசுரம் இவைகள் உண்டாகும். ஆதலின் உடலை இளைக்கச் செய்யும் சுரங்களிலும், சுரம் வருவதற்குமுன் வேறு பிணிகளால் மெலிந்த நிலையிலும் காதல், சினம், வருத்தம், பயம் போன்றவைகளால் உண்டான சுரங்களிலும் பட்டினியை அறவே நீக்கல் வேண்டும்.

<u>கழிச்சல் செய்வித்தல் (பேதி)</u>

மலத்தைக் கழிப்பதால் (கழியச் செய்வதால்) குற்றங்கள் தத்தம் நிலையை எய்தும்.

வளி சுரத்தில் இயல்பாகவே மலம் (எரு) கட்டுப்படும். அதனை நீக்க சஞ்சீவி மாத்திரை, கோடா சூரி மாத்திரை, அஷ்டபைரவம், தாழம்பூ மாத்திரை, லவங்கர்தி மாத்திரை, அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு முதலிய வளியடக்கி மருந்துகளை உடல் வன்மைக்குத் தக்கவாறு அளவு படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

அழற்சுரத்தில் (பித்தசுரம்) தானாகவே சிறிது சிறிதாக வயிறு கழிதல் இயற்கையாதலால், கழிச்சலை உண்டாக்கும் மருந்துகளைத் தருவது நன்றன்று. செசுரத்தில் மலம் வெளிப்படாதிருப்பின் அதிமதுரம், பற்பாடகம், சீமை சாமந்தி, நிலவாகை ஆகியவை வகைக்கு ½ பலம் (7½ கிராம்) ½படி (1 லிட்டர்) நீரிலிட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி இறுத்து வடிகட்டிய குடிநீரைக் கொடுத்தால் ஒன்றல்லது இருமுறை கழியும்.

ஐய (கப) சுரத்தில் முற்றும் வெளிக்குப் போகாமல் இருப்பினும், தானாகவே சிறுகச் சிறுகக் கழிந்தும், சிலவேளை கட்டுப்பட்டதைப் போன்று கவலையை உண்டுபண்ணும். அந்த சமயங்களில் அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு போன்ற மருந்தை நோய்க்குத் தக்கவாறும்

நோயாளியின் வன்மை மென்மைக்குத் தக்கவாறும் அளவுபடுத்திக் கொடுத்து மலத்தை (எரு)க்கழித்தல் வேண்டும்.

சில வேளை வெளிக்குப் போகவைக்க மருந்தைக் கொடுக்க வேண்டி இருப்பினும் நோயாளியின் நிலை வாய் வழியே பேதி மருந்தைக் கொடுக்க முடியாததாக இருப்பின் பல்விறுகளில் தடவுவதாலும், மூக்கில் முகரச் செய்வதாலும் பேதியாகும் மருந்துமுறைகளைக் கையாளல் வேண்டும். பேதியாக்கும் மருந்து முறைகளில் சில கீழ்க்காணும் செய்யுட்களில் காண்க.

இந்துப் பயன்மனைநீ ரிர்க்கா மலகமிதைத்
தொந்தித் தளவிற் கூடவைத்துத் - தந்தத்தில்
தட்டா தருந்தச் சவுக்ய விரேசனமாம்
பட்டால் குவந் நீரடங்கும் பார்

(தேரையர் வெண்பா 554)

(பொருள்) இந்துப்பு, நெல்லிவிரிக்கு, பிரமி இலைச்சாறு இவைகளை மெத்தென்று அரைத்து (கடினப் பொருள்களை நீர்ப்பொருள்விட்டு அரைக்க வேண்டுமென்று கொள்க) அளவில் சுடவைத்து பல்லில் படாமல் அடிநாவில் தடவி விழுங்கச் செய்யின் மலம் கழியும். மிகுதியாகக் கழியுமானால் வெந்நீர் அருந்தச் செய்தால் பேதி நின்றுவிடும்.

(சிலர் அயன்மனை என்பதைச் செந்தாமரைமலர் என்பர். ஏற்புடைத்தேல் கொள்க)

பற்றுவி ரோசனத்தால் பந்தமுறு முந்தியினில்
குற்றம் பிராது குளிர்ந்தநீர் - உற்றமறை
ரோகணிவெண் சாரணைகோ ரோசனைசோ பிப்பருப்பு
பாகுசெய்துன் னிச்சுதையாற் பார்

(தேரையர் வெண்பா 556)

(பொருள்) கடுகு ரோகணி, வெஞ்சாரணை வேர், கோரோசனை, சுத்தித்த நேர்வாளப்பருப்பு ஆகியவற்றை அளவுடன் கொண்டு உள்ளப் புண்டின் சாற்றில்விட்டுக் காய்ச்சிப் பாகுபோலச் செய்தருந்த பேதியாகும். அடிவயிற்றில் மலக்கட்டால் வந்த குற்றம் தீரும். பேதி மிகுதியாக ஆனால் குளிர்ந்த நீர் சாப்பிட் பேதி நிற்கும்.

வெள்ளைத் திரிபுரையின் வேருந் திரிகடுகும்
உள்ளித் திரியோ டுறவரைத்துப் - புல்லைசெய்தே
ரஸ்டத் தயிலத்தி லட்டுன் விரேசனமாம்
முண்டானால் மாந்தமற்ற மோரீ

(தேரையர் வெண்பா 557)

(பொருள்) சத்திசாரணையின் வேரும், திரிகடுகும் (சுக்கு, மிளகு, திப்பிலி) உள்ளிப்பூண்டில் திரியுடன் சேர்த்தரைத்து வில்லையாகச் செய்து காய்ச்சிய ஆமணக்கெண்ணெயில் பக்குவம் செய்து அந்த எண்ணெயுடன் உட்கொள்ளப் பேதியாகும். பேதி அதிகமானால் காய்ச்சிய மோரைக் குடிக்க பேதி நின்றுவிடும்.

ஆக்ர்ரானத் தாலே யரச விரோசனமாம்
ஆக்குமல் வாச மதிமதுரம் - பாக்குக்குச்
சோபி யதைப்பொடித்துச் சுக்ல மௌநனையில்
தாபித்த வாக்ரானந் தான்

(தேரையர் வெண்பா 559

(பொருள்) மூக்கால் முகர்ந்து பார்ப்பதால் வருத்தமில்லாமல் பேதியாகும். அதிமதுர மனைக்கு மிக்க உல்லாசமாக இருக்கும். அதன் முறையாவது அதிமதுரம், களிப்பாக்கு நேர்வாளப்பருப்பு (சுத்தித்தது) ஆகியவற்றை அளவுப்படி எடுத்து நன்கித்-நன்கிய 'நன்கியத் தூ ளாக்கித் தேனில் குழைத்து மனைக்குப் பிடித்த நறுமலரில் தோய்த்து மூக்கில் முகரப் பேதியாகும்.

வாந்தி: வாதசுரத்திலும், பித்த சுரத்திலும் வாந்தியெடுக்க மருந்து கொடுப்பது நன்றன்று. ஐயசுரத்திலும் வெற்கையாக நுரையிரலிலும், சமைக்களத்திலும் கோழைகட்டிக் கொள்வது வெல்பாகையால் நோயின் வன்மைக்கும் நோயாளியின் வன்மைக்குத் தக்கபடியும் வாந்தி மருந்தைக் கையாளல் வேண்டும். கூடுமாயின், பெரும்பாலும், வாந்தி மருந்தும் பேதி மருந்தும் ஒரே மருந்தாக இருத்தல் நலம் அல்லது கழிச்சல் செய்யும் மருந்துகளுக்குத் துணையாகக் கொள்ளும் வகையில், வாந்தியாக்கக் கூடிய பச்சிலை வகைகளையேனும், கடைச்சரக்குகளையேனும் சேர்த்துக் கொள்ளலாம். சான்றாக, சஞ்சீவி மாத்திரையை இலைக்கள்ளிச்சாற

அல்லது உத்தாமணி இலைச்சாற்றைத் மருந்தாகக் கொடுத்தால் வாந்தியை உண்டாக்குவதுடன் பேதியும் ஆகும். வெண்காக்கட்டான் மாத்திரையும் கோரோசனைத் தூளையும் சேர்த்துக் கொடுத்தால் வாந்தியுடன் பேதியும் ஆகும்.

வியர்வை பிடித்தல்:

வேதுவெ னும்பெய ராகச் சீதலா வேதனை யாலணுகும்
பாதக மான சிரோபார வாதனை பாரிய வெப்பமுதல்
ஆதிய நோய்க ளெலாமண மாநல மாசுக மானமுறை
காதர மோது கபாலிகை யாமரி காணு மொரே புகையே

வியர்வை பிடித்தலால் ஐயத்தால் உடலில் பொருந்தும் கொடுமை வியர்வை-பிடி: யான தலைபாரம், மிகுந்த வெப்பமுள்ள காய்ச்சல், விடாச்சுரங்கள் ஆகியவை யாவும் நீங்கும். உடல் நலமடைய சுகமான முறை இதுவே வேது எனும் பெயரால் வழங்கும்.

மற்றும் வேது பிடிப்பதால் நச்சால் பிறந்த சுரங்கள் குளிர்சுரங்கள், கபதோடம் சம்பந்தப்பட்ட சுரங்கள், கபதோடத்தால் தலையிலும் உடலிலும் நீரேற்றங்கொண்டு, தலைவலி, தலைப்பாரம், தலைக்குத்தல் முதலியனவும், உடல் கனமாய் இருப்பதுபோன்ற உணர்வு உடலில் குத்தல் குடைச்சல், உற்சாகமின்மை முதலியவைகளும் தீரும். உடல் கனம், தலைக்கனம் குறைந்து சுகம் உண்டாகும்.

செய்முறை:

ஒருவிதச் சிந்து வாரத் தடவட கத்தைக் காய்ச்சி
எரியிலிட் டிகையை யவ்வா றியற்றிமுன் னதைக்க விப்போ
டொருமுறை யிதைய திற்பெய் தடலெலாங் கவித்துத் தூசா
விருகடி கைபோ தாற்றி யிருக்கநீ ரியாவும் போமே.

குறுகத்தரித்த நொச்சி இலையைப் போதிய அளவு எடுத்து வாயகன்ற பாத்திரத்திட்டு அதற்கு ஏற்ற அளவு நீர் சேர்த்து அடுப்பில் ஏற்றிக் கொதிக்க வைத்து மேலே நன்றாக மூடி அக்கியாம் பாத்திரத்தை அவ வேது கொடுக்க வேண்டிய இடத்தில் வைக்கவும். பிணியாளனை பின்னல் போட்ட கயிற்றுக் கட்டிலில் அல்லது நாற்காலியில் உட்கார வைத்து மேற்படி

பாத்திரத்தை அதன் அடியில் வைக்கவும். பின் பிணியாளன் மூச்சுக் காற்று பெறும் வண்ணம் மூக்கை மட்டும் விட்டு உடலின் மற்ற பாகங்களை கனத்த துணியால் நன்கு போர்த்தி வைக்கவும் பிறகு மேலே சொன்ன அயாழ பாத்திரத்தின் மூடியைத் திறந்தால் சூடான நீராவி மேலெழும்பி பிணியாளன் உடலில் தாக்கும். மேலும் மேலும் நீராவி புறப்படச் செய்ய பழுக்கக் காய்ந்த செங்கல்லை ஒவ்வொன்றாக அக்அயாழப் பாத்திரத்தில் இடவும். இவ்வாறு ஏறிய அளவு இரண்டு நாழிகை (48 நிமிடம்) நேரம் ஒரு பிணியாளனுக்கு வேது கொடுக்கலாம்.

பிணியாளனுடைய உடல்வன்மை, பிணியின் வன்மை, காலம் முதலியவைகளை நன்கு ஆராய்ந்து வேதுகொடுத்தல் வேண்டும். இராக் காலத்திலும் விடாமழை பொழிந்து இருட்டிக்கொண்டுள்ளபோதும் வேது கொடுத்தல் கூடாது. வேது கொடுத்தால் பிணியாளன் உடலில் வியர்வை மிகுதியாக வெளிப்படும். அதை உலர்ந்த சுத்தமான துணியால் துடைத்து உடலைப் புலரச் செய்ய வேண்டும். வேது பிடித்தாலுடன் மிகுந்த குளிர்ந்த பானங்களையோ உண்டியையோ கொடுத்தல் கூடாது. தொடங்கும்போதே இரண்டு நாழிகையளவு வேது கொடுத்திட முதல்நாள் 10 நிமிடம் அடுத்த நாள் 15 நிமிடம் இவ்வாறு படிப்படியாக வேது கொடுக்கும் நேரத்தை உயர்த்தியும் பின் முறையாகக் குறைத்தும் செய்தல் நீண்டநாள் பிடித்துள்ள நலிக்குப் பயனளிக்கும். இதனை,

இந்தவாறு சொன்னவேது வின்குறிப்ப றிந்துசெய்
விந்தையான குறிகுணங்கள் வேறறிந்து புரிகுவார்
தொந்தமான வாகடத்து வக்குணர்ந்த வாயுள்வே
தந்தனுக்கு வாயிலான சற்குணத்த ராகவே

(தேரையர் சேகரப்பா)

வேதுகொடுக்கும் மருத்துவர் நோயாளியின் குறிப்பறிந்தும், நோயின் குறிகுணங்கள் அறிந்தும் அவிதரும் பச்சிலைகள் பட்டைகள் வேர்கள் முதலிய சரக்குகளை ஏற்றவண்ணம் மாற்றி உபயோகிக்க வேண்டும் என்பதை குறிப்பாக உணர்த்தியுள்ளமை காண்க. மற்றும் மேலே கூறியதுபோல வேது கொடுக்கும் காலஅளவை தேவைக்கேற்ப கூட்டியும் குறைத்தும்

..71

முறையாகச் செய்வர் மருத்துவம் நல்லுணர்ந்தோர்.

<u>புகையூட்டல் அல்லது புகை பிடித்தல்</u>

வெறுந்துணியை யாகினுந்தீ முகந்தலி விடாவெழுந்த
மிகுந்தபுகை கோடிரண்டு - புழை நாசி
யுறுந்தனிய நீர்கழலும் கபந்தொலையு மேலரந்தை
யுறும்பிணிக ளோடுநெஞ்சு - புகைமாற
மறும்பிணிகள் யாவுமங்க மெழுந்தசுடர் போலிலங்கு
மலங்கிருத மாகுமந்தி - மதிபோலே
பெருந்திரள மாகுமஞ்சு மிகுந்தசுக மேவுமின்பு
பெறுபாரும் மாகுமென்று நிசமாமே.

வெறுந்துணியையாகிலும் கரித்துணியையாகிலும் சுருட்டிக் கொளுத்தி அதனின்று எழும் புகையை மூக்குத் துளைக்குள் செல்லும்படிச் செய்ய மூக்கு, கண்களினின்று நீர்வடியும். மிக்கத் துன்பத்தைத் தரவல்ல (அரந்தை)ப் பிணிகளாகிய மார்வலி, மாரடைப்பு, மூர்ச்சை, மயக்கம், தலைப்பளு நீர்க்கோவை முதலிய நோய்கள் சுகமடையும். உடல் உதயசூரியன் போலவும், மாலை நிலவு போலவும் மிக்க வனப்புடன் (அலங்கிருதமாக) இருக்கும். மிக்க சுகமும் அன்பு இன்பமும் பெருகும்.

பெரும்பாலும் ஐயக்குற்றத்தினாலும் முப்பிணித் தொடர்பினாலும் வரும் சன்னி நோயாளர்களுக்குக் கண்ணிலும் மூக்கிலும் மருந்திட்டுத் தன்நிலைதிரிந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்தல் வேண்டும்.

<u>கண்மருந்துகள் (கலிக்கவகை)</u>

முலைப்பாலில் ஒரு இலவங்கத்தை நசுக்கி ஒரு சுத்தமான வெள்ளைத் துணித் துண்டில் கட்டிப்போட்டுச் சிறிது ஊறவைத்து (5 முதல் 10 நிமிடங்கள்) எடுத்துக் கண்ணில் பிழிதல் சிறந்த கைமுறையாகும். இதனால் முக்குற்றங்களில் எழும் சேட்டைகள் நீங்கும்.

கலிக்க வகைவா கடர்நோய்த் தளத்தைக்
கெலிக்க வகைகாட்டுங் சேட்டைச் - சலிக்க
நொறுக்குஞ் சலப்பிணியை நங்குங் கபத்தை
அறுக்குஞ் சலக்கரணை யாம்.

(தேரையர் வெண்பா 575)

..72

(பொருள்) கலிக்கவகைகள் யாவும் பொதுவாகப் பார்த்தால் நோயாகிய பகைவர் படையை வெற்றிகொள்ள வகை செய்தாலு படைக்கருவியாகவும், நோய்க்கேட்டைச் சலிப்புற்று ஒடுக்குமாறு செய்யும் ஆயுதமாகவும் மருத்துவர் கையாள்வர். குக ஆகவே கலிக்கங்கள் நீர்ப்பிணிகளை வற்றி ஒடுங்க செய்வனவாகவும், கபப்பிணிகளை அறுத்துத் தீர்ப்பனவுமாக இருக்கும். 'அஞ்சனத்தால்ஜயம் தாழும்' என வழக்கிருத்தலால் கலிக்கங்கள் சலப்பிணி, கபப்பிணிகளை தீர்க்குமென்றறியலாம்.

திரிபுரையின் வேரும் திரிகடுகுங் கூட்டி
வரிசையான பாலின்மதி தித்தப் - பிரசத்தில்
அப்படியே செய்துலர்த்தி யாற்றிப் பிருந்தரசன்
கப்பூமிகு நல்லகலிக் கம்

(தேரையர் வெண்பா - 576)

(பொருள்) சத்திச் சாரணைவேரும், திரிகடுகும் கூட்டி ஆவின் பாலால் முறைப்படி அரைத்துப் பின் தேன் விட்டு முன்போலவே அரைத்த மாத்திரை செய்து உலர்த்தி துளசி இலைச்சாற்றில் இழைத்துக் கண்களில் இடவும் இது மிக நல்ல கலிக்கமாகும்.

இலிங்க மரிதார மெங்கசசம் மூன்றும்
புலிங்க முடியார்மேற் போட்டுக் - கலந்துவிடு
சக்கனிநீ ராலாட்டிச் சற்றே நிழலுலர்த்தித்
பக்குவமா கும்கலிக்கம் பார்

(தேரையர் வெண்பா - 577)

(பொருள்) இலிங்கம், தாளகம், பீதரோகணி இவைகளை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு முறைப்படி அரைத்து மாத்திரையாக்கி நிழலுலர்த்தாக உலர்த்தி தக்கபடி இழைத்து தண்ணீர் கண்ணிலிடவும்.

நிம்பவித் தாக்குப்பு நெய்தற்பூ நெத்தலப்பூ
நிம்ப இலைச்சாற்றை விட்டரைத்துச் - சமபிரச்
சாறுமிட்டரைத்து வட்டிச் சற்றே வெயிலுறநோய்
காறுமிது பூதசி பூதகலிக் கம்

(தேரையர் வெண்பா - 578)

(பொருள்) வேம்பின் விதை, சோற்றுப்பு, நெய்தல் மலர், தாமரை மலர் (இது நெய்தல் நிலத்தின் கருப்பொருளாகையால் நெய்தல் அ பூ எனப்பண்டறி சுட்டால் குறிப்பிட்ட நயம் குறிப்பிடத்தக்கதாம்) ஆகியவைகளைக் கோவையிலைச்சாற்றால் முறைப்படி அரைத்தப் பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு மீண்டுமரைத்த மாத்திரையாகச் செய்த நிழலில் உலர்த்தி உபயோகிக்க நோய்கள் தனியும். இது பூதகலிக்கம் எனப்படும்.

ஆடகியி லைச்சாற்றி லையவிவா ழைக்கனிசுக்
கோடு மிளகு முறவரைத்தப் பாடலத்தில்
போதி லுலர்த்திப் பொருளாகக் கொள்பிணியைக்
காதமா நந்தகலிக் கம்

(தேரையர் வெண்பா 579)

(பொருள்) வேம்பின்-விதை;-சோற்றுப்பு;-நெய்தல்-மலர்;-தாமரை-
மலர்_(இது

(பொருள்) தவரை இலைச்சாற்றில் கடுகு, வாழைக்கனி, சுக்கு, மிளகு நான்கையும் அளவுடன் கூட்டி அரைத்துப் பாதிரிப் பூவில் வைத்து உலர்த்தி கலிக்கமாக தக்க அநுபானத்தில் இழைத்துக் கண்ணிலிடவும். இது ஆனந்த கலிக்கம் எனப்படும். இது பற்பல பிணிகளை தீர்க்கும்.

பச்சோந்தி வாலிற் பருகிரத்த முங்கனையும்
கச்சோத மெய்யுங் கலந்தரைத்த - மெச்ச
நிழலுலர்த்திக் கொள்ளதற்கு நீங்காத நோயுங்
கழல்பட்சி ராசகலிக் கம்

(தேரையர் வெண்பா - 580)

(பொருள்) இவ்வண்ணமான (மேலே கூறப்பட்ட முறைப்படியான) கலிக்கவகைகள் அமையாதவிடத்து -துவரை வேரை நீரில் இழைத்தும், மிளகை இளநீரில் உரைத்தும், சோற்றுப்பை வெற்றிலைச் சாற்றில் கரைத்தும், அரிசியை (நய்யமாவாக்கி) தாய்ப்பாலில் குழைத்தும், கொள்மாவை நாய்த்துளசிச் சாற்றில் குழைத்தும் கண்களுக்குக் கலிக்கமாக இடலாம். இவை உண்மையான கைகண்ட கலிக்க மருந்துகளாம்.

சொன்ன கலிக்கமெலாந் தட்டநோ யின்பயனை
இன்ன தெனவறிந்திட் டேற்றினால் - மன்னரெல்லாம்
மன்னரென்று கொண்டாடி வாகடரைப் பூசிப்பார்
சொன்னமனை யில்வந்தெம் தம்

(தேரையர் வெண்பா. 582)

(பொருள்) மேலே விவரித்த கலிக்கவகைகளை எல்லாம் நோயின் தன்மையறிந்து இந்நோய்க்கு இக்கலிக்கம் பொருந்தவதாமென்று அறிந்துப் பிரயோகம் செய்தால் (நோய் உடனே தணியும் ஆதலால்) மன்னர்களெல்லாம் தமக்கு மேலான மன்னராக மருத்துவரை மதிப்பர். அதன்பயனாக மருத்துவர்கள் மன்னரின் செல்வத்தைப் பெறுவர் (மிக்க செல்வந்தராகவும் புகழுடையவர்களாகவும் மருத்துவர்கள் சிறப்புறுவர் என்பது கருத்து)

மூக்கு மருந்துகள் (நசியம்)

1. தும்பையிலைச் சாற்றை ஒன்றிரண்டு துளிகள் மூக்கில் பாய்ச்சினால் சந்நிதோடம் தணியும்.

2. முலைப்பாலில் இந்துப்புத்தூளைக் கரைத்து ஒன்றிரண்டு சொட்டுகள் மூக்கில் பாய்ச்சினால் அடுத்தடுத்து வரும் விக்கல் குணமாகும்.

3. எண்ணெயை ஒன்றிரண்டு சொட்டுகள் மூக்கில் பாய்ச்சினால் மூக்கிலிருந்து இரத்தம் கசிதல் நிற்கும்

மூக்குத்திரி:

வெடியொ டரிசன மிளகிதை வெருவு பொடிசெய்து திரியிலே
படியு முபதைசெய் தனலொடு படவு மதிலெழு புகையினை
நெடிய வுடலிரு கவர்கலை நிமிடமுறலரி ததனையோர்
கடிகை யளவுகொ ளுதிரெனிற் கழல முடியுறு கபமெலாம்

(பொருள்) வெடியுப்பு, மஞ்சள், மிளகு இவைகளை நன்றிய பொடியாக்கி தணியாட்டித் திரியாக உருட்டிக் கொளுத்தி எழும் புகை மூக்கில் புகச் செய்தால் (உறிஞ்சினால்) அல்லது மூச்சுக் காற்றோடு உள்ளுக்கு இழுத்தால்) தலையில் ஏறிய கபதோடங்கள் கண்கள், மூக்குத் துவாரங்கள் வழியாக நீராகப் பாய்ந்து நீங்கும்.

இப்புகையை உடலை நன்கு துணியால் போர்த்திக்கொண்டு உடலில் நன்கு பாயும்படிச் செய்துகொண்டால் கபப்பிணிகள் விலகும். இது வேது பிடிப்பதைவிடக் காரமான பிரயோகம். ஆகவே இவ்வகை புகையூட்டலை மிகச்சிறிய கால அளவே உடற்குத் தாங்கும் என்றுணர்க.

திப்பிலிமரிச மோமதாக மிள
கைப்பொடியுஞ்செய் திரியி லேறவிடு
செப்பிய நிம்பமருவு நெயமுற - சுடரேவை
கப்புமுடம் போடரிய தீவிசையை
உட்கொண்டிருந்தா லபயநாழிகைகு
கத்திருந்தே யுபயநாசிகளில் - மழைமாரி
யொப்ப விரண்டு நயனமா மலர்ம
துத்தளி யூச்சி வருதலாகுமென
வுத்தவுடம் பு பலறலெலா மிழியு - மதனாலே
வெப்பமறும்பா ரமறு மேறுதலை
யிற்பொலியுந்தீ வினையு மாறியிது
மெய்ப்பபடு மீண்டாமரிய வேதவது - தெரிவாயே

(பொருள்) திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவை நன்னியதாம்பி பொடித்து சீலையில் தூவி திரையைப் போல் சுருட்டி வேப்பெண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி அப்புகையை மூக்குத் துளைக்குள் செல்லும்படிச் செய்தலால், மூக்கினின்று மழைத்துளிபோல் நீர் சொட்டி உடலில் தங்கிய நீர் வடிந்து, சுரம் தணியும்; தலைபாரம் தீரும். இப்புகையை உடல் முழுமையும் படும்படியாகச் செய்துகொண்டாலும் நன்மையாம்.

ஐயவி சரண மசமதா கஞ்சுக்கு
நையவி தெல்லாம் நறுக்கியே - ஐய
நிறங்கொள் கலையூட்டி நீள்புகைமூக் கிற்கொள்
உறங்குவா தம்போகும் உள்

(தேரையர் வெண்பா. 623)

(பொருள்) கடுகு, பெருங்காயம், ஓமம், சுக்கு இந்நான்கையும் நையத்தூளி செய்து தூய வெள்ளைத் துணியில் பரப்பித் திரியாகச் சுருட்டித் தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்க உறங்குவாதம் தீரும்.

மதுவேரும் வெள்ளுள்ளி மஞ்சள் கறிகொள்
இவைந்து நேரே யிடித்துப் - பதிமு
விரியாநற் சீலை விளக்கேற்றில் வீரந்
திரியாது நாசித் திரி

(தேரையர் வெண்பா - 626)

(பொருள்) இலுப்பைவேர், வெள்ளுள்ளி, மஞ்சள், மிளகு, கொள் இவ்வைந்தையும் தூள் செய்து சமனாகக் கலந்து, துணியில் பரப்பித் திரியாக்கிக் கொளுத்தியெழும் புகையைப் பிடிக்கவும். இதுவே நோய்களை நீக்கும் வீரமுடைய நாசித்திரியாகும்.

சன்னியற நோயுஞ் சனியு மறப்பாரஞ்
செல்லியற வின்பந்தி திரமாகப் - புன்னைவித்தின்
நெய்வெள் ளுள்ளிமிளகு நிம்ப மரிசனத்தாற்
செய்வதே நாசித் திரி

(தேரையர் வெண்பா - 627)

(பொருள்) புன்னைநெய்யில், வெள்ளுள்ளி, மிளகு, வேம்பின் வித்து, மஞ்சள் ஆகியவைகளைச் சேர்த்தரைத்துப் பதத்தில் வழித்துச் சீலையில் தடவித் திரியாக்கிக் கொளுத்திப் புகை பிடிக்க சன்னி, சனி, தலைப்பாரப் பாரம் ஆகியவை தீரும். உடல் நல்ல நிலையடையும். இன்பம் விளையும்.

மாரடைத்து மூச்சு வராத கடுநோய்க்குக்
காரடத்தி னாலே கழலுமோ - சீரகத்தை
அங்கோல வித்தை யரிசனத்தைக் கொண்டுகண்ட
வன்னி புகைகொடா மல்.

(பொருள்) சீரகம், அழிஞ்சில் விதை, மஞ்சள் இம்மூன்றையும் தன்னிய தூளாக்கிச் சீலையில் பரப்பித் திரியாக்கிக் கொளுத்திப் புகை பிடிக்க மாரடைத்து மூச்சுவிட முடியாமல் வருத்துகின்ற கடுநோய் தீரும். இங்ஙனம் சிகிச்சை செய்யாமல் காருடவித்தையினால் இந்நோயைத் தீர்த்தல் கூடுமோ (தீர்க்க இயலாதென்பதாம்)

குறிப்பு: இப்பிணிக்கு உதவும் மூக்கு மருந்துகள், கண் மருந்துகள் முதலிய முறைகளைச் சித்தவைத்தியத் திரட்டு என்னும் நூலில் கண்டுகொள்க.

பற்று:

வேலிப் பருத்திரசம் வெள்ளுப்பு முக்கரிசி
போலப் புடல்வெடியும் பூட்டியே - மேலக்குப்
பற்றெரியிற் காய்ந்தாறப் பன்குழம்பை நன்பலநோய்
பற்றறுப் போமதுவே பற்று

(தேரையர் வெண்பா - 620)

பொருள்: உத்தாமணிச் சாற்றுடன் வெள்ளுள்ளி, புழுங்கலரிசி, சோற்றுப்பு, வெடியுப்பு ஆகியவற்றைச் சேர்த்தரைத்து தீயில் காய்ச்சி தக்க வெப்பத்துடன் உள்ளபோது நோய் கண்டுள்ள இடங்களின்மேல் பற்றிட நோய் பற்றற நீங்கும்.

கைகா லசந்து* கடுத்து வெயர்வரும்பு
மெய்காலைச் சுக்காலை வேறாகும் - வெய்யவிடச்
சன்னியென்ற றிந்தவெடி சம்பு/தந்தி வேர்கொடித்தப்
புள்ளைநெய்யிற் பற்றிடமுன் போம்

(தேரையர் வெண்பா - 621)

(*பாடபேதம்: கைகாலம் சந்தம்)

(பொருள்) கைகால்கள் அயர்ந்து கடுத்து வலியுண்டாகி உடம்பு வியர்த்து, தேகமும் வேளைக்குவேளை வேறுபட்ட குறிகளை உடையதாகி கண்டால் அதுவே கொடியவிட சன்னியென்று அறிந்து வெடியுப்புடன் நாவல், நேர்வாளம் ஆகியவைகளில் அவர்ப்பட்டைத் தா ளை ஒத்த அளவில் சேர்த்து புள்ளை நெய்விட்டரைத்துப் பற்றிட மேற்கண்ட குணங்கள் மாறிச் சன்னிநோயும் தீருமெனபதாம்.

இல்லவித்தை மாறன்றா றெண்ணெ யுடன்கலந்தால்
நல்லவித்தை நோய்க்கு நமனதுவே - பல்லைக்கும்
மாரடைப்புக் கும்பிடிப்பு வாயுவுக்கும் பற்றிடப்போம்
நீரிலந்தீ மாரகியில் நீ

தேரையர் வெண்பா - 6222

(பொருள்) தேற்றாங்கொட்டையைப் பொடித்து வேப்பெண்ணெயில் குழைத்துப் பற்றிடச் சுரநோயில் உண்டான மாரடைப்பு, பிடிப்பு, வளிநோய் வல்லை முதலிய நோய்கள் விலகும்.

படுக்கை: நோயுற்றவன் பலநாட்கள் படுக்கையில் கிடக்க வேண்டிய காரணத்தால், அப்படுக்கை அவனுடைய இளைத்த உடலில் உறுத்திப் புண்படுத்தாத படி அமைதல் அவசியமாகிறது. சுரநோயாளியின் படுக்கையையு மிகவும்

மெத்தென்றுள்ளதா என முக்கியமாகக் கவனித்தல் வேண்டும். இப்பிணியாளனுடைய படுக்கை இலவம் பஞ்சாலாகிய மெத்தையாக இருத்தல் நலம்.

இக்கருத்தைக் கொண்டே தேரையர் பதார்த்த குணசிந்தாமணியில் 'இலவம் பஞ் சுப்படுக்கைக் கேகு மலம்', என்றும் 'இலவம் பஞ்சிற்றுயில்' என்ற ஔவையார் கூற்றும் இதை வலியுறுத்தும். இலவம் பஞ்சணை எளியோர்க்கு இயலாது. ஆகவே, சிற்றீச்சம்பாய் நன்மை தரும் என்க.

'சிற்றீச்சம் பாயில் தினமும் படுப்பவர்க்
குற்றிடுமே காந்தல் உடம்புலரும் - சுற்றியதோர்
வாயுவறும் பித்தமறும் மற்றுங் கபந்தீரும்
தாயகமா மிக்குணத்தைச் சாற்று

(ப.கு. சிந்தாமணி)

(பொருள்) சிற்றீச்சன் ஓலைப்பாயில் தினம் படுப்பவர்க்கு உடல் வெப்பங்கொள்ளும் உடல் இளைக்கும். ஆனால் வாதபித்த கபங்களின் மிகைகள் தீரும் (ஆகவே சுரப்பிணியாளர் சுரம் தணியும்வரை இப்பாயில் படுக்கலாம்)

சுரத்தின் வன்மையாகிய வெப்பு தணிந்த பின்னர் வியர்த்தலும் ஆயாசம், இளைப்பு, முதலியன தொடர்தல் இந்நோயின் இயல்பான பின்விளைவாகும். இவைகளைத் தணித்தற் பொருட்டு பலவகை விசிறி கொண்டு விசிறி, தூய்மையான காற்று நோயினன் உடலில் படுமாறு செய்தல் மற்றும் உள்ளுக்குச் சுவாசிக்கச் செய்தல் வேண்டும். அழல் (பித்தம்) நோயினனுக்கு மயில் விசிறியும், வளி, அழல், ஐய ஆகிய முக்குற்றங்களின் பிணியினர்க்கும் பனையோலை விசிறியும், அழல் எரிச்சல் (பித்த எரிச்சல்) முதலிய நலியினர்க்கு வெட்டிவேர் விசிறியும் நன்று என்பது மருத்துவர் அநுபவம்.

<u>மயில் விசிறியின் குணம்</u>

சந்நிவிடம் குன்மந் தலைசுழலல் பித்தவிக்கல்
தன்னகவே தம்வாத தோடமும்போம் - பன்னவதில்
உட்டிணமாம் புத்தி யொளிரும் பசந்தோகை
யிட்ட மயில் விசிறிக் கே

(ப.கு. சிந்தாமணி)

(பொருள்) மயில் தோகையால் கட்டிய விசிறியைக் கொண்டு காற்று எழும்படி வீசினால், சந்தி, குன்மம், தலைசுற்றல், விக்கல், வியர்வை அழல்வலிக் (பித்தவாத தோடம்) குற்றம், வெப்பு ஆகியவைகள் குணமடையும். புத்தி ஒளிரும்.

பனையோலை விசிறியின் குணம்

பனைவிசிறி காற்றால் பெரியவாத தோடமும், கபக்குற்றத்தால் எழுந்த நோயும், பித்தப் பிணிகளும், நாவின் சுவை ஒன்மையென்ற நோயும் தீரும்.

வெட்டிவேர் விசிறியின் குணம்:

வாசவெட்டி வேர்விசிறி வன்பித்த கோபமொடு
வீசு மெரிச்சலையும் வீந்துங்கான் - பேசுங்கால்
தாக மகற்றுஞ் சகல மனோக்கியமாம்
மோகமருள் மாதே மொழி

(ப.கு. சிந்தாமணி)

(பொருள்) வெட்டிவேர் விசிறியால் பித்ததொடப் பெருக்கால் காலும் நலிகள், எரிச்சல், நீர்வேட்கை ஆகியவைகளை அகற்றும்.

வெஞ்சாமரத்தின் குணம்

வெஞ்சா மரத்தால் வியர்வையோ டாயாசம்
திண்சோபை மூர்ச்சை திருட்டுமறந் - தஞ்சாரத்
தாகமறும் வெப்பந் தணியுந் திருவமரும்
போகமுற மாதே புகல்

(ப.கு. சிந்தாமணி)

(பொருள்) வெஞ்சாமரை வீசியெழும் காற்றால் மிகு வியர்வையும், களைப்பும் விலகும். உடலில் நீரேற்றம், மூர்ச்சை, நீர்வேட்கை, எரிவு (குளிர்ச்சி சார்வதால்) வெப்பம் ஆகியவை தணியும். செல்வியின் (இலக்குமி) அருள் நிலைக்கும்.

மேலே கூறிய பாடல்களில் யுயன்றவற்றைச் சுருக்கிக் கூறின், வளி சுரத்தில் மயில் விசிறி பனை விசிறி ஆகியவைகளும், அழல் (பித்த)சுரத்தில்

வெட்டிவேர் விசிறி ம் பனைவிசிறி ஆகியவைகளும், ஐய(கப)சுரத்தில் பனைவிசிறியும், அழல், வளியழல், அழல்வளி, அழலையம், ஐயவளி ஆகிய சுரங்களில் பனைவிசிறியும் முக்குற்றச்சுரங்களாகிய சந்நியில் மயில் விசிறியும் நலம் பயக்கும் என்றும், நோய் நீங்கியபின் உடல் தேற்றியாக சாமரை பயன் தருமென்றும் அறியக்கூடுகின்றது.

<u>போர்வை</u>

குளிர் சுரத்திலும், கபம் கூடிய சுரங்களிலும் போர்வைகள் இன்றியமையாதனவாம். மேலும், சுரத்தால் உடல் இளைத்த காலத்தில் குளிர் வாடையால் உடனே நீர் கோத்துக் கொள்ளும். ஆகவே குளிர்வாடை உடலைத் தாக்குவதைத் தடுக்கவும் போர்வைகள் தேவையாம். நோய் நீங்கும் மட்டும் உடலைக் காக்கவும், நோய் அணுகாமல் உடலைக் காக்கவும் போர்வைகள் முக்கியமான தேவை இனமாம். கம்பளப் போர்வைகள் சிறந்தனவாம்.

<u>மருந்து வகைகள்</u>

<u>வளிசுரக்குடிநீர்</u>:

சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறு காஞ்சொறி வேர், சீந்தில்தண்டு சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம் வகைக்கு ஒருபலமாகக் கொண்டு முறைப்படி குடிநீரிட்டுக் காலை மாலைகளில் கொடுக்கவும்.

விளையுஞ் சுரந்தோன் றினநாளில் வேர்க்கொம் புடன்பே ராமுட்டி
களையுந் தன்னீர் தனிற்போட்டுச் சுதனைக் காய்ச்சிக் குடித்திடுமே

வளிச்சுரங்கண்ட நாள்தொட்டு சுக்கும் பேராமுட்டியும் ஒரே நிறையாக எடுத்து முறைப்படி குடிநீரிட்டு ஏழுநாட்கள் [illegible] உட்கொள்ளவும்.

குடிநீ ரேழு நாளளவுங் குறுநெல் லரிசி யுடன்சுக்கு
படிதோல் சீவி நறுக்கிநலம் படர்வே ருடன்சே லையிற்கட்டி
வடிநீ ருலையிட் டதைக்காய்ச்சி வற்றிக் குடித்தேழ் நாட்சென்றால்
நெடிய தகலு லகந்திரித்த நீர்தான் நாடி தணிவிட்டே

இட்டே நாளு மிரண்டாநா ளிந்த வுலையிற் நோறாக்கி
தொட்டே மிளகு நீருடனே சுகமாமிக் கொடுத்தப் பனிரெண்டு
மிட்டே சென்றால் முதற்குடிநீர் வகைகே ளிரண்டு படிநீந்தனள்
விட்டே கொள்றைத் தோல்வெட்டி வேரிந் தப்பு வேர்க்கொம்பே

வேர்க்கே ளிஞ்ச மிலாமிச்சு மிக்க சிறகாச் சொறிசிந்தில்
பார்சேர் பங்கம் பாளைபுடோல் பகருஞ் சேவகள்பூண்டு
சீர்சேர் கடுகு ரோகணியும் திரிபலை யோரொல் றோர்கழச்சு
நீர்தா னிருநா ழியிலிட்டே நெடிதாமிக் காய்ச்சி யுழக்காக்கே.

அக்கம் பெருகுந் திப்பிலித்தா ள் அடைவே போட்டுக் குடித்தக்கால்
தாக்கும் வாதச் சுரந்தனியும் சந்திற் குத்த நெஞ்சளைவு
போக்க ரிய குளிர்முதலாம் பொல்லா வாதை யெல்லாந்தான்
எக்க முடனே விட்டெகும் முனிவ ரியம்பினரே

(-சுரவாகடம்)

(<u>பொருள்</u>) சிறுமணிநெற்பொரி ஒருபடியுடன் மேல்தோல் சிவிை சுக்குகளுை நீக்கப்பட்ட அரகள் புல்வேர், இவைகளைச் சலையில் முடிந்த வடிநீரிலிட்டு முடிக்கஞ்சியாகக் காய்ச்சி சுரந்தொடங்கிய நாள்முதல் ஏழுநாளி கொடுத்தச வரவும். எட்டாம் நாள் முதற்கொண்டு நோறம், மிளகு சாறம் கொடுக்கவும்.

முதலில் கூறிய குடிநீர், இரண்டுபடியுடன், கொள்றை வேர்ப்பட்டை, வெட்டிவேர், இந்தப்பு, சுக்கு, விலாமிச்சு, வேர் சிற காஞ்சொறி, சிந்தில்தன்டு, அருதீண்டாப்பாளை, பேம்புடல், சேவகள்பூண்டு, கடுகு ரோகணி, திரிபாலை (கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்) வகைக்கு ஒரு கழஞ்சுகொண்டு இடித்தப் போட்டுக் கலக்கிக் காய்ச்சி அது ரெண்டாழாக்காக சுண்டியவுடன் இறத்த துணியில் வடிகட்டி இரு பாகமாக்கி அதில் திப்பிலிப் பொடி சிறிதளவு கூட்டி காலையிலும் மாலையிலும் குடிக்க, வாதசுரமும், அதனுடன் அிளைக்கும் குறிகளாகிய கீல்களில் குத்தல், நெஞ்சளைவு, குளிர் முதலியவைவும் போம்.

மருவு வேர்க்கொம் பிருகழஞ்சு வளர்சா ரணைவே ரிருகழஞ்சு
அரிதாம் பேரா முட்டியின்வேர் ஒன்றாங் கழஞ்சு வெள்ளுள்ளி
பெருக விரண்டு கழஞ்சுகொண்டு பெய்யும் புனலாங் அநாழி
கருகக் காய்ச்சி யுழக்காகக் காய்ந்தே திப்பிலி கலந்துகொள்ளே

(பொருள்) சுக்கு, சாரணைவேர், வெள்ளுள்ளி வகைக்கு இருகழஞ்சு பேராமுட்டி வேர் ஒரு கழஞ்சு இவைகளை ஒன்றிரண்டாக இடித்து இரண்டு படி நீரிலிட்டு உழக்காக (எட்டிலொன்றாக) வற்றக் காய்ச்சி இறுத்துத் துணியில் வடிகட்டி வறுத்திடித்த திப்பிலிச் சூரணம் சிறிது கூட்டிக் காலைமாலை சரி அளவாகக் குடிக்கவும்.

கலந்தே தேவ தாரமுத்தக் காசு கண்டங் கத்தரிவேர்
உலர்ந்த சுக்கு மிளகுடனே கோட்டஞ் சிறுதேக்கு
மலர்ந்த படகந் திப்பிலிசேர் வாய்த்த கடுக்கா யோரொன்று
நலந்தேர் கழஞ்சு நாலிட்டு நாழிப்பு புனலிற் புகட்டிரே

புகட்டி யெட்டொன் றாகக்காய்ச்சிப் புதிய தேன்திப் பிலிகூட்டி
அகட்டி லிடைசே ரக்குடித்தா லெடுத்த வாத சுரங்களெலாம்
திகட்டக் கொன்றச் சேகரா சேக ரன்றன் செழுமையினில்
பகட்டிற் பொருத கெட்டோடும் பற்றா ரெனவே பறந்திடுமே

(செகராச சேகரம்)

(பொருள்) தேவதாருக்கட்டை, கோரைக்கிழங்கு, கண்டங்கத்தரி வேர், சுக்கு, மிளகு, கோட்டம், கண்டுபாரங்கி, பற்பாடகம், திப்பிலி கடுக்காய்த்தோல் வகைக்கு நாலு கழஞ்சு வீதம் எடுத்து ஒன்றிரண்டாய் நசுக்கி இரண்டு படி நீரிலிட்டு உழக்காகக் காய்ச்சி இறக்கி அதில் சிறிது தேனும் திப்பிலிப் பொடியும் கலந்து காலைமாலை சாப்பிட வாதசுரக் கூட்டங்களெல்லாம் தீரும்.

கண்டங் கத்தரி சிந்திற்சுக்குக் காசு கோட்டங் காஞ்சோன்றி
தண்டச் சேரும் நிலவேம்பு திப்பிலி படகஞ் சிறுதேக்கு
கொண்டொன் றொன்று முக்கழஞ்சு கூட்டி நாழி இரண்டுழக்கா
உண்டங் கருக்கில் வாதமுட னூற வாய்நீர்ச் சுரம் போமே

(பொருள்) கண்டங் கத்தரிவேர், சிந்திற்தண்டு, சுக்கு, முத்தக்காசு கோட்டம், சிறு காஞ்சோறிவேர், நிலவேம்பு, திப்பிலி, பற்பாடகம்

..84

சிறதேக்கு ஏ இவை வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து இரண்டுபடி நீரில் போட்டு முறைப்படிக் காய்ச்சி இன் இரண்டாமுாக்காக வற்றக் காய்ச்சி இறுத்து வடிகட்டி உட்கொள்ள வாதசுரமும் வாய்நீர் ஊறல் சுரமும் தீரும்.

. . . . .

. . . .

சீரா யிதற்குக் குடிநீர்கேள் சிற்றா முட்டி நிலவேம்பு
பாராம் கண்டங் காரியுடோல் படகம் வேஷப் பருத்தியுமே
பருத்த வேர்க்கொம் பிருவேலி பதுமத் தண்டு பெருங்குரும்பை
திருத்த மான மிளகுள்ளி திப்பிலி கடுக்காய்ச் சிறதேக்கும்
பொருந்தன் கழஞ்சொன் றிரண்டாகப் பொன்போல் வறுத்த
நாழியிரண்
டிருத்த நீர்தான் உரியாக்கி யந்திசந்தி கொண்டிடுவாம்
கொள்ள விந்த திப்பிலிதேன் கூட்டிப் போட்டே யுண்டிடலோ
உள்ள வாதச் சுரத்தடனே யூற வாய்நீர்ச் சுரமும் போம்
தள்ள இதற்குப் பரிகாரம் தானே பன்னும் வகையிதுகான்
கள்ளர் மலர்ப்பூங் குழலனங் கே கலச முனிவன் கழறியதே

(பொருள்) சிற்றாமுட்டி, நிலவேம்பு, கண்டங்கத்தரி, பேய்ப்புடல் பற்பாடகம், உத்தாமணி, சுக்கு, வெட்டிவேர், விலாமிச்சுவேர், தாமரைத் தண்டு, பெருங்குரும்பை, மிளகு, பூண்டு, திப்பிலி, கடுக்காய்த் தோல், கண்டுபாரங்கி வகைக்கு ஒரு கழஞ்சளவாக எடுத்து பொன்போல வறுத்து ஒன்றிரண்டாக தீர் இடித்து இரண்டு படி நீரில் இட்டுக் காய்ச்சி கால்படி நீராகக் காய்ச்சி (உரி) இறுத்து வடிகட்டி காலை மாலை திப்பிலி இந்துப்பு தேன் இவைகளை விதிப்படி கூட்டி உண்ணவும். வாதசுரமு வாய் நீர் ஊறல் சுரமும் நீங்கும்.

கானே டொ தொடைமுத்தக் காசு சீதே வியின் வேரும்
பேனோ விப்பைப் பூவுடனே பேரீந் தடனே முந்திரிகை
வானே புகழ்தா மரைவளையம் வளரும் பெரிய குரும்பையுமே
சேனார் மதுகு விளைநத்தை சிறமு லகமுந் தேருகவே

தேருந் தான்றிக் கடுநெல்லி சிறந்த மிளகு திப்பிலிசேக்
கோடும் புதிய நிலந்தன்னில் வேம்பு நகரி நரம்பிசினும்
நீருசி சவ்விய மதாவரிசி நிறையுங் கழுநீர்க் கிழங்குடனே
கூடும் பெரிய வதிவிடயம் கொண்டோர் நிறையாய்க் கூட்டுகவே

கூட்டு நீரு மிருநாழி குறுகக் காய்ச்சி யுமக்கானால்
மீட்டு தண்ணீர் தணையாற்றி மேலே தேனும் விட்டவளி
யூட்டி விடுகி லெப்போத ஒழிய—நடு முலைய நடுக்குங் குளிர்சுரங்கள்
காட்டுஞ் சத்தி சுரமுடனே கடிதில் கலங்கி யேகிடுமே

(பொருள்) ஆடாதோடை, கோரைக்கிழங்கு, சீதேவி செங்கழுநீர் வேர், இலுப்பைப்பூ, பேரிச்சங்காய், கொட்டைத் திராட்சை, தாமரை வளையம், பெருங்குரும்பை, மகிழம்பூ, வில்வப்பழம், சிறுபஞ்சமூலம், தான்றிக்காய், கடுக்காய், நெல்லிமுள்ளி, மிளகு, திப்பிலி, சுக்கு, வேம்பின் பிசின், செவ்வியம், அம்மான்பச்சரிசி, செங்கழுநீர்க் கிழங்கு, அதிவிடயம் சம எடையாகக் கட்டி முறைப்படி குடிநீராக்கி தினம் இருவேளை கொடுக்க குளிர்சுரமும் வாந்தி சுரமும் தீரும்.

<u>வளியழற்சுரக் (சாதபித்தசுர) குடிநீர்</u>

தேடும் பொரியுஞ் சிறுபயறும் தேவதார முக்கழஞ்சாய்ப்
போடும் பொடிசெய் திருநாழி புனல்விட் டெரித்த நாழியதாய்
நாடிப் படியே யோரேழு நாளுங் காய்ச்சிக் கொடுத்தற்பின்
கோடுங் குவடுங் கொள்முலையீர் குடிநீ ரடைவிற் கூறகவே

(பொருள்) நெற்பொரி, பச்சைப் பயறு, தேவதாரு, ஆகியவைகளை வகைக்கு முக்கழஞ்சு எடுத்த முறைப்படி நீர் சேர்த்த குடிநீராக்கி வாதபித்த சுரங்களில் ஏழுநாட்கள் கொடுக்கத் தீரும்.

<u>குறிப்பு</u>: இத வெள்ளைப் பாடாண பற்பத்திற்குத் துணை மருந்தாக பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதாகும். இந்த விஷயம் பாடலில் இல்லை.

கூறுந் சிந்தி வகைகழஞ்சு கொத்த மல்லி முத்தமுடன்
தேறும் வேர்க்கொம் பொருகழஞ்சு தேவ தார மொருகழஞ்சு
ஊறும் புனலுங் கொருநாழி யுள்ளெட் டொன்ற தாய்க்காய்ச்சி
நீறுந் திப்பிலித் தூ ளதனை நீயிட் டருந்த நிலைக்காதே

(பொருள்) சீந்திற்றண்டு கழஞ்சு அறு, கொத்தமல்லி, கோரைக்கிழங்கு, சுக்கு, தேவதாரம் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்த ஒன்றிரண்டாக இடித்த இருநாழி நீரில் முறைப்படி குடிநீர் செய்த அதில் சிறிதுதிப்பிலிச் சூரணம் கட்டி தினம் இருவேளை கொடுத்தவர சுரப்பிணிகள் நிலைக்காத.

கலங்காச் சுக்கு செவ்வியமும் கடுகு ரோகணி சீந்திற்றண்
டிலங்கா புரிசேர் பற்படகம் லொமிச் சுடனே மரமஞ்சள்
~~தலங்காச் சொத்~~தி யுடன்தேவ த

தலங்காச் சோஷ்றியுடன்தேவ தாருங் கரிய சீரகமும்
பலங்கா ளிவைபொசி றிருகழஞ்சு பயந்தா ளிரண்டு நாழிவிட்டே

நாழி தாது முழக்காளால் நறுக்கித் தா ய திப்பிலித்தா
ளாழி மேவு மிந்துப்பு மதிலே கலந்த கொண்டடைவே
தாழி மேவுங் குவளைவழி வசலம் போஷந் தளமாதே
கோழி கூவி விடியுமுன்னே குடித்தே யருத்தக் குறைவிடுமே

(பொருள்) சுக்கு சவ்வியம், கடுகுரோகணி, சீந்தில்தண்டு, பற்பாகடம்
வியாச்சுவேர், மரமஞ்சள், சிறுகாஞ்சொறி வேர், தேவதாரு, கருஞ்-
சீரகம், வகைக்கு இரு கழஞ்சாகக் கொண்டு இரண்டு படி நீரிலிட்டு
எட்டுக்கொன்றாய்ச் சுருக்கி இறுத்த வடிகட்டி காலை பாதி மாலை பாதி
குடிநீரில் திப்பிலி இந்துப்பு, இவைகளைப் பொடித்தப் போட்டுக் குடிக்கவும்.

குலவுங் கீழ்க்காய் நெல்லிபுடோல் கோட்டஞ்சீந்தில் சிறுதேக்கு
நலசந் தடனே வேப்பலகு நாகப் பூவும் மலைதாங்கி
தலமே வியகாஞ் சொறிதேவ தாரம் மிளகு முத்தமுடன்
கலனார் முலையாம் பெருங்குரும்பை கடுரோ கணியோ டதிவிடையே

அதிலம் கொள்ளா திரண்டுகழஞ் சாகக் கொண்டாங் கததன்னை
கதிதம் கிநா ழிப்புனலில் காய்ச்சியுள்ளே கொள்விரேல்
விதிதந் திருகாரத் திப்பிலிதேன் விடயம் குடிநீ ருடன்கலந்தே
மதிகொண் டதனை யிருகரத்தால் வாங்கிப் பருகும் மனமுவந்தே

(<u>பொருள்</u>)கீழ்க்காய் நெல்லி, பேய்ப்புடல், கோட்டம், சீந்தில் தண்டு,
சிறுதேக்கு, நல்ல சந்தனக்கட்டை, வேம்பின் ஈர்க்கு, சிறுநாகப்பூ,
மலைதாங்கி, சிறுகாஞ்சொறி, தேவதாருக்கட்டை, மிளகு, கோரைக்
கிழங்கு, பெருங்குரும்பை, கடுகுரோகணி, அதிவிடயம் ஷ வகைக்கு
இருகழஞ்சாக எடுத்த இரண்டு படி நீரில் முறைப்படி இட்டுக் காய்ச்சி
எட்டுக்கொன்றாய்ச் சுண்டிய குடிநீரை இறுத்த தனியில் வடிகட்டி இருபாக
மாக்கி காலை மாலை திப்பிலித் தூளும் தேனும் கூட்டி சாப்பிடவும்
(மேற்படி திப்பிலித் தூளுடன் கோரோசனையின் தூளையும் கூட்டி உண்ணத்
தருவதும் அநுபவ முறையாம்)

..87

உவந்த கொத்த மலிவேர்க்கொம் புடனே சிறகாச் சொறிமதரம்
சிவந்தே யிருக்குங் கொன்றைத்தோல் சிறுமூல முத்தக் காடடனே
நவந்தா முள பற்படக நன்னா ரியுடனே யிருவேலி
அவந்திரி குதிரை வாலிபுடோர் அனதேவ தாரமுமே

தாரார் குழலாம் வரன்முள்ளி தயங்கு விளாமிச் சோறொன்ற
நேராம் இவைதான் கழச்சரையாய் நிறுத்தக் கட்டி யிருநாழி
சீராம் நீரில் விட்டுமுக்காய்ச் செறியக் காய்ச்சித் திப்பிலி தேனி
காரா ரிருள்போம் விருந்தண்டால் கலந்தச் சுகமாய்கனி மொழியே

(பொருள்) கொத்தமல்லி, சுக்கு, புன்காச்சோறிவேர், அதிமதுரம்
கொன்றை வேர்ப்பட்டை, சிறபஞ்சமூலங்கள், கோரைக்கிழங்கு
பற்பாடகம், நன்னாரிவேர், சித்திரமூலம், உத்தாமணி, குதிரைவாலி,
பேய்ப்புடல், தேவதாருக்கட்டை, வரன்முள்ளி, விலாமிச்சு வேர் இவை
வகைக்கு அரைக்கழஞ்செடுத்து முறைப்படி இரண்டுபடி நீர்விட்டுக் குடிநீர்
செய்து காலை மாலை திப்பிலிச் சூரணமும் தேனும் சேர்த்துப் பருகவும்.
வளியழற்சுரம் தீரும்.

<u>வளியைச்சுரம் _ (வாததபசுரம்)</u>

இச்சுரத்தில் முதலிரண்டு நாள்கள் இருமுறை வடித்த சோற்றின்
கஞ்சியைக் கொடுத்தபின்

கேளும் மூன்றாம் நாளரிசி விளரிவேர்க் கொம்பு குறும்பயறு
மூளும் பயறு மிவைகொண்டு முதலாங் குடிநீ ரிட்டுப் பின்
நாளும் பருக வேஞ்சென்றால் நாடிக் குடிநீ ரிருமருந்த.
நீளுஞ் சீந்தில் மாதளைவேர் தெடிதாம் மாவிலி வேர்தேடே

தேடு முத்தம்வேர்க்கொம்பு கேராயொன்ற முக்கழஞ்சு
ஈடு பெற்ற நீர்விட்டே யெட்டொன் றாக வேகுறுக்கி
நீடு ஆ திப்பிலி பொடியாக்கி நீயிட் டருந்தங் கதன்மேலே
ஆடும்வாத சேட்பமதா லாகுஞ் சுரங்கள் மாறிடுமே

(<u>பொருள்</u>) மூன்றாம்நாளில் சுக்கு, பாசிப்பயறு, நெற்பொரி,
இம்மூன்றுங்கூட்டி, முறைப்படி குடிநீராக்கி, நாலு நாட்கள் கொடுத்த

ஏழாம் நாளில் மேற்படியாகவே குடிநீர் செய்ததில் சீந்தில் மாதளைவேர், கருந்தளசிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு வகைக்கு முக்கழஞ்சு கூட்டிப் போதமான நீர்விட்டு எட்டுக்கொன்றாகக் காய்ச்சி இறுத்து வடிகட்டி அத்துடன் சிறிது திப்பிலிப்பொடி கூட்டிக் கொடுக்க வலியைய சுரம் தீரும்.

2. மாறி லாத தேவதார மணமுடை செவ்வி யங்கடுகு
வீறி வாத ரோகணியும் மரத்த மஞ்சள் திப்பிலியும்
தேறி யொன்று மிருகழஞ்சு சேர நீரி லெட்டிலொன்றாம்
ஊறி யிந்த திப்பிலியோ டுன்ன நோய்க ளோய்ந்திடுமே

(பொருள்)

~~குத கதழ்குரு 2 – குச ககீஞரு 2 – குரு~~

தேவதாரம், செவ்வியம், கடுகு ரோகணி, மரமஞ்சள், திப்பிலி, ஒவ்வொன்றும் இருகழஞ்சு கொண்டு முறைப்படி குடிநீரிலிட்டு திப்பிலியும் இந்தப்பும் பொடித்ததில் சிறிது சேர்த்துச் சாப்பிட சுரநோய் தீரும்.

3. ஒயுங் கோட்டம் பெருங்குரும்பை யுடனேசந்தம் பேய்முசுட்டை
யாயுங் கடுகு ரோசனைவேப் பலகு சிறுதேக் கதிமதுரம்
ஏயுந் சீந்தி லதிவிடயோ டொக்க நறுக்கிப் பெருங்குமிழ்வேர்
சாயு மிதனை யறிந்துவிட சாந்தமாகும் சுகசுரமே

(பொருள்) கோட்டம், பெருங்குரும்பை, சந்தனம், பேய் முசுட்டை கடுகு, கோரோசனை, வேப்பலகு, சிறுதேக்கு, அதிமதுரம், சீந்தில்தண்டு, அதிவிடயம், பெருங்குமிழ்இவைகளை ஓரளவாய் எடுத்து முறைப்படி குடிநீர் செய்து அளவுப்படி கொடுக்க வலியையக்காய்ச்சல் தீரும்.

4. ஆனதேவதாரமுடன் அரிய, வேர்க்கொம் படர்கொன்று
யானல் போ௱ம் விழிமடவாய் படகம் மல்லி வசம்புடனே
சீனம் மிளகு முந்திரிகை திப்பிலி முத்தக் காசிவைகள்
தானோ ரொன்று முக்கழஞ்சு தண்ணி ரிரண்டு நாழியிடே

விட்டுக் காய்ச்சி உழக்கானால் விளம்பு பெருங்கா யங்கால்தான்
இட்டுக் குடிப்பி ராமாகில் இடரே செய்யுங் குடல்தன்னி
லொட்டிச் திரியும் வாதசிலேற் பளமா யுள்ள சாரங்களெலாம்
முட்டுப் பட்டுத் தடுமாறி முறிந்தே யோடும் கண்டீரே

(சுரவாகடம்)

(பொருள்) தேவதாரு, சுக்கு, பற்பாடகம், கொத்தமல்லி, வசம்பு, மிளகு, கொட்டைத் திராட்சி, திப்பிலி, கோரைக்கிழங்கு இவை வகைக்கு இரு கழஞ்சாக எடுத்து இரண்டு படி நீரிலிட்டு எட்டுக்கொன்றாக (உழக்கை உழக்காக) வற்றக் காய்ச்சி இறுத்து வடிகட்டி அதில் கால் கழஞ்சு பெருங்காயத்தைப் பொடித்துப் போட்டு வேளைக்கு ஒரு அமாக்குவிதம் காலை மாலை உட்கொள்ளக் குடலில் வலியும் ஐயமும் கடிச் செம்பும் கேடுகளைப் போக்கி சுரத்தைத் தணிக்கும்.

5. கண்டார் புகழும் கொடிக்கழிஞ்சி கடுக்காய் சீந்தில் பேய்ப்பீர்க்கோ
டொன்றா மிலுப்பைப் பூலோர்க்கொம் புடனே யாடா தோடையின் வேர்
கொண்டோ ரொன்று முக்கழஞ்சு கட்டி யிடித்துக் கொள்வீரே
கொள்ளும் புனல்தா னிருநாழி கூட விட்டுக் காய்ச்சியபின்
தெள்ளும் புனல்தா னுழக்கானால் திப்பிலி யிந்துப் புதிதேனும்
விள்ளும் படியாத் நீரிர்தன்னில் விட்டுக் குடிப்பீ ராமாகில்
எள்ளும் காயும் வாதசிலேற் பனமாச் சுரம்போ முடல்விட்டே

(பொருள்) கொடிக்கழிஞ்சி வேர், கடுக்காய், சீந்தில், பேய்ப்பீர்க்கு, இலுப்பைப்பூ, சுக்கு, ஆடாதோடை வேர் இவை வகைக்கு முக்கழஞ்சாகக் கொண்டு இரண்டு படி நீரிலிட்டு முறைப்படி காய்ச்சி உழக்காகச் சுருக்கி இறுத்து வடித்து அதில் திப்பிலி, இந்துப்பு, தேன் இவைகளைக் கூட்டித் தினம் காலை மாலை குடிக்கில் வலி ஐயச்சுரம் தீரும்.

வலிழுத்குற்றச்சுரம்

காசசா ஊரக்கிப் பொன்னாங் காணியின் சமூலத் தோடே
பேசிய மாவின் பூவும் பிறங்கிடு நிலவேர் தானும்
தேசுசேர்ந் திருப்புப் பாலை சிறுபய றோடு திப்பிலி
மாசிலாக் குறுவை நெல்லும் வகையிவை சமனாய்க் கூட்டே

கூட்டியே கொத்து மல்லி குலவிய மனலி லோடே
போட்டது நெல் வெந்து பொரிந்திடும் பதம தானால்
விட்டிய வெண்ணெய் போட்டுக் கொதித்த நீர் விட்டி றக்கிக்
காட்டுபற் பாடந் தன்னைக் கரைத்துநீ குடித்தி டாயே

குடித்த போது கொடிய சுரத்துடன்
பிடித்த தாகம் பெருகு முழலையும்
தடித்த தெள்ளத் தபனமும் மாறிடும்
வடித்தநீ நீரை வகையுறக் கொண்டிடே

(பொருள்) கோரைக் கிழங்கு, சானாக்கிக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரைசமூலம், மாம்பூ, வெட்டிவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பச்சைப் பயறு, சிறுதிப்பிலி, குறுவைநெல், இவைகளைச் சமனாய் எடுத்து சிறிது கொத்தமல்லி, மணலிக் கீரையும் சேர்த்து - முதலில் நெல்லைச் சட்டியிலிட்டு வறுக்க அது பொரிந்திடும்போது அதில் சிறிது வெண்ணெய் போட்டு கொதித்துக் கொண்டிருக்கும் நீர் அளவுப்படி ஊற்றி மற்ற சரக்குகளை எல்லாம் முறைப்படி அதிலிட்டு விதிப்படிக் குடிநீராக்கி இறுத்து வடித்து உட்கொள்ளும்போது பற்பாடகத்துள் சிறிது அதில் கட்டிச் சாப்பிட சுரத்துடன் கூடிய நீர் வேட்கையும் உடலெரிச்சலும் தீரும்.

<u>வேம்புக்_குடிநீர்</u>

கொண்டபின் வேம்பின் தோலைக் குறுகவே தறித்தி டித்து
மண்டவே க ரைத்துக் காய்ச்சி வற்றியே பதம தானதே
றண்டிடா மதுர மேலம் தயங்குவேர்க் கொம்பதி தப்பு
மிண்டிடும் கொத்து மல்லி மிளகுடன் கடுக்காய் கூட்டே

கூட்டியோர் நிறையிற் கொண்டு குலவிய புளியந் தோலி
நீட்டிய சாற்றி னாலே யிவையரைத் தேமுன் காய்ந்து
காட்டிய கஷாயத் திட்டுக் காய்ச்சியே திரண்ட வாறே
மீட்டுநீ யிறக்கி நாவில் விரைவுடன் நக்கிக் கொள்ளே

(பொருள்) வேப்பம் பட்டையின் தோலின் உட்பாகத்தை எடுத்து அதனை குறுகத்தறித்து முறைப்படி நீர் சேர்த்துக் காய்ச்சி வற்றிய பதத்தில் இறுத்து வடிகட்டி வைத்துக்கொள்க. பின்பு, அதிமதுரம், ஏலம், சுக்கு, இந்துப்பு, கொத்தமல்லி, மிளகு, கடுக்காய் ஆகியவைகளை ஓரளவாகக் கொண்டு நண்ணிய தூ ளாக்கி புளியம்பட்டைச் சாற்றால் நன்கு அரைத்து மேற்படி குடிநீரில் கலக்கிக் காய்ச்சி அது மெழுகு பதமாகத் திரண்டு வரும். சமயத்தில் இறக்கி ஆறவிட்டு பத்திரப்படுத்தி வைக்கவும். இதை

விரலில் சிறிது எடுத்து நாவில் தடவிச் சுவைக்கவும். இதனால் ஐயக்குற்றம், தீக்குற்றங்களால் உண்டான வாய்நீர் சுரப்பு, நாவரட்சி நீர் வேட்கை ஆகியவை போம். முக்குற்றம் விலகும். உணவாக அரிசியை வறுத்துச் சுக்கை உளைய நசுக்கிச் சீலையில் முடிந்துக் கட்டிச் சேர்த்து நீரிலிட்டுக் கஞ்சி காய்ச்சி எழுநாள் கொடுத்துவர வளிமுப்பிணி நோய் போம்.

சிற்றாமுட்டிக்_குடிநீர்:

நீர்செறியுஞ் சிற்றாமுட்டி காஞ்சொறிநல் வாரி
நெடிதான பேராமுட்டி நிலவேம்பி னுடனே
தார்செறியுந் தக்காசு வேர்க்கொம்பு சீந்தில்
தன்டோரோன் றிருகழஞ்சா யஃதொன்றா யிடித்து
வாரிபுனலி லிருநாழி விட்டெரித்தெட் டொன்றாய்
சுருறவே வருசந்தி வாதசுரம் தீரும்
சொல்லவிரண்டாங்குடிநீர் குடியிடையேர்க் கொம்பே

(பொருள்) சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொறி, நல்வாரி, பேராமுட்டி, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சீந்தில்தண்டு வகைக்கிருகழஞ்சு கட்டி இரண்டு படி நீரில் முறைப்படி இட்டு விதிப்படி காய்ச்சி எட்டுக்கொன்றாய் வற்றியவுடன் இறுத்து வடிகட்டி திப்பிலிப் பொடியும் தேனும் கூட்டி காலை மாலை சாப்பிட வளிமுப்பிணி சுரம் போம்

சுக்குக்_குடிநீர்

வேர்க்கொம்பு திரிபலைமா வளையமுடன் கோட்டம்
வெட்பாலை யரிசி புடோல் பேய்ப்பீர்க்குச் சந்து
மேற்றங்கு மிருவேலி க்கொத்தமல்லி படகம்
மிக்கநெய் தனிக்கிழங்கு விலாமிச் சடனே
பாற்றங்கு முந்திரிகைப் பழமுடன்பே ரீச்சம்
பழந்தேவ தாரிலுப்பைப் பூமுத்தக் காசு
சுற்றங்கு கடுகுரோ கணிபங்கம் பாளை
சொல்சிறுகாஞ் சோறியுடன் கொள்ளிரண்டு கழஞ்சே

இருநாழி தண்ணீர்விட் டருப்பிணிஞ்
யேற்றியெரித் தேதானும் பதமாக வற்றி
உரிதான தேனுடனே திப்பிலித்தூ ளீ கட்டி
உண்டுவிடவே சன்னி வாதசுரத் துடனே
அருகாக வருகின்ற_வாதசுர தோட
மவைகூழும் புவியனைத்தும் அரசளித்துக் காக்கும்

(பொருள்) சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தாமரைவளையம், கோட்டம், வெட்பாலையரிசி, பேய்ப்புடல், பேய்ப் பீர்க்கு, சந்தனக்கட்டை, உத்தாமணி, சித்திரமூல வேர்ப்பட்டை கொத்தமல்லி, பற்பாடகம், நெய்தல்கிழங்கு, விலாமிச்சு வேர், இலுப்பைப்பூ, கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, ஆடுதின்னாப்பாளை, சிறுகாஞ்சோறிவேர், ஆகியவைகளை வகைக்கு இருகழஞ்சாக எடுத்து முறைப்படி நீரிலிட்டு விதிப்படி குடிநீர் செய்து இறுத்து வடித்து அளவுப்படி திப்பிலித்தூளும் தேனும் கூட்டிக்கொடுக்க வளிச்சுரம், வளிமுப்பிணி, முதலிய ஏழுவகையான சுரங்களும் தீரும்.

<u>அழற்சுரக்_குடிநீர்</u> (பித்தசுரக்குடிநீர்)

கூட்டுஞ் சிற்றா முட்டிசுக்குக் கொண்டு மூன்று கழஞ்சாக
விட்டுநீ தண்ணீர் தனிற்காய்ச்சி யிறக்கி யாற்றிக் கொடுத்திடுக
வாட்டும் வழுக்க விளநீரை வைத்தே யுலையாச் சோறாக்கி
யூட்டி முழுநா ளிப்படியே யவந்தெட் டாநா ளொன்றுசெயே

ஒன்றும் வில்வ வேர்க்கொம்போ டுற்றசிற்றா முட்டியின்வேர்
தன்னும் பொரிபா திரியின்வேர் சுரைத்தண் டோரோன் றிருகழஞ்சு
கன்றுங் கொத்து மல்லிபயறு கையா லோரோர் பிடியிரண்டு
என்று நாழி யிரண்டுமக்காய் வடித்து தேன்சேர்த் தூட்டிடுமே

(சுரவாகடம்)

(பொருள்) சிற்றாமுட்டியும் சுக்கும் வகைக்கு முக்கழஞ்சு எடுத்துப் பொடித்து, முறைப்படி நீர் கூட்டிக் காய்ச்சி வடித்துக் குடிக்கக் கொடுக்கவும். வழுக்குடைய இளநீரைக் கொண்டு உலைவைத்து அதில் சமைத்த சோற்றைச் சாப்பிடச் செய்க. இவ்வாறு ஏழுநாள் கொடுத்து எட்டாம் நாளிலிருந்து வில்வவேர், சுக்கு, சிற்றாமுட்டி வேர், நெற்பொரி, பாதிரிவேர், சுரைக்கொடி இவை வகைக்கு இருகழஞ்சும், கொத்தமல்லி, சிறுபயறு ஒவ்வொர் பிடியும் முறைப்படிக் கலந்து இரண்டு படி நீரில் இட்டு முறைப்படி காய்ச்சி இரண்டாழாக்காக வற்றக் காய்ச்சி இறுத்து வடிகட்டி காலை மாலை தேனுடன் உட்கொள்ள பித்தசுரம் (அழற்சுரம் தீரும்)

பூகமுள் சீந்திற் பற்படகம் பூசுச் சந்தம் விலாமிச்சுத்
திகமும் வேர்க்கொம் பிருவேலி சிற்றா முட்டி யூடன்காசு
தகவே யோரொன்றிருகழஞ்சு தன்னீர் இரண்டு நாழியிட்டுச்
சகமா யூழக்காக் கிக்குடித்தால் சோரும் பித்த சுரந்தானே

(பொருள்) சீந்தில்தண்டு, பற்பாடகம், சந்தனக்கட்டை, விலாமிச்சு
வேர், சுக்கு, உத்தாமணி, சித்திரமூல வேர்ப்பட்டை, முத்தக்காசு இவை
வகைக்குறி இருகழஞ்சாகக் கொண்டு இருநல நீரிலிட்டு விதிப்படி குடிநீராக்கி
ஒரு உழக்காகத்தீச் சுண்டியவுடன் இறுத்த வடிகட்டி இருசமபாகமாக்கி
காலைமாலை குடித்தால் பித்தசுரம் (அழற்சுரம்) தீரும்.

தாளே வேர்க்கொம் பிருவேலி "தயங்கு மிலாமிச் சரசந்தோல்
காளே செறிமுத் தக்காசு கார்ச்சொறி பஞ்சம் பாளைகோட்டம்
தேளே கழஞ்சொன் றிருநாழி தன்னி ருழக்காமிப் பருகிடிலே
ஐளே யுருக்கும் பித்தசுரம் உதரக் கழிச்சலி மாறிடுமே.

(பொருள்) சுக்கு, உத்தாமணி, சித்திரமூலப்பட்டை, விலாமிச்சு வேர்,
அரசன்பட்டை, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொறிவேர், ஆடுதின்டாப்பாளை,
கோட்டம் வகைக்கு ஒரு கழஞ்சாக எடுத்து இரண்டு படி நீரிலிட்டு
உழக்காகக் காய்ச்சி இறுத்து வடிகட்டி இருகூறாக்கி காலை மாலை உண்டால்
ஐயை உருக்கும் பித்தசுரமும், அதில் காணும் கழிச்ச ம் தீரும்.

மாறா மதுரச் சிற்றமுட்டி வளர்பே ரிந்த சந்தனமும்
வீறாம் வேர்க்கொம் பிருவேலி வேப்பீர்க் குடனே திரிபலையும்
தேறாம் பதுமக் கிழங்குடனே தேவ ரிலவம் முந்திரிகை
கூறா மெலுமிச் சம்பூவும் குலவும் புடலோ டிலாமிச்சே

மிச்ச மிலாமல் ஒரொன்று வேண்டிக் கழஞ்சு மிருநாழி

பச்சை நீர்தா குழக்காக்கிப் பரிவாம் வடித்துத் தேனுடனே
இச்சை கூறச் சர்க்கரையும் இட்டுக் குடித்தாத் பித்தசுரம்
அச்சங் கொண்டே ஒருமெல்ற அறைந்தால் புலவோர் அளவரே.

(பொருள்) அதிமதுரம், சிற்றாமுட்டிவேர், பேரிந்தக்காய், சந்தனம்,
சுக்கு, உத்தாமணி, சித்திரமூலப்பட்டை, வேப்பன் ஈர்க்கு, கடுக்காய்,
தான்றிக்காய், நெல்லிக்காய், தாமரைக்கிழங்கு, தேவதாரு, கொட்டைத்
திராட்சி, எலுமிச்சைப்பூ, பேய்ப்புடல், விலாமிச்சுவேர் ஒவ்வொன்றும்

ஒவ்வோர் கழஞ்சாக எடுத்து இரண்டு படி நீரிலிட்டு விதிப்படி குடிநீரிட்டு உழக்காகச் சுண்டியதை இறுத்து வடிகட்டித் தேனும் சர்க்கரையும் சேர்த்து காலை மாலை குடிக்க சுரம் போம்.

<u>முலைப்பால் குடிநீர்</u>:

அலை விலப்பைப் பூவெட்பா லரிசி படகந் தன்றுடனே
காலனி மிருந்த நன்னாரி கழுநீர்க் கிழங்கு வேர்க்கொம்பு
பாலம் மிருந்த முந்திரிகைப் பழந்தா மரையில் வளையமுடன்
ஞால மறந்தா லென்றகழஞ் சொன்று வாங்கென் றோதினரே

ஓதந் தண்ணி ரிருநாழி யூரிலிட் டுழக்காய்க் காய்ச்சியதில்
பாதிமுலையில் பால்விட்டுப் பருகிற் பித்தச் சுரமெல்லாம்
மோதம் பெலனும் மிகக்குறைந்தும் உருளி ரெனவே குளிருமெனக்
காதம் விளைவென் றருள்முனிவன் கருதிப்புகன்ற காட்டினரே

(<u>பொருள்</u>)

~~சிவ~~/ இலப்பைப்பூ, வெட்பாலையரிசி, பற்பாடகம், நன்னாரி வேர், செங்கழுநீர்க் கிழங்கு, சுக்கு, கொட்டைத் திராட்சி, தாமரைவளையம் இவை வகைக்கு ஒரு கழஞ்செடுத்து இருநாழி நீரிலிட்டு விதிப்படி குடிநீர் காய்ச்சி இரண்டாழாக்காவுடன் இறுத்து வடித்து அதற்குப் பாதியளவு முலைப்பால் விட்டுக் கலக்கி காலைமாலை சாப்பிடவும் சுரம் தணிந்துபோம்.

செய்ய கடுக்காய் கொத்தமல்லி சிவதை பயறு வேர்க்கொம்பு
நையுங் கருகு ரோகணியும் நறுக்கிக் காய்ச்சிக் கொடுத்திடவே
தொய்யும் வயிறு கழியும்பின் தோன்றுங் கோட்டம் பேய்ப்பீர்க்கோ
டுப்யுச் சிறுகாஞ் சொன்றியுடன் ஒன்றுஞ் சந்தம் நிலவேம்பே

நிலந்தாளி புகழும் பற்படகம் நெடிதா மாடா தொடையின்வேர்
நலந்தா ஒக்கிற் றாமுட்டி நலமுந் திரிகைக் கழஞ்சொன்றாம்
சலந்தா னிருநா ழியிற்காய்ச்சித் தானே யுழக்காய்ச் சர்க்கரையிட்
டுலந்தோர் குடிக்கிற் பித்தசுர மோடும் சுடிதா யுடல்விட்டே

(பொருள்) கடுக்காய், கொத்தமல்லி, சிவதை, பயறு, சுக்கு கருகுரோக
ணி
இவைகளைத் தக்க அளவிலெடுத்து முறைப்படி குடிநீராக்கிப் பருக வயிறு

கழியும். அதற்குமேல் மறுநாள் கோட்டம், பேய்ப்பீர்க்கு, சிறுகாஞ்சொறிவேர், சந்தனக்கட்டை, நிலவேம்பு, பற்பாடகம், ஆடாதோடை வேர், சிற்றாமுட்டி, கொட்டைத் திராட்சி, கழஞ்சாக எடுத்து இரண்டு படி நீரில் சேர்த்து உழக்காய்க் காய்ச்சிச் சிறிது சர்க்கரை கூட்டிக் காலைமாலை சம அளவாகச் சாப்பிட பித்தசுரம் தீரும்.

<u>வாந்தி (சத்தி) சுரம்</u>

அகஞ்சேர் வில்வ வேர்சுக்கு ஆறு கழஞ்சு நெற்பொரிதான்
சுகஞ்சேர் இருவே லியிடடலே துய்ய விலாமிச்சு சொருகழஞ்சு
முகந்தா மறையாள் நீர்நாழி முயன்றே காய்ச்சித் தேனுடனே
சகந்தா னறியக் குடித்திடிலே சத்தி சுரத்தைக் கடுத்திடுமே

(<u>பொருள்</u>) வில்வ வேர், சுக்கு, உத்தாமணி, சித்திரமூலப்பட்டை, விலாமிச்சுவேர் வகைக்கொரு கழஞ்சு, நெற்பொரி ஆறுகழஞ்சு அகக் கூட்டி ஒருபடி நீரில் சேர்த்து விதிப்படி குடிநீர் செய்து அறாக்காகக் குறுக்கி இறுத்து வடிகட்டித் தேன்கூட்டிக் கொடுக்கச் சுரம்போம் வாந்தி நிற்கும்.

<u>அழல்வளி (பித்தவாதசுரம்) சுரக்குடிநீர்</u>

. . . .   சிற்றரத்தை
குரும்பை மிளகு சிறுபயறு கொத்து மல்லி கூட்டுகவே
கூட்டி வறுத்துப் பொன்னானால் குணமாம் நாழி நீர்விட்டு
வாட்ட மின்றிக் காய்ச்சியதை வடித்தே திப்பிலி தேன்கலந்து
நாட்ட மாக மூன்றுதினம் நலமாய்ப் பருகி பட்டினிதான்
போட்டுத் தினமொன் றகுதப்பிற் புகல்வேன் குடிநீர் பொற்கொடியே

(<u>பொருள்</u>) சிற்றரத்தை, சிறுகுரும்பை, மிளகு, பயறு, கொத்தமல்லி இவைகளைப் பொன் வறுவலாக வறுத்து நீர்படி கூட்டிக் காய்ச்சி முறைப்படி கண்டிய குடிநீரை இறுத்து வடிகட்டி திப்பிலியும் தேனும் கூட்டி மூன்று நாட்கள் காலைமாலை கொடுத்து கஞ்சி முதலிய உணவுகளைக் கொடுத்துவரவும், பித்தவாத சுரம் நீங்கும்.

கொடியாம் படர்வே லிப்பருத்தி குதிரை வாலி தூ துவளை
படியாங் காளி புடோலுடன் கண்டங் காலி பேய்ப்பீர்க்கே
செடியாம் நெரிஞ்சி களினையும் சிற்றா முட்டி வேருடனே
நெடிய மதுரஞ் சதகுப்பை நெல்லி தான்றி மோதகமே

மோத மிளப்பைப் பூமிளகு முந்திரி கைக்கனி பேரிந்த
போத நிறையாய்க் கழஞ்சிரண்டு பொருந்தக் காய்ச்சி நாலொன்றாய்
ஏதந்/ தீருந் திப்பிலியோ டிதமாய்த் தேனி விட்டருந்த
காதம் பித்தவாதசுரம் கலங்கி யோடுங் கார்குழலே

(பொருள்) உத்தாமணி, குதிரைவாலி, தூதுவளை, கண்டங்கத்திரி, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெருஞ்சில், வில்வவேர், சிற்றாமுட்டி அதிமதுரம், சதகுப்பை, நெல்லிக்காய், தான்றிக்காய், ஓமம், இலுப்பைப்பூ, மிளகு கொட்டைத் திராட்சி, பேரீச்சங்காய் ஒவ்வொன்று இருகழஞ்சாக எடுத்து இரண்டு படி நீரிலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி கண்டியவுடன் இலத்தத் தனியில் வடிகட்டி இருகூறாக்கி அதில் சிறிது திப்பிலிச் சூரணமும் தேனும் சேர்த்துத் தர பித்தவாத சுரம்தீரும்.

<u>அழலையுந் (பித்தசுர) குடிநீர்</u>

படர்ந்த சுக்குக் கொத்தமல்லி தன்னை நறுக்கி சிலைதன்னில்
தடச்சேர் முலையாய்க் கூட்டியதைத் தண்ணீர் தனில்விட் டுக்காய்ச்சே
காய்ச்சி யிறக்கும் போதுபொரி கையா லோரோர் பிடியிட்டு
வாய்த்த மருந்தை யிப்படியே வகையாய்க் கொள்வா யெழுநாளும்
கூச்ச மறத்தான் கொண்டதற்பின் குடிநீ ரடைவு கூறுவேன்
பேச்சாம் பூவை மலைமுனியாம் பிடியாம் நடைகே ளமகிழ்ந்தே
உளங்கொள் சீந்தில் திரிபலையும் உடனே வெட்பா லரிசிருப்பை
குளச்சேர்க் கழுநீர்க் கிழங்குபனை கூட்டி நிறைமுக் கழஞ்சொன்றாய்த்
துளங்க விடுத்த நீர்விட்டுச் சுவற வெரித்தெட் டொன்றானால்
இளங்கோ கலைக முலைமடவாய் இறுத்தே யதனைக் கொள்வாயே
இதுதான் கொண்டாற் சுரந்தீரும் இரண்டாங் குடிநீ ரடைவதுகேள்

(பொருள்) சுக்கு, கொத்தமல்லி இரண்டையும் சிலையில் முடிந்து நீரிலிட்டு விதிப்படிக் காய்ச்சி இறக்கும்போது, அதில் ஒருபிடி நெற்பொரி இட்டு அதனை அக்குடிநீருடன் உட்கொள்க. இவ்வாறு ஏழுநாட்கள் சாப்பிட்ட பின் - சீந்தில், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வெட்ட பாலையரிசி, சதகுப்பை, செங்கழுநீர்க் கிழங்கு வகைக்கு முக்கழஞ்சாகக்

திறந்து வாய்ப்பளித்திருக்கின்றோம். இதன்மூலமாக அந்த மருத்துவத் துறைகளும் நமது மாநில மக்கள் மத்தியில் பரவிட வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. இது பாராட்டத்தக்க அம்சமே.

ஆனால், தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தின்மீது நமது அண்டை மாநிலங்களும் ஏனைய வடமாநிலங்களும் மேற்கொண்டிருக்கின்ற அணுகுமுறை அல்லது ஆர்வமற்ற போக்கு வருந்தத்தக்கதாக உள்ளது. ஏனைய மாநிலங்களிலும் இன்று ஆயுர்வேதத்திற்கும் யூநானி மருத்துவத்திற்கும் அளிக்கப்பட்டிருப்பதைப் போன்ற வாய்ப்பு சித்த மருத்துவத்திற்கும் அளிக்கப்படல் வேண்டும் என நமது அரசாகிய தமிழக அரசு ஏனைய மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்ளலாம்.

ஒம்(க.ச. உத்தமராயன்)
தலைவர்

கொண்டு விதிப்படி நீரிலிட்டுக் குடிநீர் ஆக்கி இருநாறாம்பி பங்கிட்டுக் காலைமாலை உட்கொள்ளவும். பித்த கபசுரம் தீரும்.

முதவேம் பதனில் பட்டை புடோல் முதிய சந்த மிருவேலி
மதிவாம் நல்லத் தண்டுடனே மலைவெட் பாலை யரிசிசுக்குக்
கதவார் நெல்லி கடுதான்றி கடுரோ கணியும் கடிதகொனே

கடிதாந் தேவ தாருவுடன் காச கோட்ட விலாமிச்ச
வடிவாய்க் கழஞ்சு நீர்நாழி வற்ற வெரித்தெட் டொன்றாகியப்
படிகா கெடைதேன் மேற்று வி பரிவா யிதற்குப் பின்னுமொரு
குடிநீ ரடைவக் கேள்

(பொருள்) முதிர்ந்த வேம்பின் பட்டை, பேய்ப்புடல், முதிர்ந்த சந்தனக் கட்டை, உத்தாமணி, சித்திர மூலப்பட்டை, அதிமதூரம், தாமரைத் தண்டு (அ) தாமரை வளையம் மலை வெட்பாலையரிசி, சுக்கு, நெல்லிமுள்ளி கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், கடுகுரோகணி, தேவதாருக் கட்டை, கோரைக்கிழங்கு, கோட்டம், விலாமிச்சுவேர் வகைக்கு ஓர் கழஞ்சு கொண்டு ஒரு படி நீரிலிட்டு விதிப்படி குடிநீர் செய்து இருகூறாக்கி தேன் ஒரு காசெடை கூட்டிக் கலக்கிக் காலை மாலை உட்கொள்ள அழலையச்சுரம் தீரும்.

. . . . சுக்கு மல்லிக் கோட்டமுமே

கோட்டமாம் வேப்பற்கு கொடிபாசி சந்தில் மரமஞ்சள்
வாட்டமிலாக் கறிப்பாலை வளர்தன் டுடனே அதிமதூரம்
மீட்டுச் சிறுகாஞ் சோறிற்யுடன் மேவும் மோடிக் கனை யதமே
மீட்டும் நீர்தா னிருநாழி மேவிக் காய்ச்செட் டொன்றெனவே

ஒன்றாகத்தே யிரண்டுகழஞ் சுடனே கூட்டி யின்னமுங்கேள்
கொன்றைப் பழத்தோ டிலாமிச்ச கோட்டங் காட்டுக் கச்சோலம்
குன்றா முத்தக் காசுடனே் கூட்டு மரத்தின் மஞ்சளிவை
நன்றா மிரண்டு கழஞ்சுதன்னீர் நாலோன் றாய்த்தே குடல்பருகே

பொருள்: சுக்கு, கொத்தமல்லி, கோட்டம், வேம்பின் ஈர்க்கு, சீந்தில் தண்டு, மரமஞ்சள், கறிப்பாலைத் தண்டு, அதிமதூரம், சிறுகாஞ்

சொறி, திப்பிலி மூலம், திப்பலி இவைகளைஅளவுப்படி/ப படி எடுத்த இருநாழி நீரிலிட்டு உழக்காகக் காய்ச்சி இருகூறாக்கி காலைமாலை தேன் இரு கழச்சு கூட்டி உட்கொள்க பித்தகப சுரம் தீரும்.

இன்னும் ஒருமுறையும் கூறுகிறேன் கேட்பாயாக

சரக்கொன்றைப் பூ, விலாமிச்சுவேர், கோட்டம், காட்டு அச்சினிக் கிழங்கு, கோரைக்கிழங்கு, மரமஞ்சள் வகைக்கு இருகழஞ்சாக எடுத்துக்கொண்டு இரண்டுபடி நீரிலிட்டு ஒரு உழக்காக வற்றக் காய்ச்சி இருகூறாக்கி தேன் கலந்து காலைமாலை சாப்பிட பித்த கபசுரம் தீரும்.

<u>அழல் முக்குற்றச்சுரக் குடிநீர்</u>

நிலவேம்பு, விலாமிச்சு, சாரணைவேர், தும்பைவேர், கண்டங் கத்தரி வேர், சிற்றரத்தை, கள்ளிவேர், கொடிவேலி வேர் சம எடையாக கொண்டு குடிநீர் விதிப்படி செய்து காலைமாலை கொடுக்க பித்த முக்குற்றச்சுரம் தீரும்.

<u>ஐயசுரக் (கபசுரம்) குடிநீர்</u>

- - - - - - - - - - - - சுரந்தோன் றியநாளில்
கண்ட காலை முத்தக்குவில்வம் கடுநாம் நறுக்கி காலைதனிலே
கொண்டங் கோரோரர் நிறையாகக் கூட்டி கட்டி யிருநாழி
தண்டார் நீர்விட் டுழக்காகத் தானே காய்ச்சிக் கொடுத்திடுமே

கொடுநீ சோற மிவ்வுலையைக் கொண்டே யவித்த மறுநன்னீர்
படியே கொடுத்தாங் கெட்டாநாள் பகர்வேன் கேளு முதற்குடிநீர்
அடவே யிருநாள் பட்டிவிட் டடர்வேர்க் கொம்பு திப்பிலிசந்
தடலே முந்திரி கைக்கனியும் முற்ற திப்பிலி திரிபலையே

திரிந்தோ றொன்று நாற்கழஞ்சு சேர்த்தங் கிருநா ழிப்புனலில்
எரித்தே காய்ச்சி யெட்டொன்றாய் இசைந்த பெருங்கா யமுந்தேனும்
தெரிந்தே தயவாய்ப் பொடியுடனே சேர்த்தக் குடிநீர் தனையருந்தே
அருந்தேன் மொழியாய் பின்னிரண்டாங் குடிநீர் தன்னை அறைகுவமே

(<u>பொருள்</u>) ஐயசுரங் கண்டநாளே, கண்டங் கத்தரிவேர், சுக்கு, வில்வவேர் இவைகளை சமமாய்த் தாக்கி இரண்டு படி நீரிலிட்டு உழக்காகக் காய்ச்சிய குடிநீர்: குடிநீரை காலைமாலை கொடுக்கவும்.

(பொருள்) ஐயசுரங் கண்டநாளே, கண்டங்கத்தாரிவேர், சுக்கு, வில்வவேர் இவைகளை சமமாய்த் தூக்கி இரண்டு படி நீரிலிட்டு உழக்காகக் காய்ச்சிய குடிநீரை காலைமாலை கொடுக்கவும்.

மேற்படி குடிநீரையே உலையாகக் கொண்டு சோறாக்கி அதை நோயிருக்கு உணவாகக் கொடுக்கவும். இவ்வண்ணமாக மேற்படி குடிநீரையும் சோற்றையும் ஏழுநாள் கொடுத்தவரச் சுரம் தீரும். அப்படியும் சுரம் நீங்காமல் எட்டாம் நாளும் சுரம் விடாமல் இருப்பின் இரண்டு தினங்கள் பட்டினி வைத்து அதாவது எட்டாம் நாளும் ஒன்பதாம் நாளும் மேற்படி சோறு கொடாமல் வேறு கஞ்சி வகையில் எதாவது கொடுத்தப் பின் பத்தாம் நாளிலிருந்து பின் கூறப்படும் குடிநீரைத் தரவும்.

சுக்கு, திப்பிலி, சந்தனம், திராட்சைப்பழம், கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவை வகைக்கு நான்கு சுழஞ்சாகக் கொண்டு இரண்டுபடி நீரிட்டு உழக்காக வற்ற வைத்து பெருங்காயத் தூளும் தேனும் சுட்டி காலை மாலை கொடுக்க ஜுரசுரம் தீரும்

இறையுள் சீந்திற் பற்படகம் தன சிறமூ லஞ்சுக்கு பறையு
மெமுமுட் செடிவேரும் பாரிந்தோ ரொன்று கழஞ்சுரையாய்
செறிநீர் நாழி யிரண்டுவிட்டுச் சேரக் காய்ச்சி யெட்டொன்றாம்
உறையுந் தேன்திப் பிலியுடனே உண்பாய் நன்கு கரத்தெடுத்தே.

(பொருள்) சீந்தில்தன்டு, பற்பாடகம், சிறபஞ்சமூலம், சுக்கு முட்காய்வேளைவேர் வகைக்கு அரைக்கழஞ்சு கொண்டு இரண்டு படிநீரில் சேர்த்து எட்டிலொன்றாய்க் குறுகக் காய்ச்சி இறுத்த வடித்த திப்பிலி பொடியுடன் காலைமாலை சம அளவாகக் குடிக்க கபசுரம் தீரும்.

சுரமாம் வேர்க்கொம் புடன்கடுக்காய் கடுகு ரோகணி செவ்வியமும்
உரமாம் மஞ்சள் உம்பரில்லம் ஒரொன் றிரண்டு கழஞ்சுகொண்டு
பரமா யிருநா ழிப்புனலில் பாரத்தே காய்ச்சி உழக்கானால்
இரமாந் தேனிந் தப்புடனே யெடுத்தே நீயு மருந்துகவே

(பொருள்) சுக்கு, கடுக்காய்த் தோல், கடுகுரோகணி, செவ்வியம் மரமஞ்சள், தேவதாருக்கட்டை (சிலர் தேற்றான்கொட்டையைக் கூட்டுவர். அது சரியில்லை. இல்லம் என்பது தேற்றான்கொட்டை, ஆனால் தேவரில்லம் என்பது தேவதாருக்கட்டை. இதை அமுதசுரக்குடி நீரின்கீழ் 'மாறாமதுரம்' எனத் தொடங்கும் பாடலின் பொருளில் கண்டுகொள்க) இவைகளை வகைக்கு இருகழஞ்சாகக் கொண்டு இரண்டுபடி நீரிலிட்டு உழக்காகக் குறுக்கி இறுத்து வடிகட்டி தேனும் இந்துப்பும் கூட்டிக்கொடுக்க கபசுரம் தீரும்.

வாழ்வுபெறு சீந்திமர மஞ்சள்சிறு மூலம்
நீளியதோர் முந்திரிகை நிகர்றசெவ்வி யந்தான்
பாழுமுற காஞ்சொறிகள் பற்படக நாற்காய்
காளநிறத் திப்பிலித்தூ ள் தேனுட னருந்தே

(பொருள்) சீந்தில்தண்டு, மரமஞ்சள், சிறுபஞ்சமூலம், கொட்டைத் திராட்சி, செவ்வியம், சிறுகாஞ்சொறிவேர், பற்பாடகம், கத்தரிவேர் இவை வகைக்கு இருகழஞ்சு எடுத்து இருநாழி நீரிலிட்டு உழக்காகக் குறுக்கி இறுத்து வடித்து இருகூறாக்கி திப்பிலித் தூளுடன் காலை மாலை உட்கொள்ள ஐயச்சுரம் தீரும். ✓ (நாற்காய் என்பது தூதுவேளை எல்பாரும் உண்டு)

அருந்திருநன் னாரிபடர் தூதுவளை வட்டந்
திருந்தசிறு காஞ்சொறியும் மியங்கிவைகள் வேர்கள்
சொருங்குசொறி பாடாதோ டைதிரிப லாதி
பொருந்திவளர் சுக்கொடிம் பூறல்பங்கம் பாளை

பங்கமற வோரிரு கழஞ்சபக ரக்கேளி
பொங்குமிரு நாழிபுனல் போதவத்தில் வீசிக்
கொங்குலவு மெட்டிலொரு கூறுற விறக்கீ
திங்களென்ற முப்பினொடு திப்பலிகூட் டுண்ணே

(பொருள்) நன்னாரிவேர், தூதுவேளை, சிறுகாஞ்சொறி ஆகியவைகளின் வேர், ஆடாதோடை, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, சுக்கு, இம்பூரல், அடுதீன்டாப்பாளை வகைக்கு இருகழஞ்சு- நீர் இருநாழி கூட்டி எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி இறுத்து வடிகட்டி இந்துப்புந் தேனும் கூட்டிக் கொடுக்க ஐயசுரம் தீரும்.

வேலிப் பருத்திநொச்சில் மிக்க கண்டங் கத்திரியும்
கோவவரன் முள்ளியிஞ்சி கூறாய்க்கேள் - மூலி
செடியாடா தோடை சேராகக் கூட்டிப்
பொடியாகப் பிட்டுப் பூரி

இடிமருந்த தன்னை யெடுத்தப் பிழிந்த
வடிதிப் பிலிவா வி வைத்த - மிடவே
அகலவே பூபதியோ டிச்சுராங்கு சத்தைப்
புகலவே ஐயசுரம் போம்

(பொருள்) உத்தாமணி, நொச்சி, கண்டங்கத்தரி, வரல் முள்ளி, இச்சி, அடாதோடை இவ்வாறையுங்கொண்டு பிட்டவியலாக அவித்தப் பிழிந்த சாற்றில் தக்க அளவு எடுத்த சிறிது திப்பிலிப் பொடிகூட்டி, ஒரு பூபதி மாத்திரையுடன் கொடுக்க ஐயசுரம் போம் (இது துணை மருந்தாகிய சாறு என்க. குடிநீரல்ல)

பிட்டவியல் சுரசம்

ஐயவளிச் (கபவாத)சுரக்குடிநீர்

. . . .

சுரங்கண்ட நாளதிலே கபமே றாமல்
சார்பாக நெல்லியுடன் கடுக்காய்த் தான்றி
சரியாக நிறுத்துவித்தத் தண்ணீர் வாங்கி
நேராகத் திப்பிலியைப் பொடித்தத் தூ வி
நீயருந்து நான்மூன்றுக் கப்பா லேதான்
சீரான முதற்குடிநீர் விட்டுத் தூ த
செம்முள்ளி குறைக்கூட்டல் தேடுவாயே

தேடியே மதரங் கோட்டம் செஞ்சுந்து தேற்றான் விதைதோ
டாடியே முத்தக் காசோ டரியசீர் சமனாய்க் கூட்டி
நாடியே நீரும் நாழி நன்குற எரித்த வற்றிப்
போடுவா யிந்த சினி புகட்டியேகுடித்தி டாயே

(பொருள்) சுரம் தோன்றிய அன்றே கபதோடம் மீறாமல் கட்டுப் படுத்த நெல்லிமுள்ளி, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல் இவைகளைச் சமஎடையாக எடுத்த முறைப்படி குடிநீர் செய்த அதில்

..102

அதில் சிறுது திப்பிலிச் சூரணம் கூட்டி மூன்று நாட்கள் காலைமாலை சாப்பிடவும். அதன்பின் (நான்காம் நாளிலிருந்து) மேற்படி குடிநீரை நிறுத்திவிட்டு இனி கூறப்போகும் குடிநீரைச் செய்து புகட்டுக.

குடிநீர் வருமாறு:

தூதுவேளை, செம்முள்ளி, சிவனார்வேம்பு, அதிமதுரம், கோட்டம், செஞ்சந்தனக் கட்டை, தேற்றான்கொட்டை, கோரைக் கிழங்கு நற்சிரகம் இவ்வகளைச் சமஎடையாய்த் தூக்கி ஒருபடி நீர்விட்டு விதிப்படி குடிநீர் செய்து இருகூறாகச் செய்து இந்துப்பும் சர்க்கரையும் சேர்த்து காலைமாலை பருகுக. ஐயவாதசுரம் தீரும்.

ஸ்ரீ புகட்டியே குடித்த தன்பின் புதியசந் தனங் கடுக்காய்
தகட்டைய-நெய்தல்--சீந்தில்-தண்டுடன்
தகட்டைய நெய்தல் சீந்தில் தண்டுடன் கண்டங் காளி
பகட்டியே யாவும் ஒன்றாய்ப் பற்பாடா மிட்டுக் காய்ச்சி
அகட்டுறக் கதை நீரிட் டருந்திட வகன்று போமே.

(பொருள்) சந்தனக் கட்டை, அகில்கட்டை, கடுக்காய்த் தோல், நெய்தல் கிழங்கு, சீந்தில் தண்டு, கண்டங்கத்தரி, பற்பாடகம் இவை சமஎடையாக யெடுத்து முறைப்படி குடிநீரிட்டு தினமிருவேளை கொடுக்க கபவாத சுரம் தீரும்.

அகன்றுபோம் பொற்ற லைக்கை யான்குருந் தரனார் வேம்பு
இகன்றிடத் தூ துவட்டு வில்வபத் திரமே ரிந்த
சுகந்தரும் கரந்தை கோட்டம், சுக்கிலா மிச்சு மல்லி
திகந்தமும் மணக்கும் பச்சைத் திப்பிலியும் நெல்லிக்காயே
காயுடன் தேற்றான் வித்தச் சமச்சீரன் டாகக் கூட்டி
பாயுநீர் நாழி ரண்டு பற்றிய தீயிற் காய்ச்சி
மாயத உரியாம் வற்றி யசமோதப் பொடியிந் தப்பு
வாயினால் குடிக்கிற் சேற்ப வாதமாஞ் சுரங்கள் போமே

(பொருள்) மஞ்சள் கரிசாலை, சிவனார் வேம்பு, தூதுவேளை, வில்வ இலை, பேரிச்சன்காய், சிவகரந்தை கோட்டம், சுக்கு, லாமிச்சு கொத்தமல்லி, பச்சைத் திப்பிலி, நெல்லிமுள்ளி, தேற்றான்கொட்டை

வகைக்குக் கழஞ்சிரண்டாக எடுத்து இரண்டு படி நீரிலிட்டு உழக்காக வற்றக் காய்ச்சி இறுத்து வடித்த இரு பாகமாக்கி காலை மாலை சிறிது ஓமச் சூரணமும் இந்துப்புத்தூளும் கூட்டிக் கலக்கிப் பருக ஐயவளிச் சுரம் குணமாகும்.

<u>ஐயவழல் (குபமித்த) சுரக்குடிநீர்</u>

. . . .

தளப்பாளிறி யேறி வத்தில் தாலம்நீர் முள்ளி யின்வேர்
அரப்புண்ட நன்னா ராவில் ஞாயிவுள சாத்தா வாரி
கரைப்புண்ட நீரிற் காய்ச்சிக் கியாமத்தை வடித்திடாயே

வடித்தநீ ரலையாம்ப் பெய்து வாகாகச் சோற வித்தப்
பிடித்திரும் மிளகு நீரில் பிசரியேழ் போதக் குன்னதி
தடித்திடு சேற்ப வேகம் தனியும்பின் குடிநீர் கேளாய்
செடித்திரும் பற்கம் மல்லி தேற்றாள் வேர்க் கொம்பு காய்ச்சே
காசுக்சு
காசொடு தா றில் தன்பூக் கத்திரி யிப்பூ வட்டு
வாசியாம் பூவி ஓம்பை வளரும்பு மஞ்சான் றன்பூ
பேசிய கோட்டம் நற்சீர் பிச்சிப்பூ வீர வெங்காய்
மாசிலா மதுரஞ் சன்னி வளர்விதை மாசீசில் கூட்டே

விரைவுற சென்ப சுப்பூ வெள்ளுள்ளி சமனாயக் கட்டி
நெரியவே யிடித்த நீர்தாவ் நயிடி நாழி ரெண்டு
எரியிலாக் வற்றக் காய்ச்சி யிறுத்ததில் திப்பா வித்தூ வி
சரிசரி மித்த கோரே சனையூமேற் பொடியி டாயே

இட்டநீர் குடித்த போதே யிளைப்பிளை தொய்வு மூச்சுத்
தொட்டிடுஞ் சேற்ப பித்த சுரமுத லானவெல்லாம்
ஒட்டமாந் தாய்ப அத்தே இருப்பத்தால் பசிக்கில் பாகச்
சட்டமா யுண்ட புகிலவி தன்பொரு ளெல்லாம் போமே

(<u>பொருள்</u>) மன்புழு (பூநாகம்) நீர்முள்ளிவேர், நன்னாரிவேர், அவின் விழுது, தண்ணீர் விட்டான்கிழங்கு ஆகியவைகளைக் கொண்டு முறைப்படி குடிநீராக்கி அக்குடிநீரில் சோறாக்கி மிளகு ரசத்துடன் ஏழுநாட்கள் உண்ணக் கொடுத்தால் கபத்தில் தீர்குதிரும். அதன்பின் - அடுதீன்டாப்பாளை கொத்தமல்லி, தேற்றான்கொட்டை, சுக்கு, கோரைக்கிழங்கு,

ஞா தவேளைப்பூ, கண்டங்கத்தரிப்பூ, ஜாதிப்பத்திரி (வசுவாசி) நீ இலுப்பைப் பூ, மகிழம்பூ, கோட்டம், சிரதம், பிச்சிப்பூ, வெங்காயம் அதிமதுரம், சந்திரநாயகமத்தின் விதை, சடாமாஞ்சில், சன்பகப்பூ, வெள்ளைப்பூண்டு இவைகளை சமமாக எடுத்து இரண்டுபடி நீரில் பெய்து விதிப்படி குடிநீர் செய்து ஒரு உழக்காக வற்றியவுடன் இறுத்து வடிகட்டி இருபங்காக்கி அதில் திப்பிலி, இந்துப்பு, கோரோசனை இவைகளை ஓரளவாகப் பொடித்துப் போட்டு காலைமாலை உட்கொள்ளின் இளைப்பு, களைப்பு, அயர்வு, பெருமூச்சு, மூச்சுத் திணறல், ஐயவழற்சுரம் யாவும் தீரும்.

<u>குளிர்சுரக் குடிநீர் (பாலைத்தண்டுக் குடிநீர்)</u>

பாராம் கறிப்பா லையின்தண்டு பகருங் குதிரை வாலிகுமிழ்
சீரார் வேர்க்கொம் பதிவிடயம் சிறுதேக் குடனே கறைகண்டன்
நீரார் கோட்டம் பெருங்குரும்பை நிலவேம் பொடுகீழ்க் காய்நெல்லி
வாராம் விண்டு கிராந்திகொத்து மல்லி மதுரம் மரமஞ்சள்

மஞ்சார் குழலாம் ஒரொன்று வாங்கிக் கழஞ்சா நிறுத்ததிலே
எஞ்சா நாழி புனல்விட்டே யெட்டொன் றாகக் காய்ச்சியபின்
பஞ்சா ரிந்து திப்பிலிதேன் பரிவாய்ப் போட்டுப் பருகிடிலே

(பொருள்) கறிப்பாலைத் தண்டு, குதிரைவாலி (அம்மையார்கூந்தல்), பெருங்குமிழ், வேர், சுக்கு, அதிவிடயம், கண்டுபாரங்கி, சிவனார்வேம்பு, கோட்டம், பெருங்குரும்பை, நிலவேம்பு, கீழ்க்காய் நெல்லி, விஷ்ணுகாந்தி கொத்தமல்லி, அதிமதுரம், மரமஞ்சள் இவை வகைக்கு ஒரு கழஞ்சாகத் நீத் கொண்டு ஒரு படிநீர் விட்டு விதிப்படி குடிநீர் ஆக்கி இருகூறாக்கி காலைமாலை சர்க்கரை, இந்துப்பு, திப்பிலிச்சூரணம், தேன் இவைகளை சிறுசிறு அளவு சேர்த்து குடிக்க குளிர்சுரம்போம்

(பஞ்சார் - பஞ்சசாரம் - சர்க்கரை (செய்யுளில் வருவது)

<u>முறைச்சுரக் குடிநீர்</u>

குறைசே ரிதற்குப் பேராமுட்டி பொருந்தச் சுக்கு நிறைகாய்ச்சி
மறைசே ரிடையாய் பருகிவர மாய்ந்து போகும் முறைச்சுரமே
(சுரவாகடம்)

(பொருள்) பேராமுட்டியும் சுக்கும் ஓரளவாகக் கட்டி முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க முறைச்சுரம் தீரும்.

சரசீசேர் வெட்பா லையினரிசி தம்ய சீந்தில் பற்படகம்
திறசீசேர் கண்டங் காரிபுடோல் சிறுகாசீ சொறி நிலவேம்போ
டுரசீசேர் கோட்டம் முத்தக்கா சோரோர் கழசீசு புனலிதாறும்
வரசீசேர் நாழி யிரண்டுழக்காம் வற்றத் தீரும் வாதைகளே

(பொருள்) வெப்ச வெட்பாலையரிசி, சீந்தில்தண்டு, பற்பாடகம், கண்டங்கத்திரி, பேய்ப்புடல், சிறுகாசிசொறிவேர், நிலவேம்பு, கோட்டம், கோரைக்கிழங்கு ஒவ்வொன்று ஒவ்வொரு கழசீசுவீதம் எடுத்து இரண்டுபடி நீரிலிட்டு உழக்காய்க் காய்ச்சி காலைமாலை உட்கொள்ள குளிர்சுரம் தீரும்

கெருத்தார் பெரியா வரைபுள்ளை அளரும் பெரிய குமிழ்நெரிசில்
வருத்தா வில்வாக் கனிளைவேர் வளர்பேர் மல்லி சிறுமல்லி
அருத்தார் புகமுங் கத்திரியும் அரியார் பாதிரி வழதலைவே
ரெருத்தார் கோட்டம் மிளகுள்ளி யெருவேர்க் கொம்பு திப்பிலியே

திப்பிலி யுடனே யிவையெல்லாசீ சேரக் கட்டி யொருநிறையாம்
அப்பியி லிருநா ழியைவிட்டே அமரக் காய்ச்சி யெட்டொன்றாய்ச்
செப்புங் குடிநீர் தனையாற்றித் தேன்விட்டருந்தக் குளிர்ந்தவரும்
வெப்பை யெல்லாம் உடலிதனில் விட்டே ஓ யோடி விருங்கானே

(பொருள்)

பெரியாவாரைவேர், புள்ளைவேர், பெருங்குமிழ்வேர், நெரிசில் வில்வவேர், பேராமல்லி, சிற்றாமல்லி, கண்டங்கத்திரி, பாதிரிவேர்ப் பட்டை, சிறுவழுதுளைவேர், கோட்டம், மிளகு, பூண்டு, சுக்கு, திப்பிலி சம அளவாக எடுத்து குடிநீர் விதிப்படி குடிநீர் செய்து தேன் சேர்த்து காலைமாலை சாப்பிட குளிர்சுரம் தீரும்.

<u>அதிதித்தல்</u>

அத்தி மரத்தின் வேரைவெட்டி யதிலே கலசம் வைத்தா றி
மெத்த விழுந்த தண்ணீரில் மிகவே சீனிபே யெல்றசீ
சுத்தி வாழைப் பழச்சாறுந் துலங்கு நீரிற் கொடுத்திடவே
சித்தம் மயக்கும் குளிரசுவும் தீருந் செய்த பாரீரே.

(பொருள்) அத்திமரத்தின் வேரைவெட்டி அதனடியில் மட்கலத்தை வைக்க நீர் சொட்டும். அந்நீரில் சிறிய சுர்கண்டுத் தூ ளும் பேயன்வாழைப்பழமும் கூட்டிப் பிசைந்து வைத்து, ஒருநாள் சென்றபின் பிழிந்தெடுத்து வடித்த நீரைக் கொடுத்தவர்க் குளிர்சுரம் போம்.

பேய்ப்புடல் குடிநீர்

பேய்ப்புடல், பேய்ச்சீந்தில், பற்பாடகம், நிலவேம்பு, நிலாவாரை வெட்டிவேர், விலாமிச்சுவேர், சந்தனக் கட்டை இவைகள் வகைக்கு பலம் ஒன்று. நீர்படி இரண்டு விட்டு ஒரு உழக்காய்ச் சுண்டக் காய்ச்சி சமமாகப் பங்கிட்டு காலைமாலை தேன்கூட்டிக் கொடுக்க குளிர்சுரம் தீரும்.

குழிகைகள்

1. எருக்கன் கொழுந்து, வெள்ளைப்பூண்டு, பச்சை வசம்பு, மிளகு சுக்கு, பச்சை முருங்கைப்பூ இவைகளை ஒரெடையாக எடுத்து அரைத்து புன்னைக் காயளவு வெந்நீருடன் விழுங்கவும். குளிர்சுரம் போம்.

2. குப்பைமேனி வேர்ப்பட்டை ½ பலம், வெள்ளுள்ளி 5 பலம், மிளகு 1½பலம் ஆகிய இவைகளை மைபோல அரைத்து வேளைக்கு ஒரு புன்னைக் காயளவு காலைமாலை வெந்நீருடன் விழுங்கவும்.

சாரத்திற்குப் பற்று (சந்தனப் பூச்சு)

பாரா யிதமா ளாதாகில் பருகுமின் நீரை முகச்சினி
நீரா சத்தி பன்னுலைத்து நிறையுஞ் சந்தம் பன்னிரும்
சீரா யுடம்பு தனிற்பூசிச் செரியாம்ப் போர்த்து வைத்தக்கால்
பேராவுழலை பரிதாகம் பெரிய சுரமும் போய்விடுமே

போலவப் பரிகா ரங்கள் பொருந்தவே பலவுஞ் செய்தால்
வேளமுற் றெழுந்த தாகம் தபனமும் நீங்கித்தீர்ந்தே
யாளமெய் குளிர்ந்த போதில் அணுகிடும் வாத சந்நி
யினமுற் றடரா வண்ணம் இதன்குண மறிந்து செய்யே

(பொருள்) இவ்வகையில் மருத்துவம் செய்தும் நீங்காதாகில், சுர நோயினருக்கு வயிறு நிறைய (அளவுக்கு அதிகமாய்) இளநீரைக் குடிக்க வைத்து வாந்தியாகச் செய்விக்கவும். பிறகு, உடம்பு பூராவும் பன்னீரால் அரைத்த சந்தனக் குழம்பைப் பூசிக் காற்றுப்படாமல் நன்கு போர்த்து வைக்கவும். அப்படிச் செய்தால் உடலெரிவு, நீர்வேட்கை, மிகுதியாகக் காயும். சுரமும் போம்.

இவ்வகை மருத்துவத்தால் நோயாளியின் உடலில் குளிர்ந்திட்டால் வாதசந்நி தோன்றியதாக அறியவும். ஆகையால் மேற்படி சந்நயைப் பற்றி குறிப்பிட்டநேரத்தில் அகற்றப்பட்டு வாதசந்நியைத் தடுக்கவல்ல பெரிய மருந்துகளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். ஆகையால் நோயாளியின் உடலின் உரத்தைக் கவனித்து இச்சிகிச்சை செய்தல் வேண்டும்.

இவ்வண்ணம் (1) பட்டினி வைத்தல் (வெப்பான உணவு முறையை நீக்கி எளிதான கஞ்சி வகைகளைக் கொடுத்தல் முதலியன)
(2) பேதியாகவோ வாந்தியெடுக்கவோ தக்க மருந்துகளைக் கொடுத்தல் (3) வியர்வை (வேது) பிடிக்கச் செய்தல் (4) புகைபிடிக்கச் செய்தல் (5) வெப்புக்குத் திரிந்த குற்றங்களைச் சமநிலைக்குக் கொண்டுவரக் குடிநீர் வகைகளைக் கொடுத்தல் முதலிய சிகிச்சைகளைச் செய்ய பெரும்பாலான சுரங்கள் தீர்ந்திடும். அப்படியும் நீங்காத சுரங்களுக்கு பெருமருந்துகளாகிய மாத்திரை, பற்பம், செந்தூரம் சுண்ணம் முதலிய மருந்துகளை அவ்வகைகளுக்கு ஏற்ற துணை மருந்துகளுடன் கொடுத்து பிணியை நீக்கச் செய்தல் வேண்டும். நீண்டநாள் சுரத்துடன் உள்ள நோயினரை வீட்டிலோ மருத்துவமனையிலோ படுக்கையில் வைத்து முழு ஓய்வு கொடுத்து மருத்துவம் செய்தல் வேண்டும். இந்நோய்க்குரிய மருந்துகளைப் பிணியாளருக்குக் கொடுத்து நோய் நீங்கக் கண்ட தரமறிந்த மருத்துவத்தைக் கூறுவாம்.

<u>செய்மருந்துகள்</u>

பேதியாக்க(பழியவைக்க):∴ சஞ்சீவி மாத்திரை, அட்டபைரவ மாத்திரை தாழம்பூ மாத்திரை, கோடாசூரி மாத்திரை, இலவங்காதி மாத்திரை இகத்தியர் குழம்பு போன்றவைகளில் திரிபடைந்த குற்றத்துக்கு ஏற்றதான ஒன்றை நோயாளியின் வன்மைக்கும் நோயின் வன்மைக்கும் தக்கவாறு அளவுபடுத்தி கொடுத்த(கழிச்சலை) பேதிகாக வைக்கலாம்..

<u>உள்மருந்துகள்:</u>

பேதியாக்க-(கழியவைக்க)

<u>மாத்திரைகள்:</u> வசந்தகுசுமாகரம், பிரம்மானந்த பைரவம், விஷ்ணு சக்கரம், சாந்த சந்திரோதயம், வாதராட்சசம், எமதண்டக் குளிகை, கஸ்தூரிமாத்திரை, கோரோஜனைமாத்திரை திரிதோட மாத்திரை, குங்குமப்பூ மாத்திரை, அனந்தபைரவம் பச்சைக் கற்பூர மாத்திரை போன்றவைகளும்

<u>பற்பங்கள்:</u> தாளக பற்பம், அப்பிரக பற்பம், பவழபற்பம், முத்தபற்பம், முத்துச்சிப்பி பற்பம், வெள்ளிபற்பம், வெள்ளிய பற்பம், சிலாசில் பற்பம், கோட்டான் இறகு பற்பம் முதலியவைகளும்;

<u>செந்தூரங்கள்:</u> காந்த செந்தூரம், கந்தக செந்தூரம், இலிங்க செந்தூரம், மனோசிலை செந்தூரம், பலகறை செந்தூரம் சண்டமாருத செந்தூரம் முதலியவைகளும்:

<u>கருப்புவகைகள்:</u> கஸ்தூரிக் கருப்பு, தாளகக் கருப்பு, கோரோசனை கருப்பு, சிவனார் அமிர்தம், சுரி சிந்தாமணி முதலியவைகளும் சுரநோயைப் போக்க வல்லதாம்.

<u>மேற்கூறிய மருந்துகளை நோயிக்குத் தக்கவாறு கொடுக்குமிதம்</u>

விஷசுரத்துக்கு:- (1) வசந்தகுசுமாகர மாத்திரை . தினம் இருவேளை (காலை:மாலை) வேளைக்கு ஒன்றுவீதம் தேனிலிழைத்துக் கொடுத்து மேலே நொச்சிக் குடிநீர் கொடுக்கவும்.

(2) பிரமானந்த பைரவம்: தினம் இருவேளை (காலைமாலை) வேளைக்கு ஒன்றுவீதம் தேனுடன் இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்
(3) கிருஷ்ணசுந்தரமாத்திரையை: தினம் இருவேளை (காலை மாலை) வேளைக்கு ஒன்றுவீதம் தேனும் இஞ்சிச்சாறும் கலந்து அதில் கொடுக்கவும்
(4) வாதராட்சசன்: வேளைக்கு ஒரு மாத்திரை: தினம் இருவேளை (காலை மாலை) தேனிலிழைத்துக் கொடுக்கவும் (5) எமதண்டக் குளிகை: தினம் இருவேளை (காலை மாலை) வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் முசுமுசுக்கை-குழைத்- முலைப்பாலில் குழைத்துக் கொடுக்கவும். மேற்கூறிய மாத்திரை கொடுத்தும் பின் வாதசுரக் குடிநீர் வகையில் ஏதேனும் ஒன்றை முறைப்படி செய்து கொடுத்தால் நல்லபலன் உண்டு.

அழற்சுரத்துக்கு: (1) வசந்தகுசுமாகர மாத்திரையை: முன்கூறியபடியே தேனிலும் (2) சாந்த சந்திரோதய மாத்திரையை முன்கூறியபடியே பற்பாடகச் சாறு அல்லது குடிநீரிலும் (3) இலிங்க செந்தூரத்தை ஏலரிசிப் பொடியோடு முலைப்பாலிலும் (4) முத்து பற்பத்தை வெண்ணெயிலும் (5) வெள்ளி பற்பத்தைத் திப்பிலிச் சாற்றிலும் கொடுக்கவும் இவைகளின்பின் அழற்சுரக் குடிநீரில் ஏதேனும் ஒன்றை முறைப்படி செய்து குடிக்கத் தரவும்.

ஐயசுரத்துக்கு:- (1) எமதண்டக் குளிகையை கற்பூரவல்லி இலைச் சாற்றிலும் (2) வசந்தகுசுமாகர மாத்திரையை வெள்ளாட்டுப் பாலிலும் (3) பிரமானந்த பைரவ மாத்திரையை நீல் இலைச்சாற்றிலும் (5) கோரோசனைக் கருப்பை கொத்தமல்லிக் குடிநீரிலும், வீரசெந்தூரம் எள்ளளவு ஒருநாளுக்கு ஒரேவேளை - முலைப்பாலிலும், இரசகன்னம்

ஒரு அரிசியெடை ஒருநாளுக்கு ஒரே வேளை -தம்பைப் பூச்சாற்றிலும் கொடுக்கவும். கப(ஐய) சுரத்தில் மார்பில் கோழை மிகுதியாகக் கட்டி இருப்பின் தாளக பற்பத்தை ஒ உளுந்தளவு இலைக்கள்ளிச் சாற்றில் குழைத்துக் கொடுக்க கோழை நெகிழ்ந்து (கரைந்து) வாந்தியாகும்; சுரமும் குறையும். மேற்படி மருந்துகளுடன் மேலே கூறப்பட்டுள்ள கபசுரக் குடிநீரில் ஏதேனும் ஒன்றைத் துணை மருந்தாகக் கொடுத்துவர மிக்க நலம் பயக்கும்.

சிறப்பு_மருத்துவம்

(தேரையர் யமக வெண்பா முறைப்படி)

வஸ்துரத்தத்து_	உத்தம, மத்திம, அதம அதமமாகும்_ _ அளவுகள்	அனுபானம்	வேளைகள்_
பற்பவகை தாமிர பற்பம்	கருகு, தினையரிசி சாமை அரிசி, கொள் எள்ளும் பொருட்களின் அளவுகளில்	வெந்நீரில்	காலை, மாலை இருவேளை
அயநாகபற்பம்	ஒரு நெல்லளவு	தேனில்	௸
அப்பிரகபற்பம்	$\frac{1}{4}$, $\frac{1}{2}$, 1 (ஒரு) கடலை அளவு	பசுவின் நெய்	௸
தங்கபற்பம்	அவரைக்கொட்டையின் 6-ல் 1 கூறு 6ல் 2 கூறு, 6ல் 3 கூறு 6ல் 4 கூறு, 6ல் 5 கூறு முழுக்கொட்டை	சர்க்கரை	௸
~~வெள்ளி பற்பம்~~	~~நெல்லரிசி,~~		

சங்கு பற்பம்	2 முதல் 5 குன்றியளவு	பசுவின் வெண்ணெய்	காலை, மாலை இருவேளை
பவள பற்பம்	மிளகின் 5-ல் 1 கூறு 5-ல் 2 கூறு; 5ல் 3 5-ல்4, முழுமிளகளவு	பசுவின் வெண்ணெய்	ஷை
வெண்ணெய் பற்பம்	1 முதல் 8கடுகளவு	மகிழம் பூச் சாறு அல்லது இளநீர் அல்லது குளிர்ந்த நீர்	ஷை
தாளகபற்பம்	1-முதல் 8-ஒமத்தின் அளவு	காடி நீர்	ஷை
கந்தகபற்பம்	துவரையின் 8-ல் 1 கூறு 8-ல் 2 கூறு (கால்துவரை 8-ல் 3 கூறு 8-ல் 4 கூறு (அரைத்துவரை) 8-ல் 5 கூறு; 8-ல் 6 கூறு (முக்கால் துவரை) 8-ல் 7 கூறு; முழுத் துவரை அளவு	பசுமஞ்சள் சாறு	ஷை
பலகறைபற்பம்	கடலையின் 5-ல் 1 கூறு 5-ல் 2 கூறு, 5-ல் 3 கூறு, 5-ல் 4 கூறு; முழுக் கடலை அளவு	மகிழம் பூச்சாறு	ஷை

பற்பவகை	உத்தம, மத்திம, அதம, அதமாதம அளவுகள்	அநுபானம்	வேளைகள்
[illegible] பற்பம்	குன்றியின் 8-ல் 1 கூறு 8-ல் 2 கூறு (கால் குன்றி) 8-ல்3 கூறு; 8-ல் 4 கூறு அரைக் குன்றி, 8-ல் 5 கூறு 8-ல் 6 கூறு (முக்கால் கூறு-முழுக் குன்றி) அளவு	பசுவின் தயிர்	காலை மாலை இருவேளை
இலிங்க பற்பம்	துவரையின் 8-ல் 1 கூறு 8-ல் 2 கூறு (கால் துவரை) 8-ல் 3 கூறு; 8-ல் 4 கூறு (அரைத் துவரை; 8-ல் 5 கூறு 8-ல் 6 கூறு (முக்கால் துவரை) முழுத் துவரை	குறுவாலிலைச் சாறு	ஷை
ஆன் புள்ளிமான் கொம்பு பற்பம்	ஒரு கடலை அளவு	முலைப்பால்	ஷை
பெருங்கோட்டான் இறகு பற்பம்	ஒரு கடலை அளவு	பசுவின் வெண்ணெய்	ஷை

..112

ஆள்காட்டிக் குருவி இறகு பற்பம்	ஒருகடலை அளவு	பசுவின் வெண்ணெய் அல்லது தாம்ப்பால்	காலை, மாலை இரு வேளை

செந்தூரவகை	உத்தம, மத்திம, அதம, அதமாதம அளவுகள்	அநுபானம்	வேளைகள்
காந்தச் செந்தூரம்	½ முதல் 1 குன்றி அளவு	குளிர்ந்த நீர் (கொதிக்கவைத்து தானாக ஆறவிட்டது)	காலை, மாலை இருவேளை
வெள்ளியச் செந்தூரம்	½ முதல்1 குன்றி அளவு	சர்க்கரை	ஷை
தங்கச் செந்தூரம்	மேலே பற்பத்துக்கு கூறிய அளவே கண்டுகொள்க	கருந்துளசிச் சாறு தேன் சம அளவு கலந்து	ஷை
வெள்ளைச் செந்தூரம்	ஷை	பசுவின் நெய்	ஷை
தாளகச் செந்தூரம்	ஷை	குளிர்ந்த-நீர் மிளகுச் சாறு	ஷை
கந்தக செந்தூரம்	ஷை	குளிர்ந்த நீர்	ஷை
முத்து செந்தூரம்	மிளகின் 5-ல் 1 கூறு 5-ல் 2 கூறு, 5-ல் 3 கூறு, 5-ல் 4 கூறு முழு மிளகளவு	பசுவின் வெண்ணெய்	ஷை
பலகறைச் செந்தூரம்	படலையில் 5-ல் 1 கூறு 5-ல் 2 கூறு, 5-ல் 3 கூறு, 5-ல் 4 கூறு முழுக்கடலை	தும்பைப் பூச்சாறு	ஷை

-.-.-.- -

<u>அழற்சுரத்துக்கு</u>

பற்பவகை	உத்தம, மத்திம, அதம அதமாதம அளவுகள்	அநுபானம்	வேளைகள்
அயபற்பம்	தினையரிசி, சாமை அரிசி, நெல்லரிசி	வித்தாதி உக்களி	காலை மாலை இருவேளை
தாமிர பற்பம்	முன்னமே கூறிய இடத்தில் கண்டுகொள்க	தேன்	ஷை
வெள்ளியபற்பம்	ஷை	மச பசுவின் பால் அல்லது தேன்	ஷை

காரீய பற்பம்	குன்றியின் கால் கூறு; அரைக்கூறு, முக்கால் கூறு முழுக்குன்றி அளவு	தேன்	காலைமாலை இருவேளை
அப்பிரக பற்பம்	முன்னமே கூறிய இடத்தில் கண்டு கொள்க	பசுவின் தயிர்	ஷை
தங்க பற்பம்	ஷை	சர்க்கரை	ஷை
வெள்ளி பற்பம்	ஷை	பசுவின்பால்	ஷை
சங்கு பற்பம்	ஷை	நீராகாரம்	ஷை
பவள பற்பம்	ஷை	பசுவின் வெண்ணெய்	ஷை
பலகறை பற்பம்	கடலையின் 5-ல் 1 கூறு; 5-ல் 2 கூறு; 5-ல் 3 கூறு 5-ல் 4 கூறு முழுக்கடலை அளவு	சர்க்கரை	ஷை
வெண்ணெய்ப் பற்பம்	முன்னமே கூறிய இடத்தில் கண்டு கொள்க	கள் (தென்னை)	ஷை
தாளக பற்பம்	ஷை	செம்பருத்திச மூலச்சாறு	ஷை
கந்தக பற்பம்	ஷை	பசுமஞ்சள் சாறு	ஷை
கிளிஞ்சில் பற்பம்	ஷை	எருமைத் தயிர்	ஷை
இலிங்க பற்பம்	ஷை	கல்லாவிலைச் சாறு	ஷை
பெண்புள்ளிமான் கொம்பு பற்பம்	ஒரு கடலை அளவு	முலைப்பால்	ஷை
நாட்டுக்காடை இறகு பற்பம்	ஷை	வெண்ணெய்	ஷை

செந்தூரவகை	உத்தம, மத்திம, அதம அதமாதம அளவுகள்	அநுபானம்	அவளை
காந்தசெந்தூரம்	முன்னமே கூறிய இடத்தில் கண்டுகொள்க	கள் (தென்னை)	காலைமாலை இருவேளை
வெள்ளிய செந்தூரம்	ஷை	தேன்	ஷை
தங்க செந்தூரம்	ஷை	கருந்துளசிச் சாறும் தேனும் சம அளவு கலந்தது	ஷை
வெள்ளி செந்தூரம்	ஷை	பசுவின் நெய்	ஷை
கந்தக செந்தூரம்	ஷை	குளிர்ந்த நீர்	ஷை
தாளக செந்தூரம்	ஷை	மிளகுச் சாறு	ஷை

பலகறை செந்தூரம்	முன்னமே கூறிய இடத்தில் கண்டு கொள்க	பசுவின் மோர்	காலை, மாலை இருவேளை
முத்து செந்தூரம்	ஷை	முலைப்பால்	ஷை

ஜயசுரத்துக்கு

பற்பவகைகள்	உத்தம மத்திம, அதம அதமாதம அளவுகள்	அநுபானம்	வேளைகள்
அயநாகபற்பம்	ஒரு நெல்லளவு	தேன்	காலை மாலை இருவேளை
காந்த பற்பம்	குன்றில் ½ கூறு; ¼ கூறு; கூறு முழுக்குன்றி அளவு	வெள்ளைப் பூண்டுதைலம்	ஷை
வெள்ளிய தாளிர பற்பம்	முன்னமே கூறியுள்ளமை காண்க	துளசிச் சாறு	ஷை
தாமிர பற்பம்	ஷை	சர்க்கரை	ஷை
தங்க பற்பம்	ஷை	சர்க்கரை	ஷை
வெள்ளி பற்பம்	ஷை	வெந்நீர்	ஷை
சங்கு பற்பம்	ஷை	கடப்பஞ்சாறு	ஷை
பவழ பற்பம்	ஷை	பசுவின் பால்	ஷை
பலகறை பற்பம்	ஷை	பனங்கள்	ஷை
வெண்ணெய் பற்பம்	ஷை	சீந்திலிலைச் சாறு	ஷை
தாளக பற்பம்	ஷை	திருநீற்றுப் பச்சை இலைச்சாற்றில்	ஷை
கந்தக பற்பம்	ஷை	பசுமஞ்சள் சாறு	ஷை
அப்ரச்சில் பற்பம்	ஷை	வெள்ளாட்டுத் தயிர்	ஷை
இலிங்க பற்பம்	ஷை	பசுவின் தயிர்	ஷை
காட்டெருது கொம்பின் பற்பம்	ஒரு கடலை அளவு	முலைப்பால்	ஷை
சிறுகோட்டான் இறகு பற்பம்	ஷை	வெண்ணெய் (பொது) தேன் (அநுபவம்)	ஷை

செந்தூர வகைகள்

காந்த செந்தூரம்	முன்னர் கூறிய இடத்தில் கண்டு கொள்க	சீந்தில் இலைச் சாறு	ஷை
வெள்ளிய செந்தூரம்	ஷை	கற்கண்டு	ஷை
வெள்ளி செந்தூரம்	ஷை	பசுவின் நெய்	ஷை
கந்தக செந்தூரம்	ஷை	குளிர்ந்த நீர்	ஷை
பலகறை செந்தூரம்	ஷை	முலைப்பால்	ஷை
தாளக செந்தூரம்	ஷை	மிளகுச் சாறு	ஷை

2. முக்குற்ற நோய்

வேறு பெயர்: முப்பிணி நோய், சன்னி

இயல்: முக்குற்ற நோய் என்பது, ஒருவன் யாதேனும் ஒரு பிணியில் பீடிக்கப்பட்டுள்ளபோது, ஒரே சமயத்தில் வாத பித்த கப (வளியழலைய) மென்னும் முக்குற்றங்களும் தத்தம் அளவில் மிகுந்தெழுந்ததால் விளையும் துன்பங்கள் பலவற்றைத் தொடரச் செய்யக்கூடிய நோயாகும். இது பெரும் பாலும் தன்வழிச் சுரநோயைத் தொடர்ந்து வருவது இயல்பு. சிறுபான்மை, வேறு சில நோய்களைத் தொடர்ந்தும், சில ஒவ்வாத செயல்களை அடிப்படையாகக் கொண்டும் வருவதுண்டு அவை:

(1) அடிபடுதலால் காயங்கள் ஏற்பட்டு அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட தோல், தசை, நார், நரம்பு, இரத்த நாளங்கள் ஆகியவை அழுகி அதன் காரணமாகச் சுரம் ஏற்பட்டு (பிறவழிச்சுரம்) அது முற்றி உண்டாவதும்,

(2) வாதப்பிணியால் நீண்டநாள் படுத்த படுக்கையாய்க் கிடப்பவர்களுக்கு உண்டாவதும்

(3) பெண்கள் சூதகம் உற்றபோதும் (வீட்டுத் விலக்கு உற்ற சமயம்) அல்லது கருவுற்றிருக்கும் போதும், கருவுயிர்த்தபின்னரும் திடீரெனக் குற்ற வேறுபாடுகள் ஏற்பட்டு இந்நோய் வருவதும்,

(4) நஞ்சு சம்பந்தப்பட்ட நோயிலும், மருந்திட்டு நோயிலும் மரணமடையும் சில நாட்களுக்கு முன்னரோ, சிலநாழிகைக்கு முன்னரோ உண்டாவதும்,

(5) பத்தியக் கேட்டாலும் அன்பெண் உடலுறவு தோடங்களால் உண்டாவதும் (சகசன்னி என்பது)

(6) அதிசாரபேதி, இரத்த பேதியாகியவை மருத்துவத்துக்கு வசப்படாமல் முதிர்ந்த நிலையில் உண்டாவது,

(7) மிக்க பனியுள்ள நாடுகளிலும், மிக்க பனிபொழியும் காலங்களிலும் தற்காப்பின்றி உள்ளவர்களுக்கு உண்டாவதும்,

..116

(8) மருத்தவர், மருந்துகளை வழங்கும் மாறுபாடுகளால் நோயாளிக்கு சன்னி உண்டாவது என்பவைபோல்வனவாம். ஆகவே, சிலர் இதனைத் தனிநோய் என்று கூறுவர்.

<u>முற்குறி:</u> முக்குற்றப் பிணி தோன்றும் முன் பிணியாளனுக்கு, மறதி, மயக்கம், உறக்கமின்மை, ஊண் வெறுப்பு, மிகுந்த நீர்வேட்கை, காரணமின்றி அச்சம், சினம், சந்தேகம், மகிழ்ச்சி மிகுதியாகக் காய்தல் வாய் பிதற்றல், படுக்கை பொருந்தாமல் புரளல், படுக்கையிலிருந்து எழுந்து ஓட்டு, ஓடல், பாடல், ஆடல் முதலிய குறிகளைக் காட்டிப் பிறகு தன் உடலையும் துணிகளையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தல், தன் மக்கள் மனைவி, உற்றார், உறவினர்களை உற்று உற்றுப் பார்த்தல், கண்ணீர் விடல், சிலவேளைகளில் காரணமின்றி சீற்றங்கொளல், உரத்துக் கூப்பிடல், ஆடையை அவிழ்த்தெறிதல் முதலிய குறிகுணங்கள் காணல், பின் மூக்கு, கை, கால் ஆகியவை சில்லிடல், கண்ணொளி குன்றல், கண் பஞ்சடைதல், காதடைத்தல் தலை புரட்டல், கை கால் விங்குதல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

<u>நோய்வரும் வழி:</u> யாதேனும் ஒருநோயில் நலிவு கொண்டுள்ள போதினில் ஐயக்குற்றம் (கபதோடம்) பெருகக்கூடிய உணவுகளாலும், செயல்களாலும் ஐயம் பெருகி மற்ற இரு (வளி அழல்) குற்றங்களையும் தன்னளவில் மிகச் செய்து இப்பிணியைத் தோற்றுவிக்கும். அன்றியும், மாறுபாடான ஆன்பெண் உடறவாலும், கட்டிகள், தீச்சுட்டபுண் என்பு முறிவு இவைகளின் தொடர்பாகவும் முக்குற்றநோய் (சன்னி) தோன்றுவதுண்டு. அன்றியும்

ஓதமி வாறாரிதமான வாசனை பூறுந் லேயமெனும்
மாதயி லாதியி லேகுண மேதினில் வாதஞ் யாதிமுதல்
வேதமே வாமறு மாமெனி லாகும வேதமெய் வாறேதெனில்
யாதனை நீங்கனி நோய்வழி யால்வரு மாம;.தே யடிய

(தோல் சேகரப்பா - 383)

என்றமையால், மிகுந்த நல்மணம் தரக்கூடிய எண்ணெய்கள் வளிநோய்களைப் போக்குமென்றாலும், இவைகள் நன்றாகச் செய்து முக்கால் இருப்பினும் (செம்பாகக் குற்றம்) நன்கு முடிந்த தைலங்களாயினும் அவைகளைத் தேய்த்துத் தலைமுழுகி அவைகளுக்கான பத்தியம் சரிவர காக்காத குற்றத்தாலும் முக்குற்றப் பிணியாகிய சந்நிநோய் பிறக்குமென்று அறிக.

மன்னவன் மந்திரி சேனையர் கோவெனும் வாத முதற்பிணியால்
சன்னிக ளானது நோய்க ளெலாமிகு சர்ப்பமெ னாவருமே
கன்னிய ரான நிலங்களி லேபயிர் காமுக ராமுழவர்
புன்னிலை ரேத செனச்சிறு வித்திடு போதேமு மோதவனே

(தேரன் சேகரப்பா - 384)

(பொருள்) வளி, அழல், ஐய மெனும் குற்றங்களால் உண்டான முப்பிணி நோய்கள், மற்ற பிணிகளைப் போலின்றி, உடலில் பாம்பின் நஞ்சு போல விரைவாகப் பரவும். பெண்களாகிய நிலத்தில். பெண்ணிச்சையில் மூழ்கிய உழவர் பெண் இன்பந்தம்ப்பில் கருதி, சிறு உருவம் அமைந்த தவளத் தனுவை (விந்தவை) விதைக்குங்கால் முப்பிணிநோம் வந்தெம்தமென அறிக.

அன்றியும்,

அறிந்திடவே தருணசுரத்தவபத்யம் வந்தால்
ஆக்கிரமா மேமுவிதத் தோடமாகும்
தெரிந்திடவே யேதென்றால் சொல்லக் கேளாம்
தித்திப்புப் புளிப்பழற்சி கசப்பு மாகும்
பறிந்திடவே பாக்குவெற் றிலையும் பாலம்
பரிமளமாந் திரவியமும் பச்சைத் தண்ணீர்
தறிந்திடவே சமித்ய பண்டம் ஸ்திரீசை யோகம்
தரித்தேடு வாசித்த லழுதல்வழி நடையே

(பூ.வை.இ.சன்னி.பா.(20)

(பொருள்) சுரநோயுள்ளபோது, விதித்த பத்தியங்களைக் கடைப்பிடியாது கைவிடின், சில குற்றங்கள் மிகும். அவை, மிகுந்த இனிப்பு, புளிப்பு, கைப்பு சுவையுள்ள பொருள்களை உண்ணல், வெற்றிலை பாக்கு அருந்திய (சமித்தியம்) பொருள்களை உண்ணல், பெண்ணோடு கூடல் படித்தல், அழுதல், நடத்தல் என்பவைகளாம்.

வழிநடைதான் சுகந்தசந் தனமும் பூவும்
மணமான கற்பூரம் சிவந்த வதிரம்
நெருந்திடைதான் நெம்வெல்ல மெண்ணெயுடனே
நெகிழ்ச்சியாந் தயிர்மெத்த புடவை காற்று
சுழிடைதான் பெண்பாவை மெய்தீண் டிடலால்
சுரம்வந்த வொன்பதுக்கு னொன்ப தின்மேல்
பழிநடையிப் படிக்கொத்த அபத்யம் வந்தால்
பரிந்தமகா தோடம்வந்த பிறக்குந் தானே

(பூ.வை.சி.சன்னி-பா.(21)

(பொருள்)நோயுள்ளபோது சந்தனம், பூகற்பூரம் போன்றவைகளை முகர்தல்,சிவந்த ஆடைகளை உடுத்தல், நெய், வெல்லம், தயிர் முதலிய மந்தப் பொருள்களை மிகுதியாக உண்ணல், பெண்களுடன் உடலுறவு கொள்ளல், சுரம் வந்த ஒன்பதாம் நாளில் தகாத பொருள்களை உண்ணல், புதிய ஆடை உடுத்தல் ஆகிய செயல்களைச் செய்யின் முக்குற்றநோய் தோன்றும் என்பர்.

பதையாமல் செய்கின்ற சன்னி மார்க்கம்
    பாய்கின்ற விதங்கேளு பண்பாய் நீயும்
நிதையாம வெண்ணெயுடன் தீர்த்த மாடி
    நிறம்பெறவே தயிர்கூட்டிப் புசித்துப் பின்பும்
குறையாத மந்தமுடன் புணர்ச்சி கூடில்
    கூடியே வாயுதான் கபால மேறி
அதையாமல் மோகஞ்செய் போக மதுவே
    அப்பனே, அசதியோடு சன்னி யாமே

(18 சித்தர்-நாடி சார் காவியத்தில் நாடி)

(பொருள்) எண்ணெய் தேய்த்துத் தலை முழுகியபின் தயிரும் சோறும் சாப்பிட்டு மந்தப்பட்டிருக்கும்போது பெண்போகம் செய்தால் சுகசன்னி உண்டாகும்.

சன்னிதான் தோன்றும் போதச்
    சடமெலாம் வேர்வை காணும்
கன்னிதான் சுகத்தால் மைந்தா
    கண்கள்தான் சிவப்பே யாகும்
மன்னித்தால் காற்றா லையால்
    மகத்தான தோட மாகும்
வன்னித்தான் சுகத்தில் நன்றாம்
    விழுந்திடும் காயந் தானே

(18 சித்தர் நாடிசாத் - காவியத்தில் நாடி)

(பொருள்) இவ்வாறு எழுந்த நோயில் வளியும் ஐயமும் தன்னிலையில் திரிந்து மிகுதிப்பட்டு, வெண்ணின் உடலுறவால் தன் இயல்பு கெட்டவன்னி (பித்ததோடத்தை) மயக் கூடியதனால் மிக்க சுரமும், உடல் வியர்வையும், கண் சிவத்தலையும் உண்டாக்கி மிக்க அயர்வைத் தீரும். உடல் அயர்வால் நோயாளி படுத்த படுக்கையாவான்.

<u>நோய் எண்</u>: சில நூலோர் இச்சன்னிநோயைக் குறிற அளவாக வாதசன்னி (சீத வளிமுக்குற்றப்பிணி) பித்தசன்னி (அழல்முக்குற்றப்பணி) கப சன்னி(ஐயமுக்குற்ற பிணி) என மூவகையாகும் என்பர்.

வேறு சிலர் (பூகிமாமுனிவர்தம் வைத்திய சிந்தாமணியென்னும் நூலில்) சந்திக சன்னி, 2 அந்தக சன்னி, 3. ருத்தாக சன்னி, 4.சித்தவிப்பிரம சன்னி, 5.சீதாங்க சன்னி, 6. தாந்திரிக சன்னி, 7.கண்டகுப்ச சன்னி, 8.கர்ணிக சன்னி, 9. புக்னநீத்நேத்ர சன்னி, 10. ரத்தஷ்டீவிசன்னி, 11.பிரலாப சன்னி, 12.ஜிம்மிக சன்னி, 13.அபிநியாச சன்னி என பதின்மூன்றென்பர். இதைப் பின்வரும் பாடலால் உணர்க.

தானென்ற சன்னியிட நிதானந் தன்னைச்
சாற்றிடவே பதின்மூன்றாம் சந்திகமாச் சன்னி
ஆனென்ற அந்தகமாஞ் சன்னி தானும்
அதிகருத் தாகசன்னி சித்தவிப் பிரமம்
தேனென்ற சீதாங்கச் சன்னி யோடு
சிறியதாந் திரிகசன்னி கண்ட குப்சம்
கானென்ற கர்ணிகமாம் சன்னி யோடு
கடுபுக்ன நேத்ரசன்னி யுந்தா னாமே

(பூகி.வைத்.சிந்.சன்னி. பா(1))

தானான ரத்தஷ்டீவி சன்னி யோடு
தக்கபிர லாபசன்னி ஜிம்மக மாஞ்சன்னி
ஆனான அபிநியாசச் சன்னியோடு
அடங்கலாம்ப் பதின்மூன்று சன்னி தன்னில்

(பூகி.வைத்.சிந்.சன்னி -பா(2))

தேரையர் குற்ற அளவாகத் தோன்றும் மூவகைச் சன்னிகளுடன் நிபசன்னி, சோகசன்னி, மோகன சன்னி, விடசன்னி, தீசன்னி, மந்தசன்னி, கண்ட சன்னியென ஏழையுங் கூட்டி சன்னிகள் பத்தென்பர்.

சிலநூலோர் சுக சன்னியென்னும் பெயரால் ஓர்வகைச் சன்னியுண்டெனக் கூறுவர்.

இவைகளன்றி, பெண்பாலோர்க்குச் சூதகக் காலத்தில் ஏற்படும் சூதகசன்னியும், பிள்ளைப் பேறடைந்தவுடன் அல்லது பேறுகாலத்தில் காணும்

பிள்ளைப்பேற்றுச் சன்னி அல்லது பிரசவ சன்னியும் மேற்படி முக்குற்றப் பிணிகளுள் அடங்கும்.

இப்பிணிகளின் குறிகுணம், மருத்துவம் முதலானவைகளை மேலே கூறிய முறைப்படி முதலில் குற்ற அளவாய்த் தோன்றும் முக்குற்றப் பிணிகளையும், அடுத்து கூறப்பட்ட பதின்மூன்று சன்னிகளையும், ஈற்றில் தேரையர் கூறிய பத்துசன்னிகளையும் விவரிப்பாம். பெண்களுக்கே சிறப்பாகக் காணும் சன்னிவகைகளிரண்டை மகளிர் மருத்துவம் சூல்மருத்துவம் என்ற நூல்களில் கண்டுகொள்க.

குற்ற_அளவான_சன்னிகள்

வாத_முக்குற்றம்_(வாதசன்னி) (அ) வளிமுப்பிணி:-

சிரமு நடுக்கும் பற்கடிக்கும் சீறு மிருமும் உவாதிக்கும்
கரமுங் கால மெடுத்தடிக்கும் கண்ணும் முகமும் மினுமினுக்கும்
உரமுந் துடிக்கும் நாவரளும் ஓயாச் சுரமும் பிரமையுமாம்
சரீர நடுக்கந் தளர்ச்சியுமாம் சுரமு மிதுவே சன்னிபாதம்

(பொருள்) வளிமுப்பிணி சுரத்தில் தலைநடுக்கல், பல்கடித்தல் யாரைக் கண்டாலும் சீறி விழுதல், இருமல், கையையும் காலையும் தூக்கித் தூக்கிப் போடல், கண்களும் முகமும் மினுமினுத்துக் காணல், நெஞ்சு துடித்தல் நாவரளல், விடாச்சுரம், பிரமை, உடல் முழுமையும் நடுக்கல், உடல் தளர்ச்சி ஆகிய குணங்கள் உண்டாகும்.

உடல்சோர் சன்னி வாதசுரத் தின்டாங் குணத்தை யுரைத்திடிலே
பிடர்நோந் தலைநோ மறிவுகெடும் பிதற்று மிருமும் பேய்போலே
படரும் புண்போ லுடல்நோவாம். பருகுந் தண்ணீர்தாகமுண்டாம்
விடமே போல வாய்கசப்பாம் மிகவும் வெதுப்பு முழலையுண்டே

(பொருள்) வளிக்குற்ற நோயில் உடல் சோர்வடையப் பிடரியும் தலையும் நோதல், அறிவுதடுமாறிப் பிதற்றல், பேய்போல் ஆடல், பெருத்த இருமல் தொடர்ந்து காணல் (பேய்இருமல்) உடல் புண்போல நோதல், மிகுந்த நீர்வேட்கையும் அதிக நீர்பருகலும் காணல், நஞ்சுண்டதுபோல நா கைத்தல், உடல் வெதும்புதல், வெப்பத்தால் உடல் நிலை கொள்ளாமல் நலிதல் என்னும் குறிகுணங்கள் காணும். அன்றியும்,

உண்டே கழிச்சல் நாவூலரும் ஒது மிதற்கு வாய்நாசி
விண்டே புண்ணாம் நாகருக்கும் மிகவே நாக்கு புண்ணாதல்
தண்டேன் மொழியாய் சத்தியுமாம் தள்ளிப் பரிகா ரஞ்செய்யில்
கண்டேர் மொழியாய் கணபதிக்குக் களிக்கப் பூசை வழங்கிடுமே

(பொருள்) அடிக்கடி வயிறு கழிதல், நாவுலரல், வாய், மூக்கு, நாக்கு ஆகியவை புண்ணாதல், நாகருப்பாகக் காணல், அடிக்கடி வாந்தியாதல் என்னும் குறிகுணங்களையும் பெறும். மேலும்,

சந்தி பாத சுரக்குணங்கேள் தலைநோ விளைப்பு மிருமலுமாம்
வெந்நீ ரெளவே உடல்வெதும்பும் வேர்க்கும் வயிறு கெட்டுவிடும்
முன்னப் பலகாலும் வேர்க்கும் உதரம் வலிப்பும் உளைத்தலுமாம்
தன்னீ மிகவே பெருமூச்சுத் தாளும் விழியுந் திறவாதே.

(பொருள்) தலைநோய், இளைப்பு, இருமல், வெந்நீர்போல உடல் வெதும்பும், வியர்க்கும், வயிறு நொந்து ஒருபுறம் சுருட்டிப் பிடித்ததுபோல வேதனை(உளைச்சல்)யுடன் செரியாமையும் உண்டாக்கல், பெருமூச்சு வாங்கல், கண்களைத் திறக்கவொட்டாமல் செய்தல் என்னும் குறிகுணங்கள் உண்டாம்.

<u>அழல் முக்குற்றச்சுரம்(பித்தசன்னி) - (அ) - அழல்முப்பிணி</u>

மிகுந்துறும் குளிரும் பித்தம் மூர்ச்சையும் ஊமை போல
நகுந்துறும் மொழிவ ராது நல்லுடல் சோர்த லாகும்
மிகாந்துறும் குளிரும் கண்ணுடன் செவியும் செவியும் மந்தம்
சகந்தனில் நீரை யுணஉறும் சுரபித்த சன்னி யாமே

(பொருள்) அழல் குற்றத்தினால் தோன்றிய சன்னியில், குளிரும் பித்தநீர் சுரப்பும் மிகுதிப்படுதல், மூர்ச்சையாதல், ஊமைபோல மொழிகள் பேசவராமல் இருத்தல், நல்ல உரமுள்ள உடல் திடீரென்று சோர்வடைதல் கண், தலை, காது இவைகளின் செயல் மந்தப்படல், தண்ணீரை மிகவிரும்பி அளவு கடந்து குடித்தல் என்ற குறிகுணங்கள் காணும்.

ஐயமுக்குற்ற (ஐயமுப்பிணி) சுரம்: கபசன்னி

நீடி அடித்துப் போட்டாற் போற்கிடக்கும் அறிவைக் குலைக்கும் பேச்சுமிலை
நொடிப்பி ரிப்பு மில்லையெனும் நோவா கும்மேல் மூச்செறியும்
எடுத்தக் கண்ணு நீர்விழுந்த எறிட் டுப்பார்த் திளைப் பெய்தும்
சடுதி யாயுங் கால்குளிருஞ் சன்னி சீத சுரமாமே.

(பொருள்) ஐயமுக்குற்றச் சுரத்தில், உடல் பூராவும் அடிபட்டவன்போல செயலற்றுக் கிடத்தல், அறிவு குலைதல், பேச்சற்றுப் போதல், அடிக்கடி உயிரற்றவன்போல மூச்சோட்டம்கூட மிக மந்தப்பட்டும் உணர்ச்சியற்றும் கிடத்தல், உடல் முழுதும் நோதல் (சில சமயங்களில்) பெருமூச்சு அதிகமாய்க் காணல், கண்களில் நீர் பாய்தல், கண்களால் ஒவ்வொன்றையும் எறிட்டுப் பார்த்தல், அடிக்கடி இளைப்புண்டாதல், கைகால்கள் குளிர்தல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

பதிமூன்றாக வகுத்த முப்பிணிகள் (யூகிமுனிவர்)

. . . .
பானான சன்னிபதின் மூன்றுக் குள்ள
பரிவான குணமெல்லாம் பண்பாய்க் கேளே
(யூகி, வைத். சிந். சன்னி. பா (2)

பொருள் வெளிப்படை

1. சந்திக சன்னி

பண்பான சந்திகசன்னி யதினி னைந்தால்
பகரவே தேகமுமெய் போதம் போலாம்
உண்பான வுடல்தனில் குத்தல் காணல்
உயிர்சோக மாயிருத்தல் கால்வ லித்தல்
திண்பான சிலேட்டுமமே மிகுந்த காணல்
தியக்கமாய்க் கண்திறவா மற்றான் முடல்
தென்பான தேகமெல்லா மெரிச்சல் காணல்
தேகமெலாங் குளுமையாய் இருக்கும் பாரே
(யூ. வை. சி. சன்னி. பா (3)

(பொருள்) சந்திக சன்னியில் பிணியாளனின் உடல் மேற்பார்வைக்கு எப்போதும் போலக் காணப்படும்; ஆயினும் உடல் முழுமையும் குத்தல், வலி காணும்; மனக்கலக்கத்துடன் சோகக் குறி தென்படும். கால்கள்

(மூட்டுகளில்)நோதல் (நாடியிலும் சிலேத்தமதி தாலங்களிலும் மற்ற இரு குற்றங்களைக் காட்டிலும் ஐயம் ஓங்கிக் காணப்படும். மிகுந்த மயக்க மேற்பட்டுக் கண்கள் திறக்க இயலாதபடி மூடியோ கிடத்தல், உடல் எல்லாம் எரிச்சல் காணினும் புறத்தே தொட்டுப் பார்த்தால் மிக்க குளிர்ச்சியாகக் காணப்படும்.

2. அந்தக_சன்னி

இருக்குமே நாவரளுந் தண்ணீர்த் தாகம்
    எரிவுண்டாய்த் தேகமெல்லாம் பிரமை யாகும்
தருக்குமே தலைசுற்றல் மிகவுங் காணும்
    தன்னிலே வாய்பிதற்றும் வாந்தியாகும்
விருக்குமே விக்கலொடு சுரந்தா னுண்டாம்
    மேன்மையாங் கைகால மசதி யாகும்
பருக்குமே தலைதன்னில் பாரங் காணும்
    பாரந்த கச்சன்னி யாதந் தானே

(பூ.வை.சி.சன்.பா (4)

(பொருள்) அந்தக சன்னி நோயினருக்கு நாவரட்சி, நீர் வேட்கை, உடலெரிவு, மயக்கம், தலைசுற்றல், தனக்குத்தானே வாய் பிதற்றல், வாந்தியாதல், விக்கல், உடல் சூடு மிகுதிப்பட்டுக் காணல், கைகால் அயர்வு தலை கனத்தல் அல்லது பளுவாகத் தோன்றல் என்ற குறிகுணங்கள் காணப்படும்.

3. உருத்திரக_சன்னி

சன்னியென்ற உருத்தாகந் தன்கு ணங்கேள்
    தவித்துமே பிரதாப மெரித ‌ண்டாம்
தின்னிசித்தப் பிரமையோடு கழுத்து நோதல்
    தேகமெலாங் குத்தலுண்டாய்த் தியக்க மாதல்
பின்னிடை கொள்ளாமல் புரளல் மெத்த
    பின்கண்ட பெருடனே முறைபா டாதல்
உள்ளவுத ருலர்தல் நெற்றி வியர்வை யாதல்
    உருத்தாக சன்னியென வுரைக்க லாமே

(பூ.வை.சிந்.சன்னி (5)

(பொருள்) உருத்தாக சன்னிப் பிணியாளனுக்கு, படுக்கையில் தங்காமல் அரற்றலும், புரட்டலும் காணும். அதனால் அவனுடைய தவிப்பு மிகும். உடல் முழுமையும் எரிதல் உண்டாம். மனம் மருண்டு காணப்படும். கழுத்தில் வலியுண்டாம், உடல் முழுமையும் குத்தல், உடல் சோர்தல், படுக்கை பொருந்தாமை, படுக்கையில் புரளல், கண்டவர்களிடமும் முறையிடுதல்போல பரிதாபகரமாய்ப் பேசுதல், உதடுகள் உலர்தல், நெற்றி வியர்த்தல் என்னும் குறிகுணங்கள் காணும்.

4. சித்தவிப்பிரம சன்னி

உரைக்கவே சித்தவிப்பிரம சன்னி தன்னை
  உடம்பெல்லாம் மிகக்கறுத்து நோத லுண்டாம்
வரைக்கவே வாதமொடு பித்தம்
  மருவியசித் தப்பிரமை நினைவி முத்தல்
நரைக்குநா வாவிதழுவி குணமாய்க் காணல்
  நவியாயிப் பாடியே வாய்பி தற்றல்
இரைக்கவே சுவாசமொடு பேதி யாதல்
  இருந்தவிடம் விட்டுமே போகும் பாரே

(யூ.வை.சி. சன்னி-பா.(6)

(பொருள்) சித்தவிப் பிரம சன்னியில், நோயாளியின் (இயல்பான நிறம் மாறி) உடல் கருநிறமடையும், உடல் பூராவும்நோவும், வலியும் அமையும் (வாதபித்த தோடங்கள்) மிகுதிப்பட்டு (நாடிகளிலும் அவ்வவற்றின் இடங்களிலும்) காணப் படும். மனத்தில் ஒருவகை மருட்சி (அச்சக்குறி) தோன்றும், உணர்வு அழிதல் குணம் பற்பல வகையாக மாறிக் கொண்டே வரும், (பிணியின் வன்மையால் நாளுக்குநாள் உடலில்) தப்பங்கள் மிகும். பாடிப்பாடிப் புலம்பும்; இரைப்பு, பெருமூச்சு, (விடாக) கழிச்சல் என்னும் குறிகுணங்கள் தோன்றும்.

5. சீதாங்க சன்னி

ஏகவே சீதாங்க சன்னி தன்னை
  யெய்ப்படவே சரீரமெல்லாங் குளிர்ந்தி ருத்தல்
ஆகவே யிருமலொடு இளைப்புண் டாதல்
  அசதியொடு விக்கலுடம் பெல்லா மோதல்

மோகவே வாந்தியோ டழற்றல் மூர்ச்சை
    முரண்டுமே தேகமெல்லாம் அசைதல் காணல்
பேகவே பேதியடிக் கடியுண் டாதல்
    பிதற்றியே புலம்பிமிகப் பேசுந் தானே

(பூ.வை.சி.சன்னி.பா(7)

(பொருள்) சீதாங்க சன்னி கண்டவனுக்கு, உடலெங்கும் சில்லிட்டிருத்தல் இடைவிடாத இருமலும், மிகுந்த களைப்பும் காணல், உடல் மெலிதல், விக்கல், உடலெல்லாம் நோதல், வாந்தியாதல், உடலில் அழற்சி யுண்டாதல், மூர்ச்சையுண்டாதல், படுக்கையில் உள்ளபோதே உடல் முழுமையும் ஆட்டங்காணல், அடிக்கடி கழிச்சல் காணல், கூறியதையே மீண்டும் மீண்டும்கூறி வாம்பிதற்றல் உண்டாதல் என்னும் குறிகுணங்கள் காணும்.

6. தாந்திரிக சன்னி

கூறுக
பேசுமே தாந்திரிக சன்னி தானும்
    பிதற்றலாம் வாய்ப்பிரா வுத மாகும்
கூசுமே நாக்குவும் மிகக் கறுத்து
    கூர்முள்ளு போல்நாக்கில் தண்ணீ ரில்லை
தாகமே உடலலர்ந்து தாபங் காணும்
    தவிப்பெய்து வயிறும்போம் சுவாச முண்டாம்
வீசுமே திலவெடுத்து கண்பருத்து
    மிகத்தண்ணீர் பாய்ந்துசுரம் மிகுதி யாமே

(பூ.வை.சி.சன்னி (8)

(பொருள்) தாந்திரிக சன்னி கண்டவன், வாய்பிதற்றுவன், வாயின் உட்புறத்தை நாவை யோட்டியோட்டி எப்போதும் துழாவிக் கொண்டே இருப்பான். நாக்கு மிகவும் கறுப்பாகிக் கூரான முள்பரப்புபோலவும் நீர்ப்பசையற்றும் காணல், உதடு வரளல், நீர்வேட்கை காணல், மிக்க தவிப்பொடு (மிக்ககடுப்பால்)வயிறு கழிதல், இரைப்புண்டாதல், உடலில் திலவு காணலும், கன்னங்களிலும் புறமும் திலவு கண்டு கண்ணிமையும் கண் முட்டையும் வீங்கிக் கண்களினின்று நீர் வடிதல் என்னும் குறிகுணங்கள் காணும் சுரமும் மிகக் கடுமையாகக் காயும்.

..126

7. கண்டகுப்ச சன்னி

மிகுதியாய்க் கண்டகுப்சம் விளம்பக் கேளாய்
மிகப்பிரமை தான்வருதல் தாபமாதல்
தகுதியாய்த் தலைசுற்றல் சந்தோ ஷ உழித்தல்
தனுப் போலக் கழுத்தநரம் பிழுத்துக் கொள்ளல்
பகுதியாய்ப் புலம்பல்பயப் படுதல் மூர்ச்சை
பாரமாய்ச் சரீரமெல்லாம் நோதல் காணல்
வகுதியாம் வாந்தியோ டிருமல் விக்கல்
மார்புதலை நோதலாய் மருவு மாமே

பூ.வை.சி.சன்னி.(9)

(பொருள்) கண்டகுப்ச சன்னியின் குறிகுணங்களாவன. மனமருட்சி, வெப்பத்தால் (எரிவும், நீர்வேட்கையும், உழலலும்) காணல் தலைசுற்றல், முகத்தில் மகிழ்வுக்குறி காணப்படல், வில்லை வளைத்திழுத்தபடி கழுத்து நரம்புகள் இழுத்துக் கொள்வதால் தலை (முன்னுக்கோ பின்னுக்கோ பக்கவாட்டிலோ) வளைந்து நிற்றல், முழுதும் புலம்பலின்றி ஓரளவுக்குப் புலம்பல் (கழுத்து நரம்பு இழுத்துக் கொள்ளலின் நிலையைப் பொறுத்து புலம்பல் அமையும் என்பது கருத்து) அச்சத்தின் குறி காணல், மூர்ச்சை-யாதல், உடல் கனத்து வலித்தல், மிகுதியான வாந்தி, இருமல், விக்கல் இவைகளினால், மார்பும் தலையும் நோதல் என்பன.

8. கர்ணிக சன்னி

மருவுகர்ணி காசன்னி பாதந் தன்னை
வருத்திடவே வாய்பிதற்றல் வெடித்தல் காணும்
நருவுநாக் குக்கறுத்தப் பிரவா பித்தல்
நடுக்கியே விக்கலோ டிரைப்புக் காணல்
உருவுமுடம் பெங்குமே யசைத லாதல்
உற்றசெவி கேளாது காதி ரைச்சல்
தருவுதலை பாரமாம் நடுக்கல் காணல்
தண்ணீர்மே லடிக்கடிக்குதி தவித்த லாமே

பூ.வை.சி.சன்னி.பா(10)

(பொருள்) கர்ணிகசன்னியில், வாய்பிதற்றல், உதடு, நாக்கு முதலியவாயின் பாகங்களில் வெடிப்புகள் கண்டு புண்ணாதல், ~~நாக்கு~~ கருநிறமடைதல், சு

வருத்தக் குறியுடன் உரத்த குரலில் புலம்பல், உடல் முழுதும் நடுக்கல், விக்கல், இரைப்பு இவை காணல், உடல் மிகுதியான ஆட்டங் கொள்ளல் காதுகள் கேளாமற் போதல், காதில் பெரிய இரைச்சல் கேட்டுக் கொண்டே இருத்தல், தலை கனத்தல், தலை நடுக்கல், நீர்வேட்கை மிகுதல் என்னும் குறிகுணங்கள் காணும்.

9. புக்ன_நேத்திர_சன்னி

தவித்தபுக்ன நேத்ரசன்னி பாதந் தன்னைச்
சாற்றிடவே சரீரமெல்லாம் சயித்திய மாதல்
குவித்தகண் திறந்துமே அழன்றி ருத்தல்
தூ மிகண்ணீர் யாந்நதுமே தியங்கிச் காணல்
கவித்தகண் ணிப்பார்வை காணாதி ருத்தல்
கருச்சித்தம் பிரகமையாம்ப் பிரலா பித்தல்
பவித்துடம்பெல் லாம்வாத பதைப்புக் காணல்
பாந்தெழும்பு மக்கிலிபோல் சுரமுண் டாமே

(பூ.வை.சிந்.சன்னி.பா.(11)

(பொருள்) புக்ன நேத்திர சன்னியில் தொடக்கத்தில் வலியையங்கள், மிகுதிப்பட்டுள்ள காரணத்தால் உடல் முழுமையும் தொட்டுப் பார்க்கில் குளிர்ச்சியாகக் காணப்படும், இருகண்களும் இமையாமல் திறந்தே இருக்கும். விழிகள் சுழன்று கொண்டே இருக்கும். கண்ணீர் மிகுதியாக வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும், மயக்கம் காணும், கண்களில் நீர் மல்கிய காரணத்தால் கண் பார்வை மங்கும். பின் கொடி மனமருட்சியால் மிகவும் வாய் பிதற்றி அரற்றல், உடலெல்லாம் வாத இழுப்பு காணல், அனல் வீசுதல் போன்ற உடல் காய்ந்த காணல் என்னும் குறிகுணங்கள் காணும்.

10. இரத்தட்டீவி_சன்னி

சுரமான ரத்தட்டீவி சன்னி தன்னைச்
சொல்லிடவே நாக்குதடு வெடித்தே காணல்
நிறமான ரத்தமாம் வாந்தி யாதல்
நெருப்பாகச் சுரமடித்தல் உஷ்ண மாதல்
திறமான வாய்வரளல் அத்தப் பிரமை
தியங்கியே விளைவறிதல் விக்கல் காணல்
தரமான தலைசுற்றல் கறுப்பாம் நாக்குந்தி
தருகாத கேளாம விருத்தல் தானே

(பூ.வை.சிந்.சன்னி.பா(12)

(பொருள்) இரத்தபட்டீனி சன்னியின் குறிகுணங்களாவன :- பிணியாளியின் நாவும் உதடுகளும் வெடித்துக் காணல், குருதிபோல செந்நிற வாந்தி உண்டாதல் அல்லது நல்ல செந்நிற இரத்தமே வாந்தியில் மிகுதியும் வெளிப் படல், சுரம் அனலைக் காய்தல், மிகுதியாக வெப்பமுண்டாதல், வாய் உலர்ந்தபோதல், மனமருட்சிகாணல், மயக்கமுண்டாதல், நினைவு கெடல் (சாப்கமறதி) விக்கலும், தலைசுற்றலும் அடிக்கடி உண்டாதல், நா கருநிறமடைதல், காதுகள் கேளாமை என்பனவாம்.

11. பிரலாப சன்னி

இருத்தல் பிரலாபமாஞ் சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெல்லாம் அசைவு காணல்
புருத்தல் புலம்பலட்ட மனமாய் இருத்தல்
புண்ணாக சரீரநொந் திருமல் காணல்
அருத்தல் தாபச்சுர மாய்த்தா லடித்தல்
அடிக்கடிக்கு விக்கலொடு மூர்ச்சை காணல்
வருத்தல்மயிர்க் கூச்செறிதல் முகமும் வாடல்
வாயலறி யோடிவிடும் வன்மை தானே

(பூ.வை.சி.சன்னி.பா.(13)
(பூ.வை.சி.சன்னி பா.(13)

(பொருள்) பிரலாப சன்னிநோயில், உடல் படுக்கையில் தங்காமல் எப்போதும் அசைவுடன் (கம்பம்) காணப்படல், சிறுதலும் புலம்புதலும் கொண்டிருத்தல், உடல் முழுமையும் சூடாக (சுரத்தால்) இருத்தல், உடல்புண்போல நோதல், இருமல்காணல் (பெரும்பாலும்) சுரம் எரிச்சலுடன் காய்தல், அடிக்கடி விக்கலும் மூர்ச்சையும் உண்டாதல், மயிர் சிலிர்த்தல், முகவாட்டம் முதலியவை காணல், வாயால் அலறல், படுக்கையை விட்டெழுந்து ஓடிவிடல் என்னும் குறிகுணங்கள் காணும்.

12. சிம்மக சன்னி

வன்மையாஞ் சிம்மகமாஞ் சன்னி தன்னை
வழுத்திடவே சுவாசமேர டுஷ்ண மாதல்
தன்மையாய்த் தாகங்கை காலெ ரிச்சல்
தருநாக்குக் கருத்துமுள் போல்வெ டித்தல்

கன்மையாம்க் காதகே ளாதி ருத்தல்
    கடிமையாம் வாய்திறவா மற்றால் மூடல்
உன்மையாம் உடம்பெங்கும் சுரந்தான் விசும்
    உடம்புபா ரித்திருத்தல் விக்க லாமே

(பூ.வை.சி.சன்னி.பா(4)

(பொருள்) சிம்மக சன்னி என்னும் இப்பிணியில் உடல் மிகவும் வெப்ப முற்ற பெருமூச்சு அல்லது அரைப்புகாணல், நீர் வேட்கை, கை கால்கள் எரிச்சல், நாக்கு கறுப்பாயும் முள்போன்றும் வெடிப்புகள் கண்டும் காணல், காதுகேளாமை, வாயைத் திறக்கவொட்டாமல் தாள்பூட்டு கடிப்பட்டு வாயை மூடி இருக்கச் செய்தல், சுரம் உடலெல்லாம் ஒரே சீராக வீசல், உடல் மிக்க களைத்துக் காணல் என்னும் குறிகுணங்கள் காணும்.

13. அபிநியாச சன்னி

இருத்தவே வாதபித்த சேத்மங் கூடி
    இருமலொடு சுவாசமாய்ச் சுரமடித்தல்
நருத்தவே நாக்குபல வன்ன மாகி
    நாவதுதான் வரண்டு நித்திரை மயக்கமாதல்
தெருக்கவே தேகமெங்கும் நோதல் காணல்
    சடமெல்லாம் வியர்வைபல விஷமாதல்
அருத்தவே ஆகமெங்கும் அழன்ற பொங்கும்
    அபிநியாச சன்னியுட வான்மை தானே

(பூ.வை.சி.சன்னி(15)

(பொருள்) அபிநியாச சன்னியில், வளிஅழலையமென்னும் மூன்று குற்றங்களும் சுரமடைந்த கபதோடத்தை முதலாகக் கொண்டு வருவதாகும். ஆகவே இதில் இருமல், அதனுடன் இரைப்பு அல்லது பெருமூச்சு, நாக்கு பலநிறங்காட்டல், நாவரண்டிடல், எந்நேரமும் தூங்குவது போன்ற ஒருவகை மயக்கம், உடல் முழுதும் நோதல், உடல் முழுமையும் வியர்த்தல் உடல் பலம் குறைதல், எவ்வளவு வியர்த்தபோதிலும் உடல் சூடு குறையாமல் நெருப்புப்போலச்சுரம் காய்தல் என்னும் குறிகுணங்கள் காணும்.

(பொருள்) உருத்தாக சன்னி, அந்தக சன்னி, புக்ன நேத்ரசன்னி, கண்டகுப்ச சன்னி, இரத்தட்டீவி சன்னி, சீதாங்க சன்னி, அபிநியாசன்னி ஆகிய ஏழுவகைச் சன்னியும் எளிய அவிழ்த முறையால் தீராதவை என்க.

<u>முப்பிணி (சன்னி) கால அளவை</u>

பாவித்த சன்னிகட்குக் காலங் கேளாய்
    பகர்சந்தி கசன்னிக்கு நாளே ழாகும்
ஆவித்த அந்தகர்க்குப் பத்து நாளாம்
    அதிருத்தா கசன்னிக்குப் பனிரெண் டேநாள்
சேவித்த சித்தவிப்ரமத்தக் கிருபதி தோர்நாள்
    சீதாங்கச் சன்னிக்குப் பதினைந்தாகும்
கரவத்த தாந்திரிகத் திருபத் தைந்து
    காணுகின்ற நாளின்மேல் திருந்தானே

(பூ.வை.சிந்.சன்னி.பா(18)

(<u>பொருள்</u>) சந்திக சன்னிக்கு ஏழுநாள், அந்தக சன்னிக்குப் பத்துநாள் உருத்தாக சன்னிக்கு பன்னிரண்டு நாட்கள், சித்தவிப் பிரசன்னிக்கு இருபத்தோர்நாள், சீதாங்க சன்னிக்குப் பதினைந்துநாள், தாந்திரிக சன்னிக்கு இருபத்தைந்து நாள் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே மருத்துவம் செய்து கொண்டே வந்தால் மேலே கூறப்பட்ட நாட்களுக்கப்பால்தான் அவை குணமாகும்.

தீருமே கண்டகுப்சம் பதினொன் றேநாள்
    தீர்க்ககர்ணிகா சன்னிக்குத் தொண்ணூ றேநாள்
பாருமே புக்னநேதர் சன்னிநா லெட்டு
    பத்துநாள் ரத்தட்டீவி சன்னிக காகும்
பேருமே பிரலாப மீரே ழாகும்
    பெரியசிம் மகத்துக்கு ரெட்ட தாகும்
அருமே அபிநியாசம் பதினைந் தாகும்
    அளவுநாள் சன்னிகளுக் குறிந்த டாயே

(பூ.வை.சிந்.சன்னி.பா(19)

(பொருள்) கண்டகுப்ச சன்னிக்கு பதிமூன்றநாள், கர்ணிக சன்னிக்கு தொன்னூறுநாள், பூக்ன நேத்திர சன்னிக்கு எட்டுநாள், இரத்தட்டீவி சன்னிக்குப் பத்துநாள், பிலாப சன்னிக்கு பதிநான்கு நாள், சிம்மக சன்னிக்குப் பதினாறு நாள், அபினியாச சன்னிக்கு பதினைந்து நாள் என்று கூறப்பட்டுள்ளது.

பெருமருந்துகள் செய்தும் மேலே கூறப்பட்ட நோய்கள் (13 சன்னிகளும்) தீராதாயின் குறித்த நாட்களில் கொல்லும் என்றனர்.

<u>தேரன்கூறிய பத்து முக்குற்றப் பிரிவுகள்</u>

கன்னியர் முகத்திற் கோபிகை மோகனை சாமுகை யாடவர்த்ரா
மன்னவர் முத்திறர் வல்லியர் புல்லியர் மத்திய ரென்பதிவர்
சன்னியின் முத்திற மனவன் மந்திரி தனையர் கோனெவெ
அன்னவெ மூன்றுடனேழு பிறந்திரு மாகவதை யிரண்டே

(தே.சேகரப்பாட பாடல் 385)

வயித்திய ரோத தசசன்னியின்பெயர் வரன்முறை வாதசனி
பயித்திய சன்னி சயித்திய சன்னி நிபசன்னி சோகசன்னி
தெயித்திய மோகன சன்னி விடச்சன்னி தீச்சனி மந்தசனி
உயிர்த்த சண்டச்சனி பத்திவையின் குணமுணரு வராயுளரே

(தே.சேகராப்பா - 386)

(<u>பொருள்</u>) பெண்களின் முகக்குறி முதலியவைகளைக் கொண்டு கோபிகை, மோகனை, காமுகை என மூன்று வகையாகவும், ஆடவர் முகக்குறி முதலியவைகளைக் கொண்டு வல்லியர், புல்லியர், மத்தியரென மூன்று வகையாகவும் வகுத்து இவர்களின் கூட்டுறவால் எழும்முக்குற்ற நோயை (சன்னியை) முறையே நிபம், சோகம், மோகம், நச்சு, மந்தம், சண்டம் என ஏழாகவும் குற்ற அளவாக மூன்றாகவும் தேரையர் வகுத்துள்ளார்.

குறிப்பு: இவ்வாறாகக் கூறியுள்ள மந்தசன்னியைப் பற்றிய விவரங்கள் நூலில் வாதசன்னியின்கீழ் கூறப்பட்டுள்ளது . இப்பத்துவகை சன்னிகளன்றி இரண்டு சன்னி என்ற ஒருவகையைக் கூறி அதனை மீண்டும் இயற்கையில் வருவன, செயற்கையில் வருவன என இரண்டாக வகுத்துள்ளார் தேரையர். அதனையும் ஈண்டு கூறுதும்.

நோய் வரும் வழி:-

இன்னகைச் சன்னி பேத மீரைந்தும் வரலா றாகப்
பன்னிய முனிமே லந்தப் பத்தினுற் பவந்தா னங்கள்
தன்னமம் முயற்சிக் கேது சவாக மிவைக ளெல்லாம்
முன்னவர் வழினூ லி மார்க்கம் முறைப்படி மொழிகு வேனே

(தே.சேகரப்பா.395)

(பொருள்) பத்துவகைச் சன்னிகளின் தோற்றம், தாக்கப்படும் உறுப்புகள், வரும் வழி, பண்பு இவைகளை முதனூலில் கூறியவாறு கூறுவேன்.

தூமத்தாற் கனலைக் காணும் நெறியெனப் பிணிக ளெல்லாம்
காமத்தாற் காவலாகும் காட்சிய தெனினும் அதி
நேமத்தால் அமைந்த மூன்று நிலைப்பிணி யதனிற் றோன்று
நாமத்தான் முன்றொன் றாரு நான்மத்தி கடையிற் கொள்ளே

(தே.சேகரப்பா-396)

(பொருள்) புகையுள்ள இடத்தில் நெருப்புள்ளது என அறிதல் போல, நோய்களெல்லாம் பெண்ணிச்சையால் காணுமெனக் கூறுவர். ஆயினும் இதற்கு முதலாயுள்ளவை முக்குற்றங்களேயாம். பெயராபத்த சன்னியென்பர்.

மூன்றுகோ பிகையி னோடு மோகனை காமு கைப்பேர்க்
கன்னியர் மூவரோடு காதலா டவர்க டான்மை
மன்னுநல் வல்லியன் புல்லியன் மத்திய னிவர்கள் கூடிச்
சன்னியை யிரட்டித் தன்னிற் கடையாறு முதிக்குந் தானே

(தே.சேகரப்பா-397)

..134

(பொருள்) பெண்களுள் கோபிகை, மோகனை, காமுகை என மூவகையினர் உளரென்றும் இவர்களுக்கு முறையே ஆண்களுள் வல்லியன், புல்லியன் மத்தியன் என மூவகையினர் உளரென்றும் இவர்கள் நேரச்-சிறக்கு இயற்கைக்கு மாறுபாடாக ஒருவர்க்கொருவர் மாறியப் புணர்வரேல் சன்னி நோய் பிறக்கும் என்றும் பகர்வர்.

<u>கோபிகை_இலக்கணம்</u>

மாதரிற் கோபி கைப்பேர் மடவார் தன்மை கேட்டி
யாதவர்க் கரசை முன்னா ளிசைமுல்லை மடவார் லீலை
யாதரித் திடல்போல் மாத ராடவர் தமையே விட்டுக்
காதலுற் போகந் தமித்தல் கலகமிட் டிடலி தாமே

(தே. சேகரப்பா - 398)

(பொருள்) கோபிகை என்னும் பெண்கள் முன்பு முல்லை நிலமங்கையரான கோபிகள், கண்ணனோடு லீலை புரிய விரும்பியது போல, மங்கையர் ஆடவரோடு தாமே பொறிகம் இன்பந் துய்க்க விரும்பி முந்துவர். தன் உட்கிடையை மறைப்பவரில்லை.

கோபிகைக் கிலக்க ணங்கேள் குன்றுவட் டிரங்கு ழிந்த
நனுநிகா ளத்தை யொத்த நகிலமே யுயர்த்த வோட்டந்
தாபிமால் குளம்பு போலத் தாழ்ந்தகுய் யத்தை வாரப்
பூபிழி மதநீர் பேலப் பொசிமல சலத்தி னாளே

(தே.சேகரப்பா-399)

(பொருள்) கோபிப் பெண்ணின் இலக்கணமாவது: வட்டமான முகமும், குழிந்த கொப்பூழும், பெருத்த முலைகளும், மான்குளம்பு போன்ற குறித் தினையும், பூவின் தேன்போன்ற சிறுநீரும் எருவும் (மலமும்) ஆகும்.

<u>மோகனை_இலக்கணம்</u>

மோகனை யிற்கை கூறில் முகத்தரா விரதி யன்ன
மோகவா டவர்க டாமே மோகராய்த் தன்னை வேண்டத்
தாக தாகமற் றவர்க்கே காட்டித் தானசை யாத காலத்
தோகையோ லவர்பா லின்பந் துய்ப்பது குறிப்புத் தானே

(தே.சேகரப்பா-400)

(பொருள்) மோகனை என்னும் பெண்ணின் இயல்பைக் கூறின், பெண்ணிச்சை பொருந்திய ஆடவர்தாமே காம மேஜிட்டால் இவ்வகை மங்கையரை வேண்ட மயிலைப்போல் தனக்கு விருப்பம் இல்லாதவள்போல் அசையாத அவள் இச்சையையாற்றித் தானும் இன்பம் நுகர்வாள்.

மோகனைக் கிலக்க ணங்கேள் முகஞ்சிறி தகன்று நீண்டு
மேகமொத் தமைந்த குந்தல் வேயெனத் திரண்ட மொய்ம்பு
பாகெனக் குழறு மின்சொற் பணியல்கு லீசந் தின்ன
தேகமொக் கனைய கொம்மைச் சிறதெளி மதநீ ராளே

(தே.சேகரப்பா.401)

(பொருள்) மோகனை என்பவளின்முகம் சிறிது அகன்றும் நீண்டும் இருக்கும். அவள் மேகத்தைப்போன்ற கருநிறக் கூந்தலையும், மூங்கிலைப்போன்ற தோள்களையும் வெல்லப்பாகை ஒத்த இனிய மொழியையும், நல்லபாம்பின் படத்தைப் போன்ற பெண்குறியையும், மெலிந்த உடலையும், தாமரை மொட்டு போன்ற கொங்கையையும் பெற்றிருப்பாள். அவளது செந்நீர் தெளிந்தும் சிறத்தல் காணும்.

தாமுகை இலக்கணம்

காமுகை யியல்பு கேளாய் கணவனைத் தானும் வேண்டி
யாமவன் றன்னை வேண்ட வடைவுக டெரிந்த கூடி
நேமமுற் றவைக ளெல்லா நெறியறிந் தியற்றி யுற்ற
மாமறை யியற்ற வல்ல வல்லமை யுற்ற மாதே

(தே.சேகரப்பா 402)

(பொருள்) காமுகை வகுப்புப் பெண் கணவனைத்தான் மிகவும் விரும்புவாள். அவன் தன்னையடைய விரும்பினால் அதற்கேற்ற காலத்தை யறிந்த அவனைக்கூடி, பழையமுறைப்படி இன்பம் நுகரும் வன்மை வாய்ந்தவ-ளாவாள்.

காமுகைக் கிலக்க ணங்கேள் கதிர்மதி முகஞ்சி வந்த
மாமுலை பருத்தச் சர்ப்ப வடிவென நிதம்பந் தோன்ற
காமநீர் மிதம தாகிக் கடதடப் புழைநெ ருக்காம்
நேமிகு முடல ளாகி நுகர்ச்சியற் பத்தி னாளே

(தே.சேகரப்பா 403)

(பொருள்) காமுகைப் பெண்ணானவள், மதிபோன்ற ஒளிபொருந்திய முகமும் பருத்த முலையும், பாம்பின் படத்தைப் போன்ற பெண்குறியும், மிதமான அன் இச்சையும் (காமமும்) நெருக்கமான குறிக்களையும் பெற்றவளாவாள். அன்றியும் கூடும்போது உடல் நோதலும் அற்ப நகர்ச்சியுமுடையவளாவாள்.

<u>வல்லியல் இலக்கணம்</u>

வல்லிய புருடன் நன்மை வகுக்குமி யிப்பாற் கேண்மோ
கல்லெனத் திரண்ட லாகு காத்திர நெடிமை திண்மை
வல்லவ வகிக காட்டி மதகரி மதநீர் தாகு
சொல்லதி வேக மாதர் தோதக மம்மை மானே

(தே.சேகரப்பா 404)

(பொருள்) வல்லியல் என்னும் அவின் நன்மையைக் கூறின், கல்லைப் போன்ற திரண்ட தோளும், பருத்த நீண்ட வன்மையான உடலும் உடையவனாவான். இவனுக்கு மதம் பொருந்திய யானைபோன்ற மதநீர் பெருகும். கம்பீரப் பேச்சும் பெண்களின் கூட்டுறவில் மிக்க மகிழ்வும் உடையவனாவான். இவன் மிகுந்த உணவை உண்பவனாவான்.

மிக்குமல் வல்லி யன்றன் பேரடை யாளங் கூறின்
தன்னுதல் அகன்று நீண்டு நாமனை மேற்ப டிக்கா
யுன்னத வுரமன் கையு மைப்பினிற் பொறாமக் கோசம்
பன்னிரு விரலி னீண்ட பன்றிளா வன்பி னானே

(தே.சேகரப்பா - 405)

(பொருள்) இன்னும் அவன், அகன்ற நெற்றியும், நீண்ட முகமும், நன்னிய நாவும்உயரிய மார்பும் கையும், நீண்ட பன்னிரண்டு விரற்கடையுள்ள அன்குறியும் உடையவனும், பெண்களின் அன்பைப் பெறுபவனுமாவான்.

<u>புல்லியல் இலக்கணம்</u>

புல்லிய குமரன் றன்மை புகலுக யிப்பாற் கேட்டி
வல்லிய மமனை விர மடந்தைய ரடைந்த கேண்மை
சொல்லிய வுதவி யாண்மை திண்மைதா ளாண்மை தாட்டி
நல்லிய வறிவு வங்கன் நயமிவை யுடையன்றானே

(தே.சேகரப்பா-406)

பொருள்) புல்லியல் வகுப்பைச் சார்ந்த ஆண்மக்கள் மற்றவர்க்குத் தொண்டு புரியும் இயல்பு, ஆண்மை, திண்மை, தாளாண்மை, நல்லசு-

நல்வடிவு, நல்லறிவு, வீரம், நயம் இவைகளைப் பெற்றிருப்பார்கள்.

மீட்டுமப் புல்லி யன்றன் மெய்படை யாளச் செல்லேன்
வாட்டமில் முகமுந் குன்டு வயிறுநீ றுதலுஞ் சேர்ந்த
தாட்டுணை யிங்கு விந்த சாதுவு மொன்பதாகக்
காட்டுநீள் குறியுஞ் சன்னக் காமநீ ருங்கொண் டோனே

(தே.சேகரப்பா-407)

(பொருள்) புல்லியனின் உடலமைப்பைக் கூறுங்கால், வாட்டமில்லாத முகமும், திரண்ட வயிறும், நீண்ட நெற்றியும், ஒன்றிற்கு ஒத்த பொருத்தமான இருகால்களும் குவிந்த தோள்களும், ஒன்பது அங்குலமுள்ள ஆண்குறியும் அமைந்திருக்கும். சன்னத்தையொத்த விந்தவையுடையவனாவான்.

<u>மத்தியன்_இலக்கணம்</u>:

மத்திய புருடன் றன்மை வகுத்திடி லறிவு வான்மை
மித்திர நிலைப்பு வாய்மை மேதகு குணந்தாட் டீகம்
புத்தியோ சனையும் வனப்பும் போசன வின்மை மாதர்
பத்தியா சார நன்மை படைத்தவப் பெருமை யோதே

(தே,சேகரப்பா.408)

(பொருள்) மத்தியன் வகையைச் சார்ந்த புருடன், ஆண்மை, நட்புரிமை, உண்மை, பெருந்தகைமை, பேருருவம், நுண்ணறிவு ஆழ்ந்த சிந்தனை, வனப்பு இனிய உணவில் மிகுந்த விருப்பம், பெண்களிடத்தில் அன்பு, நல்லொழுக்கம் முதலியவைகளை உடையவனாவான்.

உத்தம மத்தி யன்றன் உறுப்படை யாளங் கூறின்
சித்திர நயனங் குன்டாய் திரண்டவா னைநன் னெற்றி
முத்தன முறுவ லார்ந்த மொம்பகல் வட்டத் தேநீர்
மத்தெனப் பருத்து நீன்டு வளர்ந்திருங் கோசந் தன்னால்

(தே.சேகரப்பா 409)

(பொருள்)

மத்தியனின் உறுப்படையாளங்களைக் கூறின், சித்திரத்தில் வரைந்தது போன்ற ஒருண்டையான கண்களும், திரண்ட முகத்தையும், நல்லிலக்கணம் அமைந்த நெற்றியையும், முத்தையொத்த பற்களையும் அகன்ற மார்பையும், மத்தைப் போன்று பருத்துநீண்டு வளர்ந்த ஆண்குறியையும் பெற்றிருப்பான் என்பதாம்.

ஊதாரண மர்மம்

நற்சில வழிநா ல் மார்க்க நவின்றவா கடத்தி னா டு
தற்சிலாத் தியத்தி னோயின் சகலவூற் பத்தி யான
தற்சிதோ தயமென் றோத தோடசன் னிப்பி றப்பில்
வற்சமா யிந்த மாதர் மைந்தரைக் கான லாமே

(தே.சேகரப்பா 410)

(பொருள்) நல்ல வழிநா ல் சிலவற்றில், ஆண் பெண்களின் கூட்டுறவால் வரும் சன்னியைத் தோடசன்னியென்று கூறப்படுவது மட்டுமன்றி நோய்வரும் வழியை ஆராய்ந்தால் முற்கூறிய மூவகை ஆண்களையும் மூவகைப் பெண்களையும் பிரித்தறியக் கூடுமெனக் கூறப்படுகிறது.

ஆகுமிம் மாதர் மைந்தர் அறவரும் மாறி மாறிப்
போகமுற்றிடுமப் போது புயங்கங்க ளாகத் தோன்றும்
ரோகமா சன்னியாறு நோயெனத் தீயதாள்
வேகமிக் கவைக ளான வேற்றுமை உரைக்கக் கேளே.

(தே.சேகரப்பா-411)

(பொருள்) மேலே கூறப்பட்ட மூவகை ஆண்பெண்களான அறவரும் வரன்முறை கடந்த மாறிமாறிப் புணரில் கலவி அதிகப்படும். அவ்வமயம் அவர்கள் பாம்புகளைப் போன்ற ஒருவரோடு ஒருவர் பிணைந்த புணர்வர். அதனால் பாம்புகளைப் போன்ற தீயவைகளும் வேகம் மிக்கவைகளும் விடமிக்கதான சன்னி நோய்கள் பிறக்கும். அவைகளின் வேற்றுமைகளை இனிக் கூறுவோம்.

(1) வளிமுக்குற்றப் (வாதசன்னி) பிறி

மன்னவனி வேயிருவ ரடங்கல் போல
வாதசன்னி தனிற்பயித்ய சயித்ய மாவ
சன்னிகளுற் பவிக்குமஃ தன்றி மந்த
சன்னியுமற் றதிற்பிறக்கும் அதன்கு ணங்கேள்
முன்னவனாம் வாதசன்னி யெனச்சாத் தியத்தை
முயன்றநவிப் பருத்திவெளிர் முகங்க ளத்திட்
டன்னமிலா தசதியுற சுரத்தைக் காட்டி
யாவெனநல் மனிமுதலைக் கடங்குந் தானே

(தே.சேகரப்பா 388)

(பொருள்) அரசனுக்கு மந்திரியும் தானைத்தலைவனும் அடங்கி இருத்தல்போல வாதசன்னியுள் பித்தசன்னியும் ஐயசன்னியும் உள்ளடங்கி அதனை அனைத்தத் தோன்றும். அதவன்றி மந்த சன்னியும் வாதசன்னியினின்றும் தோன்றும். வாதசன்னி நீங்கும் நிலையில் உள்ளபோத முகம் வெளுத்த, உணவு செல்லாத, சுரம் காய்ந்த கொண்டிருக்கும். அந்த நிலையையே மந்தசன்னி எனப்படும் என்க. இந்நோய் முதன்மையாகக் கருதப்படும் மணிமந்திர ஔடதங்களுக்கு அடங்குமென்று கொள்க (மணி-இரசமணி என்று கூறுவர் சிலர்)

(2) அழல்_முக்குற்றம்_(பித்தசன்னி)_பிறி

பயித்யசன்னி தனிற்பிறக்குஞ் சோக சன்னி
  பன்பால மோகசனி யொடுதீச் சன்னி
வயித்தியரை யும்மருட்டும் சோக சன்னி
  வகையைக் கேள் கண்சுழல வருமே னோக்கிக்
குறித்தியொடு வாந்திவரும் பிராந்தி தானே
  கூட்டுவிக்குங் காயமெலாம் குறுவேர் காட்டும்
எயிற்றினைகள் பந்திக்க மேற்சு வாசம்
  எழும்விக்க வடிக்கடியுண் டாகுந் தானே

(தே.சேகரப்பா 389)

(பொருள்) பயித்திய (அழல்) சன்னிக்கு உட்கிடையாக, சோகசன்னி, மோகசன்னி, தீ (ரன) சன்னி ஆகியவை பிறக்கும். இச்சன்னியில் கண்சுழலலும் மேல் நோக்கலும்; வாந்தியும், விக்கலும் அடிக்கடி தோன்றுதலும், மயக்கம் உண்டாகும். உடல் முழுமையும் குறுவேர்வை தோன்றும், பற்கள் கூசும். மேல்மூச்சு உண்டாகும். இவை பித்தசன்னியின் குறிகுணங்களாம்.

(3) ஐயமுக்குற்றப_(சயித்தியசன்னி)பிறி

சயித்தியசன்னி தனிற்பிறக்கும் நிபப்பேர் கொண்ட
  சன்னிவிட சன்னிசண்ட சன்னி மூன்றும்
தயித்யநிலச் சன்னிசெயு மொட்டா ரத்தைச்
  சாற்றக்கேளுடலன்றித் தன்டைப்போல
வியர்த்திடச்செய் தருவருப்புண் டாகி ரோம
  மேலரும்பு நடுக்கமிக வியாதி யேதெனி
றயத்திடச்செய் தெள்ளாடி யதன்மேல் சாக்கு
  மனாமத்த மாக்குமஃ தனந்தந் தானே

(தே.சேகரப்பா-392)

(பொருள்) ஐயசன்னியின் தொடர்பாகியவை நிபசன்னி, வடசன்னி, சன்ட சன்னி என்பனவாம். சயித்திய சன்னி உடலில் காட்டும் குறிகுணங்களைக் கூறின், உடல் அல்லித்தண்டுபோலக் குளிர்ந்து வியர்க்கும், உடல் நடுக்கம், உடல் அயர்ச்சி, நாடிதளர்தல் என்பவை, மேலும் மயிர்க்கால்கள் தோறும் அரிப்பும் ஏற்படும். முடிவில் நோயாளியைக் கொல்லும் என அறிக.

(4) நிபச்சன்னி

மத்தியன் கோபி கைப்பேர் மடந்தையைப் புணரு மேனும்
நத்தகா முகையைப் புல்லிய யன்னியாங் கணையு மேனும்
மொத்தமோ கனையை வல்லிய னோகையாற் றழுவு மேனும்
புத்திமா லாகவந்து புகுநிபச் சன்னி தானே

(தே.சேகரப்பா 411)

(பொருள்) மத்தியன் கோபிகையையும், புல்லியன்காமுகையும், வல்லியன் மோகனையையும் கூடுவரேல் அவர்களுக்கு அறிவு மயங்கி நிபச்சன்னி வந்தசோம்.

(5) சோகசன்னி

கோபிகை யுடனே வல்லியன் கூடிலான் குறிகு றிக்குட்
டாபித முறுமுன் னாதந் தனவனி னுமே விட்டுச்
சோபித மறாமையான சோகச்சன் னியுற்பி றந்து
நாபியை நேராம்மூல நாபியை யனுகு மன்றே

(தேசேகரப்பா 414)

(பொருள்) சோகசன்னியின் பிறப்பைக் கூறின், கோபிகையுடன் வல்லியன்கூடில் வல்லியனின் நீண்ட ஆண்குறி, மானின் குளம்பை ஒத்த குறியை உடைய கோபிகையின் குறியைத் தாபிதப்படுத்தி, அவனுடைய செந்நரைத்(நாதம்) தீயச் செய்து அவளுக்குத் தீய குணங்களை உண்டாக்கி, சோக சன்னியைத் தோற்றி நாபியையும் மூலத்தையும் அணுகும்.

(6) மோகசன்னி

வல்லிய புருடன் றன்னை மாறிகோ பிகைமே விட்டால்
புல்லிய அறிவி னாலே புல்லிய வனுக்குச் சேட்டைச்
சல்லிய மியற்ற வாங்கே சடலமுறைந் தசதி யாலே
யொல்லிய மோக சன்னி யுற்பவித் திருந்தப் பாதே

(தே.சேகரப்பா-413)

..141

(பொருள்) வல்லியளோடு கோபிகை முறைதவிறி மேலிருங்கால், அற்ப மதியினால் அவளைப் புணர்ந்தவனுக்கு, நச்சுண்டாம், உடல் நைந்த மோகசன்னி தவறாமல் தோன்றும்.

மோகசன்னி செயந்திறங்கேள் தட்டிப் பேசி
    முறுவலித்தப் பற்கடித்த மொழிவி டாமல்
சாகளவுந் தெளிவாக விளாவி டைக்குத்
    தரப்பிரசங் கமதனைச் சாற்றப் பன்னும்
தாகமிக வுண்டாக்கு முணவை மிக்க
    தரிப்பிக்குஞ் செரிப்புக்குந் தத்த விக்குந்
தோகையரா வலைக்கொடுக்கும் கயம்போ வீக்குந்
    துள்ளுவிக்கும் மற்கடம்போல் சுழலுந் தானே

(தே.சேகரப்பா - 390)

(பொருள்) மோகசன்னிகொண்டவனின் குறிகுணங்களாவன: அதட்டிப் பேசல், புன்சிரிப்புக் கொள்ளல், பல்கடித்தல், உயிர் போமளவும் தெளிவுடன் பேசுதல் கேட்டதற்குத் தக்க விடையைப் பெரிய பிரசங்கம்போல அளித்தல், மிகுந்த நீர் வேட்கை மிகுதியாக உணவை உண்டு அதனை நன்றாகச் செரித்துக் கொள்ளல் பெண்களின்மீது இச்சை கொள்ளல், கயத்தைப்போல இழுத்தல் (இரைப்பு) துள்ளுதல், குரங்கைப்போல மனம் ஒருநிலையில் நில்லாமல் சுழன்று கொண்டே இருத்தல் என்பனவாம்.

(7) விடசன்னி (நச்சுச்சன்னி)

கறுபுல் லியளை மீறிக் கோபிகை வலிமை யாலே
யேறிமே லுபரியாக விலிங்க நீசப் பொறாமை
யூறியா தனையுண்டாக வொல்லையிற் சனிக்கு மம்மா
மாறபா டுரம ராப்போல் வருவிட சன்னி தானே

(தே.சேகரப்பா 415)

(பொருள்) கோபிகை தன்னுடைய வன்மையால், புல்லியளான அம்மகளை முறைதவிறி மேலேறிக் கூடுவாளாயின், அவள் வன்மைத் தாங்க முடியாது அவள் அஞ்சுறி வேதனையுற்று, விரைவில் அவனுடைய உடலில் வேற்றுமை யடைந்த அக்கொருதி, பாம்பின் நஞ்சுபோல உடல்முற்றும் ஊடுருவிப் பாய்ந்து விடசன்னியைப் பிறப்பிக்கும்.

விடசன்னி யடையாள முறைக்கக் கேண்மோ
　　வெய்த்தடலிற் பொசியுதகம் வெந்நீ ராகும்
நடக்கமிக வலிகொடுக்கு மோடச் செய்யும்
　　நாநடுமாத் திரநரை நனுகொட் டாது
அடக்கையுற வொட்டாது விகான் டாகில்
　　கேசரியை நேராகும் அலேசங் காட்டும்
இடைக்கிடைசே ராதபனி பெருமை யெய்தும்
　　இதவுமேற் படியேயாம் இறுதி தானே

(தே.சேகரப்பா - 393)

(பொருள்) விடசன்னி நோயாளியின் வியர்வை வெந்நீர்போல் வெப்பமாக இருக்கும். நடக்கவும் ஓடவும் வலிமை உண்டு; நீர்வேட்கை ஏற்படாது. படுக்கை பொருந்தாது. பகைமை உணர்வு உண்டாகில் சிங்கத்தை ஒப்பாகச் செயல்படும். பெரும்பாலும் இன்னல் குறியைக் கொண்டிருக்கும். அடை தன்னையறியாது நழுவுவதில், சிறிதம் குளிர்ச்சியைத் தாங்க இயலாமை என்னும் குறிகுணங்களைக் .காட்டும்.

<u>(8) தீச்சன்னி</u>

நறியமோ கனையைப் புல்லிய வன்னிய வளவு கூடிக்
குறியொடு குறிக ளொவ்வக் கொள்ளுற வவச மெய்தி
வெறிநகர் வெறியோர் காயம் வெய்தறப் பையு ளாலே
மறுகுதீச் சன்னி தோன்றும் மருந்தினுக் கடங்கி டாதே

(தே.சேகரப்பா.416)

(பொருள்) மோகனைப் பெண்ணைப் புல்லியன் கூடிக் குறியொடு குறி பொருத்துமுன், அவன் மெய்மறந்து வெறிபிடித்தவன்போல தன்புறதலம் மிகுதியான வெப்பமென்னும் கஷ்டத்தால் அவதியுறுவன். இவ்வாறு எழும் சன்னி தீச்சன்னியென்பதாம். இது மருத்துவத்துக்கு வசப்படாது.

தீச்சன்னியின் குணங்கேளாம் அருக்கன் போலச்
　　சிலக்கும் வத்திரநேத்தி ரங்க ளெல்லாம்
காய்ச்சலைப்போல் தகிக்கும்நா வரட்சி காணும்
　　உதடிரண்டு மிகக் கறுக்கச் செய்யும் மிக்க
மூச்சடக்கும் விழிசுழலும் மொழிதள்ளாடும்
　　மூக்குமுனை சிவப்பிக்கும் நீரை நீட்டு
மாச்சியம்போ லிருக்கவது காட்டு தாக
　　மடந்காமை பெருக்குமினி தவத்தை தானே

(தே.சேகரப்பா)

(பொருள்) தீச்சன்னியில் சூரியனைப்போல் முகம்கண் ஆகியவை சிவக்கும். மிருதியான காய்ச்சல் உண்டாகும். நாவரளும். உதடு கருநிறமடையும். மூச்சு குறையும், விழி சுழன்று மொழி தடுமாறும். மூளை மூக்கு சிவக்கும் சிறுநீர் அளவில் மிகுந்து இழியும். சிறுநீர் நெய்போலிருக்கும். அடங்காத நீர் வேட்கை உண்டாகும்.

(9) சண்ட சன்னி

காமுகை மாதை வல்லியன் காதலிற் புணரு மேனும்
நாமமோ கனையை மத்ய வன்னியே யாணையு மேனும்
நேமமார் கோபிப் பெண்ணை மத்தியன் புல்லியன் கூடிக்
காமுறு மேனுங் காலும் கடுஞ்சண்ட சன்னி தானே

தே.சேகரப்பா.417

(பொருள்) மிகுந்த காதலினால் வல்லியன் காமுகையையும் மத்தியன் மோகனையையும், மத்தியனும் புல்லியனும் கோபிகையையும் கூடின் கொடிய சண்ட சன்னி பிறக்கும்

சண்டசன்னி யனடயாளம் விளம்பக் கேன்மோ
சாத்தியம்போ லறிஞரையுந் தய கச்செய்யும்
கண்டவர்க்குத் தெளிமுகமாம் அனாமத் தாகும்
கைநாடி உன்மையினைக் காண்பி யாது
முண்டுசொலக் குறிசுருக்க வதறச் செய்யும்
விளக்கணிமல் லஃதெரியு மேன்மை யென்னக்
கொண்டநெறி மேற்படிபோ வனாமத் தாகிக்
கூற்றவனு நிற்கடித கூட்டுந் தானே

(தே. சேகரப்பா. 394)

(பொருள்) சண்ட சன்னியானது, நோக்குவதற்கு நீங்கும் நோயைப்போலக் காண்பிபட்டுப் பெரிய மருத்துவரையும் ஏமாற்றித் தீங்கை விளைக்கும். பார்வைக்கு முகம் தெளிவாகத் தோன்றும். நாடி உண்மையை அறிவியாது நோயை மறைக்கும். அந்நோயாளன், அணையப்போகும் விளக்கு எப்படி மிக்க ஒளிவிட்டு எரிந்து அணையுமோ அப்படி வன்மையுடன் பேசிக்கொண்டே இறப்பான்.

<u>இரணசன்னி</u>

இன்னணச் சன்னி யன்றி இரணசன் னிப்பேர் வன்னோம்
மன்னதிற் சேர்ந்த தன்று மற்றது வேறே யாகும்
அன்னது பகரு மெல்லை யஃதிவை யிரண்டு கூறாம்
கன்னெறி யியற்கையொன்று கருதுநா ற் செயற்கையொன்றே

(தே.சேகரப்பா 418)

(பொருள்) மேலே கூறிய சன்னிவகைகளே அல்லாமல், இரணசன்னியென்றும் பெயர் வாய்ந்த வன்மையான முக்குற்ற நோய் உண்டு இது மேற்கூறியவை-களுக்கு வேறுபட்டது. அது இருவகைப்படும். அவை (1) இயற்கையாகவும் (2) செயற்கையாகவும் உண்டாவனவாம்.

காயத்தாம் வெம்மையாலே காயத்தில் பருக்க டோன்றி
மாயத்தா லுடைந்து காய்ந்து வளருவ தியற்கைத் தாம்வாள்
காயத்தாம்ப் புண்ணாய்க் காயங் கட்டவும் ஆறா தாகிச்
சீயத்தாச் சிலையாம் வேதை செயற்கைத்தா மிரண்டு மொன்றே

(தே.சேகரப்பா.419)

(பொருள்) உடலில் தோன்றும் வெம்மையால் பருக்கள் (கட்டிகள்) தோன்றி தானாகவே உடைந்து காய்ந்து அதன்சீழ் உடலில் ஊறிச் சன்னியை உண்டாக்கும். இஃது இயற்கை இரண சன்னியாகும். வலிபொருந்திய காயங்கள் நாளடைவில் சரியான மருந்திட்டுக் கட்டுகள் கட்டியும் மேலும் மேலும் ஆறாமல் புண்ணாகி அச்சீழ் புரையோடி சிலைப்ப புண்ணுண்டாக்கி அச்சீழின் தன்மையால் வேதனையோடு கூடிய சன்னியைப் பிறப்பிக்கும். இவ்விரண்டு வகையும் ஒருதன்மைப் பட்டதேயாம்.

<u>தீரும்_தீராதவை</u>

இவைகளிற் சாத்யா சாத்ய மென்பதெவ் வாற தென்னில்
கவையில தாகி வாட்டம் காட்டுபு வருதல் சாத்யம்
நாவையுற கரட தாகி நாடொறு மோங்கி வெப்புங்
கவருவ தாகிற் சன்னி காணத சாத்யந் தானே

(தே.சேகரப்பா.420)

(பொருள்) இவற்றுள் உண்டாகும் புண்கள் வெடிப்பும் கிளைகளும் இல்லாதனவாகி வாடிக்காணும்போதும் சன்னி தோன்றும். ஆனால் அது எளிதில் தீரும்

(பெரும்பாலும் தாளே நீங்கிவிடும்) புன்கள் குற்றமுடையதாகி, கரடுகட்டி நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்தும், மிக்க காம்ச்சலையும் அதிகாக்கச் செய்யுமேல் அதனால் உண்டாகும். நீங்குவதன்று

<u>சாந்தியுபூதை</u>

அறைசிறு பான்மையொடு மடர்பெரும் பான்மை யென்றே
பறையறை யுலகில் சொன்ன பழமொழி களிவிச் சன்னி
அறுவகை யிரன்டு வர்க்க மாமெட்டிற் சாத்தி யந்தான்
சிறுபான்மை யஃது மான்மை செலத்திடி லாயு ளோரே

(தே.சேகரப்பா.421)

(பொருள்) உலகில் பொதுவாக முப்பிணி நோய் தீர்வது அருமை எனவும் அவைகளுள் எண்வகைச் சன்னிகள் தீரக்கூடியன எனவும் மற்றைய நான்கு வகைகள் தீராதென மருத்துவம் கூறினும் மருத்துவரின் அறிவின் சன்மையால் எவ்விதச் சன்னியையும் தீர்க்கக்கூடும்.

சொன்னமும் முன்றோ டொன்றுள் சுவசமா தவினா லேற்ற
மன்னவி டதங்க ளாலே வாசியாம் பலமுன் டாகில்
பின்னறு வகைக்கு மிப்பாற் பிறந்தவில் விரண்டிற் குங்கேள்
வன்னமாற் றிவைக ளென்றே மருந்தினிற் பிரிவு தாளே

(தே.சேகரப்பா-422)

(பொருள்) முன்சொன்ன பத்து முக்குற்றப் பிணிகளும் மருத்துவரின் அறிவின் வன்மையாலும், பொருத்தமான மருந்துகளின் வன்மையாலும் நல்லறிலைமை ஏற்படும் (பிணிதீரும்)

<u>தகர்ச்சி முக்குற்றப்பிணி (சுகசன்னி)</u>

பதையாமல் செய்கின்ற சன்னி மார்க்கம்
பாய்கின்ற விதந்தேரு பன்பாய் நீயும்
நிதையாமல் என்னொடுடன் தீர்த்த மாடி
நிறம்பெறவே தயிர்கட்டிப் புசித்தப் பின்னும்
குதையாத மந்தமுடன் புணர்ச்சி கூடில்
கூடியே வாய்வுதான் கபால தேறி
அதையாமல் மோகச்செய் போக மதுவே
அப்பனே அசதியொடு சன்னி யாமே.

(பொருள்) என்னெய்தேய்த்துத் தலைமுழுகியபின் தயிரும் சோறும் கட்டி வயிறு நிறைஉண்டு (உடனே) அவ்வுணவு செரியாமல் மந்ததோடத்தை செரிகளந் உண்டாக்கியுள்ளபோது ஒரு பெண்ணிடம் உடலுறவு கொள்ளின் சுகசன்னி உண்டாகு

சன்னிதான் தோன்றும் போதம்
    சடமெலாம் வியர்வை காணும்
கன்னிதான் சுகத்தால் மைந்தா
    கண்கள்தான் சிவப்பே யாகும்
மன்னித்தான் காற்றா லையால்
    மகத்தான தோட மாகும்
வன்னித்தான் சுகத்தில் நன்றாம்
    விருந்திருந் காயந் தானே

(பொருள்) மேலேகூறிய தகாத உடலுறவால் (வாயு) வளிக்குற்றம் அழலுடைய சேர்க்கையால் (பித்தத்தின்) கதித்து மேல்நோக்கி கபாலத்தில் தாக்கும். அதனால் ஒருவகை பிரமை ஏற்படும். உடலில் அயர்வு தோன்றும். உடல் முழுமையும் வியர்க்கும். கண்கள் சிவப்படையும். செரிகளத்திலுள்ள செரியா உணவின் தோடத்தால் ஐயமும் (கபதோடமும் தன்னிலை திரிந்து மேலேகூறிய இருதோடங்களுடன் இணைந்து முக்குற்றப் பிணியின் குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். ஐயக் குற்றம் மிகுமேல் இப்பிணி நோயாளியைக் கொல்லும். அப்போது வலியநாடி மகத்தானதாயும் பித்தம் விழுந்தும் காணப்படும் என்பது நூலின் கூற்று.

<u>முக்குற்றநோயின் பொதுக் குறிகுணங்கள்</u>

சுரநோய் மிகுந்துள்ளபோது உண்டாகும் உடலின் வேற்றுமையால் முக்குற்றங்களும் நாடியிலைப் படபடத்தாலும் மெலிந்தாலும் நடக்கும் படிச் செய்து, தூக்கமின்மை, கைகால் சில்லிடல், மனநிலை கெட்டு அறிவு கலங்கல், கண்டபடி பேசல், உடையை எடுத்தெடுத்த எறிதல் அல்லது ஆடையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தல், படுக்கையை விட்டோடல், ஆடல், பாடல், வாய் பிதற்றல் என்னும் குறிகளைக் காட்டும். உடல்வன்மை ஒடுங்க ஒடுங்கக் கண்திறவாமலும், வாய் பேசாமலும் இருந்து பெருமூச்சு வாங்கல், தொண்டையில் கோழை கட்டல், கண்பஞ்சடைதல், மூக்குத் தண்டு சில்லிட்டு நீண்டு காணல், காது கேளாமை என்னும் குறிகுணங்களும், தன்னையறியாது கண்டவாறு வாய் பிதற்றல் அல்லது உணர்ச்சியற்று கிடத்தல், மார்பில் கோழை மிகுதியாகக்

கூறி மூச்சுத் தடுமாறி உடல் வியர்த்துக் கைகால்கள் மிகச் சில்லிட்டுக் காணலமான குறிகளைக் காட்டிக் கொல்வதுமுண்டு.

குற்ற வேறுபாடுகள்: 'திரிதோடக் காரணமின்றி சன்னி வராது' என்ற தேரன் கூறியுள்ளமையால் முக்குற்றங்களும் இந்நோயில் மிகுமே ஆயினும் ஐயம் (கபதோடம்) ஒருமிக்க எழும் என அறிக. வாயுக்களில் (கால்களில்) கீழ்நோக்குக்கால் (அபானவாயு) மிகுந்து கழிச்சல் (பேதி) நோயினையேனும் எருக்கட்டையேனும் விளைக்கும். இவ்வாறே, மேல் நோக்குக்கால் (உதானவாயு) தன்னளவில் மிகின் வாந்தி, விக்கல், ஏப்பம், நீர்வேட்கை ஆகிய நோய்களைத் தொடரச் செய்யும்.

பரவுகால் (வியானன்) மிகுமேல் குளிர், வியர்வை, குருதி, ஓட்டத்தை மிகுதியாகவேனும் குறைத்தேனும் போகச் செய்யும். நடுக்கால் (சமானன்) சமநிலை திரிந்து குற்றமடைந்தபோது உடற்கு வேண்டிய ஊட்டத்தை அளிக்காது உடலை இளைக்கச் செய்யும். இந்நான்கு கால்களின் கேட்டால் உயிர்க்கால் (பிராணவாயு) கெடுமானால் உயிரும் அழியும்.

<u>நாடிநடை</u>

'நாடிமூன்றும் படபடவென் றோடில் சன்னி', என்றதால் மூன்று நாடிகளும் தத்தம் அளவிற்கு மிகுந்தும் விரைந்தும் நடக்கின் அஃது முக்குற்ற நோயைக் குறிக்கும்.

'ஊன்றிய சிலேற்பனம் மிகுந்து பித்த மொன்றதாகில்
ஒன்றிய சன்னி யுண்டாம்',

—ஐயநாடி அதன் அளவுக்கு

குறைந்தும் மெலிந்தும் அதனுடன் அழல் நாடிமிகுந்து கூடி நடக்குமாயின் அதிகரித்த சன்னி உண்டாகும் என அறியக் கிடக்கின்றது.

புகழ்ந்திட்டேன் சன்னியெல்லா மூன்றுக்குள்ளே
விட்டிலேன் சிலேத்பனத்தைப் புகழ்ந்து கேளு
இகழ்ந்திட்டேன் வாதபித்தம் பார்க்க வேண்டாம்
இனிதால சடலமெலாம் குளிர்ச்சி யாகும்

மகிழ்ந்திட்டேன் சிலேற்பனத்தைப் பிரித்துப் பார்க்கில்
மதித்தெழுந்த துடிப்போலே பொங்கித் தாண்டல்
தகழ்ந்திட்ட விசைபோச்சு அவி போச்சு
தப்போதே மூபாநாடாள் சொல்லோம் நாமே

சன்னிநோயில் நாடி பார்க்கிறபோது முக்குற்றங்களில் ஐயநாடியைத்தான் குறிப்பாகப் பார்க்க வேண்டும். வளியமல் நாடிகளை விட ஐயநாடியின் விருத்தியை (மிகையை)த்தான் கவனிக்க வேண்டும். இத்தோட்டத்தால்தான் உடல் குளிர்ந்துவிடும். ஐயநாடியின் துடி இயற்கையாமிக் கால் மாத்திரைதான் இருத்தல் வேண்டும். வேற்று நிலை வளர்ச்சியடைந்து துடிப்போல நடை பரிசிக்கப்படுமானால் இந்நாடி நடையுடைய நோயினன் எழுபது நாளில் இறப்பான் எனத் தேர்தல் வேண்டும்.

தாங்கிய சிலேற்பன மிரண்டும் தளப்பித்த மெழுந்த தாகில்
ஓங்கிய சன்னி யுண்டாம் உச்சிநோம் செவிகே ளாது
வாங்குடன் நாவினித்துப் பாத்தியம் செரியா தாகும்
பூங்கொடி பித்த சிலேற் பனமென்று புகல வாரே

சிலேற்பனம் (ஐயம்) இரண்டு பங்காகி பித்தநாடி யெழுந்து மீறிய துடிப்புக் காணில் பித்த சிலேத்தும தொந்த சன்னியாகும். சிலேத்துமத்தின் வளர்ச்சியினால், நா இனித்தல், காது கேளாமை, உச்சி நோதல் ஆகியவைகளுடன் ஆகாரம் செரியாமையும் ஏற்படும்

பித்தந்தான் வாதத்தோடு பிணைந்து நேர் தோன்று மாகில்
மத்திம சன்னி வாதம் வந்திடும் பிதற்ற லுண்டாம்
உற்றிடும் வாதத் தோடு உறவதாய்ப் பித்தம் மீறில்
நித்தமும் பிதற்றிப் பேசி நினைவிழந் திருப்பாரென்னே

(18.சித்தர் நாடி-குணவாகடத்தின்
நோயின் சாரம்)

பித்தநாடி வாத நாடியோடு பிணைந்து நேரே தோன்றுமாகில் (அதாவது ஒரே நாடியோலத் தோன்றுமானால்) அது மந்த சன்னி வந்திடும் என்பதைக் குறிக்கும். அந்நோயாளிக்கு முதலில் பிதற்றல் என்னும் குணம் தோன்றும். வாதநாடியோடு பித்த நாடி வளர்ச்சியடைந்து உறவாக நடந்தால் சன்னிபாதம் வந்திடும். பிதற்றல், நினைவிழந்து மயங்கிக் கிடத்தல் முதலிய குறிகுணங்களைக் காட்டும்.

நீருமம் வாதநாடி நிச்-ு நின்றதிற் கோப மாவால்
பாரினி லெவர்க்கும் வாயு பற்றிடும் மந்த மாகும்
வேரிசேர் குழலாம் வாதம் விரிப்பொடு எடுத்த நின்றால்
கூறு சன்னி வந்த கூடிடும் மூன்றநாளில்

வந்திடும் மூன்ற நாளில் வாதமாச் சன்னி கூடிடில்
புந்தியை மறந்த வாயால் புலம்பலோ டோலம் பண்ணும்
பிந்திய நாலாம் நாளில் பிடரியிற் றில்லல் செய்யும்
அந்தமாகிய வண்டத்தில் தைலமே புகன்றிடாயே

(18, சித்தர்நாடி-குணவாகடத்தில் நோயின் சாரம்)

வாதநாடி தன்னளவில் மிகுமாயின் வாதப்பிணி பற்றிடும். வாத நாடி விரிந்தும் எடுப்பாகவும் துடித்ததாயின் மூன்று நாட்களுக்குள் மிகவும் கொடிதான சன்னிநோய் தோன்றும் என்னர்க. அது வாத சன்னி எனப்படும். வாயால் புலம்பல், ஓலமிடல், தன்னை மறத்தல் என்னும் குறிகுணங்களை உண்டாக்கி பிடரியில் தோடம் தங்கி நலிவு செய்யும்.

மெத்தவே நாவரண்டு விக்கலந் தன்னீர்த் தாகம்
பத்திய சரமுமுண்டாம் பாயைவிட் டோட்டம் கொள்ளும்
உற்றதை சொல்லோம் கேளீர் உலகுளோ ரறியுமாறு
மற்றதை சன்னிவாதம் வந்திட்ட வியாதி தானே

நாவரட்சி, விக்கல், நீர்வேட்கை, அதிகரித்த சுரம், பாயைவிட்டு ஓடல் முதலிய குறிகுணங்கள் காணுமாயின் சன்னி நோய் தொடர்ந்துள்ளதாக அறியவும். அதற்கான தேர்வு வருமாறு:

சத்தரு சன்னிதன்னைக் கசடற அறியவேண்டில்
உத்திராட் சத்தைநோக்கி உரைத்த நாவதனி லிட்ட
கத்திடு கருத்தச்க் கண்டால் கதிர்மூறு சன்னி யாகும்
பெத்தத்தில் வெளுப்பதானால் பிள்ளைய தல்லதாமே

உத்திராட்சத்தைத் தேன் அல்லது முலைப்பாலில் இழைத்த நாவில் தடவினால் நாக்கு கறுப்பானால் சன்னி கண்டுள்ளதென்றும் வெல்பாக இருப்பின் சன்னி இல்லை என்றும் தெளியலாம்.

கூரியவாதநாடி கோழிபோற் கூீடி நின்றால்
வாரிட்ட முலைநல்லாளே வராதமாகச் சன்னியாகும்
. . . .

(18 சித்தர் நாடிசாத்
குணவாகட நோயின் சாரம்)

வளிநாடி கோழி நடப்பதுபோன்று நடக்குமாயின் அந்நாடிநடை வாதசன்னி (வளிக்குற்றப் பிணி)யைக் குறிக்கும்.

'வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னி தோடம்'

(18 சித்தர் நாடிசாத்திரம்-குணவாகட நோயின் சாரம்)

என்றதால் வளிநாடி தன்னளவில் மிகுந்து குதித்து நடக்கின் அந்நடை வளிப்பிணி தோடம் வந்திடும் என்றறிக.

சன்னி நோயைச் சரியான முறையில் தீர்க்காவிடின் மரணம் நேரும் என்பது யாவரும் அறிந்த உண்மை. எளிதில் தீரக்கூடிய சன்னிநோயின் மருத்துவப் பிசகால் உடலின் எப்பாகமாவது நிரந்தரமாகப் பாதிக்கப்படக் கூடும்; பெரும்பாலும் கை, கால், முகம் ஆகியவை கோணலாக மாறக்கூடும். மற்றும் இப்பிணியில் ஐயக்குற்றம் மிக வளர்ச்சியடையும் காரணத்தால் காது அடைப்பு கொண்டு மந்தமாகக் கூடும். அத்தகைய காதடைப்பு நீண்ட நாள் நலித்தல் இயல்பு. இதற்குச் சிறப்பான அறுவை மருத்துவமும் செய்ய வேண்டி வதலும் உண்டு.

மருத்துவம்_

முப்பிணி நோயில் முக்குற்றங்களும் உயிர்க்கால் (பிராண வாயு) தவிர மற்ற நான்கு கால்களும் (அதாவது மேல்நோக்குக் கால், பரவுகால் நடுக்கால், கீழ்நோக்குக்கால் ஆகியவை) ஒரேகாலத்தில் கேடடைந்தவரும் நோயாதலாலும், ஏற்கெனவே ஏதேனும் ஒருநீண்டகால நோயைத் தொடர்ந்து உண்டாகும் இயல்பு உடையதால் உடல் வன்மை எளிதில் கெடக்கூடும். ஆகையால் இந்நோய் மருத்துவத்தில், கேடடைந்த முக்குற்றங்களையும் தத்தம் நிலையை எய்தும்படி வன்மை வாய்ந்த பெருமருந்துகளை உள்ளுக்குக் கொடுப்பதோடு 'சேத்துமச் சிதமாய்த் துடைத்து' என்று தேரையர் மருத்துவப் பாரதத்தில் கூறியாங்கு, இந்நோயில் ஐயக்குற்றம் ஒன்றே கெடுதிகள் பலவற்றை உண்டாக்கிக் கொல்லுமாகையால், இருந்தெழுந்த ஐயக்குற்றத்தை அடக்கிக் கொல்லுமாகையால்;-இருந்தெழுந்த தன்னிலைப்படுத்தும் திறம்வாய்ந்த கள்,

..151

மூக்கு, உச்சி இவைகளுக்கான சிறப்பு மருத்துவமும், ஒற்றடம், பற்று, வேதுபிடித்தல், புகைபிடித்தல் முதலிய பிற மருத்துவங்களைச் செய்வித்து ஐயத்தைத் (கபதோடத்தைத்) தன்னிலைப்படுத்தல் வேண்டும். அன்றியும் அகமருத்துவத்தில் வாந்தி செய்விக்கவும், கழிச்சல் செய்விக்கவும் தக்கதா மருந்துகளையும் நோயின் வன்மைக்குப் பொருத்தமாக வழங்கல் வேண்டும்.

கண்மருந்து, மூக்கு மருந்து, புகை, வேது, பற்று முதலியவைகள் சுரமருத்துவத்தின்கீழ் விரிவாகக் கூறப்பெற்றுள்ளதைக் கண்டுகொள்க.

<u>சன்னிநோயில் மலம்போக்க</u>

(1) அட்டபைரவ மாத்திரை ஒன்றல்லது இரண்டு -தேனும் தாய்ப் பாலும் கூட்டிக் குழைத்து ஒரே வேளைதர - மலம் கழியும்.

(2) பூமணி மாத்திரை ஒன்றல்லது இரண்டு இஞ்சிச் சாற்றில் குழைத்துக் கொடுக்க மலம் கழியும்.

மேற்படி மாத்திரையின் அளவை நோயாளியின் நிலைமையையும் நோயின் நிலையையும் தெரிந்து மிக்க விழிப்புணர்ச்சியுடன் கொடுத்தல் வேண்டும். இந்நோயினர்க்கு அதிகமாகப் பேதியானால் ஐயதோடம் மிகுந்து கேட்டை விளைக்கும். (இப்பிணியே ஐயக்குற்றத்தின் மிகையால் உண்டானதன்றோ)

இப்பிணியாளியின் மார்புச் சளி (கோழை-கபம்) கூடி இருந்தால் நோயாளியின் தன்மைக்கும் நோயின் தன்மைக்கும் தக்கபடி இந்நூலில் சுரமருத்துவத்தில் (பக்கம் 61) கூறியுள்ளபடி செய்தால் வாந்தியாகி மார்பில் கட்டிய கோழை குறைந்து குணந்தரும். மற்றும், ஆடாதோடை இலை, துளசி இலை, கஞ்சாங் கோரை இலை இவைகளைத் தனியாக வைத்துக்கொண்டு, திப்பிலி, அதிமதுரம், தாளீசபத்திரி இவைகளை நசுக்கி ஒரு சட்டியிலிட்டு போதிய அளவு தேன்விட்டு அவைகளை வதக்கி அதற்குமே மேலேகூறிய பச்சிலைகளைப் போட்டு வதக்கி விதிப்படி நீர் சேர்த்து கொதிக்க வைத்து சுண்டிய குடிநீரைக் கொடுத்தால் மிதமாக வாந்தியாகி கோழையை வெளிப்படுத்தும். மற்றும் ஐயக்குற்றத்தால் ஏற்பட்ட மற்ற கெடுதல்களையும் நீக்கும். இவற்றுள் கூறப்பட்ட சரக்குகளை நோயின்

..1

வன்மைக்கும் நோயாளியின் உடல் நிலைக்கும் தக்கபடி அளவிட்டுச் சேர்க்க வேண்டும்.

கலிக்கம்: இரண்டு அல்லது மூன்று கிராம்பை பூ நீக்கி உலைய நசுக்கி மெல்லிய அழுக்கில்லாத வெள்ளைத் துணியில் முடிந்து சிறிதளவு தாய்ப்பாலில் மூன்று அல்லது நான்கு நிமிடம் ஊறவைத்து எடுத்து ஒவ்வொரு கண்ணுக்கும் ஒன்றல்லது இரண்டு சொட்டுவிட சன்னிதோடத்தில் உண்டாகும் சேட்டைகள் தீரும்.

நசியம்: தும்பைப் பூச்சாற்றை அல்லது தும்பை இலைச்சாற்றை சொட்டளவில் மூக்குத்துளையில் செலுத்தினால் மூக்குச்சளி வெளியாகி மூச்சோட்டம் எளிதாகும்.

ஒற்றடம்: கோதுமைத்தவிடு, செங்கற்பொடி, மணல் ஆகிய இவைகளில் ஏதேனும் ஒன்று ஓட்டில் வறுத்து துணியில் முடிந்து தாங்கக் கூடிய சூட்டில் ஒற்றடமிடலாம்.

கைகால் சில்லிட்டிருந்தால் ஓமமும் செங்கற்பொடியும் கலந்து வறுத்து துணியில் கிழிகட்டி தாங்கக்கூடிய சூட்டில் ஒற்றடமிட சில்லிட்ட இடத்தில் சூடு பிறக்கும்.

தலைக்கு_பூச்சு: பச்சைக் கற்பூரம் 3 குன்றி, குங்குமப்பூ 2 குன்றி இவைகளை ஒரு அவுன்ஸ் தாய்ப்பால் அல்லது பசுவின்பாலில் இட்டு ஊறவைத்து அந்த பாலில் நெற்றி முதல் உச்சி வரை மூடத்தக்க வெள்ளைத் துணித்துண்டில் நனைத்து நெற்றிமுதல் உச்சி வரை போட்டு வைத்து, அந்த பால் உலர உலர மேலும் மேலும் மேற்படி பாலை வேறு துணியில் நனைத்துப் பூசி வரவும். இவ்வாறு செய்வதால் தலைவலி நீங்குவதோடல்லாமல் சுரவேகமும் தணியும். நோயாளிக்கு உண்டான உறக்கமின்மை, கண்ணெரிவு முதலியவைகளும் தீரும்.

மலம்கழிய_பீச்சு_செய்தல்: முக்குற்ற நோயாளி பேதி மருந்துகளைப் பயன்படுத்தக் கூடாத நிலையில் இருந்தால் - இந்துப்பு 3 குன்றி, தேன் ½ அவுன்ஸ், பால் 1 அவுன்ஸ் இவற்றைக் கலந்து பீச்சுக் குழல்மூலமாக ஆசனத்தில் செலுத்த மலம் பழியும்.

மாத்திரை_வகை: 1. பூபதி மாத்திரை, 2. பூரணசந்திரோதய மாத்திரை, 3. தாளக மாத்திரை, 4. ஆனந்த பைரவ மாத்திரை, 5. கஸ்தூரி

மாத்திரை, 6, பிரமாத்திர மாத்திரை, 7.நாகபாச மாத்திரை, 8.அலாயுத மாத்திரை, 9. சிராவண மாத்திரை, 10. மோகனாத்திர மாத்திரை, 11. அர்த்த சந்திரிகா மாத்திரை 12. காருட மாத்திரை, 13. அக்னியத்திர மாத்திரை, 14. சாயுவாதிர மாத்திரை, 15. வருணாத்திர மாத்திரை, 16. வச்சிராயுத மாத்திரை என்னும் தேரன் சேகரப்பாவில் உரிய சன்னி நோய்களுக்கான மருந்துகளை நோய்க்கும் நோயாளிக்கும் தகுந்தவாறு தக்க துணை மருந்துகளுடன் முக்குற்றப் பிணியாளிக்குத் தரலாம்.

மற்றும்,

1. இரசபூபதி மாத்திரை – வேளைக்கு ஒரு மாத்திரைவிதம் தினம் இருவேளை தக்க அனுபானத்தில் கொடுக்க எல்லா சன்னிநோயும் குணமாகும்.

2. இராஜ ராஜேசுவரம் – வேளைக்கு ஒருமாத்திரைவிதம் தினம் இருவேளை திரிகடுகுக்குடிநீரில் 13 சன்னிகளும் தீரும்

3. நவலோகாக்கினி குமாரன் – வேளைக்கு ஒரு மாத்திரை விதம் தினம் இருவேளை பொருத்தமான அநுபானத்தில் கொடுக்க எல்லா முக்குற்றப் பிணிகளும் தீரும்.

4. பிரதாபாக்கினி குமாரன் – வேளைக்கு ஒருமாத்திரைவிதம் தினம் இருவேளை இஞ்சிச் சாற்றில் கொடுக்க 13 சன்னியும் தீரும்

5. பிரமானந்த பைரவம் – வேளைக்கு ஒரு மாத்திரை, தினம் இருவேளை இஞ்சிச் சாற்றில் கொடுக்க சன்னிகள் எல்லாம் தீரும்

6. இரச சிந்தாமணி – ஒருகுன்றியளவு முலைப்பாலில் ஒருநாளுக்கு ஒரேவேளை எல்லா சன்னிகளும் தீரும்.

7. நவக்கிரகபூபதி – வேளைக்கு ஒருமாத்திரை தினம் இருவேளை இஞ்சிச் சாற்றில் கொடுக்க எல்லா சன்னிகளும் தீரும்.

8. விஷ்ணுசக்கரம் – வேளைக்கு ஒருமாத்திரை – தினம் இருவேளை திரிகடுகுத்தூள், தேன், இஞ்சிச்சாறு இவைகளில் கலந்து கொடுக்க எல்லாச் சன்னிகளும் தீரும்.

9. மகா வசந்தகுமாகரம் – வேளைக்கு ஒரு மாத்திரை – தினம் இருவேளை திரி நொச்சியிலை, இஞ்சி சேர்ந்த குடிநீரில் கொடுக்க எல்லாவகைச் சன்னிகளும் தீரும்.

..154

10. எமதண்டக்குளிகை - வேளைக்கு ஒருமாத்திரை - தினம் இருவேளை - தேனில் கொடுக்க 13 வகை சன்னிகள் தீரும்.

11. திரிதோட மாத்திரை - வேளைக்கு ஒருமாத்திரை தினம் இருவேளை மிளகுக் குடிநீருடன் விழுங்கவும் (தேன், முலைப்பால், சாறுகள் முதலிய அநுபானங்களில் ௸ மாத்திரையைத் தூள் செய்து போட்டுக் குழைத்து உள்ளக்கடாது)

மேலும்,

1. சந்திர சன்னிக்கு -மனோகர வைரவம் -	வேளைக்கு ஒருமாத்திரை விதம்	காலைமாலை இருவேளை
2. அந்தக சன்னிக்கு-விசயவைரவம்- துணைமருந்து-காய்ச்சிய இளநீர்	௸	௸
3. உருத்தாகசன்னிக்கு சங்கரவைரவம் - துணைமருந்து -தேனில்	௸	௸
4. சித்த விப்ரம சன்னிக்கு()-மதன வைரவம் துணைமருந்து-திரிகடுகுக்குடிநீர்	௸	௸
5. சீதாங்கசன்னிக்கு-ஆனந்த பைரவம் துணைமருந்து-தாம்ப்பாலில்	௸	௸
6. தாந்திரிக சன்னிக்கு-பூதவைரவம் துணைமருந்து-தேனில்	௸	௸
7. கண்டகுப்ச சன்னிக்கு ()-சுவச்சந்த வைரவம் துணைமருந்து-இஞ்சிச்சாற்றில்	௸	௸
8. கர்ணிகசன்னிக்கு-கலியாணவைரவம் துணைமருந்து -இளநீர், சர்க்கரை, பால் சேர்த்துக் கலக்கியதில்	௸	௸
9. பூக்ன நேத்திர சன்னிக்கு -விதாரண வைரவம் துணைமருந்து-திரிகடுகுக்குடிநீர்	௸	௸
10. இரத்தட்டீவி சன்னிக்கு -சன்னிபாத வைரவம் துணைமருந்து-திப்பிலிக்குடிநீர்	வேளைக்கு ௸ 2 மாத்திரை	௸
11. பிரலாப சன்னிக்கு -காருண்யவைரவம் துணைமருந்து - தேன்	வேளைக்கு ஒரு மாத்திரை	௸
12. சிம்மக சன்னிக்கு-சித்தவைரவம் துணைமருந்து-தேன் திப்பிலிப்பொடி கூட்டிக் குழைத்ததில்	௸	௸
13. அபிநியாச சன்னிக்கு -கரவாள் வைரவம் துணைமருந்து-இளநீர்	௸	௸

இவைகளைத்தவிர,

பற்ப, செந்தூ ர சுண்ணங்களில்,

<u>இரசச்சுண்ணம்</u> $\frac{1}{2}$ அரிசியெடை பனைவெல்லத்தி தினம்இரு வேளை-மூன்றுநாள் தொடர்ந்து கொடுத்து மூன்றுநாள் மருந்தின்றி பத்தியமாம் இருத்தல்.

<u>தாளகற்பம்</u> 2 முதல் 5 அரிசியளவு - முலைப்பால், தேன் சேர்த்ததில் தினம் இருவேளை

வெள்ளைப்பாடானபற்பம் $\frac{1}{4}$ முதல் 1 அரிசியெடை பசுவின் வெண்ணெயில் காலைமாலை இருவேளை பயற்றங் கஞ்சி பத்தியம்

முத்துபற்பம் - $\frac{1}{2}$ முதல் 2 குன்றியளவு பசுவின் பாலில் காலை மாலை இருவேளை

பவளபற்பம் $\frac{1}{2}$ முதல் 2குன்றியளவு - தேன், திரிகடுகு சூரணம் - காலை மாலை இருவேளை

கௌரி அடலை $\frac{1}{2}$முதல் 1 அரிசியெடை - தேனில் காலைமாலை இருவேளை

<u>குறிப்பு</u>: மேல மேலே கூறப்பட்ட துணைமருந்துகளை சன்னிநோயில் காணும் குறிகுணங்களுக்குத் தக்கபடி அப்போதைக்கப்போது மாற்றியும் உபயோகிக்கலாம் அது மருத்துவரின் அநுபவத்தையும், உத்தியையும் பொறுத்த விஷயம்.

<u>சிறப்பு மருத்துவம்</u> - சன்னிக்கு

(தேரையர் யமகவெண்பாவின் முறைப்படி)

பற்பசெந்தூ ரங்கள்	உத்தம, மத்திம அதம, அதமாதம முதலிய அளவு	அநுபானம்	தீரும் முப்பிணிகள்	வேளைகள்
1, அயபற்பம்	சாமை அரிசி, தினை யரிசி, நெல்லரிசி	மோரைக் கஞ்சி	ஐயசன்னி	காலை, மாலை இருவேளை
2. அயசெந்தூ ரம்	ஷை	காம்நீந்தாறிய நீர்	ஐயசன்னி	ஷை
3.		பசுவின் சாணப் பால்	பித்தசன்னி	ஷை
		தேன், செச்சிச் சாறு வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை	அந்தக சன்னி	ஷை
		யானைத்திப்பிலி தூ ள் வராகு னெடை $\frac{1}{4}$, தேன் வராகனெடை $3\frac{1}{4}$ கலந்து	பிரலாப சன்னி	ஷை

3. எஃகுபற்பம்	கடலையின் 1/4 கூறு, 1/2 கூறு 3/4 கூறு முழுக்கடலை	கள்	எல்லா சன்னிகளும்	ஷை
4. காந்த செந்தூரம்	குன்றியின் 1/4 கூறு 1/2 கூறு, 3/4 கூறு முழுக்குன்றி	பூண்டுத் தைலம்	ஐய சன்னி	ஷை
5. தாமிர பற்பம்	கடுகு, தினை, சாமை, கொள்	தேன்	எல்லா சன்னிகளும்	ஷை
6. தாமிர செந்தூரம்	ஷை	முலைப்பால்	ஷை	ஷை
		பலாச்சுளைமிளி சாறு	மாரக சன்னி	ஷை
6. தாமிர செந்தூரம்				
7. வெள்வங்க பற்பம்	துவரையின் 1/4 கூறு, 1/2 கூறு, 3/4 கூறு முழுத் துவரை அளவு	கடுகின் இலைச் சாறு	ஐயசன்னி	ஷை
		மிளகுச் சாறு	வாதசன்னி (வளிசன்னி)	ஷை
8 வெள்வங்க செந்தூரம்.	ஷை	வெந்நீர்	ஷை	ஷை
9. காந்தபற்பம்	குன்றியின் 1/4 கூறு 1/2 கூறு, முழுக்குன்றி அளவு.	உருத்திராக்சம் இழைத்தநீர் அல்லது வெந்நீர்	பித்த சன்னி (அழற்சன்னி)	
		ஷை அல்லது பூண்டு தைலம்.	ஐய சன்னி	ஷை
10. காரீய செந்தூரம்.	துவரையின் 1/4 கூறு 1/2 கூறு; 3/4 கூறு; முழுத்துவரை.	கரும்பு வெல்லம் பனை வெல்லம் தென்னை வெல்லம்.	அழற்சன்னி வளிசன்னி ஐயசன்னி.	ஷை
11. அப்பிரக பற்பம்.	கடலையின் 1/4 கூறு 1/2 கூறு; 3/4 கூறு முழுக்கடலை அளவு.	பேய்ப்பீர்க்கன் இலைச்சாறு துளசி இலைச் சாறு, பேய்ப் புடலிலைச்சாறு	வளிசன்னி அழற்சன்னி ஐயசன்னி.	ஷை
12. அப்பிரக செந்தூரம்.	ஷை	ஆவாரை இலைச் சாறு.	வாத, பித்த, கப, திரிதோட சன்னிபாத தோடம்.	ஷை
		தென்னங்கள் பனங்கள் ஈச்சங்கள்	ஐயசன்னி. அழற்சன்னி வளிசன்னி.	ஷை

13. வெள்ளபற்பம்.	நெல், மணி, மிளகு கொள், குன்றி, காக்கை மூக்கின் நுனியில் தங்கும் அளவு.	தேன் பசுவின்பால் திப்பிலிரசம் பனீகள்.	வளி சன்னி (அழல்சன்னி) இரணசன்னி) மந்தசன்னி)	காலை, மாலை இரு வேளை.
14. வெள்ளி செந்தூரம்.	ஷை	பசுவின்பால்	ஐயசன்னி	ஷை
15. நாகபற்பம்	துவரையில் 6-ல் ஒரு கூறு; 6-ல் 2-கூறு; 6-ல் 3 கூறு; 6-ல் 4 கூறு; 6-ல் 5 கூறு; முழுத் துவரை அளவு.	பசுவின் நெய்.	எல்லா சன்னிகளும்.	ஷை
16. முத்துபற்பம்	மிளகின் 5-ல் 1 கூறு 5-ல் 2 கூறு; 5-ல் 3 கூறு; 5-ல் 4 கூறு முழு மிளகளவு.	பன்னீர்	அழற்சன்னி.	ஷை
17. முத்துசெந்தூரம்.	ஷை	பனை வெல்லம்.	சந்நிக சன்னி முதல் அபின் யாச சன்னி ஈறாக 13 சன்னி களும், தாக பூர்வகசன்னி, சிதபூர்வகசன்னி சுகசன்னி என்னும் ஆக 16 சன்னி நோய்கள்.	ஷை
18. சங்குபற்பம்	2 முதல் 5 குன்றி அளவு.	நந்தியா வட்டைசமூலச் சாறு, தேன். வெண்ணொச்சி இலைச்சாறு.	வளி சன்னி அழல் சன்னி ஐய சன்னி.	ஷை
19. பவளபற்பம்.	மிளகின் 5-ல் 1 கூறு 5-ல் 2 கூறு; 5-ல் 3 கூறு; 5-ல் 4 கூறு முழு மிளகளவு.	பசுவின்பால் பசுவின்வெண்ணெய் பசுவின்தயிர்.	வளிசன்னி, மாரக (சன்னி, பாரிசசன்னி) அழற்சன்னி. (மோகசன்னி) பைசாசசன்னி (	ஷை

20. நாகச் செந்தூரம்.	துவரையில் 6-ல் 1 கூறு, 6-ல் 2 கூறு. 6-ல் 3 கூறு 6-ல் 4 கூறு 6-ல் 5 கூறு; முழுத்துவரை.	வெற்றிலைச்சாறு துளசிச்சாறு வெந்நீர் அல்லது நெய்தல்பூச்சாறு	வளி சன்னி. அழற் சன்னி ஐய சன்னி.	காலை, மாலை இருவேளை
21. பலகறை பற்பம்.	கடலையில் 5-ல் 1 கூறு; 5-ல் 2 கூறு; 5-ல் 3 கூறு; 5-ல் 4 கூறு; முழுக்கடலை அளவு	மகிழம்பூச்சாறு சர்க்கரை பனங்கள் பசுவின் தயிர்	வளிசன்னி அழற்சன்னி ஐய சன்னி எல்லா சன்னிகளும்.	ஷை
22. பலகறை செந்தூரம்.	ஷை	சர்க்கரை	13 வகைகள் சன்னிகள்.	ஷை
23. சங்கு செந்தூரம்.	2 முதல் 5 குன்றி.	வெள்ளைப் பூண்டு சாறு.	சுவேத சன்னி	ஷை
24. தாளக பற்பம்.	ஒன்றுமுதல் எட்டு ஓமத்தின் அளவு.	பசுவின்மோர் உத்தாமணி இலைச்சாறு செங்கடப்பன் இலைச்சாறு	வளி சன்னி அழற்சன்னி. ஐய சன்னி.	ஷை
25. கந்தக பற்பம்.	துவரையில் 8-ல் 1 கூறு 8-ல் 2 கூறு 8-ல் 3 கூறு 8-ல் 4 கூறு 8-ல் 5 கூறு 8-ல் 6 கூறு 8-ல் 7 கூறு முழுத்துவரை அளவு.	மாவின் சமூலச் சாறு.	எல்லா சன்னிகளும்.	ஷை
26. கந்தக செந்தூரம்.	ஷை	பசுவின் தயிர்	உன்மாத சன்னி.	ஷை

27. தங்க செந்தூரம்.	அவரைக் கொட்டையில் 6-ல் 1 கூறு 6-ல் 2 கூறு 6-ல் 3 கூறு 6-ல் 4 கூறு 6-ல் 5 கூறு முழு அவரைக் கொட்டைஅளவு	களிப்பாக்குச் சாறு.	இரண சன்னி.	காலை, மாலை இருவேளை.
28. கிளிஞ்சில் பற்பம்.	குன்றியின் 8-ல்1கூறு 8-ல் 2 கூறு 8-ல் 3 கூறு 8-ல் 4 கூறு 8-ல் 5 கூறு 8-ல் 6 கூறு 8-ல் 7 கூறு முழுக்குன்றிஅளவு.	பசுவின்பால் எருமைபால் வெள்ளாட்டுப் பால்.	வலி சன்னி அழற்சன்னி ஐய சன்னி.	ஷை
29. கிளிஞ்சில் செந்தூரம்.	ஷை	வசம்புச்சாறு	அதிகாரச் சன்னி.	ஷை
30. சிறுகிளிஞ்சில் பற்பம்.	மிளகின் ¼ கூறு ½ கூறு 3/4 கூறு முழுமிளகின் அளவு.	குளிர்ந்தநீர் வெந்நீர்.	சாத்தியமயக்க சன்னி. அசாத்தியமயக்க சன்னி.	ஷை
31. தருசச் செந்தூரம்.	தாம்பிரபற்ப செந்தூரம் போன்றஅளவு.	சரக்கொன்றை மரப்பட்டைச் சாறு.	பதின்மூன்று வகை சன்னிகள்	ஷை
32. உலோகமண் ரேக்குச் செந்தூரம்.	ஒன்றுமுதல் 4குன்றிஅளவு.	குளிர்ந்தநீர் கள் பன்னீர்.	வாதசன்னி சர்வாதரசன்னி பாதம் உன்மத்தசன்னி.	ஷை
33. பன்றிக்குளம்பு பற்பம்.	ஒருகடலையின் கூறு	தேன்	வாதசன்னி	ஷை
34 புலிக்குளம்பு பற்பம்.	ஷை	ஷை	அழற்சன்னி	ஷை

35.	பூனைக்குளம்பு பற்பம்.	ஒரு கடலையின் நிறை. கூற.	தேன்	ஐயசன்னி	காலைமாலை இருவேளை.
36.	பெண்கழுதை எக்புபற்பம்.	ஷை	பழச் சாராயம்.	பதின்மூன்று சன்னிகள்.	ஷை
37.	அன் வரை எருமைக் கொம்பு பற்பம்.	ஷை	முலைப்பால்	வலிசன்னி	ஷை
38.	வெள்வரை எருமைக் கொம்பு பற்பம்.	ஷை	ஷை	அமர்சன்னி	ஷை
39.	அன்வரை கடமைக் கொம்பு பற்பம்.	ஷை	ஷை	ஐயசன்னி	ஷை
40.	காட்டுக் காக்கை இறகு பற்பம்.	ஷை	பசுவின் வெண்ணெய்	எல்லாவகை சன்னிகள்.	ஷை

குடிநீர்:

வேம்புக்குடிநீர்:

இதன் செய்முறையை இந்நாலின் பக்கம் -ல் கண்டுகொள்க.

சிற்றுமுட்டிக் குடிநீர்:

இதன் செய்முறையை இந்நூலின் பக்கம் -ல் கண்டுகொள்க.

சுக்குக் குடிநீர்:

இதன் செய்முறையை இந்நூலின் பக்கம் 7 -ல் காண்க.

மேற்படி குடிநீர்களை தனித்தேனும், மற்ற மருந்துகளின் துணைமருந்தாகவேனும் கொடுக்க குணமுண்டாகும்.

நீப_சன்னிக்கு

நீபசன்னிக் காரிவை நாசி நீர்விள குடனி மைத்து
விபத்தற் கலிக்க மாக விழிகளி லிட்டுச் சிக்குக
சுபப்பகைவேளை நீரில் கடுகுபற் றிடலாங் கன்னிக்
குபத்திர மெனிற்பதி தாவி னுடலது கொண்டு மாறே.

(தே.சேகரப்பா-423).

(பொருள்:-) நீபசன்னி உண்டாவதற்குக் காரணமாயிருந்த, பெண்ணின் மூக்கு நீரில் மிளகை இழைத்து நீபசன்னி உண்டானவனுக்குக் கலிக்கமாகக் கண்ணிடவும். வேளைச்சாற்றில் கடுகை அரைத்து உச்சியில் பற்றிடலாம். இச்சன்னி,பெண்ணுக்-குண்டாயின், ஆணின் மூக்கின் நீரைக் கொண்டு அவள் கண்ணுக்கு கலிக்கம் இடவும்.

சோக_சன்னிக்கு:

சோகசன் னிக்கே யாணின் தொப்புளுப் பழுந்துநீரில்
சேகரித் தாதா ரத்தைத் தேய்த்தெரி கலிக்க மிட்டுப்
பாகனி லிரதத்தோடு பச்சைநா பியைய ரைத்து
நீகழுத் பற்றிட் டாறச் செய்திடு நெருப்பி னுலே

(தே. சேகரப்பா- 424).

பொருள்:-

சோக சன்னிக்கு, ஆணின் கொப்பூழில் சேர்ந்துள்ள உப்பை (அழுக்கை) எடுத்து, தாளகத்துடன், கட்டி இழைத்து எரித்து அப்பெருடியைக் கண்ணிட்டு பாகல் இலைச் சாற்றைக்கொண்டு பச்சை நாபியை அரைத்துத்தலையில் பற்றிட்டு அனல் காட்டி அது உலரும் படிச் செய்ய சன்னி போம்.

<u>மோக சன்னி.</u>

மோக சன்னிக் காகின் மூத்திரந் தன்னிற் காமன்
வரகுடன் இழைத்துக்கண்ணிட் மாட்டியின் குலையுள்ளிப்பாலி
சேகரித் திழைத்துப் பற்று சிரத்தினு முதுகு மீது
ம கமத் தியினும் புசி யரிவையைக் காட்ட லாமே

(தே. சேகரப்பா- 425).

<u>பொருள்:</u>

மோக சன்னிக்குச் சிவநாரி திப்பிலியை இழைத்துக் கண்ணிட்டு பெருங்காயத்தை வெள்ளைப் பூண்டுச் சாற்றில் இழைத்து தலை,முதுகு, மார்பு முதலிய இடங்களில் பற்றிட்டு அனல் காட்டத் தீரும்.

163.

<u>விட சன்னிக்கு:</u>

விடசன்னி தனக்கு மாற்று வேண்டுமேல் கடியைச் சேர்ந்த
தொடைக்குரு தியிலே காமன் சுக்கச மதாக மூன்றும்
புடைத்திடு கலிக்கும் மஞ்சள் பொடிகுளக் கமின்சிச்சாறு
உடைத்திடு சிரத்தில் பற்று குச்சியை யனலிற் காய்ச்சே

(தே.சேகரப்பா-426)

<u>பொருள்:-</u>

அரவக்கு வரும் விடசன்னிக்கு பெண் குறிக்குப் பக்கத்திலுள்ள இருக்கில் கீறிச் சிறிது குருதி வாங்கி அதில் திப்பிலி,சுக்கு, ஓமம்,ஆகிய மூன்றையும் கூட்டி, இழைத்து, கண்ணிலிட்டும், அக்குருதியில் மஞ்சள் பொடி,கொள்ளுமா, இஞ்சிச்சாறு, கூட்டி நெற்றியிலும், உச்சியிலும், பற்றிட்டு உச்சிக்கு அனலைக் காட்ட சன்னி தீரும்.

தீச்_சன்னிக்கு:

தீச்சன்னி குறகு ரத்தந் திப்பிலி மிளகிந் துப்புத்
தேச்சிறு கலிக்கங் கண்ணில் சிலந்திநா யகர சத்தில்
பேய்சுரைக் காயெட்டிக்காய் விதைப்பிர வாளத் தோடே
ஆச்சென வரைத்துச் சிக்கே யப்பியக் கினியைக் காட்டே.

(தே.சேகரப்பா- 427).

பொருள்:-

தீச்சன்னிக்குப் பெண்ணின் தொடையைக் கீறியெடுத்த குருதியில் சிறிது திப்பிலி/ மிளகு இந்துப்பு கூட்டி, இழைத்து அதைக் கண்ணிற்குக் கலிக்கமாக இட்டுப்பின்னர், சிலந்திநாயகச்சாற்றால், பேய்சுரை விதைப்பருப்பு, எட்டிவித்து, பவழம் கூட்டிக் குழைத்து மண்டை உச்சியில் அப்பி நெருப்பின் அனலைக் காட்ட நோய் நீங்கும்.

சன்ட_சன்னிக்கு

சண்டசன் னிக்குக்கண் ணூறு ருச் சானவி குதிரந் தன்னில்
இன்டைவே ரபினிரைய விளங்குகன் கலிக்க மிட்டே
சுன்டைவே ரசம தாகந் துளசிநீர் தனில் ரைத்த
மடையிற் பற்றிட்டங்கி மருகுறிப்புலர்த்தல் நன்றே.

(தே.சேகரப்பா-428).

பொருள்:-

சண்டசன்னிக்குப் பெண்ணின் தொடை இருமுறைதான் இவை களில் ஒன்று கீறி இரத்தம் வாங்கி அதில் இன்டின்வேர் அபின் கூட்டி நன்றாக இழைத்துக் கண்களுக்குக் கலிக்கமாய் இட்டு, சுன்டை வேரையும் ஓமத்தையும் துளசிச் சாற்றால் அரைத்து மண்டையில் பற்றிட்டு அனல் காட்ட நோய் அகலும்.

குலத்த மாரின் குணமும் இவைகளில்

கோடி யாகும் குடிலத்தைச் செய்கிற

பலத்த வாயுவைப் பற்றிய சன்னியைப்

பற்ற இத்தடற் பெயுளைச் சாருமே(தேரன் தரு)

என்று தேரன் தருவில் சொன்னமாப் பற்றின்

பெருமையைக் கூறியுள்ளமையையும் காண்க.

இவைகள்தம் சாந்தி மேலே யியன்றமாத் திரைக டம்மிற்

சிவபாசு பதாத்ர மாதி செயம்பெறு வகைய றிந்தே

தவறிலா வனுபா னத்திற் சந்தானஞ் செய்க பத்ய

விவரவக் கணையிற் காக்க வேண்டுமே விரண்டுஞ் சொல்வோம்".

(தே.சேகரப்பா 429).

பொருள்:-

இந்த சன்னிகளைக் குணமாக்க சிவ பாசுபதாத்திரமுதலிய பலவகைப்பட்ட மாத்திரைகளில் நோய்க்கேற்ற ஒன்றைத்தக்க அநுபானத்தில் கொடுத்துப் பத்தியம் காக்க வைகல் வேண்டுமென்றறிக.

இரண சன்னிக்கு:

இரண சன்னி யரண்டு வகையது

மரண மெய்த வருமவை மிஞ்சவே

வரண மாக வயின்ம ருந்தபக்

குரண மாக வியற்றுத லோதுவாம்

நாபி கெந்தி ரசமரி தாரமெய்

சோபி காயநந் தொடியரை காலரை

பாபி யான பலைமகச் சாறுநல்

லாபி நீரில்வெள் ளாிதகி நீரிதே

மூன்று மூன்று திமைதின் னம்மடி
யான்ற கல்வத் தரைத்த படி பினம்
ஈன்று வைகல் னருங்கையா தோடை
மூன்று வைகல் முருக்கினு னந்தினம்.

ஆகக் கூட்டு மட்டதாச நாட்களும்
போகப் பின்னர் புரியது மாத்திரை
பாக, மால பயறள வாகவே
ஏக மாதம் வெயிலிலு லர்த்தியே

இயற்கைக் காசி லிலப்பை நெயிற்கொடு
செயற்கைக் காசிற் சிவந்த மறிநெயிற்
பயக்க விஷரைப் பாதி யிருபது.
கயக்கு மாறு கரும்பத் யமரோ.

வார மப்படி மற்றொரு நாள்பின்
சோர வுய்ப்பது இந்த மறைத்திறம்
வார மத்தொர்கை மாய்ந்தபின் னெண்ணெய்மோர்
சேர வுய்ப்பது தேவை யனைத்துமே.

(தே.சேகரப்பா-430- 435).

பொருள்:- இருவகைப்பட்ட இரண சன்னிகளுக்கும் அவைகள் மரணத்தைத் தருவதைத்காக்கும் கோட்டைபோன்ற மருந்தைக் கூறுவாம். நாபி,, கெந்தகம், இரசம், அரிதாரம், பெருங்காயம், நேர்வாளம் (எல்லாம் முறைப்படி சுத்தி செய்யப்பட்டவையாக) முதல் ஐந்து சலக்குகளை வகைக்கு அரைக்கால் பலமாகவும், கடைசிசரக்கான வாளத்தை அரைப் பலமாகவும் எடுத்துக் கல்வத்திலிட்டு முறைப்படித்தாளி செய்து ஒன்றாகக் கலந்து பனிங்கள்ளாலும், பசுஞ்சான நீராலும், வெண் கடுக்காய்க் குடிநீராலும், தனித்தனியாம் மூன்று நாள் அரைத்து, பிறகு, நெருங்கைப்பட்டைச